# தமிழ் ஆய்வு இதழ்கள்


பதிப்பாசிரியர்

இ. சுந்தரமூர்த்தி

மா.ரா. அரசு



உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# தமிழ் ஆய்வு இதழ்கள்


பதிப்பாசிரியர்

இ. சுந்தரமூர்த்தி

மா.ரா. அரசு



**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**

International Institute of Tamil Studies

இரண்டாவது முதன்மைச்சாலை

மையப் பல்தொழில் நுட்பப் பயிலக வளாகம்

தரமணி, சென்னை - 600 113

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | Tamil Aaivu Idhalgal |
| Editors | : | E. Sundaramoorthy<br>M.R. Arasu |
| Publisher | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus,<br>Tharamani, Chennai - 600 113<br>Ph:22542992 |
| Publication No | : | 555 |
| Language | : | Tamil |
| Date of Publication | : | 2005 |
| Edition | : | First |
| Paper used | : | TNPL 18.6 Kg Maplitho |
| Size of the Book | : | Demy 1/8 |
| Printing Types | : | 10 Points |
| No. of Pages | : | xvi + 168 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs.50/- (Rupees Fifty only) |
| Printing | : | United Bind Graphics<br>101-D, Royapettah High Road<br>Luz, Mylapore, Chennai - 600 004 |
| Subject | : | Studies on Tamil Journalism |


இதழியல் ஆய்வு - தொகுதி 7

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை 600 113

# அணிந்துரை

தேசிய அளவிலும், உலக அளவிலும் ஆய்வுக் கருத்தரங்குகள் நடத்துவதும் அவற்றின் விளைவாக ஆய்வு நூல்களை வெளியிடுவதும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் அடிப்படை நோக்கங்களாகும்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தொடங்கிய காலத்திலிருந்து இன்றுவரை இத்தகைய பணிகள் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

'தமிழரின் மரபுச் செல்வங்கள்.' என்ற பொருண்மையில் தொடர் கருத்தரங்குகளை நடத்தி அவற்றை நூலாகவும் வெளியிட்டுவந்திருக்கிறது..

வெள்ளிக்கிழமைக் கருத்தரங்கு என்ற வாரக் கருத்தரங்குகளைத் தொடர்ந்து நடத்திக் கருத்தரங்கக் கட்டுரைகளை நூலாக வெளியிட்டு வந்திருக்கிறது.

தமிழறிஞர் வரிசை என்ற தொடரில் இதுவரை 32 தமிழ் அறிஞர்களைப் பற்றிக் கருத்தரங்குகள் நடத்தப்பெற்று அவற்றுள் 14 தமிழர்களைப் பற்றிய நூல்கள் வெளியிடப் பெற்றுள்ளன.

இவை மட்டுமல்லாமல் இன்னும் பிற நிறுவனங்களோடு இணைந்தும் கருத்தரங்குகளை நடத்தி நூல்களை வெளியிடுவதையும் தன்னுடைய பணிகளுள் குறிப்பிடத்தக்கதாக இந்நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

இவ்வகையில் 1999 ஆம் ஆண்டு இந்நிறுவனமும் டாக்டர் மா. இராசமாணிக்கனார் இதழியல் ஆய்வு மையமும் இணைந்து இதழியல் கருத்தரங்குகளைத் தொடர்ந்து நடத்திவந்தன. இவ்விதழியல் கருத்தரங்க வரிசையில் **'தமிழ் ஆய்வு இதழ்கள்'** என்ற பெயரில் இந்நூல் இப்போது வெளிவருகிறது.

தமிழ் வளர்ச்சியில் ஆய்வு இதழுக்கு எனத் தனி இடம் உண்டு, தமிழைப் பல்வேறு போக்குகளில் ஆய்வு செய்யும் நிலையிலும் இத்தகைய ஆய்வுகளை ஊக்கப்படுத்தும் வகையிலும் 1897 தொடங்கி இதுகாறும் பல்வேறு ஆய்வு இதழ்கள் தமிழில் வெளிவந்திருக் கின்றன. அவற்றை இதழ்கள் நோக்கிலும் துறைநோக்கிலும் கால வரிசையிலும் பல்வேறாக நாம் பகுத்துக்காண முடியும். இந்நூல் தொகுப்பில் சித்தாந்த தீபிகை, கலைக்கதிர், Tamil Culture, தமிழ் ஆய்வு, புலமை, மொழியியல், தமிழ்க்கலை, நாட்டுப்புறவியல் , திராவிட இயக்க ஆய்வுகள், வரலாறு எனும் இதழ்களைப் பற்றி 10 கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

ஆய்வு நிறுவனங்கள், அரசு நிறுவனங்கள், அரசு சார்பு நிறுவனங்கள் ஆகியவை ஆய்விதழ்களை வெளிக் கொணர்வதன் மூலம் தமிழுக்குப் பெரும்பங்களிப்புச் செய்துள்ளன. இத்தகைய ஆய்விதழ்களின் தோற்றம், அவை அடைந்த மாற்றம், தமிழ் வளர்ச்சியில் அவற்றின் இடம் ஆகியவற்றைத் தெளிவாக விளக்கி உரைக்கும் நிலையில் இக்கட்டுரைகள் அமைந்துள்ளன.

இந்நூல் தமிழ் ஆய்வு இதழ்கள் பற்றி அறிய விரும்புவோர்க்கு ஒரு சிறந்த கையேடாக அமையும்.

1999இல் நடைபெற்ற இவ்விதழியல் கருத்தரங்கக் கட்டுரைகளை இப்போது இந்நிறுவனம் முனைந்து நூலாகக் கொண்டுவந்துள்ளது.

இந் நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து வருகின்ற நிறுவனத் தலைவர் **மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித் துறை அமைச்சர் திருமிகு சி.வி.சண்முகம்** அவர்களுக்கும், **தமிழ் வளர்ச்சி பண்பாடு—மற்றும் அறநிலையத் துறைச் செயலாளர் முனைவர் பு.ஏ. இராமையா இ.ஆ.ப.,** அவர்களுக்கும், **சிறப்புச் செயலாளர் திருமிகு தா. சந்திரசேகரன்** இ.ஆ.ப., அவர்களுக்கும் என் நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

இந்நூலுக்கு ஒளி அச்சுக்கோப்புச் செய்த கணிப்பொறி உதவியாளர் திரு. சு. கண்ணனுக்கும், அழகுற அச்சிட்டுத் தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தார்க்கும் பாராட்டுகள்.

**இயக்குநர்**

சென்னை
29-11-2005

# பதிப்புரை

தமிழ் மேம்பாட்டிற்கான இதழ்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து உருவாகத் தொடங்கின. 'உதய தாரகை' (1841), 'ஜநவிநோதினி' (1870), 'நாகை நீலலோசனி' (1890), 'ஞானபானு' (1894) போன்றவை குறிப்பிடத்தக்க சில இதழ்கள். இருபதாம் நூற்றாண்டில் இவற்றின் எண்ணிக்கை மேலும் வளர்ந்தது. அதன் விளைவாகச் 'செந்தமிழ்' (1903), 'தமிழபிமானி' (1921), 'செந்தமிழ்ச் செல்வி' (1923), 'தமிழ்ப் பொழில்' (1925) எனத் தமிழை மையப்படுத்தி பல இதழ்கள் தோன்றலாயின. மொழி, இலக்கியம், பண்பாடு, தமிழ் மொழி வரலாறு, தமிழ் இலக்கிய வரலாறு, பதிப்புகள், தமிழ் அமைப்புகள், அவற்றுக்கான இதழ்கள் என்றும் மேலைநாட்டு அறிவியல் போக்குகளைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தும் அறிவியல் இதழ்கள் என்றும் தமிழின் மேம்பாட்டிற்காக இதழ்கள் தோன்றின.

இந்தியா குடியரசு நாடாக மாறிய பிறகு, மொழி வழி மாநிலங்கள் தோன்றியதன் பின்னணியில் இந்திய மொழிகளின் வளர்ச்சியோடு தமிழ் போட்டியிடும் சூழல் உருவானது. அதன் தேவையை நிறைவு செய்யும் வகையில் அரசு நிருவாக நடைமுறைகளும் தோன்றின. இந்திய மொழிகளில் முதலாவதாகச் சென்னைப் பல்கலைக்கழகம் வழியாக வெளிவந்த தமிழ்ப் பேரகராதி (ஏழு தொகுதிகள்), தமிழ் வளர்ச்சிக் கழகம் வெளியிட்ட தமிழ்க் கலைக் களஞ்சியம் (பத்து தொகுதிகள்), சாம்பசிவம் பிள்ளையால் வெளியிடப்பெற்ற சித்த மருத்துவ அகராதி (ஐந்து தொகுதிகள்) போன்ற தமிழ் மொழி வளத்தை வெளிப்படுத்தும் நூல்கள் இங்கு நினைக்கத்தக்கன. மொழியின் அனைத்துத் துறைகளிலும் தொடர்ந்து கவனம் செலுத்த, தமிழ் வளர்ச்சி இயக்ககம், தமிழ் இயல், இசை, நாடக மன்றம் போன்றனவும் தமிழக அரசால் தோற்றுவிக்கப் பெற்றன; தமிழை வளர்க்க உரிய நிதி வழங்கப்பெற்றது. சென்னைப் பல்கலைக்கழகத்துத் தமிழ்த்துறையில் பல அறிஞர்கள் பெயரால் பல பொருண்மை பற்றிய தமிழ் இருக்கைகள் ஏற்படுத்தப்பட்டன. நீண்ட தமிழ்ப் பாரம்பரியமுடைய இப்பல்கலைக்கழகத்துத் தமிழ்த்துறையின் சார்பில் 'தமிழாய்வு', 'உயராய்வு' இதழ்கள் வெளிவந்ததும் குறிப்பிடத்தக்கது.

1948ஆம் ஆண்டு முதல் இலங்கையில் தனிநாயகம் அடிகள் உலகத் தமிழர்களை ஒருங்கிணைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டார். அவர் தோற்றுவித்த உலகத் தமிழாராய்ச்சிக் கழகம் உலகத் தமிழ் மாநாடுகளை நடத்த கால்கோளிட்டது. மேலும் இக்கழகத்தின் வழியாக வெளிவந்த Tamil Culture இதழில் தமிழ் குறித்த சிறந்த கட்டுரைகள் பல வெளியாயின. இவரது தமிழ் மாநாட்டின் விளைவாக உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தோற்றம் பெற்றதும், அந்நிறுவனம் வழியாகத் 'தமிழியல்' இதழ் தொடங்கப் பெற்று வெளிவந்து கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கன. 1981ஆம் ஆண்டு தஞ்சாவூரில் தமிழ்ப் பல்கலைக்கழகம் உருவாக்கம் பெற்றதும் அதன் வழியாகத் 'தமிழ்க்கலை' இதழ் வெளிவர ஆரம்பித்ததும் குறிப்பிடத்தக்க நிகழ்வுகளாகும். தமிழில் இவை போன்று அரசு நிறுவனங்கள், அரசு சார்பு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் தமிழ் மொழி நலம் பேணலுக்காகத் தமிழ் இதழ்கள் பலவற்றை நடத்தின.

இவ்விதழ்கள் தமிழுக்கு நல்கிய பங்களிப்பை அறிவதற்காக, 'தமிழ் ஆய்வு இதழ்கள்' என்னும் பொருண்மையில் சென்னையிலுள்ள பச்சையப்பன் கல்லூரியில், 1998ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12, 13ஆம் தேதிகளில் கருத்தரங்கம் நடைபெற்றது. இவ்வரங்கில் பல அறிஞர்கள் தம் கட்டுரைகளைப் படித்தும் விவாதத்தில் பங்கேற்றும் சிறப்பு செய்தனர். இக்கருத்தரங்கக் கட்டுரைகள், 'தமிழ் ஆய்வு இதழ்கள்' என்ற தலைப்பில் இப்பொழுது நூல் வடிவம் பெறுகின்றன. இத்தொகுப்பில் 1. சித்தாந்த தீபிகை, 2. கலைக்கதிர், 3. Tamil Culture, 4. தமிழாய்வு / உயராய்வு, 5. புலமை, 6. மொழியியல், 7. தமிழ்க்கலை, 8. நாட்டுப்புறவியல் / நாட்டார் வழக்காற்றியல் இதழ்கள், 9. திராவிடவியல் ஆய்விதழ், 10. வரலாறு என்னும் பத்து கட்டுரைகள் நூலாக்கம் பெறுகின்றன.

## சித்தாந்த தீபிகை (1897)

"சமய ஞானம், தத்துவ ஞானம், கலைஞானம், பூத பௌதிகம் முதலிய சாஸ்திர ஞானம் இவற்றைப் பற்றி விவகரிக்கும் மாதாந்தப் பத்திரிகை" என்ற குறிப்போடு 'உண்மை விளக்கம் எனும் சித்தாந்த தீபிகை' என்னும் ஆய்வு இதழ் 1897 ஜூன் முதல் மாத இதழாக வெளிவந்தது. இவ்விதழில் அன்றைய தமிழ்நாட்டு அறிஞர்களான அனவரதவிநாயகம் பிள்ளை, என். பாலசுப்பிரமணிய முதலியார், மறைமலையடிகள், துடிசைக்கிழார், எம்.எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை போன்றோர் தங்கள் பங்களிப்பை நல்கினர். அதைப் போன்றே

இலங்கை அறிஞர்களான பொன்னம்பலம் அருணாசலம், பொன்னம்பலம் இராமநாதன், எஸ். டபிள்யூ. குமாரசுவாமி, அ. முத்துத்தம்பிப் பிள்ளை போன்றோரும் இவ்விதழில் எழுதியுள்ளனர்.

சைவ சித்தாந்தம், வேதாந்தம் குறித்த கட்டுரைகளைக் கொண்ட இவ்விதழ் தமிழில் ஓராண்டு மட்டுமே வெளிவந்தது. "தென்னிந்தியாவில் தத்துவ இலக்கியம் உள்ளது. சமஸ்கிருதத்தின் தாக்கச் சுவடுகள் தெளிவாகக் காணப்பட்டாலும் சொந்த நாட்டிற்குரிய மூலக் கூறுகளைக் கொண்டுள்ளது. அவை வரலாற்று நோக்கிற்குரிய மிகுந்த முக்கியத்துவத்தையும் மிக்க அழகையும் கொண்டுள்ளன. . . திராவிட மொழிகள், இலக்கியத் துறைகளில் உழைத்து சாதிக்க வாய்ப்புள்ளது என்று நான் நம்புகிறேன்" என சமஸ்கிருதத்தை உலகறியச் செய்த மாக்ஸ்முல்லர் கூறிய கருத்து தமிழ், சமய, தத்துவங்கள் மீது அறிஞர்களுக்கு மிகுந்த ஈடுபாட்டை ஏற்படுத்தியது. அதற்குக் களம் அமைத்துக் கொடுத்ததில் சித்தாந்த தீபிகையின் பங்கு மகத்தானது.

**கலைக்கதிர் (1948)**

தமிழகத்தில் வெளிவரும் அறிவியல் இதழ்களில் ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்து வெளிவரும் இதழ் கலைக்கதிர். அண்மைக் காலத்தில் பொது மக்களுக்கான அறிவியல் செய்திகளுக்கு முதன்மை தந்து, அறிவியல் தமிழ்ப்பணி ஆற்றிவரும் கலைக்கதிர் தொடக்க காலத்தில் ஓர் ஆய்வு இதழாக மட்டுமே வெளிவந்தது.

கலைக்கதிர் இதழ் பல சிறப்பிதழ்களை அவ்வப்போது வெளியிட்டது. பயிற்றுமொழிச்சிக்கல் சிறப்பு மலர், பொறியியல் மாணவர் மலர், பொருளாதாரச் சிறப்பு மலர், புத்தர் மலர், சுதந்திரப் போராட்டச் சிறப்பு மலர் ஆகியன குறிப்பிடத்தக்க சில சிறப்பிதழ்கள்.

இலக்கியங்களில் உருவம் / உள்ளடக்கம், கால ஆராய்ச்சி, பதிப்புப் பணிகள், சேர, சோழ, பாண்டிய மையங்களை வைத்து, வரலாறு எழுதுதல், தமிழ்ப் பண்பாட்டை இலக்கியங்களில் தேடும் முயற்சிகள் ஆகியவை காலாவதியான ஆய்வுகளாகக் கருதப்பெற்ற நிலையில், எண்பதுகளில் நடந்த புதிய மாற்றங்களைக் கலைக்கதிர் உள்வாங்கிக் கொள்ளவில்லை என்றும் மாறாகப் புதிய அறிவியல் கருத்துகளை மக்களிடம் கொண்டு செல்லும் 'பொதுமக்களுக்கான/ இளைஞர்கள் / மாணவர்களுக்கான அறிவியல் பரப்பல்' என்ற புதிய

பாதையில் எண்பதுகளுக்குப் பிறகு நடைபோட்டுத் தன்னுடைய போக்கை மாற்றிக்கொண்டு தலைசிறந்த அறிவியல் இதழாக வெளிவருகிறது என்றும் கட்டுரையாசிரியர் கலைக்கதிரின் அண்மைக் காலத்து நிலைப்பாட்டை - போக்கைத் தெளிவுபடுத்துகிறார்.

## Tamil Culture *(1952)*

*1952*இல் இருந்து *1966* வரையிலும் Tamil Culture என்னும் காலாண்டு இதழ் தனிநாயகம் அடிகளால் வெளியிடப்பட்டது. உலகத் தமிழர்களை ஒருங்கிணைக்க 'உலகத் தமிழாராய்ச்சி மன்றம்' நிறுவிய தனிநாயகம் அடிகளார் தம் நோக்கத்தை நிறைவு செய்ய உலகத் தமிழறிஞர்களின் துணையோடு Tamil Culture இதழை ஆரம்பித்தார். தமிழ் - அதன் பண்பாடு, சமூகம், வரலாறு, மொழி குறித்த மிக ஆழ்ந்த - பொருளார்ந்த கட்டுரைகள் இவ்விதழில் வெளிவந்தன. தமிழகம், இலங்கை, மலேயா போன்ற கீழை நாட்டுத் தமிழ் அறிஞர்களும் ரஷ்யா, செக்கஸ்லோவிக்கியா போன்ற மேலைநாட்டுத் தமிழ் அறிஞர்களும் தங்கள் ஆழ்ந்த புலமையின் வெளிப்பாடான கட்டுரைகளை இவ்விதழில் எழுதினர். இவ்விதழ் ஆங்கிலத்தில் அமையப் பெற்றமைக்கு அதன் முதன்மைப் பதிப்பாசிரியர் தனிநாயகம் அடிகள் அவர்கள், "Tamil Literature and Tamil Culture, that there be some Review in English through the medium of which these subjects may reach the non-Tamil world, and reach also that class of Tamil Society which on account of various circumstances finds itself more proficient in English than Tamil" எனக் காரணம் கூறினார். தமிழின் செழுமையை எல்லாக் கோணங்களிலும் வெளிப்படுத்த தனிநாயகம் அடிகள் பெரிதும் உழைத்தார். ஐம்பதுகளில் புகழோடு விளங்கிய அனைத்துத் தமிழ் அறிஞர்களும் இவ்விதழில் கட்டுரைகளை எழுதியுள்ளனர். மேலும் மேலைநாட்டுத் தமிழ் அறிஞர்களான M. Andronov, J.T, Cornelius, H.S. David, M.B. Emeneau, J.Fillozat போன்றவர்களும் இவ் இதழில் சிறந்த கட்டுரைகளை எழுதியுள்ளனர். 'Journal of the Academy of Tamil Culture' என்ற குறிப்போடு வெளிவந்த இவ்விதழ் தமிழியல் ஆய்வு இதழுக்கான ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்தது.

## தமிழாய்வு / உயராய்வு (1972)

"தமிழ் நாட்டிலுள்ள இந்த மூத்த பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறைக்கென்று தனியே ஒரு வெளியீடு இருப்பது நல்லது. அத்தகைய வெளியீடு தமிழாய்விற்குத் துணை செய்யும். எனவே 'தமிழாய்வு'

என்னும் ஆராய்ச்சி இதழ் ஒன்றினைத் தமிழில் - தமிழ்த் துறையின் சார்பில் வெளியிட வேண்டும் என்ற பரிந்துரை ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதன் விளைவுதான் உங்களிடையே தவழவிருக்கும் தமிழாய்வு" என்னும் பேராசிரியர் ந. சஞ்சீவி அவர்களின் அறிவிப்போடு இவ்விதழ் வெளிவந்தது. 14 தொகுதிகள் கொண்ட இவ்விதழில் இலக்கணம், இலக்கியம், வாழ்க்கை வரலாறு, சமூகவியல், வரலாறு எனப் பல தளங்களில் கட்டுரைகள் இடம் பெற்றன.

ஓலைச் சுவடிகளில் முடங்கிப்போன பல நூல்களையும் தமிழாய்வு வெளியிட்டது. புலவர் மு. சண்முகம் பிள்ளை, தமிழாய்வு மாலை, அப்பாண்டை நாதர் உலா, நாககுமார காவியம், அடிமதிக்குடி பிள்ளைத் தமிழ், மேருமந்திர மாலை, பாரதி தீபம் போன்ற நூல்களைப் பதிப்பித்தார். முனைவர் இ. சுந்தரமூர்த்தி அவர்கள் அல்லி கதை, இருபுராண விருத்தம், வண்ணத்தியல்பு போன்ற நூல்களைப் பதிப்பித்தார். மேலும் தேவையான நூல் அடைவுகள், அகராதி அடைவுகள், பேரா. எஸ். வையாபுரிப்பிள்ளை கல்கத்தா தேசிய நூலகத்திற்கு வழங்கிய சுவடி விளக்க அட்டவணை போன்றவையும் தமிழாய்வின் குறிப்பிடத்தக்க பணிகளாகும்.

உயராய்வு இதழும் தமிழ் இலக்கியத்துறை சார்பில் வெளிவந்த பிறிதொரு இதழாகும். இது 14 தொகுதிகளைக் கொண்டது. இவ்விதழ் தொகுப்புகளில் ரா.பி. சேதுப்பிள்ளை, மு. வரதராசன், பாரதி, திரு.வி.க., சிங்காரவேலர் போன்ற அறிஞர்களின் வாழ்க்கை, ஆய்வு அணுகுமுறை, தமிழுக்கு அவர்களின் கொடை போன்றன குறித்த செய்திகள் உள்ளன. ஆத்திசூடி - பரிமேலழகர் உரை, இருபுராண விருத்தம் ஆகிய நூல்கள் உயராய்வு இதழில் முனைவர் இ. சுந்தரமூர்த்தி, தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் ம. இராசேந்திரன் ஆகியோரால் பதிப்பிக்கப்பெற்றன.

## புலமை (1975)

1975ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் காலாண்டு இதழாக புலமை வெளிவரத் தொடங்கியது. பின்னர் 1979ஆம் ஆண்டு முதல் அரையாண்டு இதழாக மாற்றம் பெற்றது. கி. அரங்கன், கே.எஸ். கமலேசுவரன், சாமி. அறவாணன், சி. மெய்கண்டார், இராம. சுந்தரம், ஆர். பெரியாழ்வார், சூ.க. சுப்பிரமணியன், அ. மெய்ப்பன், பொற்கோ ஆகிய அறிஞர்கள் குழுவின் வழிகாட்டுதலோடு இவ்விதழ் வெளிவரத் தொடங்கியது. 'புலமை நடை' என்பது பற்றி இவ்விதழில் வெளிவந்த

குறிப்புகள் 'புலமை' இதழுக்குக் கட்டுரை எழுதுவோர் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகளை உணர்த்தியது. கட்டுரை எழுதிய அறிஞர்களுக்குப் பணம் வழங்கியதோடு அவர்களின் கட்டுரைக்கான கூடுதல் படிகளை வழங்கிச் சிறப்பித்தது. சிறந்த மரபு, மொழியியல் அறிஞரான பொற்கோ அவர்களோடு பல மொழியியல் அறிஞர்களும் இவ்விதழில் தம் கட்டுரைகளை வெளியிட்டனர். இத்துடன் தமிழர் பண்பாட்டு அடையாளங்களை அறியும் கட்டுரைகள், வரலாற்று ஆய்வுக் கட்டுரைகள், உளவியல் கட்டுரைகள் எனப் பல தளங்களிலிருந்தும் கட்டுரைகள் இவ்விதழில் வெளியிடப்பட்டுள்ளன.

அரிய நூல்கள் சில இவ்வாய்விதழில் மறுவெளியீடாகத் தரப்பெற்றன. 'தமிழ் மொழி வளர்த்தல் அல்லது தமிழ் பாஷையை அபிவிர்த்தி செய்யும் மார்க்கங்கள்,' 'அகத்தியர் ஆராய்ச்சி', 'சைவ சமய வரலாறு', 'இலக்கண தீபம் - தொகுப்பும் ஆய்வும்', 'வண்ணத்தியல்பு - பதிப்பும் உரையும்' போன்றன அவ்வகையில் வெளிவந்த சில சிறு நூல்களாகும். "புலமையைப் போன்ற காலாண்டு இதழ்கள் இப்போது இந்தக் காலகட்டத்தில் தமிழ் மொழிக்கு மிகவும் தேவையான ஒன்று என்பது நம் எல்லோருக்கும் தெளிவாகத் தெரிந்த செய்தி. . . நமது புலமையை நாம் தன்மானப் புலமையாக வளர்த்து உலக அரங்கில் தலை நிமிர்ந்து நிற்கச் செய்யவேண்டும்" என்று இவ்விதழ், அரையாண்டு இதழாக மாற்றம்பெற்றபோது வந்த குறிப்பு இன்றைக்கும் பொருந்தும்.

### மொழியியல் (1977)

அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் உயராய்வுத் துறையின் பேராசிரியர் முனைவர் ச. அகத்தியலிங்கம் அவர்களால் 'அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம்' வழியாக 'மொழியியல்' இதழ் வெளியிடப்பெற்றது. இவ்விதழ் ச. அகத்தியலிங்கம், செ.வை. சண்முகம், சுப. திண்ணப்பன், ந. குமாரசாமி ராஜா, பொன். கோதண்டராமன், கி. அரங்கன், வ. ஞானசுந்தரம், கே.எஸ். கமலேஸ்வரன், ந. நடராச பிள்ளை போன்ற பல மொழியியல் அறிஞர்கள் பொறுப்பில் நடந்தது.

மொழியியல் இதழ் பல சிறப்பு மலர்களை வெளியிட்டுள்ளது. எழுத்துச் சீர்திருத்த மலர் (1979), பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளை மணிவிழா மலர் (1979 - 80), பேராசிரியர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் நினைவு மலர் (1980), அனைத்திந்தியத் தமிழ் மொழியியல் கழகத்தின் முதல் மாநாட்டுக் கருத்தரங்கு மலர் (1985), பேராசிரியர்

ச. அக்த்தியலிங்கம் மணிவிழா மலர் (1989 - 91 - நான்கு தொகுதிகள்) ஆகியன குறிப்பிடத்தக்கன. சிறந்த மொழியியற் கருத்துப் பெட்டகங்களாக அவை திகழ்ந்தன. மேலும் பத்தொன்பதாம் நூற்றாண்டு தொடங்கி இருபதாம் நூற்றாண்டு ஈறாக மொழியியலில் நன்கு உழைத்த அறிஞர்களின் வாழ்க்கைக் குறிப்புகளும் மொழியியல் இதழில் வெளிவந்துள்ளன. இலக்கியம் தொடங்கி அறிவியல் தமிழ் ஈறாக மொழியியல் இதழில் வெளிவந்த கட்டுரைகளை அவற்றின் பொருளமைதி கருதி 17 பிரிவுகளாகக் கொண்டு இக்கட்டுரையாளர் ஆராய்ந்துள்ளார். மேலும் மொழியியலில் வெளிவந்த கட்டுரைகளின் பட்டியலும் தரப்பெற்றுள்ளது.

தமிழ்க்கலை (1983)

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் காலாண்டு இதழாக மார்ச்சு 1983ஆம் ஆண்டு முதலாகத் 'தமிழ்க்கலை' வெளிவர ஆரம்பித்தது. இவ்விதழின் முதல் இதழ், இதழின் நோக்கத்தை, "தமிழ் பேசும் நல்லுலகில் வாழும் மக்கள் அனைவருடைய பண்பாட்டு இயல்புகள், சிக்கல்கள், சமூகவியல் முதலியவற்றைப் பற்றியும் தமிழ்மொழி, இலக்கியம், வரலாறு, கோயில் கட்டடக் கலை, கல்வெட்டியல், மொழிபெயர்ப்பியல், சிற்பவியல், நடனவியல், நாடகவியல், ஓவியவியல், இசையியல், தொல் அறிவியல், சித்த மருத்துவவியல், மொழியியல் மற்றும் தமிழ் தொடர்பான பிற பண்பாட்டுக் கூறுகள் பற்றிய ஆய்வுக் கட்டுரைகள், குறிப்புகள், மதிப்புரைகள், அறிக்கைகள் ஆகியன இடம்பெறும்" எனக் கூறுவதிலிருந்து இவ்விதழ் தமிழின் பன்முகப் பரிமாணங்களை வெளிப்படுத்தியதை அறிந்துகொள்ள முடியும். சு. செல்லப்பன், ஜிஆர். தாமோதரன், கா. மீனாட்சி சுந்தரம், க. வெள்ளைவாரணன், க. ஆறுமுகம், என்.பாலுசாமி போன்ற அறிஞர் பெருமக்கள் தமிழ்க்கலை இதழின் பொறுப்பில் பங்கேற்றிருக்கின்றனர்; உறுப்பினர்களாகச் செயல்பட்டிருக்கின்றனர். இவ்விதழில் சங்க இலக்கியம் தொடங்கித் தற்கால இலக்கியம் வரையிலும் பல கட்டுரைகள் வெளிவந்துள்ளன. அகராதியியல், நாட்டுப்புறவியல், மருத்துவம் போன்றவை குறித்தும் பிற துறைகளில் நடைபெற்றுவரும் மாற்றங்கள் குறித்தும் விரிவான தகவல்கள் அடங்கிய கட்டுரைகள் இவ்விதழில் வெளிவந்தன.

அயல்நாட்டில் வாழும் தமிழர்களை ஒருங்கிணைக்க, தமிழ்ப் பல்கலைக்கழகம் அதன் தொடக்க காலம் முதலே திட்டங்கள் தீட்டிச் செயலாற்றி வருகிறது. தமிழர்கள் தங்கள் அடையாளங்களை மேலைநாட்டில் வாழ்ந்த போதிலும் கருத்தாகப் பேணவேண்டும்

என்ற கருத்தமைவு கொண்ட சில கட்டுரைகள் தமிழ்க்கலையில் வெளிவந்தன. ஒப்பிலக்கியம், ஒப்பிலக்கணம், கலந்துரையாடல்கள் போன்றன செய்திகளாக இவ்விதழில் பதிவாயின.

## நாட்டுப்புறவியல் / நாட்டார் வழக்காற்றியல் (1983)

1950களுக்குப் பிறகு தமிழ்க் கல்வியில் நாட்டார் வழக்காற்றியல் குறித்த ஆய்வுகள் மெல்ல மெல்ல வளரத் தொடங்கின. தமிழகத்தில் ஐரோப்பியர் முதலில் இத்துறையில் அரிய சாதனைகள் பலவற்றைச் செய்தனர். ஆனால், தொடர்ச்சியாகத் தமிழில் இத்துறை வளரவில்லை. அரை நூற்றாண்டு இடைவெளிக்குப் பிறகு தமிழில் வெளிவரும் பல ஆய்விதழ்களில் இத்துறையில் தரமான கட்டுரைகள் தம் பங்களிப்பைச் செய்தன. நா. வானமாமலை அவர்களின் ஆராய்ச்சி இதழில் நாட்டார் பண்பாட்டிற்குச் சிறப்பிடம் தரப்பெற்றது. பல்கலைக்கழகங்களில் நாட்டார் குறித்த ஆய்வுகள் மெதுவாகப் பெருக ஆரம்பித்தன. 1982இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ச. அகத்தியலிங்கம் அவர்கள் 'நாட்டுப்புறவியல்' என்ற காலாண்டு இதழை நடத்தினார். 1986இல் பாளையங்கோட்டை தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரியில் நாட்டார் வழக்காற்றியலுக்கான உயராய்வு நிறுவனம் தொடங்கப் பட்டதோடு, நாட்டார் வழக்காறுகளை அறிந்துகொள்ள அரையாண்டு இதழாக வெளிவந்த 'நாட்டார் வழக்காற்றியல்' இதழும் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றது. தே. லூர்து அவர்கள், அருள்தந்தை ஜெயபதி அவர்கள் இவ்விதழின் பின்னணியில் இருந்து உருவாக்கத்திற்கும் இதழ் செயற்பாட்டிற்கும் உழைத்தனர்.

பெங்களூரிலிருந்து 'காவ்யா' சு. சண்முகசுந்தரம் அவர்கள் 1995 இல் இருந்து 'தன்னனானே' என்ற தலைப்பில் ஓர் இதழை இன்றளவும் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கின்றார். பல இதழ்கள் ஒரு குறிப்பிட்ட பொருள் குறித்த சிறப்பிதழ்களாக வெளிவந்தன. இவை போக, South Indian Folkloristics, Folklore Fellows of India, FRRC News, FOSSILS News போன்ற ஆய்விதழ்கள், ஆய்வுச் செய்தி இதழ்கள் ஆகியனவும் இத்துறையில் நாட்டார் வழக்காறுக்குத் தங்கள் பங்களிப்பைச் செய்த வேறுசில இதழ்களாகும்.

## திராவிடவியல் ஆய்விதழ் (1991)

புதுவை மாநிலத்தில் அரசு நிறுவனமான Pondicherry Institute of Linguistics and Culture (புதுவை மொழியியல் பண்பாட்டு நிறுவனம்) என்பதன் வழியாக வெளிவந்த ஆய்விதழ் PILC Journal of

Dravidic Studies என்பதாகும். "இவ்விதழ்க் கட்டுரைகள் கோட்பாட்டாய்வுகளாகவோ, தரவுகளின் அடிப்படையில் புதிய சிந்தனைகளை வெளியிடும் வகையிலோ அமைய வேண்டும். மொழியியல், பண்பாட்டியல் மற்றும் பல்வேறு வல்லுநர்களின் கவனத்தை ஈர்க்கும் ஆய்வுப் பொருளைக் கொண்டு அத்துறை வல்லுநர்களால்" எழுதப்படுவதாகக் கட்டுரையாளர் குறிப்பிடுகின்றார். இவ்வாய்வு இதழில் கட்டுரைகள், வழங்குவற்கான விதிமுறைகளுக்கு (Style Sheet) உட்பட்டு எழுதப்படுவன. உரிய அறிஞர் குழுவிற்கு அனுப்பப்பட்டுத் தேர்வு செய்யப்படுகின்றன. அரையாண்டு இதழாக வெளிவரும் இவ்விதழ் மொழியியல், பண்பாடு, இலக்கியம் சார்ந்த கட்டுரைகளை வெளியிடுகிறது. மேலைநாட்டு அறிஞர்களான ஆன்டர்னோ, கமில் சுவலபில், டெய்டர் காப், வாசக், ஸான்மார் போன்ற பலர் இவ்விதழில் கட்டுரைகளை எழுதியுள்ளனர்.

*வரலாறு (1993)*

"தமிழகமெங்குமுள்ள வரலாறு, கோயிற்கலைகள், இலக்கியம், கல்வெட்டுத் துறைகளில் ஈடுபாடுள்ள ஆர்வலர்கள் ஒன்றுபடுவது இன்றைக்கு மிகத் தேவையான நிலையாகும். . . வரலாறு இதற்கான பணியில் முதலடி எடுத்து வைத்துள்ளது. இந்நோக்குடன் வருவோர் அனைவர்க்கும் வரவேற்பும் ஒத்துழைப்பும் தர வரலாறு காத்திருக்கிறது" என 'வரலாறு' இதழின் பொறுப்பாசிரியர் இரா. கலைக்கோவன் இதழின் நோக்கத்தைத் தெளிவுபடுத்துகிறார். ஆழமான ஆய்வு, புதிய கண்டுபிடிப்புகள், ஏற்கனவே முடிவு செய்யப்பட்ட ஆய்வுகளை மீண்டும் சீர்தூக்கிப் பார்த்துக் குறைகளைக் களைந்து வரலாற்றுப் பிழைகள் ஏற்படா வண்ணம் பார்த்துக்கொள்வது போன்ற அரிய நோக்கங்களை அதன் ஆசிரியர் தம் இதழில் கடைப்பிடித்து வருகிறார். 1993ஆம் ஆண்டு தொடங்கப் பெற்ற வரலாறு இதழ் அரையாண்டு இதழாகத் தொடங்கப் பெற்று, தமிழக வரலாறு, பண்பாடு, சமூகம் சார்ந்த பண்டைய தமிழகத்தை அறிந்து கொள்ள பல நிலைகளிலும் பயன்படுகிறது. கல்வெட்டுகள், ஆவணங்கள், தமிழர் கட்டடக்கலை, ஆடற்கலை, இறையுருவச் சிற்பங்கள் என்று வரலாறு என்ற இதழின் தலைப்பிற்கு ஏற்ப அதன் அனைத்துத் தளங்களிலும் இதன் பொறுப்பாசிரியர் இரா. கலைக்கோவன், உதவியாசிரியர்கள் மு. நளினி, அர. அகிலா ஆகியோர் செயல்பட்டு வருகின்றனர்.

பல்வேறு தமிழாய்வு நிறுவனங்கள் தமிழ் மொழி, இலக்கியம் மற்றும் அதன் வேறுபட்ட பரிமாணங்களை எத்தளங்களில் வெளிப்படுத்தியுள்ளன என்பதற்கு இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள் சிறந்த சான்றுகளாகத் திகழ்கின்றன. இத்தொகுப்பில் அடங்கா அரசு நிறுவனங்கள், அரசு சார்பு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் பல இதழ் வெளியீட்டில் தம் பங்களிப்பைச் செய்துள்ளன என்பதையும் கருத்தில் கொள்ளின் நிறுவன இதழியல் பங்களிப்பின் எல்லை விரிவடைவதைக் காணவியலும்.

தமிழ் ஆய்வு இதழ்கள் பற்றிய இருநாள் கருத்தரங்க நிகழ்ச்சிகள் பச்சையப்பன் கல்லூரியில் நடந்தேறுவதற்கு இசைவு அளித்து முழுமையான ஒத்துழைப்பையும் நல்கிய கல்லூரி முதல்வர் டாக்டர் ஆர்.எஸ். இராகவன் அவர்களுக்கு எங்கள் நன்றி.

நிறுவனச் சார்பில் நடைபெறும் இதழியல் கருத்தரங்குகளில் ஆய்வுரை, அமர்வுத் தலைமையுரை, கருத்துரை, சிறப்புரைகள் வழங்குவதற்கு உரிய அறிஞர்களைத் தேர்வு செய்யும் குழுவினர் முனைவர் பொற்கோ, முனைவர் இரா. இளவரசு, முனைவர் இ. சுந்தரமூர்த்தி, திரு. மா.ரா. அரசு ஆகியோருக்கு நன்றி.

இவ்விதழியல் கருத்தரங்குகளை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தோடு இணைந்து நடத்த இசைவளித்ததோடு கருத்தரங்குகள் சிறப்புற நடைபெற ஒத்துழைப்பு நல்கிய இந் நிறுவனத்தின் முன்னாள் இயக்குநர் முனைவர் ச.சு. இராமர் இளங்கோ அவர்களுக்கு நன்றி.

இந்நூல் வெளியீட்டில் பெரிதும் ஈடுபாடும் ஆர்வமும் காட்டிய உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் முனைவர் சா. கிருட்டினமூர்த்தி அவர்களுக்கு நன்றியைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

கருத்தரங்கில் ஆய்வுரைகள் நல்கிய ஆய்வாளர்களுக்கும் அமர்வுத் தலைமையுரை ஆற்றிய அறிஞர்களுக்கும் கருத்துரை வழங்கிய பெரியோர்களுக்கும் எங்கள் நன்றி.

இந்நூல் உருவாகும்போது அச்சுப்பணிகளில் பெரிதும் துணைநின்ற முனைவர் கி. ஜெயகுமார் அவர்களுக்கு நன்றி.

## பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. சித்தாந்த தீபிகை | - | பெ.சு. மணி | 1 |
| 2. கலைக்கதிர் | - | இரா. பாவேந்தன் | 21 |
| 3. Tamil Culture | - | ம.செ. இரபிசிங் | 34 |
| 4. தமிழாய்வு / உயராய்வு | - | கு. பகவதி | 43 |
| 5. புலமை | - | பெ. அர்த்தநாரீசுவரன் | 56 |
| 6. மொழியியல் | - | செ. ஜீன் லாறன்ஸ் | 69 |
| 7. தமிழ்க்கலை | - | மோ. தமிழ்மாறன் | 105 |
| 8. நாட்டுப்புறவியல் / நாட்டார் வழக்காற்றியல் | - | ஆறு. இராமநாதன் | 126 |
| 9. திராவிடவியல் ஆய்விதழ் | - | எல். இராமமூர்த்தி | 135 |
| 10. வரலாறு | - | கோ. வேணிதேவி | 145 |

# கட்டுரையாளர்கள்

1. முனைவர் பெ. அர்த்தநாரீசுவரன்
இணைப் பேராசிரியர்
தமிழ்த்துறை
மாநிலக்கல்லூரி
சென்னை - 600 005

2. முனைவர் ம.செ. இரபிசிங்
முதுநிலை ஆய்வறிஞர்
தமிழ் இணையப் பல்கலைக்கழகம்
தரமணி
சென்னை - 600 113

3. முனைவர் ஆறு. இராமநாதன்
இணைப்பேராசிரியர்
நாட்டுப்புறவியல்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 005

4. முனைவர் எல். இராமமூர்த்தி
முதுநிலை விரிவுரையாளர்
புதுவை மொழியியல் பண்பாட்டு
ஆராய்ச்சி நிறுவனம்
112,காமாட்சி அம்மன் கோவில் தெரு
புதுச்சேரி - 605 001

5. முனைவர் மோ. தமிழ்மாறன்
இணைப்பேராசிரியர்
தமிழ்த்துறை
பெரியார் பல்கலைக்கழகம்
சேலம் - 636 011

6. முனைவர் கு. பகவதி
இணைப்பேராசிரியர்
சமூகவியல், கலை மற்றும்
பண்பாட்டுத் துறை
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை - 600 113

7. முனைவர் இரா. பாவேந்தன்
விரிவுரையாளர்
தமிழ்த்துறை
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
ஞானாம்பிகை ஆலை (அ.நி.)
கோவை - 641 029

8. திரு பெ.சு. மணி
11, இராமகிருஷ்ணாபுரம்
இரண்டாவது தெரு
மேற்கு மாம்பலம்
சென்னை - 600 033

9. முனைவர் கோ. வேணிதேவி
பேராசிரியர் - தலைவர்
வரலாற்றுத்துறை
சீதாலட்சுமி இராமசாமி கல்லூரி
திருச்சி - 620 002

10. முனைவர் செ. ஜீன் லாறன்ஸ்
பேராசிரியர்
தமிழ் மொழி மற்றும்
மொழியியல் துறை
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை - 600 113

# சித்தாந்த தீபிகை

**1897** பெ.சு. மணி

1893இல் சிகாகோ சர்வமத சபையில் சுவாமி விவேகானந்தர் இந்து சமயத்தின் வெற்றிக் கொடியைப் பறக்க விட்டார்; வேதாந்தச் சிங்கமாக முழங்கினார். சைவ சித்தாந்தத்தை முதலும் முடிவுமாகப் போற்றிப் பரவுவதில் முனைந்து நின்ற யாழ்ப்பாணத் தமிழ்ச் சைவர்களும் சுவாமி விவேகானந்தரின் 'சிகாகோ சாதனை'யைப் பரந்துபட்ட இந்து சமயப்பற்று நோக்கில் பாராட்டி மாபெரும் வரவேற்பளித்தனர்.

1897இல் இலங்கை வழியாக இந்தியாவில் வெற்றி வீரராக முதன்முதலில் தமிழகத்தில் திருவுலா வந்த விவேகானந்தரை இந்து சமய உட்பிரிவினர் பலரும் தம்முள் வேற்றுமை பாராட்டாமல் வரவேற்றனர்.

இந்தச் சூழலில் சைவசித்தாந்த, தமிழ் சைவ எழுச்சிக்குச் 'சித்தாந்த தீபிகை'யைக் கொண்டு வித்தூன்றியவர் ஜே.எம். நல்லசாமிப் பிள்ளை (1864-1920). இந்து சமய வேதாந்தம் உலகளாவிய நிலையில் பெற்ற ஏற்றத்தைப் போன்று சைவ சித்தாந்தமும் பெறவேண்டும் என இதழாசிரியர் அவாவிநின்றார்.

வேத-வேதாந்த நூல்களை உலகிற்கு அறிமுகப்படுத்திய மாக்ஸ்முல்லர் (1823-1900) போன்று சைவசித்தாந்தத்தை உலக அரங்கில் அறிமுகம் செய்ய ஒருவர் கிடைக்கவில்லையே எனும் எண்ணமும் அவரை ஆட்கொண்டது. மாக்ஸ்முல்லரே இப்பணியைச் செய்திருக்கலாம் என எண்ணியோரும் இருந்தனர். மாக்ஸ்முல்லர் பார்வைக்கு ஆங்கிலத்தில் வெளிவந்த 'The Light of Truth' எனும் சித்தாந்த தீபிகையை அனுப்பிவைத்தார் ஜே.எம். நல்லசாமிப்பிள்ளை. மாக்ஸ்முல்லரும் தமது 'The Six Systems of Indian Philosophy' எனும் நூலின் முன்னுரையில் 'பண்டிட்', 'பிரம்மவாதின்', 'ஜர்னல் ஆப் தி புத்திஸ்ட் டெக்ஸ்ட் சொசைட்டி' எனும் இதழ்களுடன் The Light of Truth இதழையும் சேர்த்து அவை மிக்க மதிப்பு வாய்ந்த தொண்டினை ஆற்றிவருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.[1]

பேரறிஞர் ஜே.எம். நல்லசாமிப் பிள்ளை 'சித்தாந்த தீபிகை'யின் ஆங்கிலப் பதிப்பில், 21 ஆகஸ்டு, 1897இல் அவருடைய நண்பரான ஜி.எம். கப்பன் (G.M. Cobban) எனும் கிறித்தவ சமயப் பாதிரியார் தமது நண்பர் ஒருவருக்கு எழுதிய கடிதத்தில் சில குறிப்புகளைத் தந்துள்ளார். 'Importance of Early Dravidian Literature' எனும் தலையங்கத்தில் அக்கடிதத்தின் சில குறிப்புகள் பின்வருமாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

> தமிழ், அரிதாகவே விவரிக்கப்படுகின்றது; ஒரு சிலர் எழுப்பும் குரல், பாலைவனத்தில் கேட்பாரற்ற குரலாகி விடுகின்றது. வணக்கத்துக்குரிய ஜி.எம். கப்பன், தமது நண்பர் ஒருவருக்கு எழுதிய கடிதத்தில் தமிழ் தத்துவ நூல்கள் சிலவற்றைக் குறித்து மாக்ஸ்முல்லரின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அவற்றில் சிலவற்றை மொழியாக்கம் செய்து அவருடைய, கிழக்கின் புனித நூல்களிலும் சேர்க்குமாறு வற்புறுத்தியபிறகு மாக்ஸ்முல்லரிடம் துலங்கல் அரிதாகவிருந்தது என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலே குறிப்பிடப்பெற்ற 'கிழக்கின் புனித நூல்கள்' (Sacred Books of the East) எனும் தலைப்பில் 1875 முதல் 51 தொகுதிகள் வெளிவந்தன. தமது காலத்திலேயே 48 தொகுதிகளைப் பதிப்பித்தார் மாக்ஸ்முல்லர். அவர் மறைவிற்குப் பிறகு சிறப்புப் பெயர் குறிப்பகராதி உட்பட மூன்று தொகுதிகள் வெளிவந்தன.

49 தொகுதிகளில் 21 இந்து சமயத்திற்கும், 10 பௌத்த சமயத்திற்கும், 2 சமண சமயத்திற்கும், பிற பார்சி, இஸ்லாமிய, சீன சமயங்களுக்கும் உரியன. இந்த 49 தொகுதிகளில் 6 தொகுதிகளைப் பிறருடன் இணைந்து மொழிபெயர்த்தார். பிற பல்வேறு அறிஞர்களால் மொழிபெயர்க்கப்பெற்றன. அனைத்தையும் பதிப்பித்தவர் மாக்ஸ்முல்லர்.[2]

மாக்ஸ்முல்லர், இளம் மாணவர்களிடம் திராவிட மொழிகளையும் இலக்கியத்தையும் ஆய்விற்கு எடுத்துக் கொள்ள, பின்வருமாறு பரிந்துரைத்தது குறிப்பிடத்தக்கது.

> தென்னிந்தியாவில் தத்துவ இலக்கியம் உள்ளது. சமஸ்கிருதத் தாக்கத்தின் சுவடுகள் தெளிவாகக் காணப்பட்டாலும் சொந்த நாட்டிற்குரிய மூலக் கூறுகளைக் கொண்டுள்ளது. அவை வரலாற்று நோக்கிற்குரிய மிகுந்த முக்கியத்துவத்தையும் மிக்க

அழகையும் கொண்டுள்ளன. சமஸ்கிருத இலக்கியத்தில் இனி செய்வதற்கு ஏதும் இல்லை என்று முறையீடு செய்யும் இளம் மாணவர்கள், திராவிட மொழிகளின், இலக்கியத் துறைகளில் உழைத்து சாதிக்க வாய்ப்புள்ளது என்று நான் நம்புகிறேன்.[3]

## சிகாகோ சர்வமத சபையில் சைவசமய அறிமுகம் இல்லையே!

உலக அரங்கில் தமிழ்ச் சைவத்தை அறிமுகம் செய்து வைக்க சிகாகோ சர்வமத சபையில், ஆங்கிலமும் அறிந்த சைவப் பேரறிஞர்கள் எவரும் முன்வராமற் போனது ஒரு வரலாற்றுச் சோகமாகும். சிகாகோ சர்வமத சபை கூட இருந்ததை ஆங்கிலமறிந்த சைவப் பேரறிஞர் பாஸ்கர சேதுபதி (1868 - 1903) அறிந்திருந்தார். 1893 ஜனவரி 25இல் ஆங்கிலத்தில் அவர் எழுதிய நாட்குறிப்பில் அவருக்குச் சிகாகோ செல்ல விருப்பமிருந்தது என்பது தெரிகின்றது.[4] அவர் சிகாகோ சர்வமத சபையில் நேரடியாகச் சென்று பங்கேற்க இயலாது போனாலும், சைவ சமயத்தைக் குறித்து ஓர் ஆய்வுக் கட்டுரையை அனுப்பியிருக்கலாம்.

இவ்விடத்தில் ஒரு செய்தி குறிப்பிடத்தக்கது. தமிழகத்தைச் சார்ந்த எஸ். பார்த்தசாரதி அய்யங்கார் (சுவாமி விவேகானந்தரின் அருமைச் சீடர் அழகிய சிங்கப்பெருமாளின் உறவினர்) 'The Tenkalai Sri Vaishnava of Southern Ramanuja Religion' எனும் தலைப்பில் அனுப்பிய கட்டுரை மாநாட்டு நூலில் பதிவாகியுள்ளது.[5]

இலங்கை யாழ்ப்பாணத்தில் ஆங்கில மொழிப்புலமை நனிதுலங்கத் தமிழ்ச் சைவ சமயத்தைக் குறித்து ஆய்வுக் கட்டுரையைச் சிகாகோ சர்வமத சபைக்கு அனுப்பிவைக்க ஆற்றலும் வசதியும் பெற்ற பொன்னம்பலம் குமாரசாமி, பொன்னம்பலம் இராமநாதன், பொன்னம்பலம் அருணாசலம் சகோதரர்கள் இருந்துள்ளனர். அவர்களுக்குச் சிகாகோவில் சர்வமத சபை கூடவிருந்ததை அறிந்துகொள்ள வாய்ப்பற்றுப் போய்விடவில்லை. சைவ சமயத்தின் எழு ஞாயிறாக யாழ்ப்பாணத்தில் ஆறுமுக நாவலர் (1822-1879) முன்னோடியாகத் திகழ்ந்ததும் குறிப்பிடத்தக்கது. இந்தப் பின்னணியில் சித்தாந்த தீபிகையின் தோற்றத்தின் வரலாற்றுச் சிறப்பை அறிதல் வேண்டும்.

## சித்தாந்த தீபிகையின் தோற்றம்

1897 ஜூன் 21 திங்கட்கிழமை பிரிட்டிஷ் பேரரசியின் வைரஜூபிலி நாளில் சித்தாந்த தீபிகை ஆங்கிலத்திலும் தமிழிலும் திங்கள் இதழ்களாக வெளிவரத் தொடங்கியது.

ஆங்கில இதழின் பெயராவது 'The Light of Truth or Siddantha Deepika', 'A Monthly Journal Devoted to Religion, Philosophy, Literature, Science, etc.,' என்று முதல் பக்க மகுடத்தில் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

'உண்மை விளக்கம் எனும் சித்தாந்த தீபிகை' எனும் பெயரில் தமிழ் இதழ் வெளிவந்தது. "சமய ஞானம், தத்துவ ஞானம், கலை ஞானம், பூத பௌதிகம் முதலிய சாஸ்திர ஞானம் இவற்றைப் பற்றி விவரிக்கும் மாதாந்தப் பத்திரிகை" என்று முதல் பக்கத்தின் தலைப்பில் இதழ் தன்னை அறிவித்துக்கொண்டது.

ஆங்கில இதழ் பதினான்கு ஆண்டுகள் வெளிவந்தது. தமிழ் இதழ் ஓராண்டு மட்டுமே வெளிவந்தது.

ஆங்கில இதழில் சில ஆண்டுகளுக்குப் பிறகு, முதலில் வைத்த பெயரோடு 'Agamic Review' எனும் பெயரும் சேர்க்கப் பட்டது. 1911 ஆகஸ்டு இதழில் சித்தாந்த தீபிகையைச் சைவ சித்தாந்த மகாசமாஜத்தின் பிரசார இதழாகப் பதிப்பாசிரியர் அறிவித்தார். ஆங்கிலம், தமிழ் ஒவ்வொன்றும் 24 பக்கங்களைக் கொண்டிருந்தன. இதழ்களின் அளவு 21 X 27 செ.மீ.; முதல் பதிப்பாளராக 'சி.என். பிரஸி'ன் கலியாணசுந்தர நாடாரும் அடுத்து, டி.ஏ. சுவாமிநாதய்யரும் மூன்றாவதாக ஜே.எம். நல்லசாமிப்பிள்ளையும் இருந்தனர். இதழாசிரியராக, உரிமையாளராக உடலுழைப்பு, கருத்துழைப்பு, பண இழப்பு முதலானவற்றுடன் படாத பாடுபட்டு சித்தாந்த தீபிகையைச் சமய தத்துவ சிகரத்தின்மீது ஒளிவீசச் செய்தார், நல்லசாமிப் பிள்ளை. இவருடைய அருமை நண்பர் டாக்டர் வி.வி. ரமண சாஸ்திரி ஏழாண்டு காலம் சித்தாந்த தீபிகையின் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். வேதாரண்யத்தைச் சேர்ந்த இவர் லண்டன், பெர்லின், பாரீஸ் பல்கலைக்கழகங்களில் பல்வேறு பட்டங்களைப் பெற்றவர். இந்தியாவில் மட்டுமல்லாமல், வெளிநாடுகளிலும் இவர் புகழ் பரவியிருந்தது.[6] பிரம்ம சூத்திரத்தின் ஒரே ஒரு சைவசித்தாந்த உரையான ஸ்ரீ கண்டருடைய சைவ பாஷ்யத்தை இவர் சமஸ்கிருதத்தில் இருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து சித்தாந்த தீபிகையில் வெளியிட்டார். இவ்வாறே பன்னிரண்டு திவ்ய ஆகமங்களையும் ஒன்றன்பின் ஒன்றாக மொழிபெயர்த்தார். திருமந்திர ஆய்வு வல்லுநரான இவர் 1912இல் வெளிவந்த திருமந்திரத்திற்கு எழுதிய 32 பக்க முன்னுரை புகழ்பெற்றது.

## ஜே.எம். நல்லசாமிப் பிள்ளை வாழ்க்கைக் குறிப்புகள்

இவருடைய தந்தை மாணிக்கம் பிள்ளை; தாயார் செல்லத்தம்மையார். திருச்சிராப்பள்ளியில் 1864 நவம்பர் 24இல்

பிறந்தார். 15ஆவது வயதில் மெட்ரிகுலேஷன் தேர்வில் முதல் வகுப்பில் தேறினார். அடுத்து எப்.ஏ. வகுப்பிலும் தேர்ச்சி பெற்றார். திருச்சியில் இருந்து சென்னைக்கு வந்து அரசாங்க பிரசிடென்ஸி கல்லூரியில் தத்துவ சாத்திரத்தைப் பாடமாகக் கொண்டு பி.ஏ. பட்டம் பெற்றார். அப்பொழுது அவருக்கு வயது 19. பிறகு, சட்டக் கல்லூரியில் பி.எல். பட்டம் பெற்றுச் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞராகப் பதிவு செய்துகொண்டார்.

இளம் வயதிலேயே சைவசித்தாந்தத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டார். திருச்சியில் நாகநாதசாமி திருக்கோயிலில் சைவ சித்தாந்த சபையை நிறுவி, அங்கு ஞாயிறுதோறும் 'சைவ சமயச் சண்ட மாருதம்' சிவத்திரு சோமசுந்தர நாயகரின் சைவ சமயச் சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்தார்.

நல்லசாமிப் பிள்ளையின் சைவசமய ஆராய்ச்சி, அவர் திருப்பத்தூரில் மாவட்ட முன்சீப்பாக 1893 முதல் பணியாற்றத் தொடங்கிய காலத்திலேயே தொடங்கிவிட்டது. இவ்வூரில் வேலை பார்த்த அக்காலத்தில்தான் 1895இல் இவருடைய முதல் நூலான சிவஞானபோத ஆங்கில மொழிபெயர்ப்பு வெளிவந்தது. இதையடுத்து 1897இல் 'சிவஞான சித்தியார்', 'திருவருட்பயன்' எனும் சித்தாந்த விளக்க நூல்களின் ஆங்கில மொழியாக்கங்கள் வெளிவந்தன.

ஆறுமுக நாவலரும் சோமசுந்தர நாயகரும் சைவ சமயப் பிரசாரத்தில் இவருக்கு முன்னோடிகளாயினும் தமிழிலும், ஆங்கிலத்திலும் திட்பநுட்பத்துடன் கீழ்நாட்டிலும் மேல்நாட்டிலும் சைவ சித்தாந்தத்திற்கு உரிய பெருமையை ஏற்படுத்தியவர் நல்லசாமிப் பிள்ளை. இவர் காரணமாக, மேலை நாட்டுத் தத்துவ அறிஞர்களும் கிறித்தவ சமயப் பாதிரிமார்கள் சிலரும் சைவ சமய ஈடுபாடு கொண்டு மேனாட்டுச் செய்தித்தாள்களிலும் Encyclopaedia of Religion and Ethics எனும் உலக சமயக் கலைக்களஞ்சியத்திலும் எழுதினார்கள்.[7]

சமயத்துறையில், நல்லசாமிப்பிள்ளையின் நண்பர்களின் பட்டியலில் நாகை வேதாசலம் பிள்ளை (மறைமலை அடிகள்), அட்டாவதானம் பூவை. கலியாண சுந்தர முதலியார், காசிவாசி செந்திநாதையர், தூத்துக்குடி சிவகுருநாத பிள்ளை, பொ. முத்தையா பிள்ளை, திருப்பாதிரிப்புலியூர் அருள்திரு சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாச்சாரியார், கொழும்பு முதலியார் சபாரத்தினம், காஞ்சி நாகலிங்க முதலியார், திரு.வி. கலியாணசுந்தர முதலியார், எஸ். சச்சிதானந்தம் பிள்ளை, இருக்கம் ஆதிமூலம் முதலியார், கி. குப்புசாமி முதலியார் இன்னும் பலரும் காணப்பட்டனர்.

ஜி.யு. போப், நல்லசாமிப் பிள்ளையிடம் பெருமதிப்பு வைத்திருந்தார். அவரை நேரில் சந்திக்கவில்லையென்றாலும் தமது மேசையின்மீது அவருடைய படத்தை வைத்திருந்தார் போப்.

சென்னை திருவல்லிக்கேணி கேசில்கென்னான் எனும் 'ஐஸ் ஹவுஸ்' மாளிகையில் (இன்றைய விவேகானந்தர் இல்லம்) சுவாமி விவேகானந்தரைச் சைவ சமயக் குழுவினருடன் 8-2-1897இல் சந்தித்தார். மேலும் நல்லசாமிப் பிள்ளை சுவாமிகளுக்குச் சென்னையில் அளிக்கப்பெற்ற வரவேற்பில் கலந்து கொண்டு அவரைச் சைவசமயக்குரவர் திருஞானசம்பந்தராக வருணித்தார். சுவாமி விவேகானந்தர், 'சித்தாந்த தீபிகை' படித்த செய்தி அவருடைய 'Aryans and Tamilians' எனும் கட்டுரையில் அறியக்கிடக்கின்றது.[8]

1900 அக்டோபரில் வெளிவந்த சித்தாந்த தீபிகையின் ஆங்கிலப் பதிப்பில் பண்டிதர் டி. சவேரிராயனின் 'The Admixture of Aryan with Tamilian' எனும் கட்டுரைத் தொடர் வரத் தொடங்கியது. இந்தக் கட்டுரை மீதான தமது கருத்தை விளக்குமிடத்தில் சுவாமி விவேகானந்தர் சித்தாந்த தீபிகையையும் பண்டிதர் டி. சவேரிராயனையும் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

> மேல்நாட்டு மொழிநூல் ஆவேசத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ள குழப்பத்தை விலக்குவதற்கும் தென்னிந்தியாவிலுள்ள சாதிப்பிரச்சினையை மிகவும் நல்ல முறையில் அறிவதற்கு வேண்டிய வழியைக் காட்டுவதற்கும் 'சித்தாந்த தீபிகை' என்னும் பத்திரிகையில், 'தமிழருடன் ஆரியர் கலப்பு' என்னும் தலைப்பில் வரும் கட்டுரைகள் வாயிலாக முயன்று வருகிறார்...... பண்டித சவேரிராயன் ஈடுபட்டிருக்கும் துறையானது பாதுகாப்பற்றது என்றாலும், வேதத்திலுள்ள பெயர்களைப் பற்றியும் இனங்களைப் பற்றியும் அவர் மிகைபடக் கூறும் பல விளக்கங்களை நாம் ஒப்புக் கொள்ளவில்லையென்றாலும், இந்திய நாகரிகத்தின் தந்தை சமஸ்கிருதம் பேசும் இனம் என்றால், அந்த நாகரிகத்தின் சிறந்த தாயாகிய தமிழ் இனத்தின் கலாசாரத்தை முறையாக ஆராய்ந்து அறிவதற்கான ஆரம்ப வேலையை அவர் மேற்கொண்டிருப்பதற்காக நாம் மகிழ்ச்சி அடைகிறோம்.

ஆய்வாளர் சவேரிராயன் கட்டுரை வழியே சித்தாந்த தீபிகை, சுவாமி விவேகானந்தரிடம் தமிழ்ப் பண்பாடு பற்றிய நற்சிந்தனையோட்டத்தை தூண்டியுள்ளது.

பண்டிதர் சவேரிராயன் பிள்ளை (1859-1928) தமது 'The Tamilian Archeological Society' (1903) எனும் தொன்மை ஆய்வியல் அமைப்பின் வெளியீடாக 'Tamilian Antiquary' எனும் இரு மொழி (ஆங்கிலம், தமிழ்) மாத இதழை 1907 முதல் 1914 வரை நடத்தினார். திருச்சி புனித சூசையப்பர் கல்லூரியில் தலைமைத் தமிழ்ப் பேராசிரியராக இருபது ஆண்டுகள் பணியாற்றினார். சித்தாந்த தீபிகையைப் போலவே தமிழ் மறுமலர்ச்சிக்குப் பாடுபட்டார் பண்டிதர் சவேரிராயன். இது, தனி ஆய்விற்குரியது.

ஓராண்டு மட்டுமே வெளிவந்த சித்தாந்த தீபிகையின் தமிழ்ப் பதிப்பை ஆய்வதற்கு முன்பாக 14 ஆண்டுகள் வெளிவந்த அதன் ஆங்கிலப் பதிப்பைப் பற்றிய சில செய்திகள் அறியத்தக்கவை.

## ஆங்கிலப் பதிப்பு

முனைவர் பேராசிரியர் அ.அ. மணவாளன், சித்தாந்த தீபிகை ஆங்கிலப் பதிப்பில் வெளிவந்த பல்வேறு கட்டுரைகளை, கட்டுரையாளர்களை வகைப்படுத்தித் தமது 'Tamil Research Through Journals (An Annotated Bibliography)' எனும் நூலில் (1975) வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

தலையங்கங்கள், செய்திகள், சொற்பொழிவுகள், நூல் மதிப்புரைகள், பிற இதழ்களில் இருந்து மறு வெளியீடுகள், பிற இதழ்கள்மீதான கருத்துரைகள், குறிப்புகள்-விமர்சனங்கள் ஆங்கிலப் பதிப்பில் வெளிவந்தன. மூலக் கட்டுரைகளுக்கும் மொழிபெயர்ப்புக் கட்டுரைகளுக்கும் சமமான முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

முதல் இதழில் (21 ஜூன், 1897) மூன்று முக்கிய சைவ சமய சாத்திர தோத்திர நூல்களில் இருந்து சில பகுதிகள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

எஸ். ராமசுவாமி ஐயர் பி.ஏ.பி.எல்., திருமூலர் திருமந்திரத்தின் முதல் தந்திரத்தில் இருந்து சில பாடல்களை மொழிபெயர்த்துள்ளார்.

இதழாசிரியர் ஜே.எம். நல்லசாமிப் பிள்ளை சிவஞான சித்தியாரை, 'சிவஞான சித்தியார் அல்லது அருள்நந்தி சிவாசாரியார் (அறிமுகம்)' எனும் தலைப்பில் மொழிபெயர்த்துள்ளார்.

ஆர். சண்முகம் பிள்ளை, தாயுமானசுவாமிகளின் 'பொருள் வணக்கம்' பாடலை மொழிபெயர்த்தார். டாக்டர் ஜி.யூ.போப் மாணிக்கவாசக சுவாமிகளின் திருப்பள்ளி எழுச்சியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். சங்க இலக்கியக் குறிஞ்சிப்பாட்டும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. 'Flower and Fragrance' என்பது அதன்

தலைப்பாகும். 'Our aims'இல் இதழின் நோக்கங்கள் கூறப்பட்டுள்ளன. இவற்றின் தமிழாக்கம் தமிழ்ப் பதிப்பில் வெளிவந்தது.

ஜே.எம். நல்லசாமிப் பிள்ளையின் கட்டுரைகள், மொழி பெயர்ப்புகள், தலையங்கங்கள் நிறைந்துள்ளன. இந்த இதழில் வெளிவந்த ஆய்வுக்கட்டுரைகளின் தொகுப்பு 'Studies in Saiva Siddhanta' எனும் நூலாக 1911இல் வெளிவந்தது. அடுத்தபடியாக டாக்டர் ஜி.யூ.போப்பின் எழுத்துகள் மிகுதியாக இடம் பெற்றுள்ளன. சங்க இலக்கியம் முதல் தாயுமானவர் பாடல்கள் வரையில் மொழிபெயர்ப்புகள் பல வெளிவந்துள்ளன. நீண்ட தொடராகப் பல இதழ்களில் திருமணம் செல்வக்கேசவராயரின் 'கம்பன்' ஆய்வு வெளிவந்துள்ளது. இவர் முல்லைப்பாட்டையும் மொழி பெயர்த்துள்ளார்.

அனவரதவிநாயகம் பிள்ளை, என். பாலசுப்பிரமணிய முதலியார், சோமசுந்தர பாரதியார், நாகை பண்டிதர் வேதாசலம் பிள்ளை (மறைமலை அடிகள்), துடிசைக் கிழார் சிதம்பரனார், டி.ஏ. கோபிநாத், எம்.எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை, எஸ்.ஏ. திருமலைக் கொழுந்து பிள்ளை, பண்டிதர் டி. சவேரிராயன், டி. வீரபத்ர முதலியார் உட்பட பல அறிஞர்கள் அசலாகவும் மொழிபெயர்ப்பாகவும் எழுதியுள்ளனர். அக்காலத்தில் இலங்கை யாழ்ப்பாணம் தமிழ்ப் பேரறிஞர்களுக்கும் தமிழகப் பேரறிஞர்களுக்கும் இடையே இலக்கிய உறவு செழுமை பெற்றிருந்தது. சித்தாந்த தீபிகையில் யாழ்ப்பாணத்தைச் சார்ந்த பொன்னம்பலம் அருணாசலம், பொன்னம்பலம் இராமநாதன், எஸ். டபிள்யூ. குமார சுவாமி, அ. முத்துத்தம்பிப் பிள்ளை, வி.வா. தம்பிப் பிள்ளை, டி. பொன்னம்பலம் பிள்ளை முதலானோர் எழுதிவந்ததும் குறிப்பிடத்தக்கது.

ஜே.எம். நல்லசாமிப் பிள்ளை, 1898 ஜூலையில் 'God and the World' எனும் தலைப்பில் எழுதிய தலையங்கத்தில் ருஷ்ய ஞானி லியோ டால்ஸ்டாயின் பின்வரும் கருத்தை எடுத்தாண்டுள்ளார்.

> "Religion is a certain relation established by man between his separate personality and the endless universal or its source; morality is the perfectual guiding to like which flows from this relation'

1898, நவம்பர் இதழில் அக்காலப் பொதுவாழ்க்கை பிரமுகரான டாக்டர் எஸ். சுப்பிரமணிய ஐயரின், 'வரலாற்றை உருவாக்குவதில் தேசபக்தி' எனும் ஆங்கிலப் பேருரை வெளியிடப் பெற்றுள்ளது.

1909 பிப்ரவரி இதழில் புகழ்பூத்த கலை விமர்சகர் ஆனந்த கே. குமாரசுவாமியின், 'இந்தியாவில் சமயத்திற்கும் கலைக்கும் இடையே உள்ள உறவு' எனும் ஆங்கிலக் கட்டுரை வெளிவந்தது.

பாரதியார் ஆசிரியராக இருந்த 'இந்தியா' (தமிழ் வார இதழ்), 'பாலபாரதா' (ஆங்கிலம்) எனும் இதழ்களை வரவேற்று சித்தாந்த தீபிகை (ஆங்கிலம்) எழுதியுள்ளது குறிப்பிடத்தக்கது. பாராட்டுரையில் பாரதியார் பெயர் இல்லையென்றாலும் இதழ்கள் நன்கு பாராட்டப்பட்டுள்ளன.

1906 ஜூலையில், `The India - A New Weekly' எனும் தலைப்பில் (ப. 152) எழுதப்பெற்ற பாராட்டுரையின் தமிழாக்கம் வருமாறு:

> இந்தப் புதிய தமிழ் வார இதழை நாம் வரவேற்கின்றோம்; அதன் நீண்ட ஆயுளுக்கு வாழ்த்துகின்றோம். கட்டுரைகள் எளிய, தெளிவான உரைநடையில் எழுதப்பெற்றுள்ளன. தமிழ் வாசகர் களுக்கு பொருந்துமாறு உணர்த்தும் திறன் கூடுதலாக அமையுமளவில் அவை எழுதப் பெற்றுள்ளன. இதற்கு முன்பு வெளிவந்த இதழ்களும் ஒவ்வொரு வழியிலும் பாராட்டத்தக்கன

பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தை எதிர்த்து, தீவிர தேசிய வாதத்தைக் காரசாரமாகப் பிரசாரம் செய்த 'இந்தியா'வைச் சித்தாந்த தீபிகை துணிவுடன் வரவேற்றது, கவனிக்கத்தக்கது. 'இந்தியா' முதல் இதழ் மே 9, 1906இல் வெளிவந்தது.

பாரதியார் ஆசிரியராக இருந்த 'பாலபாரதா' எனும் ஆங்கில மாத இதழ் நவம்பர் 3, 1907இல் சென்னையில் இருந்து வெளிவந்தது. 1908 மே மாத பாலபாரதா இதழைப் பற்றிச் சித்தாந்த தீபிகையின் 1908 ஜூலை இதழில் வெளிவந்த விமர்சனத்தின் தமிழாக்கம் வருமாறு:

> அற்புதமான செய்திகள் அனைத்தும் அடங்கிய மே மாத இதழ் நம் முன் உள்ளது. இதன் உள்ளடக்கம் வருமாறு: "Have faith in yourselves, faith and patience, the teaching to the Gita, The Philosophy to the present situation, Editional Notes, True and false Optimism, True Patriotism, Prison scribbings OF S.J. B.C Pal." இது இந்தியத் தேசிய மீட்பாக்கத்தின் மாத இதழாகும்.

'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பதற்கேற்ப ஆங்கிலப் பதிப்பைப் பற்றிய சிற்றாய்வு இங்கு செய்யப் பட்டுள்ளது. 1911 ஜூன் மாத இதழில் இதழாசிரியர் எழுதியதில் பின்வரும் பகுதி இறுதியாக எடுத்துக்காட்டுதற்குரியதாகும்.

> நமது இதழின் உதவியின்றி எவரும் தொன்மையான நமது தேசிய சமயமான சைவ சித்தாந்தத்தைப் பற்றி எதையும் தெரிந்து கொண்டிருக்க முடியாது என்று பலர் சாற்றியிருக்கிறார்கள். கடந்த நீண்ட பதின்மூன்று ஆண்டுகாலக் கடுமையான உழைப்பு பயனளித்துள்ளது; மதிப்புமிக்க உண்மையான சமயத்தைப் பற்றிய விழிப்பை ஏற்படுத்தியுள்ளது. சைவ சமயம், தமிழ்நாட்டின் கலை, இலக்கியம், சமய வழிபாடு பற்றிப் பேசும் ஒரே இதழ் ஒரே உலகமனைத்திலும் இதுவேயாகும்

'Our Ancient National Religion - The Saiva Siddhantam' எனும் தலைப்பில் இதழில் வந்த செய்தி உற்று நோக்கத்தக்கது. "திராவிடப் புலமையின் தேர்ந்தெடுக்கப்பெற்ற படைப்பு சைவ சித்தாந்தம் என்று, அறிஞர்கள் போற்றும் சிறந்த தமிழறிஞரான டாக்டர் போப் உரைத்தது உண்மையே" என்று பேராசிரியர் மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை குறிப்பிட்டுள்ளார். ஜே.எம். நல்லசாமிப் பிள்ளையின் 'திருவருட் பயன்' எனும் ஆங்கில மொழியாக்கத்தை 30-1-1897இல் 'மெட்ராஸ் ஸ்டாண்டர்டு' எனும் ஆங்கில ஏட்டில் விமர்சனம் செய்தபொழுது முற்கூறிய கருத்தைப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை குறிப்பிட்டார்.[9] இந்தச் சிந்தனைப் போக்கு மேலும் தீவிரமடைந்து சைவ சமயம், தமிழர் சமயம் என்று ஓர் இயக்கமாகவே பிற்காலத்தில் வீறுபெற்றது என்பதும் நினைவிற்குரியது. பல்வேறு சமயங்களைப் பின்பற்றும் தமிழர்களிடையே, 'சைவ சமயமே தமிழர் சமயம்' எனும் முழக்கம் ஒலித்த காலமும் உண்டு. யாழ்ப்பாணம் நல்லூர் சிவத்திரு ஆறுமுக நாவலர், "சைவ சமயத்தைத் தமிழ்ச் சமயம் என்றும், சைவ சமயக் கோயிலைத் தமிழ்க் கோயில் என்றும் நம் நாட்டு சனங்கள் வழங்குகின்றார்கள். தமிழ் என்பது ஒரு சமயத்தின் பெயரன்று; ஒரு பாஷையின் பெயர்" என்று கூறியுள்ளார்.[10]

ஆங்கிலப் பதிப்பான 'சித்தாந்த தீபிகை'யின் பன்முகப் பரிமாணங்களைத் தமிழ்ப் பதிப்பான 'சித்தாந்த தீபிகை'யில் எதிர்பார்க்க இயலாது என்றாலும் அது, அதற்கு வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் நின்று தொண்டாற்றியது.

## சித்தாந்த தீபிகை - தமிழ்ப் பதிப்பு

'உண்மை விளக்கம்' எனும் சித்தாந்த தீபிகை சைவ சமய நெறிப்பிரசாரத்தை முன்னெடுத்துச் சென்றதற்கு முன்பாக இலங்கை யாழ்ப்பாணத்தில் 'சைவ உதய பானு' (1880), 'சைவ சமய போதினி' (1881), 'இந்து சாதனம்' (1889), தமிழ்நாட்டில் 'ஞானாமிர்தம்' (1888), 'நாகை மீனலோசனி' (1890) முதலான சைவ சமய இதழ்கள் சைவ சமயக் கொள்கைகளை வெளியிடும் இதழ்களாக வந்துள்ளன. குறிப்பாக 29-4-1888இல் யாழ்ப்பாணத்தில் ஆறுமுக நாவலர் மரபில் பூத்த 'சைவ சமய பரிபாலன சபை'யின் பிரசார முரசாக 11-9-1889இல் தோன்றிய 'இந்து ஆர்கன் - இந்து சாதனம்' எனும் இரு மொழி (ஆங்கிலம், தமிழ்) மாதமிருமுறை இதழ் சைவ சித்தாந்தத்தைக் கிறித்தவ சமய, அத்வைத வேதாந்தத் தத்துவத்திற்கு எதிராக முன்நிறுத்திப் போர் முரசு கொட்டியது. நூற்றாண்டு விழாவையும் கண்டது இந்த இதழ்."

உண்மை விளக்கம் எனும் சித்தாந்த தீபிகைக்கு யாழ்ப்பாணம் 'இந்து சாதனம்' போன்று, 'போர்க்குரல்' எழுப்ப வேண்டிய சூழல் சென்னையில் ஏற்படவில்லை.

தமிழ் சித்தாந்த தீபிகை இரண்டாம் இதழில் (ஜூலை 21, 1897) 'இப்பத்திரிகையின் கருத்து' எனும் தலைப்பில் எழுதப் பெற்றது, ஆங்கிலப் பதிப்பின் 'Our Aims' எனும் கட்டுரையின் மொழிபெயர்ப்பாகும். இதழின் நோக்கங்களைப் பற்றிய சுருக்கம் வருமாறு:

> நம்மனோர், சர்வகலாசாலைகளில் பொதுவான லௌகீக கல்வி பயின்ற பின்னர்த் தமக்கு அதிக விருப்பத்தைத் தரத்தக்க ஏதேனுமொரு கலா சாலையில் அபிவிர்த்தியடைவதற்கு முயல்வதில்லை. எந்தச் சாலையிலும் தீர்க்க ஆராய்ச்சியும் ஆழ்ந்த கல்வியு மிராமையால், நம் தேசத்து அளவிறந்த கலைகளை வாசித்து அவற்றின் உண்மைப் பொருளையறிதற்குக் கூடாமையாயிருக்கின்றது. அப்படிப் பட்டவர்களுக்குச் சுலப சாதனமாய் இருக்குமாறு இப்பத்திரிகையைத் தொடங்கலாயிற்று......
>
> இதில், அரிய வடமொழிக் கிரந்தங்களின் மொழி பெயர்ப்புகளும் தமிழ்க்காவியங்களின் அகல வுரைகளும் விசேடக் குறிப்புகளும் பிரசுரிக்கப்பட்டு வரும். அன்றியும்

*மானதபதார்த்த சொரூபலக்ஷண சாஸ்திரங்களும் உண்மையான மத சித்தாந்தக் கருத்துகளும் அப்போதப் போது வெளியாகும். பெரும்பாலும் பூர்வ திராவிடர் களுடைய தத்துவ் சாஸ்திரங்களின் உண்மைகளையும் மதக்கோட்பாடு களையும் வெளிப்படுத்துவதுமன்றி அவைகளில் தற்காலத்துக் காணப்படுங்குறைகளை நீக்கும் பொருட்டு ஐரோப்பிய சாஸ்திரங்களை மொழி பெயர்த்து ஆங்கிலேய பாஷையிற் பயிலாதவர்க்குதவி புரிய வேண்டுமென்பதும் இப்பத்திரிகையின் நோக்கம்.....*

*இராஜாங்க விஷயங்களைப் பற்றி இதில் யாதொன்றும் வியவகரிக்கப்படமாட்டாது. வேந்தனுமோங்குக என்று பரமாசாரிய சுவாமிகள் வாழ்த்திய வாழ்த்தைச் சிரமேற்கொண்டு நமது மகாராணியாரவர்கள்பால் நன்றியறிதலும் ராஜ விசுவாசமும் முற்றும் பாராட்டி வருவதே இப்பத்திரிகையின் முக்கியமான அங்கமாகும்.*

*சுருதி, யுக்தி, அனுபவ வாயிலாக யாம் கண்டறிந்த சாஸ்திர உண்மைகளை 'நெஞ்சத்து நல்லம் யாமென்னும் நடுவுநிலைமையால்' அஞ்சாத் துணிவுடன் வெளியிடப் பின்னிடோம்.*

இதழிற்கு எழுதுவோரின் தமிழ் நடை எவ்வாறு அமைய வேண்டும் என்பதைப் பற்றிய ஒரு கருத்தும் பின்வருமாறு கூறப்பெற்றுள்ளது:

*சைவசித்தாந்தத்துட் பொதிந்து கிடக்கும் உண்மை களைத் தெளிவாய் எடுத்து விளக்குவதோடு அருந்தமிழ் மொழியையும் வளர்க்க வேண்டுமென்பதே இப்பத்திரிகையின் உள்ளுறையும் கருத்தாதலின் இப்பத்திரிகைக்கு விடயமெழுதும் நண்பர்கள் வடசொற்றிசைச் சொற்கள் மிக்கு விரவாது தெள்ளிய தனித்தமிழில் இனிமை பெருக அவற்றை எழுதி மானேஜருக்கு அனுப்புமாறு அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்*

இந்த விண்ணப்பம் உண்மை விளக்கப் பத்திராதிபர், சைவ சித்தாந்தசபை, நாகை வெளிப்பாளையம், ஆர்.எஸ். வேதாசலம் பிள்ளை"யால் வெளியிடப்பட்டுள்ளது.[12] "சந்தா முன்பணம்

கொடுப்போர்க்கு வருஷத்திற்கு ரூபா 4; பின்பணம் கொடுப்போர்க்கு வருஷத்திற்கு ரூபா 6; தனிப்பிரதி விலை அணா 8" என்று சந்தா விபரம் பற்றிய ஒரு விளம்பரம் உள்ளது. இதழின் அலுவலகம் 4, குருவாரப்பன் தெரு, பிளாக் டவுன், சென்னையில் இருந்தது.

## முதல் இதழ் - ஓர் ஆய்வு

*1897ஆம் ஆண்டு ஜூன் மாதம் 21ஆம் தேதி திங்கட் கிழமையில் 24 பக்கங்களுடன், 'புத்தகம்-க; இலக்கம்-க' எனும் குறிப்புடன் சித்தாந்த தீபிகை வெளிவந்துள்ளது.*

முதல் பக்கத்தில் இருந்து ஐந்தாவது பக்கம் வரையில் 'திருமூல நாயனார் அருளிச் செய்த திருமந்திரம்' எனும் ஆய்வுக் கட்டுரை வெளிவந்துள்ளது. பத்துப் பாடல்கள் (அன்புடைமை) விளக்கம் பெற்றுள்ளன.

ஐந்தாம் பக்கத்தில் இருந்து பதின்மூன்றாவது பக்கம் வரையில் 'தாயுமான சுவாமிகளருளிச் செய்த பாடல் உரை' - பரிபூரணானந்தம் - வெளியிடப்பட்டது. பொழிப்புரையும் குறிப்புரையும் தரப்பட்டுள்ளன.

பதின்மூன்றாம் பக்கத்தில் 'துணுக்குகள்' எனும் சிறிய தலைப்பில் இரு உரையாடல்கள் பின்வருமாறு அமைந்துள்ளன.

1. **ஓர் துரை:** அய்யா, வாருங்கள், தங்களுக்கு மிகவும் கஷ்டம் கொடுத்தேன்.

   **வித்வான்:** அப்படிச் சொல்ல வேண்டாம். அன்பர்கள் ஒருவரை ஒருவர் கசக்கினால்தானே இனிமை வெளிப்படும்.

   **புலவர்:** ஆம்; அவரை எவ்விதமாய் கசக்கினாலும் அவருக்குக் கசக்காது.

2. ஒரு நாள் வேதநாயகன் என்பவர் தன் ஆசிரியராகிய சுப்பிரமணியன் என்பவரைப் புகழ்ந்தார். சூரிய மூர்த்தி என்பவர் கூட இருந்தார்.

   **புலவர்:** சுப்பிரமணியனை வேதநாயகன் தவிர மற்றார் புகழவல்லார். இது பொய்யல்ல, சூரிய மூர்த்தியே சாட்சி.

புலவர்களுக்குரிய சிலேடைகள், துணுக்குகளாக இவ்விதமாக வெளிவந்தவை மிக அருகியே காணப்படுகின்றன. இந்தத் துணுக்குகள் இதழின் வாசிப்புத்தன்மைக்கு உதவியாய் இல்லை.

இதழின் தலையங்கம், பதினேழாம் பக்கத்தில் அமைந்துள்ளது. ஆங்கிலப் பதிப்பின் முதல் இதழில் வெளிவந்த 'Flower and Fragrance' எனும் தலையங்கம், இங்கு 'பூவும் மணமும்' எனும் தலையங்கமாக் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

ஞானசம்பந்தர், பரஞ்சோதி முனிவர், அப்பர், திருமூலர் பாடல்களில் வரும் 'பூவும் மணமும்' பற்றிய பகுதிகள் இத் தலையங்கத்தில் பக்திச் சுவை நனி சொட்ட, பின்வருமாறு எடுத்தாளப்பட்டு விளக்கப்பட்டுள்ளன.

மேலும் இந்தத் தலையங்கத்தில் தாயுமான சுவாமிகள், சேக்கிழார் சுவாமிகள் ஆகியோர் புனிதப் பனுவல் வரிகளைக் கொண்டு இறைவன் உகக்கும் பூவும் மணமும் மிக அற்புதமாகக் கூறப்பட்டுள்ளன.

குறிஞ்சிப் பாட்டு பற்றிய ஆய்வு வெளியிடப்பட்டுள்ளது. அடிக்குறிப்பில் உரையாசிரியர் நச்சினார்க்கினியர் பின்வருமாறு பாராட்டப் பெற்றுள்ளார்.

> இவ்வாசிரியர் உரைவிரிக்குந் திறமும், அதன் நுட்பமும், பழந்தமிழ் நூல் கட்டுரையெழுதியவற்றில் நிகழும் மயக்கவுணர்ச்சியறுத்த செய்யாமற் செய்த உதவியும் எம்மால் மதிப்பிடுந்தரத்தன்று.

'பலீமர்' எனும் ஆங்கில மாத இதழில் வெளிவந்த ஒரு கவிதையின் தமிழாக்கம் நான்கு பாடல்களைக் கொண்டது. அது, 32 வரிகளில் பக்கம் 21இல் வெளியிடப்பட்டுள்ளது. மூலக் கவிதையின் பெயரும் கவிஞர் பெயரும் குறிப்பிடப்படவில்லை. தமிழாக்கம் செய்தவர் பெயர் R.S.V. என்று குறிப்பிடப் பட்டுள்ளது. இப்பெயர் R.S. வேதாசலம் பிள்ளையைக் குறிப்பதாகக் கருதலாம்.

பக்கங்கள் 22 முதல் 24 வரையில் குறிப்புகள், பல செய்திகள், விளம்பரங்கள் விரவியுள்ளன. முதல் இதழின் உள்ளடக்கம் இவ்வளவில் நிறைவெய்துகின்றது.

சித்தாந்த தீபிகையின் தலையங்கங்களுள் மிக நீண்டது 'பழமையும் புதுமையும்' எனும் தலைப்பிலானது. இது 1897 நவம்பர் 21இல் வெளிவந்தது. ஆறு பக்கங்களைக் கொண்டது.

> மாறுபாடும், ஸ்வதந்திர வாஞ்சையும் ஆரிய தர்மானுஸாரிகளின் மூளைக்கெட்டாததுமல்ல, ஒட்டாததுமல்லவென்றும், ஆரிய தர்மமானது மாறுதலே

முக்கிய லட்சணமாய் அமைக்கப் பெற்று, அப்போதைக் கப்போது ஸந்தர்பானு சாரமாய்த் திரிந்தும் திருந்தியும் வருகிறது

என்பதைத் தலையங்கம் விளக்குவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல காலவகை யினானே

எனும் சூத்திரத்தையும்

தொன்மைய வாமெனு மெவையும் நன்றாகா
இன்று தோன்றிய நூலெனு மெவையும் தீதாகா

எனும் காளிதாசன் சுலோகத்தையும் மேற்கோள்களாகக் காட்டி, 'மாறுபாடுகள் சாதாரணமாகயுண்டாகக் கூடியன'வென்று தலையங்கம் கூறுகின்றது.

எதையும் 'தொன்று தொட்டுள்ள வழக்கம்' எனக் கூறுவதின் உள்ளீடு அற்றத் தன்மையைத் தலையங்கம் விளக்கியுள்ளது. 'வழக்கமெனப் புகலுமொருவனைத் தர்க்கித்து, அது முதன்முதலில் எப்பொழுது கைப்பிடிக்கப்பட்டது, அதன் நடைமுதற்கால மெத்தனையெனக் கணக்கிடின், அவன் ஒன்று, அல்லது இரண்டு தலைமுறைக்கதிகம் பின்னோடி நிரூபித்தல் முடியாததாகும்' என்று தலையங்கம் வாதிட்டது.

பண்டைய வேள்வி வழிபாட்டில் பலி கொடுக்கும் பழக்கத்தை, 'ஆதியிலிருந்த அநாகரிகத்தின் சின்னமென'க் குறிப்பிட்டு, 'இப்பொழுது யஜ்ஞங்கள் அபூர்வமாய்ச் செய்யப்படினும், அவைகளை யாமோதித்து ஆதரிப்பவர்கள் அரிதாயிற்று' என்றும் தலையங்கம் சாற்றியுள்ளது.

ரிக் வேதகால வழிபாட்டு முறைகளைப் பேணுவதில் பொருளில்லை என்பதையும் தலையங்கம் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது:

இருக் (Rig) வேதத்திற் சொல்லிய பழைய முறைகளை நாம் இப்பொழுது கைக் கொள்வதால் நமக்கு எந்த விஷயத்திலும் லாபமில்லை. கூடுமாயின் ஏற்பட்டு வெகுநாளான காரணத்தினாலும் அவிங்வத்தினாலும் மத்தியில் ஸம்பவித்திருக்கிற தோஷங்களையும் அதன் மேற்கவிந்திருக்கிற மவுனத்தையும் நிவர்த்திக்கலாமே

யன்றி, பின்சென்று பழைய வேதாந்த ஆராதனைக் கிரமத்தை நாடுதல் ஆபாஸத்திற்கிடமாகும்.

சைவ-வைணவர்கள், புராணக்கட்டுக்கதைகளைக் கொண்டு முரண்பட்டு நின்றதை, 'மறக்க வழிதேடினார்கள், மறந்தும் விட்டார்கள்' என்றும் தலையங்கம் கருத்து தெரிவித்துள்ளது.

இறுதியாக விதவைகள் பிரச்சினைகளைப் பற்றிப் பின்வரும் கருத்துகள் கூறப்பட்டுள்ளன:

> விதவா விவாஹத்தைப் பற்றிப் பேசுவோமாக. கிரந்தாராய்ச்சி செய்து ஸ்வதந்திராபிப்பிராய முள்ளவர்களும் பண்டிதர்களும் இந்த வழக்கம் (ஸ்திரீ புனர்விவாகம்) முன் காலத்தில் ஹிந்து தேசத்தில் தெரியாததல்லவென்று தாராளமாய் ஒப்புக் கொள்வார்கள்........ உயிர்க்கதஞ் செய்தலே பாபம், உயிர்க்கிதஞ் செய்தலே புண்ணியமெனக் கொள்ளப்பட்டிருக்கிறது. பலவந்தமாய் வைதவ்யா சாரத்தை யனுஷ்டிக்கும்படி செய்தலினால் அநேக இடங்களில் பெருந்துன்பத்திற்குக் காரணமாய் இருக்கிறதென்று தெரிகிறது.

சமூக சீர்திருத்தம் காணப் பெண்கள் ஒத்துழைப்பு கிடைக்க வேண்டும் என்று கூறி நழுவப் பார்ப்போருக்கும் தலையங்கம் பின்வருமாறு மறுப்பு தெரிவித்துள்ளது:

> வீட்டிலுள்ள ஸ்திரீகள் மாத்திரம் தடையில்லா விட்டால் நவீனச் சீர்திருத்த ஏற்பாடுகளை அநுசரிக்க லாகுமென்று புருஷன் சொல்வது கொஞ்சமேனும் ஏற்றுக்கொள்ளத் தகுந்ததாயில்லை. அப்படிச் சொல்பவனுடைய மனைவியாவது தாயாராவது அவனுக்குள்ள மற்ற துர்க்குணங்களைப் போக்க இது வரையிலும் நாடினவர்களல்ல

'பூவும் மணமும்' எனும் தலையங்கத்தின் தமிழ் நடையையும், 'பழமையும் புதுமையும்' எனும் தலையங்கத்தின் தமிழ்நடையையும் ஒப்பிடும்பொழுது முன்னதில் சமஸ்கிருதச் சொற்கள் மிகுதியாக இல்லை என்பது தெரியவரும்.

ஓர் இதழ் முழுவதுமே ஒரே ஒரு கட்டுரைக்காக ஒதுக்கப் பெற்றுள்ளப் போக்கையும் சித்தாந்த தீபிகையில் காண்கிறோம். 'ஸ்ரீ

நீலகண்ட சிவாசார்ய சுவாமிகள் அருளிய வியாச சூத்திர சைவபாஷ்யம்' எனும் கட்டுரை மட்டுமே ஓர் இதழில் வெளியிடப்பட்டுள்ளது.

'திருமூல நாயனார் அருளிச் செய்த திருமந்திரம்' எனும் கட்டுரை எட்டு இதழ்களில் வெளிவந்தது. 'தாயுமான சுவாமி களுக்குச் செய்த பாடல் உரை' எனும் கட்டுரை ஏழு இதழ்களில் வெளியிடப்பெற்றது. 'அருணந்தி சிவாசாரியார் அருளிச் செய்த சிவஞான சித்தியார்' நான்கு இதழ்களிலும், 'கைவல்ய போபதிஷத திராவிட இரத்னப் பிரகாசிகை' ஐந்து இதழ்களிலும் வெளி வந்துள்ளன.

"சிதம்பரம் ஸ்ரீ இராமலிங்க சுவாமிகளவர்களால் எழுதப்பட்டது" எனும் குறிப்புடன் அவருடைய 'தமிழ்' எனும் கட்டுரை 1897 ஆகஸ்டு 21ஆம் இதழில் வெளியிடப்பட்டுள்ளது.

வித்வான் வெ. நாராயணசுவாமிப் பிள்ளையின் 'குறிஞ்சிப் பாட்டு' இரண்டு இதழ்களிலும், பேராசிரியர் தி. செல்வக்கேசவராய முதலியாரின் 'கம்பநாடரும் அவர் கவிப்புலமையும்' நான்கு இதழ்களிலும் வெளியிடப்பட்டுள்ளன.

காசிவாசி செந்தினாதையர், 'திருமூலரின் ஒரு திருமந்திரம்' எனும் கட்டுரையில்,

> மரத்தை மறைத்தது மாமதயானை
> மரத்தின் மறைந்தது மாமதயானை
> பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்
> பரத்தின் மறைந்தது பார்முதல் பூதம்

எனும் பாடல், ஏகான்ம வாத விளக்கமன்று; சித்தாந்த விளக்கமே என்று விளக்கியுள்ளார். இவர், 'அதர்வ சிரசின் துரியம் பொருள் விலாசம்' எனும் கட்டுரையையும் எழுதியுள்ளார்.

'வைதிக சைவ சித்தாந்த சண்ட மாருதம்' சூ. சோமசுந்தர நாயகர், 'விநாயகப் புராணக் காப்புச் செய்யுள்', திருக்கோயில் வழிபாடு', 'விநாயகப் பிரபாவ தீபிகை', 'சிவபுண்ணிய மகிமை' எனும் கட்டுரைகளை எழுதியுள்ளார். 'சிவபுண்ணிய மகிமை' எனும் கட்டுரையில் சோமசுந்தர நாயகர் பின்வரும் கருத்தை வெளியிட்டுள்ளார்.

> ஆதி சைவப்பிள்ளைகளுக்கு ஒவ்வொரு முக்கிய சிவக்ஷேத்திரங்களிலும் வித்யாசாலை ஏற்படுத்தி கீர்வாணம், தமிழ் என்னுமிரண்டு பாஷைகளையுங்

> கற்பித்தல் வேண்டும். கீர்வாண பாஷையில் வேத சிவாகமங்கள் பயிலச்செய்வது போலத், தமிழ்ப் பாஷையில் தேவாரம், திருவாசகம் முதலிய சைவத் திருமுறைகளையும் சிவஞானபோதம் முதலிய மெய்கண்ட நூல்களையும் பயிலச் செய்தல் வேண்டும். (1897 செப்டம்பர் 21).

'சிவஞானபோதக் காப்பு செய்யுள்', 'மெய்கண்டசாத்திர மான்மிய விளக்கம்', 'சித்தாந்த வசன பூஷணம்', 'சிதம்பர ரகசியம்', 'பதார்த்த தீபிகை மூலமும் அதன் உரையும்', 'பெரிய புராண நவநீதம்' முதலான கட்டுரைகளும் வெளிவந்துள்ளன.

'இது ஆங்கிலேய உண்மை விளக்க மொழிபெயர்ப்பு' எனும் குறிப்புடன் ஓரிரு கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இதில் 'எல்லாம் நான்கு' என்பது ஒரு கட்டுரையாகும். கரணங்கள் நான்கு, அவத்தைகள் நான்கு, சரீரங்கள் நான்கு, மார்க்கம் நான்கு என்பன இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளன.

சென்னை திருவல்லிக்கேணியில் 1883இல் நிறுவப்பெற்ற 'உபயோகமான அறிவைப் பரவச் செய்யும் சபை' எனும் அமைப்பின் செயலாளராகவும், 'சுதேசமித்திரன்' பத்திரிகையின் தொடக்க காலத்தில் துணை ஆசிரியராகவும் பிறகு 'விவேக சிந்தாமணி' எனும் இலக்கியத்தரம் மிக்க மாத இதழின் ஆசிரியராகவும் இருந்த அறிஞர் சி.வி. சாமிநாதய்யரின் 'விவேக சிந்தாமணி பிரசுரங்களை'க் (கமலாம்பாள் சரித்திரம், கோல்பெர்ட்டு சரித்திரம், விவேக ரஸத் திரட்டு, சத்திய தேவதை கதை) குறிப்பிட்டு எழுதுகையில் சாமிநாதய்யரைப் பின்வருமாறு பாராட்டியுள்ளது சித்தாந்த தீபிகை (1897 நவம்பர் 21).

> படாடோபமின்றி, அடக்கத்துடன் அவர் செய்துவரும் வேலையை நமது தமிழ்நாட்டுச் சீமான்கள் அபிமானித் தருள வேண்டும். இவரது விடாமுயற்சியின் பயனாக, தமிழ் என்றால் கண்ணையும் வாயையும் இறுக மூடிக் கொள்ளும் சுபாவ மேற்கொண்ட பட்டப்பரிக்ஷைகளிற் தேர்ந்த கலாசாலா வித்வான்களிற் பலர் இப்போது தமிழ் பாஷைக்கு முன்றுணையாய் ஏற்பட்டு, கதை களெழுதியும் இங்கிலீஷிலிருந்து மொழிபெயர்த்தும் பலவாறாகத் தமிழ் பாஷையை அபிவிருத்தி செய்யக் கங்கணம் கட்டினவர்களானார்கள். இவர்கள் எழுதும் நடையும், பத்ததியும் தமிழர்களுக்குப் புதுமையாயிருப்

பினும், அவை எல்லோராலும் நன்கு மதிக்கத்தக்கவை களாயிருக்கின்றன வென்று காண்கிறது. கதைகள் வெகு இனிமையாயும், ஸ்திரீ பாலகர்களுக்குப் பொழுது போக்காகவும் நீதிபோதகமாயும் இருக்கின்றன.

தமிழ் நடையிலும், பத்ததியிலும் புதுமை துலங்குவதைக் குறிப்பிட்டு அவற்றை 'வரவேற்கத்தக்கது' என்று சித்தாந்த தீபிகை எழுதிப் புதுமை நாட்டத்திலும் சற்றே பார்வை செலுத்தியது குறிப்பிடத்தக்கது.

'உண்மை விளக்கம்' எனும் சித்தாந்த தீபிகையின் ஓராண்டுக் கால இதழ்களின் உள்ளடக்கம், அதற்கெனத் தேர்ந்தெடுத்துக் கொண்ட வாசகர்வட்டத்தை, அது மிகச் சிறியதாக இருந்தபோதிலும், கருத்தில் கொண்டு கட்டுரைகளை வெளியிட்டு வந்துள்ளது.

ஆங்கிலப் பதிப்பின் பல்வேறு பரிமாணங்கள் தமிழ்ப் பதிப்பில் கொண்டுவரப்படவில்லை. குறிப்பாகச் சங்க இலக்கியம் உட்பட பண்டைத் தமிழ் இலக்கியங்களைப் பற்றிய ஆய்வில் தமிழ்ப் பதிப்பு நாட்டம் செலுத்தவில்லை. இதற்கு ஒரு விளக்கம் அளிக்கப்படக்கூடும். அதாவது ஆங்கிலப் பதிப்பு, பண்டைத் தமிழ் இலக்கியங்கள், ஆங்கிலம் அறிந்த உள்நாட்டு, மேனாட்டு அறிஞர்களுக்கு ஆங்கில மொழிபெயர்ப்பில் பயன் தரும் வண்ணம் நடத்தப்பட்டது என்பது ஒருவகையான விளக்கமாகக் கூறப்படலாம்.

"சமூக பழக்க வழக்கங்களில் சித்தாந்த தீபிகை பத்திரிகை குருட்டுத் தனமும், தீங்கு விளைவிக்கும் போக்குமுள்ளவர்களின் கைப்பாவையாக இருந்ததில்லை. அதே சமயத்தில் பழமை விரும்பிகளின் உணர்வுகளையும் புண்படுத்தவில்லை" என்று திருவாசக மணி கே.எம். பாலசுப்பிரமணியம் சுட்டிக்காட்டியது போல் சித்தாந்த தீபிகையின் தமிழ்ப் பதிப்பும் விளங்கியது.[13]

தமிழ் மொழியையும் சைவ சித்தாந்தத்தையும் பழிப்பவர் தம்மைப் பொறுத்துக் கொள்ளாத இயல்பு கொண்ட ஜே.எம். நல்லசாமிப் பிள்ளை, அதற்காக எந்தக் காரணத்தையும் கொண்டு வெறுப்பும் குரோதமும் காட்டியவர் அல்லர். அவருடைய இந்த விழுமிய பண்பு சித்தாந்த தீபிகையிலும் செங்கோலோச்சியது.

தமிழ் மட்டுமே அறிந்தவர்களிடையே தமிழ் இதழ்களை வாங்கிப் படிக்கும் ஆரோக்கியமான சூழல் அவ்வளவாக உருவாகா திருந்ததாலும், காத்திரமான தத்துவ நுட்பங்களை அறிந்துகொள்ள வேண்டும் எனும் வேட்கை இல்லாதிருந்த காரணத்தினாலும்,

சித்தாந்த தீபிகையின் தமிழ்ப் பதிப்பு தனது சைவசிந்தாந்தப் பிரசாரப் பணியை ஓராண்டில் முடித்துக்கொள்ள வேண்டியதாயிற்று. எனினும், சமய தமிழ் இதழியல் வரலாற்றில் சித்தாந்த தீபிகை தனக்கென சில பக்கங்களைப் பெருமையுடன் பெற்றுள்ளது.

## குறிப்புகள்


1. Preface - The Six Systems of Indian Philosophy, 1899, p. xix
2. பெ.சு. மணி, 'பாரதி இலக்கியத்தில் வேத இலக்கியத்தின் தாக்கம்', டிசம்பர், 1998, பூங்கொடி பதிப்பகம், ப. 113
3. முற்கூறிய மாக்ஸ்முல்லர் நூலின் முன்னுரை
4. பெ.சு. மணி, 'பாஸ்கர சேதுபதியும் இராம கிருஷ்ணர் இயக்கமும்', இராமகிருஷ்ணர் இயக்கமும் தமிழ்நாடும், 1990, பூங்கொடி பதிப்பகம், ப. 138
5. John Henry Barrow, The World's Parliament Religions - Vol. II, 1893, p. 815
6. Notes on Dr. V.V. Ramana by T.N. Ramachandran, Saiva Siddhantam, An Explication and Assessment by Scholars The world over, Vol. 1, 1984, Edited by T.N.R., Dharmapura Adhinam, p. 89
7. The Life of J.M. Nallaswami Pillai, 'Thiruvachakamani K.M. Balasubramaniam, Published by J.M. Somasundaram Pillai, 1965, p. 141
8. The complete works of Swami Vivekananda, Vol. IV, Third Edition, 1972, Advaita Ashrama, Calcutta, p. 300
9. பெ.சு. மணி, இராமகிருஷ்ணர் இயக்கமும் தமிழ்நாடும், 1990, ப. 226
10. யாழ்ப்பாணச் சமயநிலை, ஆறுமுக நாவலர் பிரபந்தத் திரட்டு, நல்லூர் த. கைலாச பிள்ளை, மூன்றாம் பதிப்பு, 1954, ப. 87
11. பெ.சு. மணி, நூற்றாண்டு விழாக் காணும் சுவாமி விவேகானந்தர் சிகாகோ சொற்பொழிவுகள், 1993, பூங்கொடி பதிப்பகம், ப. 197
12. 'விளம்பரம்' - சித்தாந்த தீபிகை, 1897, ஜூலை 21
13. திருவாசக மணி, கே.எம். பாலசுப்பிரமணியம், முற்கூறிய நூல், ப. 38

# கலைக்கதிர்

**1948** **இரா. பாவேந்தன்**

தமிழகத்தில் வெளிவரும அறிவியல் இதழ்களில் கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாகத் தொடர்ச்சியாக வெளிவருவது 'கலைக்கதிர்'. தற்காலத்தில் பொதுமக்களுக்கான அறிவியல் செய்திகளுக்கு முதன்மை இடம்கொடுத்து, அறிவியல் தமிழ்ப் பணியாற்றி வரும் கலைக்கதிர் தொடக்க காலத்தில் ஓர் ஆய்வு இதழாக மட்டுமே வெளிவந்தது. கலைக்கதிரின் ஆய்வுப் பணிகள் மட்டுமே இக்கட்டுரையில் இடம்பெற்றுள்ளன. ஐம்பது ஆண்டுகால கலைக்கதிர் இதழ்கள் இக்கட்டுரைக்கான தரவுகளாக அமைகின்றன.

## தமிழ் இதழியல் வரலாற்றில் கலைக்கதிர்

காலனிய ஆட்சியதிகாரத்திற்கு உட்பட்டிருந்த அன்றைய பிரிக்கப்படாத சென்னை மாகாணத்தில் அச்சகங்களை நடத்தும் உரிமை 1835ஆம் ஆண்டுக்குப் பிறகு தமிழர்களுக்கு வழங்கப்பட்டது. இவ் உரிமை வழங்கப்பட்ட பிறகு சென்னை மாகாணத்தின் பகுதிகளில் அச்சகங்களைத் தொடங்கும் முயற்சிகளில் தமிழர்கள் ஈடுபட்டனர். இவ்வாறு அச்சகங்களைத் தொடங்கி நூல்களையும் இதழ்களையும் அச்சிட்டு வெளியிட ஆர்வம் காட்டிய தமிழர்களை ஐந்து வகையாகப் பிரிக்கலாம்.

1. இலக்கிய/இலக்கணங்களை ஓலைச்சுவடிகளிலிருந்து அச்சேற்ற விரும்பிய தமிழ்ப்புலமை மரபினர்.

2. காலனிய அரசுக்கு எதிராக இந்திய தேசியக் கருத்தியலைப் பரப்ப விரும்பியவர்கள் / இந்திய தேசியக் கருத்தியலுக்கு மாற்றான சமூக விடுதலையை முன்வைத்த நீதிக்கட்சியினர் / அயோத்திதாசர் போன்றோர்.

3. கிறித்தவச் சமயத்தினரின் அச்சு ஊடகச் செயல்பாடுகளின் பாதிப்பில் தமது சமய நூல்களையும் இதழ்களையும் வெளியிட விரும்பிய சைவ / வைணவ / இசுலாமிய/ பௌத்த சமய ஆதரவாளர்கள்.

4. ஐரோப்பியக் கல்வியைக் கற்று, ஐரோப்பிய இலக்கிய / அறிவியல் வடிவங்களையும் கருத்துக்களையும் தமிழில் அறிமுகப் படுத்த விரும்பி, அதற்காக நூல்களையும் இதழ்களையும் வெளிக் கொணர விரும்பிய ஐரோப்பியக் கல்வி கற்ற முதல் தலைமுறைத் தமிழர்கள்.

5. நில உடைமை, தெற்காசிய வணிகத்தில் ஈட்டிய லாபம் ஆகியவற்றைப் புதிய ஊடகமான அச்சு ஊடகத்தில் முதலீடு செய்து நூல்களையும் இதழ்களையும் அச்சிட்டு வெளியிட்டு பெரும்பொருள் ஈட்ட விரும்பிய 'வணிக நோக்கினர்'.

மேலே குறிப்பிட்ட ஐந்து பிரிவினரது தீவிர செயல்பாடுகளின் விளைவாகத் தமிழகத்தில் பல துறைசார் வெளியீடுகளும் இதழ்களும் வெளிவரலாயின.

விடுதலையுணர்வு இதழ்கள் இந்திய விடுதலைக்கான கருத்துப் பரப்புதலை மேற்கொண்டன. அதே நேரம் ஐரோப்பிய அறிவுத்துறைகளைத் தமிழில் அறிமுகப்படுத்தவேண்டும் என்ற எண்ணமும் பரவியது. இதன் விளைவாகத் தமிழில் பல மருத்துவ, வேளாண்மை, தொழில்நுட்பவியல் இதழ்கள் தொடங்கப்பட்டன. இந்நிலையில் 1947ஆம் ஆண்டு இந்தியா விடுதலையடைந்தது.

விடுதலையடைந்த பிறகு இந்திய நாட்டை அனைத்துத் துறைகளிலும் உயர்த்தவேண்டும் என்ற கருத்து இந்திய விடுதலைச் சார்பாளர்களால் முன்வைக்கப்பட்டது. ஐரோப்பிய மையவாத அறிவுப்புலங்களை இந்திய மொழிகளில் அறிமுகப்படுத்தினால் மட்டுமே இந்தியாவை மேம்படுத்தமுடியும் என்ற கருத்து நிலவியது. ஆகவே பெரும்பாலான இந்திய மொழிகளில் ஐரோப்பிய அறிவுப் புலங்களை வளர்த்தெடுக்கத் துறைசார் நூல்களும் கலைச்சொற்களும் உருவாக்கப்பட்டன.

இதுபோன்ற ஒரு போக்கு தமிழகத்தில் ஏற்பட்டது. ஆனால் அப்போக்கு இலக்கியத்தளத்தில் மட்டுமே நடந்தது என கலைக்கதிர் வருத்தத்துடன் பதிவு செய்துள்ளது.

> இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, தமிழார்வம் தமிழ் நாடெங்கும் விரைந்து பெருகித் தமிழ் மொழியானது மறுமலர்ச்சி அடைந்திருக்கின்றது. புதிய நூல்கள் பல எளிய உரைநடையில் வெளிவரலாயின. அளவற்ற பத்திரிகைகள் தமிழ்நாடெங்கும் தோன்றித் தமிழை வளர்ச்சி செய்கின்றன. இது மகிழ்ச்சிக்குரியதே. ஆயினும் பல பத்திரிகைகள் கற்பனைக் கதைகளை

> மட்டுமே வெளியிடுவதை நோக்கமாகக் கொண்டிருப்ப தாகத் தெரிகிறது (1:1, 1)

கலைக்கதிர் இதழ் வெளியிட்டுள்ள இக்கருத்து கவனிக்கத்தக்கது. அறிவு பரப்பும் பணியில் தமிழக இதழ்கள் ஆர்வம் காட்டாமல் இருந்ததை இதன் மூலம் அறியலாம்.

## இதழ் நோக்கம்

விடுதலை பெற்ற நம் நாடு பிற நாடுகளுக்கு இணையாக வளரவேண்டும்; அறிவியல், பொறியியல், பொருளாதாரம் ஆகிய துறைகளில் வளரவேண்டும் என்பதை,

> தற்காலத்தில் இன்றியமையாத விஞ்ஞானம், பொறியியல், பொருளாதாரம் போன்ற துறைகளிலேயே நம் நாடு மிகவும் பிற்போக்கான நிலையில் உள்ளது. இத்துறைகளிலே நம் நாடு உயர்ந்து விளங்கினாலன்றி நாம் பிற நாட்டாரோடு சம உரிமை கொண்டாட முடியாது. ஆகவே நம் நாட்டு மக்கள் அனைவரும் இத்துறைகளிலே ஓரளவு அறிவு பெறும்படியாகச் செய்வது சீரிய தொண்டாகும் (1:1, 2)

எனச் சுட்டிக்காட்டியுள்ளது. இச்சீரியத் தொண்டினை ஆற்று வதற்காகக் கலைக்கதிர் இதழ் தொடங்கப்பட்டுள்ளது என்பதை,

> தற்காலத்துக்கு வேண்டிய விஞ்ஞானம், பொறியியல், பொருளாதாரம், இலக்கியம், வரலாறு ஆகிய இவை பற்றிய அறிவினைத் தமிழ்நாட்டில் வளரசெய்வதாகிய சிறந்த தொண்டினை மேற்கொண்டு கலைக்கதிர் உதயமாகிறது (1:1, 2)

என்ற கருத்தால் அறிகிறோம்.

கலைக்கதிரின் முதல் இதழ் 1948ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வெளிவந்துள்ளது. முதல் இதழில் கலைக்கதிர் இதழின் நிறுவனரும் தொடக்க கால ஆசிரியருமான ஜி.ஆர். தாமோதரன் கலைக்கதிரின் நோக்கத்தை,

> 'புத்தம் புதிய கலைகள் மெத்த வளருது' என்ற அறிவிப்பினைத் தந்து, 'சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச்செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்' என்று கட்டளையிட்டவர் மகாகவி பாரதியார் ஆவார்.

அவருடைய கட்டளையை நிறைவேற்றுவது கலைக்கதிரின் குறிக்கோள் (1:1, ஆசிரியர் உரை)

என விளக்குகிறார். இந்த இதழை ஜி.ஆர். தாமோதரன் பூளைமேடு சாம கோவிந்தசாமி நாயுடு அறக்கட்டளையின் சார்பில் கோவையில் அச்சிட்டு மாத இதழாக வெளியிட்டார்.

## பூளைமேடு சாம கோவிந்தசாமி நாயுடு அறக்கட்டளை: சில குறிப்புகள்

கோவை மாவட்டம் தற்போதைய பீளமேட்டில் (பூளைமேடு: பூளைச்செடிகள் நிறைந்த பகுதி, இச்சொல் பேச்சு வழக்கில் மாறிவிட்டது), வாழ்ந்த பூளைமேடு சாம நாயுடு கோவிந்தசாமியின் மகன்களான பூ.சா.கோ. வேங்கடசாமி (1879-1965), பூ.சா.கோ. ரங்கசாமி (1882-1947), பூ.சா.கோ. கங்கா (1885-1949), பூ.சா.கோ. நாராயணசாமி (1887-1950) ஆகியோர் கோவையில் பல வணிக நிறுவனங்களை நடத்தி வந்தனர்.

இவர்கள் அனைவரும் தங்கள் வணிகத்தால் ஈட்டிய செல்வத்தைக் கொண்டு பூ.சா.கோ. (P.S.G.) அற நிறுவனத்தை 1926ஆம் ஆண்டு தொடங்கினர். இந்த அற நிறுவனம் பல கல்லூரி களையும் பல் தொழில்நுட்ப நிலையங்களையும் நடத்திவருகிறது.

பூ.சா.கோ. அறக்கட்டளை நிறுவனர்களில் ஒருவரான ஜி. ரங்கசாமி நாயுடு அவர்களின் மகன் ஜி.ஆர். தாமோதரன் பூ.சா.கோ. தொழில்நுட்பக் கல்லூரிகளின் நிர்வாகக்குழுவில் இடம்பெற்றிருந்தார். 1948ஆம் ஆண்டு பூ.சா.கோ. அறக்கட்டளையின் சார்பில் கலைக்கதிர் இதழைத் தொடங்கினார். பின் 1951ஆம் ஆண்டு முதல் பூ.சா.கோ. தொழில்நுட்பக் கல்லூரி முதல்வராகப் பணியாற்றினார். பின் 1978ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தராகப் பணியாற்றினார்.

## இலக்கிய ஆய்வு

விடுதலைக்கு முந்தைய காலகட்டத்தில் புலமை சார்ந்த தமிழறிஞர்களின் கட்டுரைகளை, மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் இதழான செந்தமிழ், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் செந்தமிழ்ச் செல்வி, கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் தமிழ்ப்பொழில் ஆகிய இதழ்கள் வெளியிட்டுவந்தன. இம் மூன்று இதழ்களும் வடமொழி ஆரிய எதிர்ப்புக் கோட்பாட்டையும், திராவிட / தமிழியக்கச் சிந்தனைப் போக்கிற்கு ஆதரவான நிலையில் தமிழ்

இலக்கண / இலக்கிய கால ஆராய்ச்சி, இலக்கியப் பதிப்பு, வரலாற்று ஆய்வுகளையும் மேற்கொண்டன.

இப்போக்கிலிருந்து விலகி ஓரளவு நடுநிலையுடன் இலக்கண / இலக்கிய / வரலாற்றுக் கட்டுரைகளை வெளியிட்டது கலைக்கதிர். இந்நடுநிலைப் போக்கிற்குக் காரணம் அதன் வெளியீட்டாளருக்கு எக்கருத்தியல் சார்பும் இல்லை எனக் கருத இடமுண்டு.

தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள், காப்பிய இலக்கியங்கள், நீதி இலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள், தற்கால இலக்கியங்கள் எனத் தமிழாய்வுப் பரப்பின் அனைத்துப் பகுதிகளும் இலக்கியக் கட்டுரைகளின் மையப் பொருள்களாக அமைந்தன.

கலைக்கதிரில் இலக்கியத் தொடர்கள் இடம்பெற்றுள்ளன. மு. வரதராசானார் எழுதிய 'பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை', தா.ஏ. ஞானமூர்த்தி எழுதிய 'நற்றிணை இன்பம்', 'சீவக சிந்தாமணி' ஆகிய இலக்கியஆய்வுத்தொடர் கட்டுரைகள் கலைக்கதிர் வெளியிட்ட தொடர் கட்டுரைகளில் குறிப்பிடத்தக்கவை.

தமிழ் இலக்கிய வரலாற்றின் பல்வேறு காலகட்ட இலக்கியங்களை அறிமுகப்படுத்தும் கட்டுரைகள், இலக்கியங்களின் உருவம், உள்ளடக்கம், கதை மாந்தர் இயல்புகள், இலக்கிய நயம், இலக்கியங்களின் சிறப்புக்கள், இலக்கியங்கள் காட்டும் மனிதநேயம், பண்பாட்டு விழுமியங்கள் ஆகியவை பற்றிய விளக்கமுறையில் அமைந்த ஆய்வுக் கட்டுரைகளைக் கலைக்கதிர் வெளியிட்டுள்ளது.

ஒப்பிலக்கிய நோக்கில் சில இலக்கியக் கட்டுரைகளையும் கலைக்கதிர் வெளியிட்டுள்ளது. இலக்கியப் படைப்புகளுக்குப் புது விளக்கம் கொடுக்கும் கட்டுரைகளையும் கலைக்கதிர் வெளியிட்டுள்ளது. தமிழறிஞர்களான துரை அரங்கனார், மு. இராகவையங்கார், தி.வை. சொக்கப்பா, ஔவை துரைசாமிப் பிள்ளை, மு.வ., மா. இராசமாணிக்கனார், நாவலர் சோமசுந்தர பாரதியார், பண்டிதர் அ. கிருஷ்ணசாமி நாயுடு, வ.சுப. மாணிக்கம், முத்து சண்முகம், ச.வே. சுப்பிரமணியன், டாக்டர் கா. மீனாட்சி சுந்தரம் ஆகியோர் இலக்கியக் கட்டுரைகள் எழுதியுள்ளவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

தமிழ் இலக்கியத்தில் தேசியம் *(8:9, 46-52)*, தமிழ் இலக்கியத்தில் மனை இயல் *(9:11, 21-25)*, தமிழர் கண்ட செல்வம் *(1:2, 45-48)*, முதல் குறள் உண்மைப்பொருள் *(23:2, 50-56)*, சிலப்பதிகார கடவுள் வாழ்த்து *(15:10, 37-43)*, கம்பர் கண்ட அறம் *(11:1, 106-109)*,

தேம்பாவணியும் திருபாலகனும் (18:2, 25-82), தமிழ்க்கவிதையின் எதிர்காலம் (1:1, 56-60) ஆகியவை கலைக்கதிர் வெளியிட்ட கட்டுரைகளுக்குச் சில எடுத்துக்காட்டுகள். சங்க இலக்கியக் குறுந்தொகைப் பாட்டான 'யாயும் ஞாயும்' எனத் தொடங்கும் பாடலுக்கு நாவலர் சோமசுந்தர பாரதியார் புதிய விளக்கம் அளித்து குறுந்தொகை - பாட்டு : 40 (3:7, 35-36) என்ற கட்டுரையை எழுதியுள்ளார். இக்கட்டுரையில் 'செம்புலம்' என்பது, 'மேடுபள்ளமற்ற சமமான செம்மையான' என்று பொருள் கொண்டு, இப்படிப்பட்ட நிலத்தில் பெய்யும் மழைத்துளி ஏற்ற இறக்கமில்லாமிலிருப்பதால் சீரான வேகத்தில் கலக்கும். அப்படி கலக்கும் இரண்டு துளிகளை மீண்டும் தனித்தனியாகப் பிரிக்க இயலாததுபோல் தலைவனும் தலைவியும் இரண்டறக் கலந்தனர் என்று புதுவிளக்கம் தந்துள்ளார்.

'சீவகசிந்தாமணி அம்மானை' என்ற தலைப்பிலான கட்டுரையை ஐ. சுப்ரமணியப் பிள்ளை எழுதியுள்ளார். சீவகசிந்தாமணி அம்மானையின் ஆசிரியர் வித்வான் கிருஷ்ணப் பிள்ளை. இது சீவகசிந்தாமணியை முதல் நூலாகக் கொண்டது. இந்நூலில் வழங்கும் பண்டாரத் தோப்பு, கன பிரிசம் போன்ற சொற்கள் இன்றும் நாஞ்சில் நாட்டுப் பகுதியில் வழங்குகின்றன. 'வாலையானந்தி' என்ற தெய்வ வழிபாடும் இப்பகுதியில் மட்டுமே உள்ளதால், இந்நூலாசிரியர் நாஞ்சில் நாட்டார் எனக் கருத இடமுண்டு. சீவகன் கதையையே சைவக் கதையாக இவர் பாடியுள்ளார் என்ற புதிய தகவலை இக்கட்டுரை வழங்குகிறது.

விளக்கமுறையில் எழுதப்பட்ட தமிழ் இலக்கியக் கட்டுரைகளை வெளியிட்ட கலைக்கதிர் இலக்கிய மதிப்பீட்டுக் கட்டுரைகளையும் வெளியிட்டுள்ளது. தமிழகத்தில் திறனாய்வுக் கோட்பாடுகள் முழுமையாக அறிமுகமாகாத காலகட்டத்தில் மேலை இலக்கிய திறனாய்வுப் போக்குகளை அறிந்த தமிழறிஞர்களான தெ.பொ.மீ., மு.வ., அ.ச. ஞானசம்பந்தன், சஞ்சீவி ஆகியோர் எழுதிய கட்டுரைகளை வெளியிட்டுள்ளது. இவர்கள் எழுதிய கட்டுரைகள் மட்டுமே திறனாய்வு நோக்கில் அமைந்துள்ளன. பிறர் எழுதிய திறனாய்வுக் கட்டுரைகளில் இலக்கியத்தை மதிப்பீடு செய்யும் போக்கே காணப்படுகின்றது.

இலக்கியங்களின் அடிப்படையில் எழுதப்பட்டுள்ள பண்பாடு, நாகரிகம் தொடர்பான கட்டுரைகளையும் கலைக்கதிர் வெளியிட்டுள்ளது. கலைக்கதிரில் இடம்பெற்றுள்ள பண்பாட்டியல் தொடர்பான கட்டுரைகளில் தமிழர் வாழ்க்கை முறையைப் பற்றிய கட்டுகரைகளே அதிக எண்ணிக்கையில் இடம்பெற்றுள்ளன. உலக அளவிலும் இந்திய அளவிலும் தமிழர் பண்பாட்டுக் கூறுகளைப்

பற்றிய விளக்கமுறைக் கட்டுரைகளை வெளியிட்ட கலைக்கதிர் அதே நேரத்தில் தமிழ்ப் பண்பாட்டின் ஒரு பகுதியான நாட்டுப்புற / பழங்குடிப் பண்பாடு பற்றிய கட்டுரைகளையும் வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## வரலாற்றாய்வு

கலைக்கதிரின் முதல் இதழிலேயே வரலாற்றுக் கட்டுரை ஒன்று இடம்பெற்றுள்ளது. தமிழக வரலாற்று ஆய்வாளர்களான தி.வை. சொக்கப்பா, கே.கே. பிள்ளை, சதாசிவ பண்டாரத்தார், மா. இராசமாணிக்கனார், மயிலை சீனி. வேங்கடசாமி, ஔவை துரைசாமிப் பிள்ளை, தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், மு. ஆரோக்கியசாமி ஆகியோர் எழுதிய வரலாற்றுக் கட்டுரைகளைக் கலைக்கதிர் வெளியிட்டுள்ளது.

'சங்ககாலக் கூடல்' என்ற தலைப்பில் கட்டுரை எழுதிய மா. இராசமாணிக்கனார் "மதுரையில் உள்ள அவநியாபுரமே சங்ககாலக் கூடல் நகராக இருந்திருக்க வாய்ப்பு உண்டு" என்று கருத்துத் தெரிவித்துள்ளார் (15:2, 37-43). மேலும் அவர் எழுதிய மதுரையில் தமிழ்ச்சங்கம் (13:2, 51-57), ஊர்களின் பழைய பெயர்களும் இன்றுள்ள பெயர்களும் ((15:4, 77-80), ஊர் பெயர்க் காரணம் (15:2, 37-43) ஆகிய கட்டுரைகளைக் கலைக்கதிர் வெளியிட்டுள்ளது.

மயிலை சீனி வேங்கடசாமி எழுதிய, சிலப்பதிகாரமும் பங்களரும் (11:8, 6-9), தமிழ்நாட்டில் யவனர் (13:2, 9-13), பாண்டியர் நிறுவிய தமிழ்ச்சங்கம் (11:6, 12-17) ஆகிய கட்டுரைகளைக் கலைக்கதிர் வெளியிட்டுள்ளது. இக்கட்டுரைகளில் சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் பங்களர் என்ற சொல் வங்காளிகளைக் குறிக்கும் என்ற வையாபுரிப் பிள்ளையின் வாதத்தைத் தென்னிந்தியக் கல்வெட்டு ஆதாரங்களைச் சுட்டிக்காட்டி மறுக்கிறார். 'பாண்டியர் நிறுவிய தமிழ்ச்சங்கம்' என்ற கட்டுரையிலும் வையாபுரிப் பிள்ளையின் கருத்துக்களை முழுமையாகச் சான்றுகளுடன் மறுத்துள்ளார். மேலும் வையாபுரிப் பிள்ளையின் கருத்துக்களே அடிப்படை இல்லாதவை என்னும்போது அவரை மேற்கோள்காட்டும் அறிஞர்களை

> பிள்ளையும், சாஸ்திரியும், தீட்சிதரும், சவுத்திரியும் பல்கலைக்கழகத்து அறிஞர்களாக இருந்தாலும் இவ்வாராய்ச்சியில் பிழைப்பட்டுத் தவறான முடிவைக் கூறினபடியால் இவர்கள் முடிவு கொள்ளத்தக்கதன்று, தள்ளத்தக்கது (11: 8, 9)

என்கிறார்.

தமிழ்நாட்டு வரலாற்றுக்குரிய ஆவணங்கள் எவை என்பது பற்றிய தகவல்களை வெளிப்படுத்தியுள்ள கேகே. பிள்ளை, காலனிய அலுவலர்களாலும் வணிகர்களாலும் எழுதப்பட்ட குறிப்புக்களை மட்டுமே கொண்டு தமிழக வரலாற்றை எழுத முடியாது என்ற கருத்தை வெளிப்படுத்தியுள்ளார். மக்களிடம் உள்ள ஆவணங்களின் அடிப்படையிலும் வரலாறு எழுதப்பட வேண்டும் என்பதை,

> கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த அழகிய பாண்டியபுரம் என்னும் ஊரில் பெரிய வீட்டு முதலியார்களின் பின் மரபினரிடமிருந்து கிடைக்கப் பெற்ற ஆவணங்களில் பற்பல வகை ஏடுகளும் காணப்படுகின்றன. தவிரவும் அக் குடும்பத்தாருக்கு அந்நாட்டு மன்னர்களான திருவாங்கூர் அரசர்களுடன் நிகழ்ந்த செயல் தொடர்புகளும் அவற்றுள் திகழ்கின்றன. . . . பெரிய வீட்டு முதலியார் ஓலைகள் கிபி. 13ஆம் நூற்றாண்டு முதல் 17ஆவது நூற்றாண்டு வரையிலான அந்நாட்டு மக்களது வரலாற்றுக்கு இன்றியமையாத ஆதாரங்கள் (15:3, 39)

என விளக்குகிறார்.

கலைக்கதிர் வெளியிட்ட வரலாற்றுக் கட்டுரைகளில், தமிழர் வரலாறும் சாசனங்களும் (3:4, 68-71), திராவிடக் குடியேற்றக் கொள்கைகள் (4:12, 15-19), வருடம் - தேதி - மாதம் (3:5, 26-31), மயிலையும் குமரியும் (1:12, 13-20), சோழநாட்டுத் துறைகள் (8:1, 52-55), மார்க்கோபோலோவும் பாபரும் (1:11, 9-13), கர்னாடகத்தை ஆண்ட சோழர்கள் வரலாற்றில் புதிய ஒளி (32:1, 53-56), கற்காலத் தமிழர் (7:1, 49-52), கன்னரதேவனும் கண்டராதித்தனும் (2:3, 14-23), சோழர்களும் இராஷ்டிரகூடர்களும் (4:3, 60-64), பத்தினிக்கோட்டம் (17:2, 64-68) ஆகிய கட்டுரைகள் குறிப்பிடத்தக்கவை.

கலை வரலாறு பற்றிய ஓரிரு கட்டுரைகள் கலைக்கதிரில் இடம்பெற்றுள்ளன. சில கட்டுரைகள் கள ஆய்வுத் தகவல்களின் அடிப்படையில் எழுதப்பட்டவை. பெரும்பாலான வரலாற்றுக் கட்டுரைகள் தமிழ் இலக்கியச் சான்றுகள், கல்வெட்டு, அகழாய்வுச் சான்றுகளின் அடிப்படையில் எழுதப்பட்டவை. நாணயவியல், செப்பேடுகள் பற்றிய சிறப்புநிலை வரலாற்றுக் கட்டுரைகள் எதுவும் கலைக்கதிர் இதழில் வெளியாகவில்லை.

விடுதலைப் போராட்ட வீரர்கள், இந்திய விடுதலைப் போராட்டச் சூழல் பற்றிய கட்டுரைகளைக் கலைக்கதிர் வெளியிட்டுள்ளது. தற்கால வரலாறு பற்றிய கட்டுரைகளையும் அது வெளியிட்டுள்ளது.

## மொழியியல் ஆய்வு

தமிழ் இலக்கண மரபு குறித்த ஆய்வுக் கட்டுரைகளையும் மொழியியல் துறை தொடர்பான ஆய்வுக் கட்டுரைகளையும் கலைக்கதிர் வெளியிட்டுள்ளது. மரபு இலக்கணங்களில் ஆழ்ந்த புலமை பெற்ற துரையரங்கனாரின் 'தொல்காப்பிய நெறி' என்ற தலைப்பிலான தொடர் கட்டுரையைப் பன்னிரெண்டாம் ஆண்டின் முதல் இதழ் தொடக்கம் முதல் பதினான்காம் ஆண்டின் இறுதி இதழ்வரை வெளியிட்டுத் தொல்காப்பிய ஆய்வு வளர்ச்சிக்குக் கலைக்கதிர் தன் பங்களிப்பை ஆற்றியுள்ளது.

மரபு இலக்கண ஆய்வுக்கட்டுரைகளை சுப. அண்ணாமலை, முத்து சண்முகன், மரா. செயாபூபதி ஆகியோர் எழுதியுள்ளனர். இலக்கணம் மட்டுமல்லாது மொழிவரலாறு/மொழி இயல்புகள் குறித்த கட்டுரைகளையும் கலைக்கதிர் வெளியிட்டுள்ளது. கொண்டா மொழி (11:1, 10-16), பர்ஜிய மொழி (1:2, 6-9), இனமும் மொழியும் (19:3, 65-70) ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

'தமிழ் மொழியில் சமஸ்கிருதம் பெற்ற கடன்' என்ற வ.ஐ. சுப்பிரமணியம் கட்டுரையைக் கலைக்கதிர் வெளியிட்டுள்ளது. மொழியியல் அறிஞர் பர்ரோ, ரிக்வேதத்தில் தமிழ்ச் சொற்கள் இடம்பெற்றுள்ளன என்ற ஆய்வு முடிவை அறிவித்தார். அம் முடிவின் அடிப்படையில் கட்டுரை எழுதிய வ.ஐ. சுப்பிரமணியம்,

> ஆரியர்கள் பஞ்சாபிற்கு வந்ததும் ரிக்வேதம் பாடப் பட்டது என்றால் அவர்களை முதலில் தொடர்பு கொண்டவர்கள் திராவிடர்கள் என்றாகிறது. ரிக் வேதத்தில் காணப்படும் சொற்களே இதற்குச் சான்று பகருகின்றன. அப்படியானால் பஞ்சாப் தீரத்தில் திராவிடர்கள் இருந்தார்கள் என்றாகிறது. அவர்கள் வழி வந்தவர்களே பலுசிஸ்தான் மலையில் வாழும் பிராஹீயி பேசும் மக்கள் என்று முடிவாகிறது. அத்துடன் புதையுண்ட ஹரப்பா, மொகஞ்சதாரோ நாகரிகம் எவருடைய நாகரிகம் என்று உறுதிப்படுத்து வதற்கும் இந்த முடிவு துணை செய்கிறது. ஆரியர்கள் வருவதற்கு முன்பு திராவிடர்கள் பஞ்சாப் பிராந்தியத்தில் வாழ்ந்ததற்கு மொழி ஆராய்ச்சி சான்று தருவதால் புதையுண்ட நாகரிகம் திராவிடர்களது நாகரிகம்தான் என்று நாம் துணிந்து சொல்லலாம்

என்கிறார். பேராசிரியர் முத்து சண்முகம் எழுதிய இருபதுக்கும் மேற்பட்ட மொழியியல் கட்டுரைகளைக் கலைக்கதிர் வெளியிட்டுள்ளது. இவ்விதழ் வெளியிட்ட கட்டுரைகளில் மொழியியல் துறையின் தோற்றமும் வளர்ச்சியும் (22:9, 23-28), பண்டைய தமிழ் ஒலியை எப்படி ஊகிப்பது (20:8, 96-100), இந்தியாவில் தற்கால மொழியியல் கல்வி (12:2, 17-21), சொற்கோவைப் புள்ளியியல் (18:8, 26-30) ஆகிய கட்டுரைகள் குறிப்பிடத்தக்கவை.

வ.ஐ. சுப்பிரமணியம் சொல்லடைவு அகராதியின் அவசியத்தையும் பயன்பாட்டையும் சொல்லடைவு அகராதி என்ற கட்டுரையில்,

> பழைய தமிழ் இலக்கியங்கள் பலவும் காலவரையறை பெறாதன. அவற்றில் காணும் சொற்களையும் அவற்றின் பொருள் வளர்ச்சியையும் அடிப்படையாகக் கொண்டு எந்த இலக்கியம் முன்? எது பின்? என்று ஊகிப்பதற்கு இந்தச் சொல்லடைவு அகராதி பயன்படும். சொற்களின் புள்ளிவிவர ஆராய்ச்சிக்கு இவை செய்யும் உதவியைக் குறிப்பிட்டாக வேண்டும் (15:3, 20)

என்கிறார்.

## சமய ஆய்வு

இந்தியத்தத்துவ மரபு அவைதீக/பொருள் முதல் வாதத்தையும் வைதீக/கருத்துமுதல் வாதத்தையும் தன்னகத்தே கொண்டது. தமிழ்ப் புலமை மரபைச் சார்ந்தவர்கள் பெரும் பாலானோர் வைதீகச் சார்புடையவர்கள். இதனால் வைதீக, சைவ / வைணவ இலக்கியங்களுக்கு கொடுக்கப்படும் ஆய்வு முக்கியத்துவம், அவைதீக பௌத்த / சமண / சாங்கிய / ஆசீவக சமயங்களுக்கும் சிறுதெய்வ வழிபாட்டு மரபுகளுக்கும் வழங்கப்படுவதில்லை.

செந்தமிழ்ச் செல்வி, தமிழ்ப் பொழில் ஆகிய இதழ்கள் தமிழ் வளர்ச்சியும் சைவ வளர்ச்சியும் ஒன்று என்ற போலித்தனமான கருத்தியலை முன்வைத்தன. தமிழ் வளர்ச்சியில் சமண / பௌத்த / கிறித்தவ / இசுலாமிய சமயங்களின் பங்களிப்பைச் சரிவர ஆய்வுத் தளத்தில் முன்வைக்கவில்லை. இப்போக்கிலிருந்து விலகிச் செந்தமிழ் செல்வி, தமிழ்ப்பொழில் ஆகிய இதழ்களைப் போல இல்லாமல் நடுநிலையுடன் கலைக்கதிர் கட்டுரைகளை வெளியிட்டுள்ளது.

அரசன் கடவுளான வரலாறு (4:4, 32-36), தமிழர் கடவுட் கொள்கை (8:2, 14-15) ஆகிய கட்டுரைகள் தொடக்க கால சமயக்

கட்டுரைகளுக்குச் சில எடுத்துக்காட்டுக்கள். மேலும், ஆடும் பெருமான் (9:1, 49-51), உயிர் (9:9, 2-3), ஊழி (3:3, 41-48), சமணர்களின் தொண்டு (31:4, 17-21), தம்மபதம் (3:3, 15-18), மெய்ப்பொருள் ஆராய்ச்சியும் வாழ்க்கையும் (14:2, 23-28), விஞ்ஞானமும் சமயமும் (11:1, 97-101), சமயங்கள் வளர்த்த தமிழ் (10:1, 22-28), திருமூலர் யோக நெறி (33:3, 27-31) ஆகிய கட்டுரைகள் கலைக்கதிர் வெளியிட்ட ஆய்வுக் கட்டுரைகளில் குறிப்பிடத்தக்கவை.

புத்தர் சிறப்பிதழை வெளியிட்டுள்ள கலைக்கதிர், இதழ் முழுவதும் பௌத்த சமயம் தொடர்பான கட்டுரைகளை வெளியிட்டுள்ளது. மயிலை. சீனி. வேங்கடசாமி, 'கூவத்துப் பௌத்த சிலைகள்' என்ற தலைப்பிலான கட்டுரையில் சென்னைக்கு அருகேயுள்ள கூவம் என்ற ஊர் ஒரு பௌத்த ஊராக இருந்திருக்க வாய்ப்பு உண்டு என்பதைக் களப்பணி தகவல்கள் மூலம் விளக்கியுள்ளார். அக்கட்டுரையில்,

> சிவபெருமான் முப்புரங்களை அழித்தார் என்பதற்குப் பௌத்தர்களுடைய புத்த தர்ம சங்கம் என்னும் மும்மணிகளை அழித்தார் என்பது நான் ஆராய்ந்து கண்ட தத்துவார்த்தம். புத்த தர்ம சங்கம் என்னும் மும்மணிகள் பௌத்த சமயத்தின் கோட்டைகளாகும். இவை அழிந்தால் பௌத்த மதம் அழிந்துவிடும். பண்டைய காலத்தில் சைவ, வைணவர்கள் பௌத்தக் கோயிலை அழிப்பதாக இருந்தால் பௌத்த கிராமத்திற்கு அருகில் உக்கிரமூர்த்தியை, நரசிங்க மூர்த்தியை அமைப்பார்கள். பிறகு பையப்பைய பௌத்த கோயிலைச் சைவக் கோயிலாகவோ, வைணவக் கோயிலாகவோ மாற்றிப் பின் இதற்கு, சிவபெருமான் முப்புரத்தை நரசிங்க அம்பு எய்து அழித்தார் என்று புராணக் கதை கூறுவார்கள். இது என் ஆராய்ச்சியில் கண்டமுடிவு. (8:6, 15)

எனத் தன் ஆய்வு அனுபவத்தைப் பதிவு செய்துள்ளார். இவ்வாறாகக் கலைக்கதிர் சமயவியல் ஆய்வுக்குத் தன் விரிவான பங்களிப்பை ஆற்றியுள்ளது.

## அறிவியல் தமிழ்

தமிழில் அறிவியல் கருத்துக்களை வெளியிட்டுவந்த கலைக்கதிர், அது தொடர்பான கட்டுரைகளையும் வெளியிட்டுள்ளது. அறிவியல் தமிழ், கலைச் சொல்லாக்கம், ஒலிபெயர்ப்பு, கிரந்த

எழுத்துக்கள், புதுச்சொல்லாக்கம், கலைச்சொல்லாக்க வகைகள், அறிவியல் தமிழாக்கத்தில் செர்ற்றொடர் அமைப்பு என அறிவியல் தமிழ் ஆய்வு வளர்ச்சிக்கான பயனுள்ள கட்டுரைகளைக் கலைக்கதிர் வெளியிட்டுள்ளது. விஞ்ஞானத் தமிழ் (25:4, 26-32), அறிவியல் தமிழ் (27:1, 21, 25), அறிவியல் தமிழாக்கம் (33:3, 5-10), அறிவியல் தமிழாக்கத்தில் தமிழ் ஒலியும் பிற ஒலியும் (28:2, 25-32), தமிழ் மொழிபெயர்ப்பில் ஒலிபெயர்ப்பு தேவையா? (26:2, 57-65), தமிழிலே கலைச் சொற்கள் (7:7, 46-51), புதுச்சொற் படைப்பு (26:8, 37-42) ஆகிய கட்டுரைகள் கலைக்கதிர் வெளியிட்ட அறிவியல் தமிழ்க் கட்டுரைகளில் குறிப்பிடத்தக்கவை.

## சிறப்பிதழ்கள்

கலைக்கதிர் இதழ் பல சிறப்பிதழ்களை அவ்வப்போது வெளியிட்டுள்ளது. பயிற்றுமொழிச் சிக்கல் சிறப்புமலர், அறிவியல் வளர்ச்சி மலர், பொறியியல் மாணவர்மலர், பொருளாதாரச் சிறப்புமலர், புத்தர் மலர், சுதந்திரப் போராட்டச் சிறப்புமலர் போன்ற சிறப்பிதழ்களைக் கலைக்கதிர் வெளியிட்டுள்ளது. தமிழக வணிக இதழ்கள் தீபாவளிக்குச் சிறப்பிதழ்களை வெளியிடுகின்றன. தமிழ் இதழ்களில் பொங்கலுக்கென்று மட்டும் சிறப்பிதழ்களை வெளியிட்ட பெருமையுடையது கலைக்கதிர் இதழ்.

தமிழக இதழியல் வரலாற்றில் ஆய்வு இதழாக மலர்ந்து அறிவியல் இதழாக வெளிவரும் கலைக்கதிரை ஓர் ஆய்விதழாக இயக்கியது, அ.ச. ஞானசம்பந்தன், ம.ரா.போ. குருசாமி, இருசுப் பிள்ளை போன்ற தமிழ்ப்பேராசிரியர்களே. இப்பேராசிரியர்கள் தமிழ் முதுகலை / தமிழியல் ஆய்வுத் துறைகளோடு நெருங்கிய தொடர்புடையவர்கள். இவர்களின் பங்களிப்பு 80களுக்குப் பிறகு வெகுவாகக் குறையைத் தொடங்கியது. இக்காலகட்டத்தில் தமிழியல் ஆய்வில் தகவலியல், பெண்ணியம், மேலை இலக்கியத் திறனாய்வுப் போக்குகள், தலித்தியம், விளிம்பு நிலை வரலாறு எழுதுதல், நாட்டுப்புறவியல், பழங்குடியியல் போன்ற புதிய ஆய்வுப் போக்குகள் அறிமுகமாயின.

இலக்கியங்களில் உருவம் / உள்ளடக்கம், கால ஆராய்ச்சி, பதிப்புப் பணிகள், சேர, சோழ, பாண்டிய மையங்களை வைத்து வரலாறு எழுதுதல், தமிழ்ப் பண்பாட்டை இலக்கியங்களில் தேடும் முயற்சிகள் ஆகியவை காலாவதியான ஆய்வுகளாகக் கருதப்பட்ட நிலையில் 80களில் நடந்த புதிய மாற்றங்களைக் கலைக்கதிர் உள்வாங்கிக் கொள்ளவில்லை. மாறாகப் புதிய அறிவியல்

கருத்துக்களை மக்களிடம் கொண்டு செல்லும் 'பொது மக்களுக்கான/ இளைஞர்கள் / மாணவர்களுக்கான அறிவியல் பரப்பல்' என்ற புதிய பாதையில் 80களுக்குப் பிறகு நடைபோட்டு தன்னுடைய போக்கை மாற்றிக்கொண்டு 'தலைசிறந்த அறிவியல் இதழாக வெளிவருகிறது. இக்கட்டுரையில் கலைக்கதிரின் சில முக்கிய போக்குகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. மேலும் அறிவியல் வரலாறு (History of Science) என்ற நோக்கில் கலைக்கதிர் அறிவியல் ஆய்வுக் கட்டுரைகள் ஆராயப்பட வேண்டும்.

## துணை நின்றவை


1. கலைக்கதிர் இதழ்கள், 1948 - 1998
2. கலைக்கதிரில் தமிழியல் கட்டுரைகள் - ஒரு வகை தொகை அடைவு, டாக்டர் கு. மோகனராசு, சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை, 1983
3. அ. குமாரசாமி, கலைக்கதிரின் முதல் ஐந்தாண்டுத் தமிழ்ப்பணி, பாரதியார் பல்கலைக்கழக எம்.ஃபில் ஆய்வேடு, 1991

# TAMIL CULTURE

**1952** **ம.செ. இரபிசிங்**

தமிழை உலகறியச் செய்த பெருமையில் கிறித்தவப் பாதிரிமார்களுக்குப் பெரும் பங்குண்டு. அப்பெருமைக்குரியவர்களுள் டாக்டர் சேவியர் தனிநாயகம் அடிகளாரும் ஒருவர். தமிழ்த் தொண்டிற்காகச் சமயத் தொண்டைத் துறந்த துறவி அவர். உலக அறிஞர்கள் பலர் தமிழ்மொழியையும், அதன் பெருமையையும் அறிந்து போற்றுமாறு செய்த சிறப்பு அவருக்குண்டு.

1947இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் முதுகலை மாணவனாக இருந்த காலத்திலேயே, தமிழின் தொன்மையினை, தமிழ் - இலக்கியத்தின் ஒப்பற்ற தன்மையினை உலகறியச் செய்யவேண்டுமென்று உறுதிபூண்டவர் அடிகளார். அதற்குரிய முதல்முயற்சியாக, 1948இல் தூத்துக்குடியில் தமிழ் இலக்கியக் கழகம் எனும் பெயரில் தமிழ் ஆய்வுக்குரிய ஓர் அமைப்பினை நிறுவினார். அதன் பின்னர், 1949ஆம் ஆண்டு முதல் 1950ஆம் ஆண்டுவரை ஈராண்டுகள் ஏறத்தாழ இருபதிற்கும் மேற்பட்ட நாடுகளுக்குப் பயணம் செய்து, தமிழ் மொழி, கலை, வரலாறு, பண்பாடு ஆகியவை பற்றிச் சிறப்புச் சொற்பொழிவுகள் பல நிகழ்த்தினார். அமெரிக்க ஐக்கிய நாட்டில் மட்டும், தமிழ் இலக்கியம் பற்றி, ஒரே ஆண்டில் இரு நூறுக்கும் அதிகமான சொற்பொழிவுகளை நிகழ்த்தினார்.

தம் உலகப் பயணத்தின் மூலம், அடிகளார் அறிந்து கொண்ட உண்மைகள் பல. இந்திய நாடு என்றால், சிந்து கங்கைப் பெருவெளி என்றும், இந்திய மொழியென்றால் சமஸ்கிருதம் என்றும், இந்தியப் பண்பாடு என்றால், விந்திய மலைக்கு வடபகுதியில் வாழ்பவர்கள் பண்பாடு என்றும் மேனாட்டு மொழி ஆராய்ச்சியாளர்களும், இலக்கிய ஆராய்ச்சியாளர்களும் எண்ணிக் கொண்டிருந்தமையை அடிகளார் நன்கு அறிந்துகொண்டார். இந்திய நாகரிகத்தையும் பண்பாட்டையும் அறிந்துகொள்வதற்குச் சமஸ்கிருத இலக்கியப் பயிற்சி மட்டும் போதும் என மேனாட்டார் கருதியிருந்தனர். மேனாடுகளில் வெளிவந்துள்ள இந்தியாவைப் பற்றிய வரலாற்று

நூல்களிலும், தமிழ் இலக்கியத்தைப் பற்றிய கருத்து சிறதேனும் இடம்பெறவில்லை. இதற்குக் காரணம், தமிழ் மொழி, இலக்கியம் உலகத்துடன் தொடர்பு கொள்வதற்குரிய ஒரு கருவியாக அமைய வில்லை என்பதனை அடிகளார் உணர்ந்தார்.

இக்குறையைப் போக்கும் வகையில், உலகிலுள்ள தமிழரல்லாத பிறமொழியியல் அறிஞர்களும், இலக்கிய ஆய்வாளர்களும் தமிழை அறிந்து கொள்ளும் நிலையில், ஒரு பெரும் பணி செய்ய வேண்டுமென அடிகளார் கருதினார்.

தமிழைப் பற்றிய ஆய்வுகள் தமிழில் மட்டுமே நிகழ்வது தொடருமாயின், மேனாட்டார் தமிழைப் பற்றி அறிந்துகொள்ள இயலாது. எனவே, தமிழைப் பற்றிய ஆய்வுகள் ஆங்கிலம் போன்ற பிறமொழிகளில் வெளியிடப்படுதல் வேண்டுமென எண்ணினார். அவ்வாறு செய்தால்தான் உலக அரங்கில் தமிழ் அதற்குரிய இடத்தைப் பெற இயலும் என்று கருதினார். உலகத் தொடர்பு மொழியாகிய ஆங்கிலத்தில் ஓர் இதழ் தொடங்க வேண்டும் என நினைத்தார். எனவே தூத்துக்குடியில், தான் நிறுவிய தமிழ் இலக்கியக் கழகத்தின் சார்பாக, 1952ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் TAMIL CULTURE எனும் ஆங்கில முத்திங்கள் இதழைத் தொடங்கினார்.

இதழ் அட்டையின் மேல்பகுதியில் மூவேந்தருக்குரிய வில் - அம்பு, மீன், புலி ஆகிய இலச்சினை பொருத்தப்பட்ட கொடியும் அதற்குக் கீழே, 'தமிழ்க்கலைமன்றம்' என்பதும், அதன்பின், The Academy of Tamil Culture என்பதும் இடம்பெற்றன. தொடக்க காலத்தில் A Quarterly Review dedicated to the study of Tamilian என்று முகப்பில் Tamil Culture என்பதற்குக் கீழே குறிக்கப் பட்டிருந்தது. 1955இல் தமிழ்ப் பண்பாட்டுக் கழகத்தின் மூலம் வெளியிடத் தொடங்கிய பின்னர், Journal of the academy of Tamil Culture என்று மாற்றப்பட்டது.

அட்டையின் உள்பகுதியில் முதன்மை ஆசிரியர் பெயர், ஆசிரியர் குழு உறுப்பினர் பெயர்கள், இதழைப் பற்றிய பிற தகவல்கள் இடம்பெற்றன. ஆய்வுக் கட்டுரைகளுக்குப் பின் இதழின் பின் பகுதியில் News and Notes, Books review என்பவை இடம்பெற்றன. News and Notes என்பவற்றில் உலகளாவிய நிலையில், தமிழைப் பற்றியும் தமிழ்ச் சங்கங்களின் நடவடிக்கைகள் பற்றியும் தமிழ் ஆய்வு மன்றங்கள் பற்றியும் தமிழ் அறிஞர்கள் பற்றியும் அவர்தம் ஆய்வுப் பணிகள் பற்றியும் அமைந்த சிறுகுறிப்புகள் தகவல்களாக

வெளியிடப்பட்டிருக்கின்றன. Book review என்ற தலைப்பில், தமிழைப் பற்றி ஆங்கிலத்தில் வெளியிடப்பட்ட ஆய்வு நூல்கள் பற்றிய மதிப்பீடுகள் இடம் பெற்றிருக்கின்றன. அடைப்புக்குறிக்குள் The books reviewed here are written in English என்று குறிக்கப்பட்டது.

இவ்விதழ், 1954 டிசம்பர் வரையிலும், அடிகளார் நிறுவிய தமிழ் இலக்கியக் கழகத்தின் சார்பில் வெளிவந்தது. அதன்பின்னர் 1955 ஜனவரித் திங்கள் முதல், தமிழ்ப் பண்பாட்டுக் கழகத்தின் சார்பில் வெளிவந்தது. அதிலிருந்து ஆசிரியர் குழுவும் நியமிக்கப்பட்டது. அடிகளாரை முதன்மை ஆசிரியராகக் கொண்ட ஆசிரியக் குழுவில், இலயோலா கல்லூரியைச் சார்ந்த மறைத்திரு. ஏ. சிராக், முன்னாள் கல்லூரிக் கல்வி இயக்குநர் எம்.எம். கனி, இலங்கைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த எஸ். ருத்ராபதி, உஸ்மானியா பல்கலைக் கழகத்தில் பணியாற்றிய பி.எம். சுந்தரம், டாக்டர். அ. சிதம்பர நாதனார், பேராசிரியர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார், டாக்டர். வி.அய். சுப்பிரமணியனார், பேராசிரியர் பி. திருஞானசம்பந்தம் ஆகியோர் தொடக்க காலத்தில் இடம்பெற்றிருந்தனர். அதன் பின்னர் மேற்குறிப்பிட்ட குழுவினருடன், டாக்டர் கே.கே. பிள்ளை, மகாவித்வான் மே.வி. வேணுகோபாலப் பிள்ளை, பேராசிரியர் மணவாள இராமானுஜம் ஆகியோரும் சேர்க்கப்பட்டனர்.

1963ஆம் ஆண்டு வெளிவந்த இதழில் திரு. ஏ. சுப்பையா அவர்கள் இணை ஆசிரியராக நியமிக்கப்பட்டார். 1964இல் கூடுதலாக திரு. எஸ். சிங்காரவேலு என்பவர் துணை ஆசிரியராகச் சேர்க்கப்பட்டார். டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் பதிப்பாளராகப் பணியாற்றினார். இதழ், 5B, அய்யாவு நாயுடு, சென்னை - 30 என்ற முகவரியில் வெளியிடப்பட்டது.

1966ஆம் ஆண்டு வெளிவந்த முதல் இதழில், இதழின் மேலாண்மை ஆசிரியர் பொறுப்பை இலயோலா கல்லூரியைச் சேர்ந்த அருள்திரு. இஞ்ஞாசி இருதயம் அடிகளார் ஏற்றுக் கொண்டார். ஆனால் 1966 ஆண்டுக்குப் பின்னர் இவ்விதழ் வெளிவ்ரவில்லை. இடையில் 1960, 1962, 1965 ஆகிய ஆண்டுகளிலும் இவ்விதழ் வெளியிடப்படவில்லை. 1963, 64-களில் வெளியான இதழ்களில் தமிழ்க் கட்டுரைகளும் இடம்பெற்றன. எனவே சில காலம் இருமொழி இதழாகவும் இது செயல்பட்டது.

இவ்விதழ் வெளிவராத பின்னர், அடிகளாரை முதன்மை ஆசிரியராகவும் பேரா. வி.அய். சுப்பிரமணியனாரைத் துணை முதன்மை ஆசிரியராகவும் திரு. ஏ. சுப்பையா அவர்களை இணை ஆசிரிய ராகவும் கொண்டு உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் சார்பாக 1970இல் Journal of Tamil Studies எனும் இன்னொரு இதழ் வெளிவந்தது. அடிகளாரின் பொறுப்பில் நான்கு இதழ்கள் வெளிவந்தன.

Tamil Culture ஆரம்பித்த பொழுது, அதன் நோக்கமாக "Tamil Culture will establish and maintain effective contact and collaboration with University on other academic organisations at home wand abroad" என பிரகடனப்படுத்தப்பட்டது. ஆனால் 1955 ஜனவரி இதழில் தமிழ்ப் பண்பாட்டுக் கழகத்தின் சார்பாக வெளியிடப்பட்ட பொழுது, இதழின் நோக்கமாக, அடிகளார்,

> This journal aims at reaching as wide a circle of readers as possible. It is being circulated in such a manner that it may come with in easy reach of the teaching profession and student population. For this purpose, the Academy is also organising the publication of Tamil Edition of the Review which will present to the Tamil reading world the result of modern scholarship and which will serve as a borum of exchange of views and of discussion among Tamil Sangam and Tamil Scholars

என்று குறிப்பிடுகிறார். எனவே, இதழ் தொடங்கிய ஆரம்பகாலத்தில் கடைப்பிடிக்கப்பட்ட வரன்முறைகளிலிருந்து, நெகிழ்ந்து, வாசகர் வட்டத்தின் பரப்பை விரிவுபடுத்தவும், அடிகளார் குறிப்பிடுவது போல், தமிழர்களுக்கும், வளர்ச்சி யடைந்துவரும் மேலைநாட்டு இலக்கியக் கோட்பாடுகளை அறிமுகப்படுத்தி, தமிழை வளப்படுத்தவும் இதழின் தன்மை மாற்றியமைக்கப்பட்டது.

முதல் இதழில், 'முதல் முத்திங்கள் இதழ்' எனும் தலைப்பில் இதழ் எவ்வாறு தமிழ் ஆய்வுக்குரிய பாலமாக - கருவூலமாக அமையும் என்பது சுட்டப்படுகிறது. முதல் இதழிலேயே, பேரா. எம். இரத்தினசாமி, பேரா. எஸ். வையாபுரிப் பிள்ளை, சுவாமி ஞானப்பிரகாசர், பேரா. தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், பேரா. சிதம்பரநாதன், பேரா. சி.ம. இராகவன், பேரா. மு. ஆரோக்கியசாமி ஆகிய பேரறிஞர்களின் கட்டுரைகள் இடம்பெற்றன.

இவ்வாறு இறுதி இதழ் வரையிலும், இதழின் தரம் கொஞ்சம்கூட குறையாதவகையில், புலமை படைத்தோர் கட்டுரைகளே இடம்பெற்றன.

முதல் இதழே உலகளாவிய நிலையில் ஆராய்ச்சி அறிஞர்களிடையே சிறந்த வரவேற்பைப் பெற்றது. அது வரையிலும் ஆங்கிலத்தின் வாயிலாக, வெளிவந்த ஆய்வுகள் எல்லாம் இலக்கியம், இலக்கணம் ஆகியவற்றை மட்டுமே மையமாகக் கொண்டிருந்தன. ஆனால் TAMIL CULTUREஇல் வெளியான ஆய்வுக் கட்டுரைகள், பண்பாடு, வரலாறு, நிலவியல், மொழியியல், ஒப்பியல் பல துறைகள் பற்றி அமைந்தன.

முதல் இதழிலிருந்தே தமிழ்த்தொடர்பான செய்திகளை வெளியிடுவதில் அடிகளார் கருத்து செலுத்தினார். மறைந்த பூம்புகார் பற்றிய ஆராய்ச்சிகளை நடுவண் அரசு மேற்கொள்ள வேண்டுமென வற்புறுத்தி அண்ணாமலைப் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் டாக்டர் ஜி. மணவாள இராமானுஜம் அவர்கள் எழுதிய மடல் முதல் இதழின் இறுதியில் இடம் பெற்றுள்ளது.

தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பற்றிச் சட்டப் பேரவையில் நடந்த சர்ச்சைகள், தமிழ்வழிக்கல்வி பற்றிய வாதங்கள், முதலியன Tamilian News and Notes எனும் தலைப்பில் இடம்பெற்றன. இந்தியை ஆட்சிமொழியாக்குவதை எதிர்த்து, இராஜாஜி, சர். சி.பி. இராமசாமி ஐயர் ஆகியோர் தெரிவித்த கருத்துக்களும் இவ்விதழின் மூலம் உலகறியச் செய்யப்பட்டன.

சுவாமி விபுலானந்தர், பேரா. ரா.பி. சேதுப்பிள்ளை இரசிகமணி டி.கே.சி., பேரா. மு.வ., பேரா. மா. இராசமாணிக்கனார், மயிலை. சீனி. வேங்கடசாமி, எச்.எஸ். டேவிட், டாக்டர். கே.கே. பிள்ளை, ஏ.சி. பால் நாடார் முதலிய தமிழ்ப் பேரறிஞர்களின் கட்டுரைகள் பலவும் இதழில் இடம்பெற்றிருந்தன. சில கட்டுரைகள், அவர்கள் மறைவுக்குப் பின் வெளிவந்தன. மேற்குறிப்பிட்ட அறிஞர்கள் தமிழில் மட்டுமே எழுதிக் கொண்டிருந்தவர்கள்; Tamil Culture - இதழ் மூலம் தங்கள் புலமையை உலகறியச் செய்தனர்.

இந்திய மொழியியல் முன்னணி அறிஞர்களுள் ஒருவர் பேரா. சுனித்குமார் சட்டர்ஜி. இவரது கட்டுரைகளும் இவ்விதழில் இடம்பெற்றன. தமிழகத்தின் முன்னார் ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் கூட, இரண்டாம் இதழில் 'அசோகரும் சேர

நாட்டில் புத்த சமயம் பரவியதும்' என்னும் தலைப்பில் ஓர் ஆய்வுக் கட்டுரை எழுதியுள்ளார்.

Tamil Culture, இதழ் ஆற்றிய அரும்பணிகளில் ஒன்று, இவ்விதழின் மூலமே தமிழ் ஆய்வில் பல வெளிநாட்டு அறிஞர்கள் ஈடுபட்டனர். அவர்களுள் ஃபீலியோசா, எமனோ, நோல்ட்டன் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். சர். மார்ட்டிமர் வீலர், எம்.பி. எமனோ, ஜே.ஆர். மார், நோல்ட்டன், எம்.எஸ்.எச். தாம்ஸன், ழான்ஃபீலியோசா, எச். ஹீராஸ், எஃப். லெக்ரான், எம். ஆந்திரனோவ், கமில் சுவலபில் உள்ளிட்ட 18 மேனாட்டு அறிஞர்கள், தமிழ் ஆய்வுக் கட்டுரைகள் பல வழங்கியுள்ளனர். இதில் டாக்டர் கமில் சுவலபில் மட்டுமே 19 கட்டுரைகளை வழங்கியுள்ளார். முதல் இதழிலேயே, 'ஆங்கிலத்தில் சில திராவிடச் சொற்கள்' எனும் கட்டுரை தொடர்பாக அவர் எழுதிய மடல் பிரசுரிக்கப்பட்டது. அதிலிருந்து அவர் தொடர்ந்து கட்டுரை எழுதினார். அதோடு தமிழைப் பற்றிய ஆய்வுக் கட்டுரைகளைச் செக்நாட்டு Novy Orient, Archiv Orientalau ஆகிய இதழ்களில் வெளியிட்டார். இவருக்கு அடுத்த நிலையில் அதிமான கட்டுரைகளை எழுதியவர் ரஷ்ய நாட்டுத் தமிழறிஞர் எம். ஆந்திரனோவ்.

தனிநாயகம் அடிகளாரின் 24 கட்டுரைகள் Tamil Cultureஇல் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் சில ஏற்கனவே, அடிகளார் எழுதிய ஆய்வேடுகளில் இடம்பெற்றவை.

அடிகளார் Tamil Cultureஇன் 1958ஆம் ஆண்டு ஜூலை-செப்டம்பர் இதழில் First Book printed in Tamil எனும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதினார். அதில், தமிழ்நாட்டுடன் முதலில் தொடர்பு கொண்ட போர்த்துகீசிய மதக் குருக்கள் முதல் தமிழ் நூலை 1554ஆம் ஆண்டிலேயே இலண்டனில் வெளியிட்டனர் என்பதை ஆதாரப் பூர்வமாக நிறுவியிருந்தார். போர்த்துகீசியத்தில் அச்சேறிய நூல்கள் பற்றிய வரலாற்றில் இடம்பெற்றிருந்த செய்தியை ஆதாரமாகக் கொண்டு, போர்த்துகீசியம் சென்ற அடிகளார், இந்த உண்மையை அறிய மூன்று முறை லிஸ்பான் நகருக்குச் சென்று Museu Etndogica எனும் அருங்காட்சி அரங்கத்தில் 1954இல் பார்வையிட்டார். அதில் தமிழ் எழுத்துக்களுக்குப் பதிலாக உரோம எழுத்துக்கள் பயன்படுத்தப் பட்டிருந்தன. இவை தமிழ் ஒலிகளைக் குறிக்கப் பயன்படுத்தப் படுகின்றன. ஒவ்வொரு வரிக்கும் இடையில் போர்த்துகீசிய

மொழியில் பொருளும் குறிக்கப்பட்டிருந்தது. இதற்குத் தமிழ்பேசும் மூன்று இந்தியர்கள் உதவி செய்த செய்தி முன்னுரையில் குறிக்கப் பட்டிருந்தது. நூலின் பக்கங்களை நிழல் படத்துடன் பிரசுரித்து, இந்திய மொழிகளுக்குள்ளும், கிழக்கு ஆசிய மொழிகளுக்குள்ளும் முதலில் அச்சுக் கொண்ட மொழி தமிழ்மொழி என்பதை உலகறியச் செய்தார் அடிகளார்.

இதைப்போல, 1952 இல் ஹார்வர்ட் பல்கலைக்கழகச் செய்தி மலரில் வெளியான செய்தியை ஆதாரமாகக் கொண்டு, 'தம்பிரான் வணக்கம்' எனும் நூல் 1577இல் இரண்டாவது அச்சேறிய தமிழ் நூல் என்று நிறுவினார்.

இவையெல்லாம் தமிழுக்குரிய சிறப்புக்களை உலகறிய செய்யவேண்டுமென்பதோடு, தரமான ஓர் ஆய்வுக் கட்டுரை எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்குரிய எடுத்துக்காட்டுகளாகவும் அமைந்தன.

மேலும், தமிழையும், தமிழறிஞர்களையும் குறைசொல்வதை அடிகளாரால் பொறுத்துக்கொள்ள இயலவில்லை. உடனே, அதற்கு மறுப்பை Tamil Culture இதழில் எழுதுவார். டாக்டர் மு.வ.வின் 1961இல் வெளியான 'மண்குடிசை' எனும் நாவலைப் பற்றி, இந்து பத்திரிகை 'Another novel from the pen of Mu. Va. nothing more than that' என்று விமர்சித்திருந்தது. உடனே, அதற்கு மறுப்பாக, டாக்டர். மு.வ. எத்தகைய சிறந்த நாவல் ஆசிரியர் என்பதனை 'The novelist of the city of Madras' என்ற தலைப்பில் மு.வ.வின் பெருமை பற்றிக் கட்டுரை ஒன்று எழுதினார்.

பல அறிஞர்கள், தமழைப் பற்றிக் கூறிய அரிய கருத்துக்கள் பல, Tamil Culture இதழில் இடம்பெற்றிருந்தன.

ஆங்கில அரசால், தமிழ் புறக்கணிப்பதைப் பற்றி 1919இல் டாக்டர். ஜி.யு. போப், ஆங்கில அரசுக்கு எழுதிய கடிதம் ஒன்று இதழில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

> Although the very ancient, copious and refined Tamil Language in inferior to none, it is regarded by most people as the vernacular of a people living some wher in a remote District of Great Britavis imperial possessions. Neither does our Indian Govt. nor our Universities fully recognise the value of Tamil literature, and so those who spend their lives

in the study of the great south Indian classics must resemble
men seeking for pearls under water

எனப் போப் ஆங்கில அரசுக்கு எழுதியுள்ளார். போப் தமிழ்மீது எத்தகைய ஈடுபாட்டுடன் அக்கறையுடன் இருந்திருக்கிறார் என்பதை இம்மடல் மூலம் அறிய முடிகிறது.

அதைப் போல Rock Feller Foundationஆல் 1950இல் அனுப்பப்பட்ட ஓர் அமெரிக்க அறிஞர், தமிழ் இந்திய அரசால் புறக்கணிக்கப்படுவதைச் சுட்டிக்காட்டி, "Govt. of India was not interested in any studies that world prove the non-Ariyane Origin of culture" என்று தொடங்கும் அவரது கருத்து முழுமையும் வெளியிடப்பட்டுள்ளது.

சமஸ்கிருதத்தை ஐரோப்பா முழுவதும் பரப்பிய சமஸ்கிருதத்தின் பெருமையை உலகளாவிய நிலையில் பரப்பிய, MaxMuller, 1905ஆம் ஆண்டு "Tamil Literature hither is has been far too much neglected by students of Indian literature, philosophy and religion" என்ற நூலுக்கு எழுதிய முன்னுரையில் என்று குறிப்பிட்டுள்ளார். இதைப் போன்ற தமிழ்த் தொடர்பான அறிஞர்கள் கருத்துக்கள் பல, தமிழர்களை விழிப்புணர்ச்சி யடையச் செய்யும் வகையில் இதழில் இடம்பெற்றுள்ளன.

மேலும், எஸ்.கே. சட்டர்ஜி, 'Vedic Age' என்ற நூலில் தமிழ்ப் பண்பாடு குறித்துச் சொல்லியுள்ள கருத்துக்கள், Albert Schweitzer, குறள் பற்றிச் சொல்லிய கருத்துக்கள், Leop Bargou, 'The Sculpture paradise in Southe India' என்ற கட்டுரையில் இடம்பெற்றுள்ள தமிழ்க்கலை, பண்பாடு பற்றிய கருத்துக்கள் போன்றவற்றை வெளியிட்டு, உலக அறிஞர்களால் எவ்வாறு தமிழ் அங்கீகரிக்கப் பட்டுள்ளது என்பது வெளியிடப்பட்டுள்ளது.

Tamil Culture எனும் இவ்வாய்விதழ், தமிழ் ஆய்விற்கு அளித்த பங்களிப்பை நோக்கும்பொழுது பல வெளிநாட்டு அறிஞர்களுக்குத் தமிழை ஆராயவும், ஆய்வுக்கட்டுரைகளை எழுதவும் ஒரு தூண்டு கோலாகவும், ஆய்வுக்கட்டுரைகளை வெளியிடக் கருவியாகவும் முதல் நிலையில் இருந்தது என்பது புலப்படும்.

உலகத் தமிழ் அறிஞர்களை இணைக்கவும், தமிழோடு தொடர்புடைய எல்லாத் துறைகளிலும் அறிவியல் முறையில் ஆய்வு நிகழவும் வழிகோலியது.

இதழில் வெளிவந்த உயர்தரமான ஆய்வுக்கட்டுரைகள், தமிழ் ஆய்வில் ஈடுபட்ட பல உலக அறிஞர்களின் ஆர்வத்தைத் தூண்டின. தமிழ் ஆய்வுக்குப் பல உலக அறிஞர்கள் Tamil Culture எனும் இவ்இதழின் வாயிலாக அறிமுகமானார்கள் - கிடைத்தார்கள்.

உலகளாவிய நிலையிலுள்ள தமிழுக்குத் தொடர்புடைய பல செய்திகள், தகவல்களாகவும் தரவுகளாகவும் Tamil Culture இதழ் மூலம் தரப்பட்டன. தமிழ் ஆய்வுத் தொடர்பான பல உண்மைகள் இவ்விதழ் மூலம் நிறுவப்பட்டன. மேலை நாட்டு ஆய்வு இதழ்களையும் அவற்றின் தரத்தையும் நேரடியாக அறிந்திருந்த தனிநாயகம் அடிகளார், அத்தகைய உயர்தரத்தை Tamil Culture இதழில் முழுமையாகப் பின்பற்றினார். எனவே, ஓர் ஆய்விதழ் என்பது எவ்வாறு தரத்தோடு அமையவேண்டும் என்பதற்கு Tamil Culture இதழ் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தது.

தமிழ் உயர் ஆய்விற்கு Tamil Culture இதழ் ஆற்றிய பணி தன்னிகரற்றது; கணிசமானது. Tamil Culture இதழுக்குப் பின்னர், உலகளாவிய தமிழ் அறிஞர்கள் பங்கு கொள்கின்ற இலக்கியத் தொடர்பான நவீன கோட்பாடுகளை அறிமுகப்படுத்துகின்ற, தரமான ஓர் ஆங்கில ஆய்வேடு இல்லை எனும் நிலையே உள்ளது.

# தமிழாய்வு / உயராய்வு

**1972** கு. பகவதி

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை வெளியிட்டு வரும் இரு இதழ்கள் தமிழாய்வு, உயராய்வு. இவை தமிழ்க் களஞ்சியங்களாகத் திகழ்கின்றன. ஆய்வாளனின் தேவைக்கேற்ப, வேண்டும் துறை, வேண்டும் பொருள் இங்கு வகைப்படுத்தப்பட்டு இவ்விதழ்களில் சுட்டப்படுகின்றன. இந்த இரண்டு இதழ்களிலும் ஆய்வு நோக்கிலும், தகவல் தரும் நோக்கிலும் கட்டுரைகள் உள்ளன. இந்நிலையில் சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள இந்த இரு இதழ்களும் ஆய்வாளர்களுக்கும், அறிந்து கொள்ள விரும்புபவர் களுக்கும் மிக்க பயன் தருவன.

## தமிழாய்வு

சொல்லைக் காட்டிலும் பதிவுகள் சிறந்தவை; உயர்ந்தவை; காலத்தால் நிலைபெற்றிருப்பவை. பதிவுகள் நிலை பெற்றிருக்கச் சிறந்த பணி ஆற்றுவன இதழ்கள். இவற்றுள் ஆராய்ச்சி இதழ்கள் ஆராய்ச்சி நோக்கையும் தகவல் நோக்கையும் அடிப்படையாகக் கொண்டு இலங்குவன. இந்த இலக்கில் பெரும் வெற்றி பெற்றிருக்கின்றன தமிழாய்வு இதழ்கள்.

| | | |
|---|---|---|
| இதழ் தொடங்கிய ஆண்டு | - | 1972 |
| ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்ற காலப்பகுதி | - | 1972 - 1990 |
| வெளிவந்துள்ள இதழ்கள் | - | 14 |

## பதிப்பாசிரியர்கள்

| | | |
|---|---|---|
| பொதுப் பதிப்பாசிரியர் | - | டாக்டர் ந. சஞ்சீவி (1,2,3,4) |
| பொதுப் பதிப்பாசிரியர் | - | டாக்டர் சி. பாலசுப்பிரமணியன் (6,7,8,9,10,11) |
| பதிப்பாசிரியர் | - | புலவர் மு. சண்முகம்பிள்ளை, இ. சுந்தரமூர்த்தி (10) |
| | - | இ. சுந்தரமூர்த்தி, |

- மா. செல்வராசன் (11)
- வ. ஜெயதேவன் (12)
- அ.அ. மணவாளன் (13)
- வ. ஜெயதேவன் (14)

அரையாண்டு இதழ் எனக் குறிப்பு இதில் இருப்பினும், கால அளவு முறையாகப் பின்பற்றப்படவில்லை. இப்பதினான்கு தமிழாய்வு இதழ்களில் சில சிறப்புநிலை வெளியீடுகளாக அமைகின்றன. அவை,

தாமரைத் திரு. நெ.து. சுந்தரவடிவேலு அவர்கள் பாராட்டு மலர் (4)

பேராசிரியர் மு. இராகவையங்கார் நூற்றாண்டு நினைவு மலர் (7)

பேராசிரியர் கே.என். சிவராஜ பிள்ளை நூற்றாண்டு நினைவு மலர் (9)

ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டுச் சிறப்பு மலர் (12)

திட்பமும் நுட்பமும் என்பது இவ்விதழின் குறிக்கோள். இவ்விதழ் தொடங்கப்பட்ட தன்மை குறித்து, தமிழாய்வு முதல் தொகுதியில் துணைவேந்தர் நெ.து. சுந்தரவடிவேலு அவர்களின் அணிந்துரை இங்கு குறிப்பிடத்தக்கது.

> சென்னைப் பல்கலைக்கழக வெளியீடுகள் கிழக்கியல் கலை ஆய்வு இதழ் (Annuals of Oriental Research) நம் நாட்டிலும் பிற நாடுகளிலும் உள்ள நல்லறிஞர் பலரால் பாராட்டப்படும் அளவுக்குச் சிறப்பைப் பெற்றிருப்பது அனைவரும் அறிந்த ஒன்று.
>
> கிழக்கியல் கலை ஆய்வு இதழ் (Annals of Oriental Research) பல மொழித்துறைகளையும் தன்னுள் கொண்டு ஆங்கிலத்திலும் வேறு மொழிகளிலும் வெளிவந்து கொண்டிருக்கிறது. தமிழ் நாட்டில் உள்ள இந்த மூத்தப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறைக் கென்று தனியே ஒரு வெளியீடு இருப்பது நல்லது. அத்தகைய வெளியீடு தமிழாய்விற்குத் துணை செய்யும். எனவே 'தமிழாய்வு' என்னும் ஆராய்ச்சி இதழ் ஒன்றினைத் தமிழில்-தமிழ்த் துறையின் சார்பில் வெளியிட வேண்டும் என்ற பரிந்துரை ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதன் விளைவுதான் உங்களிடையே தவழவிருக்கும் இத் தமிழாய்வு.

தம் பதிப்புரையில் டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள், சென்னைப் பல்கலைக்கழகம் தமிழ் வளர்ச்சி கருதிச் செய்து வரும் சிறப்புப் பணிகளுள் மிக அண்மையதாய் அமைந்துள்ளது, இந்திய விடுதலை வெள்ளி விழாவை ஒட்டி வெளிவரும் தமிழாய்வு என்னும் இவ்வாய்வு இதழாகும் என எழுதுகின்றார்.

ஆய்வுக் கட்டுரைகள்

அகராதி அடைவு/அறக்கட்டளைச் சொற்பொழிவு

அச்சில் வாரா அருந்தமிழ்

மதிப்புரை மாலை

தமிழ்த்துறை செய்திகள்

என்பன இவ்விதழ்களில் பொதுவாக இடம்பெற்றுள்ள பிரிவுகள் (12இல் ஆய்வுக் கட்டுரைகள் மட்டுமே உள்ளன) ஆகும்.

## ஆய்வுக் கட்டுரைகள்

வெளிவந்துள்ள மொத்தம் 90 ஆய்வுக் கட்டுரைகளை இலக்கணம், இலக்கியம், வாழ்க்கை வரலாறு, சமூகவியல், வரலாறு, பொது என வகைப்படுத்திக் காணலாம்.

## இலக்கணம்

'மொழியில் ஏற்படும் மாற்றத்தையும் வளர்ச்சியையும் குறிப்பதோடு மட்டுமல்லாமல் அம்மொழி பேசும் மக்களின் சமுதாயத்தின் முன்னேற்றத்தையும் ஓரளவு காட்டும்.

அகராதிகள் பற்றிப் பல கட்டுரைகளை வ. ஜெயதேவன் தருகின்றார். பாடபேத ஆராய்ச்சியின் மூலம் 'தொன்றுல தோன்றுவர்' என்பதை ஆராய்ச்சி செய்து, 'தொன்று மொழிப் புலவரே' சரியான பாடம் என நிறுவுகின்றார் மு. சண்முகம் பிள்ளை. திவாகரப் பதிப்பு, அணி, அணியிலக்கணத்தின் வளர்ச்சி சார்ந்த நூல்கள், மறைந்த நூல்கள், நட்பியல் பார்வை என அணி பற்றிய பல செய்திகளையும் அழகுபட இயம்புகின்றார் இ. சுந்தரமூர்த்தி. எளிமையையும் தெளிவையும் எப்போதும் கட்டுரைகளில் தேக்கித் தரும் பொற்கோ இரண்டு கட்டுரைகளை அளித்துள்ளார். பொதுவாக, இக்கட்டுரைகள் அகராதி, நிகண்டு, சொல் பாடபேதம், மொழி, மொழியும் பண்பாடும், வட்டார வழக்கு, தனி நூற்பா, பொது ஆய்வு, பதிப்புகள், வேற்றுமை, அணி, உவமை, தொடர், யாப்பு, மொழிபெயர்ப்பு, சொல்லாக்கம் என அமைந்து சிறப்பாகச் செய்திகளைச் சொல்லிச்செல்கின்றன.

## இலக்கியம்

இலக்கியக் கட்டுரைகள், இலக்கியப் பாகுபாடு, இலக்கிய ஆய்வு, இலக்கிய வகை ஆய்வு, இலக்கிய ஆசிரியர் ஒப்பீட்டு ஆய்வு எனப் பலவாறாக அமைந்துள்ளன.

டாக்டர் மு.வ. அவர்களின் 'தங்கைக்கு', பாரதிதாசனின், 'அழகின் சிரிப்பு' போன்ற இலக்கியங்கள் திறனாயப் பெறுகின்றன.

பாரதியையும் பாரதிதாசனையும், பாரதியையும் நாமக்கல் கவிஞரையும், கம்பரையும் தேம்பாவணியையும் ஒப்பீட்டுப் பார்வையுடன் எழுதப்பட்ட கட்டுரைகள், சங்க இலக்கிய உவமைகளில் காணும் கருத்துக் கற்பனை, புலன் கற்பனை, திருக்குறள் உவமைகள், கலித்தொகை முறைவைப்பு, குறிஞ்சிக் கலியில் ஓர் உரையாடல், தமிழ்ச் சமய இலக்கியங்கள்- அயல்நாட்டினர் தொடர்பு, இலக்கியத் திறனாய்வு, ஐவகைப் பார்வையில் அணுகுமுறைகள், திருமுறைகளில் இலக்கிய வளம், தமிழ்ச் சமய இலக்கியங்கள், சிறுகதை, நாவல் என இலக்கியம் சார்ந்த பல கட்டுரைகளும் ஆய்வாளர்க்கு நல்விருந்தாவன.

## வாழ்க்கை வரலாறு

தமிழாய்வு இதழில் குறிப்பிடத்தக்கதொரு பகுதியாக இதனைக் கொள்ளலாம். தமிழுக்காக, தமிழனுக்காக உழைத்த உழைப்பில் வென்ற அறிஞர்கள் சிலரை இனங்காட்டி, இவர்கள் போன்றோர் வரலாற்றில் பதியத்தக்கவர் என்பதைச் சுட்டும் நிலையில் சில அறிஞர்கள் பற்றிய ஆய்வுகள் இங்கு இடம் பெற்றுள்ளன. முன்னர்க் குறிப்பிட்ட, நினைவுமலராக வெளிவந்த இதழ்களில் கே.என். சிவராஜ பிள்ளை, புலவர் மு. இராகவையங்கார், திரு.வி.க போன்றவர்களும் மற்றும் அறிஞர் அண்ணா, பெரியார், பாரதிதாசன், பெரியசாமித் தூரன் போன்றோர் பணிகளும் பண்புகளும் இடம்பெற்றுள்ளன. இவர்களது சோதனைகளில் சாதனைகள் விளக்கம் பெறுகின்றன. இவர்களைப் பயிலும் ஆய்வாளர்கள் புத்துணர்வையும் புத்தெழுச்சியையும் பெறுதல் திண்ணம்.

## சமூகவியல்

மலருக்கும் மக்கள் வாழ்விற்கும் உள்ள தொடர்பு, தொல்காப்பியமும் சமுதாய இயலும், ஜெயகாந்தன் கதை ஒன்றில் மனிதர் சித்திரிப்பு, சங்கக் காலச் சமுதாயக் கோட்பாடு, பாரதிதாசனின் தாயார் பற்றிய உணர்வு என்பன சமூகவியல் சார்ந்த சில கட்டுரைகள்.

'இந்த நாட்டில் நிரந்தரக் குடியாக இருக்கும் குடியைப் பின்னணியாக வைத்துக் கதை மாந்தர் படைப்பாலும், கதைப் பின்னலாலும் அழகு பெறுவது' என ஜெயகாந்தனின் 'அட சும்மா கிட புள்ளே' நாவலைக் கூறும் ஆய்வாளர், இந்தக் கதையைக் கதையாசிரியர் எவ்வளவு சிறப்பாகப் படைத்துள்ளார்; மனிதனைப் படைப்பதில் எந்த அளவிற்குக் கதை ஆசிரியர் வெற்றி பெற்றுள்ளார் என்பதையெல்லாம் தெளிவுபடுத்துகிறார்.

## வரலாறு

முற்சங்கங்களும் பிற்சங்கங்களும், Historical Studies in Tamil, Is Hantiraiyan a Pallava Prince, திராவிட இனத்தின் தோற்றம் என்ற நான்கு கட்டுரைகள் வரலாற்றுத் தொடர்புடையன.

திராவிட இனத்தின் தோற்றம் - ஒரு மறுஆய்வு கட்டுரையில் தலைப்பிற்கு ஏற்பவே, பல கருத்துகளை மறுக்கிறார்; பல கருத்துகளை விளக்குகிறார்; தன் கருத்தை நிறுவுகிறார் ஆசிரியர். பிற கட்டுரைகளும் வரலாற்றாய்வாளரின் சிந்தனையைத் தூண்டுவனவாய் அமைகின்றன.

## பொது

நான்கு கட்டுரைகள் பொது நிலையின; ஆய்வுக்கு அடிப்படை அமைத்து வழிகாட்டுவன.

## அச்சில் வாரா அருந்தமிழ்

தமிழாய்வுத் தொகுதிகள் 5, 10, 12, 14 ஆகிய நான்கு தொகுதிகள் தவிர பிற 10 தொகுதிகளிலும் 'அச்சில் வாரா அருந்தமிழ்' பகுதி இடம்பெற்றுள்ளது.

அச்சில் வாரா அருந்தமிழை, அச்சில் வெளிப்படுத்தி எளிய தமிழாக்கிய பெருமை, நூல் பதிப்பாசிரியர், இதழ் பதிப்பாசிரியர் இருவரையும் சாரும்.

திரு. மு. சண்முகம் பிள்ளை அவர்கள், 'தமிழாய்வு மாலை', சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் தனி முயற்சி - புது முயற்சி எனத் தம்முடைய பதிப்புரையில் (தமிழாய்வு முதல் தொகுதி - V) எழுதியுள்ளார். வெளிவந்துள்ள 10 பதிப்புகளைத் திரு. மு. சண்முகம் பிள்ளையும் திரு. இ. சுந்தரமூர்த்தியும் பதிப்பித்துள்ளனர். இவற்றுள் 4 நூல்கள் சமணம் சார்ந்தன. சைவம் 1, வைணவம் 1, பிற பொது நிலையின.

அப்பாண்டைநாதர் உலா, நாககுமார காவியம், அடிமதிக்குடி பிள்ளைத்தமிழ், மேருமந்தரமாலை என்ற நான்கும் சமணம் சார்ந்தன.

இப்பதிப்புகள் அனைத்திற்கும் பதிப்பாசிரியர்களின் பதிப்புரைகள் மிகச் சிறந்தன. அவை நூல்களைத் தெளிவாகப் புரிந்துகொள்வதற்குரிய கருவியாகக அமைவன. நூல் கிடைத்த தன்மை, ஆசிரியர், நூலின் போக்கு போன்ற அனைத்துச் செய்திகளையும் தந்த அவர்களுக்குத் தமிழுலகம் கடன்பட்டுள்ளது.

17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தத்துவராயரின் கவனத்தை மிகவும் கவர்ந்த சைவ சாத்திர நூல், மெய் மொழி சரிதை. சீடன் வினாவ, குரு பதில் இறுப்பது போன்று அமைந்த இப்பாடல் அமைப்பு போன்றன ஆசிரியரால் விளக்கப்படுகின்றன. மூல ஏடு கிட்டப் பெறாமையாலும், வேறு பிரதிகள் கிட்டாமையாலும் இந்நூலின் உரையையும் உடன்சேர்த்து அச்சிடத் தயங்கி மூலம் மட்டுமே பதிப்பிக்கலாயிற்று எனப் பதிப்பாசிரியர் சுட்டுகிறார்.

கே.என். சிவராஜ பிள்ளையின் கம்பராமாயணக் கௌஸ்துபம், கம்பராமாயணத்தின் அருமை பெருமைகளை எடுத்துரைத்து அதன் ஒப்பற்ற பெரும் புகழை உலகிற்கு எடுத்துக்காட்டுவதற்காக இயற்றப்பட்டது என்கின்றார் பதிப்பாசிரியர். தமிழ்க் கவிதை பற்றிய விமரிசனமாகவும் கம்பன் காவியப் பாங்கினை எடுத்து விளக்குவதாகவும் இந்நூலினை ஆக்கிய கே.என். சிவராஜ பிள்ளையின் 'தமிழ்க் கவிவாணருக்கு ஒரு விண்ணப்பம்' என்ற ஆய்வுரையினை அதன் பொருத்தம் கருதி இப்பதிப்பின் முன்னுரையாக அமைத்து நூலினைப் பதிப்பித்துள்ள பாங்கு சிறப்பாக அமைகிறது.

இ. சுந்தரமூர்த்தி தான் பதிப்பித்துள்ள அல்லிகதையில், பொதுவாக இத்தகைய நூல்பதிப்புகளில் - சுவடி நூல் பதிப்புகளில் உள்ள சிக்கல்களையும் சிரமத்தையும் விளக்குகிறார். நெடிய கால இடைவெளிக்குப் பின்னர் ஒரு நூலினைப் பதிப்பிக்கும்போது ஆசிரியரின் உண்மைப் பாடத்தைத் தெரிந்து பதிப்பிப்பது என்பது மிகவும் சிக்கலான செயலாகும். கிடைக்கின்ற பல்வேறு சுவடிகளையும் திரட்டி, அவற்றில் காணும் பல்வேறு பாடல்களையும் நுணுகி ஆராய்ந்து உண்மைப் பாடம் கண்டு பதிப்பித்தல் வேண்டும். 'மூலபாட ஆய்வியல்' (Texual criticism) என்னும் துறை இன்று

விரிவாக ஆராயத்தக்க துறையாக வளர்ந்துள்ளது. இச்சூழலில் பண்டையோர் பதிப்பித்த நூலின் பதிப்பு நெறிமுறைகளைக் காணும்போதுதான் அவர்களுடைய அரிய முயற்சி நன்கு புலனாகும். இக்கருத்து இந்த 10 நூல் பதிப்புகளுக்கும் பொருந்தும். பல்வேறு துறை சார்ந்த சுவடிகளைத் தேடிப் பதிப்பித்த திரு. மு. சண்முகம் பிள்ளை அவர்களின் பெருமுயற்சியும் இங்கு விளங்கும்.

## அறக்கட்டளைச் சொற்பொழிவுகள்

'தமிழ்த்துறைச் செய்திகள்' பகுதியில் அந்தந்த ஆண்டுகளில் நடந்த அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. இதன் மூலம் இத்துறையில் நிகழ்ந்த அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் தொடர்பான செய்திகள் விளக்கமாகின்றன.

சொர்ணம்மாள் அறக்கட்டளை, ரா.பி. சேதுப்பிள்ளை அறக்கட்டளை இவற்றுள் சில சொற்பொழிவுகள் நூலாக்கம் பெற்றதாகத் தெரிகிறது. ஐந்து சொற்பொழிவுகள் தமிழாய்வில் வெளியிடப்பட்டுள்ளன.

இச்சொற்பொழிவுகளின் முன்னுரையில் சொற் பொழிவாளர் இந்த அறக்கட்டளையைப் பற்றிக் கூறும் பல செய்திகள் பயன்படுகின்றன. ஒன்று, இச்சொற் பொழிவாளர்க்கும் குறிப்பிட்ட சொற்பொழிவு பொருண்மைக்கும் உள்ள தொடர்பு. அறக்கட்டளை அமைப்பு, தலைப்புக் கிணங்க அறிஞர்களைத் தேர்ந்தெடுத்து அந்தந்தப் பொருளில் பேசச் செய்துள்ளது சிறந்த செயலாக அமைகிறது.

திருவானைக்காக் கோயில் அறக்கட்டளைச் சொற் பொழிவைத் தந்தவர் திரு. தி.மு. நாராயணசாமி பிள்ளை. வளர்ச்சி வரலாறு கல்வெட்டுகள், திருவானைக்கா இலக்கியம், சமயமும் தத்துவமும் என மூன்றாகப் பகுத்து செய்திகளைச் சொற்பொழிவாளர் செறிவாக, தெளிவாகத் தருகின்றார்.

ஞானியார் அடிகளைப் பற்றி, பேராசிரியர் நடேச முதலியார் ஆற்றிய சொற்பொழிவு அடிகளின் தமிழ்த் தொண்டு, சமயத் தொண்டு, சமுதாயத் தொண்டு என அமைந்துள்ளது.

கீ. இராமலிங்க முதலியார், ஆட்சித் தமிழ் என்ற பொருள் பற்றிய சொற்பொழிவை முப்பகுதிகளாகத் தந்துள்ளார்.

பெரியோர் பெயரில் அமையும் இவ்வறக்கட்டளைகள் தமிழில் ஆய்வுகள் வருவதற்கும் ஆய்வுச் சிந்தனையைத் தூண்டுவதற்கும் வழிவகுக்கும். இச்சொற்பொழிவுகளின் சிறப்பை நோக்க, இவற்றின் ஆய்வு ஆழத்தையும் பரப்பையும் நோக்க, வெளிவராதிருக்கும் பிற அனைத்து அறக்கட்டளைச் சொற்பொழிவுகளையும் வெளியிடும் பணியையும் விரைவு படுத்தினால் தமிழாய்வுக்கு அவை பெருத்த பயனாக அமையும்.

## நூல் அடைவு –அகரவரிசை

இப்பகுதியில் தொல்காப்பிய நூலடைவு, நிகண்டடைவு, திருக்குறள் நூலடைவு, கலைக் களஞ்சியத்தில் தமிழியல் கட்டுரைகள் ஒரு வகைதொகை-சங்ககாலம், கலைக் களஞ்சியத்தில் இடப்பெயர்கள், தமிழில் நாட்டுப்புறவியல்- நூல் கட்டுரை அடைவு, தமிழிலக்கண அகர வரிசை, அகராதி அடைவு, தமிழ்ப்புனைகதை ஆய்வு அடைவு, கல்கத்தா தேசிய நூலகத் தமிழ்ச் சுவடிகள், பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்களின் நூல்-கட்டுரை-பதிப்பு அடைவு, பாரதி நூற்றாண்டில் பாரதி இலக்கியங்கள் அடைவுகளாக இடம் பெற்றுள்ளன. ஆய்வுப் பணிக்கு இவை அடிப்படை அமைத்துக் கொடுத்தன.

## மதிப்புரை மாலை

12ஆம் தொகுதி தவிர, பிற அனைத்துத் தொகுதிகளிலும் இடம் பெற்றிருப்பது மதிப்புரை மாலை என்ற பகுதி.

ஒரு சில நூல்கள் என அமையாது பல நூல்களை மதிப்புரை பகுதியில் இடம்பெறச்செய்த நிலையில். இப்பகுதிக்கு மதிப்புரை மாலை எனப் பெயர் வைத்தனர். மேலும் இக்கருத்து உண்மையானால் பல நூல்களை, பல சிறந்த நூல்களைத் தமிழுலகம் அறியச் செய்ய, அறிமுகம் செய்ய வேண்டும் என்ற சிந்தனையின் ஊற்றாக இத்தலைப்பைக் கொள்ளலாம்.

முதல் தொகுதியில் 29 நூல்கள், இரண்டாம் தொகுதியில் 8 நூல்கள், மூன்றாம் தொகுதியில் 9, 4 இல் 8, 5 இல் 12, 6 இல் 7, 7-இல் 21, 8 இல் 8, 9 இல் 4, 10 இல் 7, 11 இல் 8, 13 இல் 11, 14 இல் 14 என 129 நூல்கள் இங்கு மதிப்புரை செய்யப்பட்டுள்ளன. பல அறிஞர்கள் இந்நூல்களை மதிப்புரை செய்துள்ளனர். மதிப்புரை செய்துள்ள முறைமையினைக் காண, அனைத்து நூல்களின் போக்கை உணருதல் இயலுகிறது. இவை பெரும்பாலும் சிறந்த நூல்களுக்கான தன்மையைப் பெற்ற நூலின் பெயர், வெளியிட்ட

ஆண்டு, பக்கம், அதன் ஆசிரியர், வெளியீடு கிடைக்குமிடம் போன்ற செய்திகளை வெளியிட்டு, விலை பெற விரும்புவோர்க்குத் துணையாக அமையும் இப்பகுதியில் நூல் பற்றிய அறிமுகமும் உண்டு. நூல் எதைப் பற்றிப் பேசுகிறது; எவ்வாறு பேசுகிறது; நூலாசிரியர் பேச எடுத்துக்கொண்ட பொருளை எவ்வாறு தருகின்றார் என்ற மதிப்புரையாளர் கருத்துடன், நூலின் தேவை, அத்துறையில் இந்த நூலின் தேவை போன்ற செய்திகளும் வெளிப்படுகின்றன.

இம்மதிப்புரைகள் பெரும்பான்மையும் பாராட்டுமுறை மதிப்புரைகளாக அமைகின்றதைக் காண்கிறோம். குறைகள் ஒரு சில இருப்பினும், நிறைகளே மிஞ்சி நிற்கின்றன என்ற நிலையில் இம்மதிப்பீட்டாளர்கள் நிறையை எண்ணி இவ்வாறு மதிப்புரை எழுதியிருக்கலாம். எனினும் சில சிந்தனைகளைச் சுட்டும் போது அடுத்த பதிப்புகளில், அடுத்த எழுத்துகளில் நேர் செய்து கொள்வர் என்ற எண்ணத்தில் தம் கருத்துகளைச் சொல்லிச் செல்லவும் சில மதிப்பீட்டாளர்கள் தயங்கவில்லை.

திரு. சோமலெ 'தமிழாய்வு முதல் தொகுதி'க்கு எழுதிய மதிப்புரையும் இவற்றுள் ஒன்று. 'We would suggest to the editor to include reviews of books of interest published outside Tamil Nadu and also compilations like the Cambridge Tamil prose reader and Mimeo-graphed bulleions relating to Tamil published by the Chicago University' என்ற கருத்து மீண்டும் வலியுறுத்தத்தக்கது.

### தமிழ்த்துறைச் செய்திகள்

ஆய்வுக்கட்டுரைகள், அறக்கட்டளைச் சொற்பொழிவுகள், அச்சில் வாரா அருந்தமிழ் நூல்கள், அடைவுகள், அகர வரிசைகள், மதிப்புரை மாலை என்ற ஆய்வுப் பகுதிகளை அமைத்துக் கொண்ட இவ்விதழ்களில் 'தமிழ்த்துறைச் செய்திகள்' என்ற பகுதியும் அமைந்திருக்கிறது.

தமிழ்த்துறையில் நடந்த நிகழ்வுகள் இதில் அந்தந்த ஆண்டுகளில் சுட்டப்பட்டுள்ளன. கருத்தரங்குக்கான கட்டுரைகள், செய்திகளுடன், தமிழ்த்துறை சார்பாகப் பிற நிகழ்வுகளும் இங்கு பதிவு செய்யப்பட்டுள்ளன. தமிழ்த்துறை வரலாற்றுப் பதிவுகளாகத் திகழும் இவையும் தேவைமிக்கப் பயன்மிக்க பதிவுகளே.

### உயராய்வு

'உள்ளத் தனையது உயர்வு' என்ற குறிக்கோள் துலங்க வெளிவந்து கொண்டிருக்கிறது உயராய்வு இதழ். 'தமிழாய்வின்

சாயலை அப்படியே பெற்று இருக்கிறதே இந்த இதழ்' என்று எழும் உணர்வுக்கு விடையினைத் தமது 'தாலாட்டுத் தொட்டில் உரை' பகுதியில் தந்து விடுகின்றார் டாக்டர் ந. சஞ்சீவி. 'தமிழாய்வு பெற்ற கலைக் குழந்தை' உராய்வு.

> சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை ஒன்றாக என் தலைமையில் இருந்தபோது பெற்ற பிள்ளை தமிழாய்வு. இப்பொழுது தமிழ் இலக்கியத் துறையின் தலைவனாக நான் இருக்கும் பொழுது இந்த உயராய்வு எனும் பேரப்பிள்ளை பிறந்திருக்கிறது. இப்படிச் சொல்லுவதற்கு இன்னும் ஒரு சிறந்த காரணம், இக்குழந்தையைச் சுமந்து பெற்ற பெருமை பெரிதும் இளநிலைப் பேராசிரியர் டாக்டர் பொன். கோதண்டராமன் (டாக்டர் பொற்கோ) அவர்களுக்குரியது. இவ்வேட்டின் அமைப்பில் அவரும் நானும் தாயும் மகளும் போல் கலந்துள்ளோம். என் கருத்துகளும் அவர் கருத்துகளும் இணைந்துள்ளன, உள்ளீட்டிலும் உருவத்திலும்.

எனவே இவ்விதழும் ஆய்வுக் கட்டுரைகள், அகரவரிசை, அடைவு, மதிப்புரைகள், அச்சில் வாரா கருத்தாய்வு, தமிழ்த்துறைச் செய்திகள் என்ற பகுதிகளைக் கொண்டே அமைந்துள்ளன என்பது சொல்லாமலே விளங்கவல்லது.

| | | |
|---|---|---|
| வெளிவந்த ஆண்டு | - | 1983 |
| வெளிவந்த இதழ்கள் | - | 4 |
| வெளிவந்த ஆண்டுகள் | - | 1983-1985 |

**தொகுதி 1**

| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர் | - | டாக்டர் ந. சஞ்சீவி |
| இணைப் பதிப்பாசிரியர் | - | டாக்டர் பொன். கோதண்டராமன் |
| துணைப் பதிப்பாசிரியர் | - | டாக்டர் கு. மோகன்ராசு |

**தொகுதி 2 & 3, 4**

| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர் | - | டாக்டர் பொன். கோதண்டராமன் |
| இணைப் பதிப்பாசிரியர்கள் | - | டாக்டர் வீ. அரசு, |
| | - | டாக்டர் கு. மோகனராசு |

## ஆய்வுக் கட்டுரைகள் - இலக்கணம்

இலக்கணம் சார்ந்த கட்டுரைகள் 11 வெளிவந்துள்ளன. புதிய சிந்தனைகளையும் புதிய தெளிவுகளையும் தரவல்ல இக் கட்டுரைகளுள் 3 கட்டுரைகள் டாக்டர் பொன்மாலாவாலும், இருகட்டுரைகள் பேராசிரியர் சுசுமு ஓனோ அவர்களாலும் எழுதப்பட்டுள்ளன.

கால ஓட்டத்தில் சமுதாயச் சூழல் மாறுவது போன்று மொழியும் மாறி வருகிறது, தேவைக்கேற்ப புதிய சொற்கள் தோன்றுவது போலவே மொழி அமைப்பிலும் புதிய கூறுகள் தோன்றுகின்றன. தொடரியல் ஆய்வில் பல சிந்தனைகளைத் தெளிவுபடக் கூறுகிறார் பொற்கோ. அளபெடை பொருளுக்கு வளம் தரும் தன்மையைக் குறள் வழி இயம்புகிறார் அ.வெ. சுப்பிரமணியன்.

## இலக்கியம்

நான்கு இலக்கியக் கட்டுரைகள் அமைகின்றன. தேம்பாவணிக் கீர்த்தனை ஓர் அறிமுகம் கட்டுரையில் கு. இன்னாசி, கீர்த்தனை பற்றிய சிறந்த ஓர் அறிமுகம் தந்து, பின் தேம்பாவணி கீர்த்தனை பற்றிய ஆய்வினை அமைக்கின்றார். நட்பியல் நிலையில் பிற கீர்த்தனைகளையும் பிற இலக்கியங்களையும் இணைத்து ஆராயும் பாங்கு சிறப்புடையதாக அமைகிறது. Western Influence on Tamil fiction கட்டுரையில், திருமதி V. பத்மா முடிவில் படிப்படியாகத் தமிழ்ப் புதினம் பற்றிய ஓர் அறிமுகத்தைத் தருகிறார். இதன் நிலைபற்றித் தொடரும் ஆய்வு, நாவல் ஆய்வாளர்க்குப் பல சிந்தனைகளைத் தரவல்லன.

படைக்கப்பெற்றதோர் இலக்கிய வகையில் அல்லது கலையில் புத்தம்புதியதாகக் காணப்படும் ஓர் அரிய புதுமையை, நாம் வியக்கும்படி படைத்து வழங்கும் இலக்கிய ஆற்றலுக்கு அல்லது கலையாற்றலுக்கு மூல ஊற்றாய் அமைந்தது எதுவோ, கருத்தால் அல்லது வடிவத்தால் இது வரைக்கும் எவரும் காணாப் புதுநோக்கில் ஒன்றைக் கண்டு காட்டும் இலக்கியக் கலைத்திறன் எதுவோ அதுவே மேன்மைத் திறம் என உரைத்து, திருவள்ளுவரின் மேன்மைத் திறம் பற்றிய எண்ணங்களை எடுத்துரைக்கிறார் சு. பாலசந்திரன்.

## வாழ்க்கை வரலாறு

இப்பகுதியில் பாரதி, திரு.வி.க. தோழர் சிங்காரவேலர், டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை, டாக்டர் மு. வரதராசன் போன்றோர்

விளக்கம் பெறுகின்றனர். இவர்கள் பற்றிய இக்கட்டுரைகளை எழுதியுள்ள கட்டுரையாசிரியர்கள், தாம் கண்டதை, கேட்டதை மட்டுமின்றிச் சில நிலையில் உடனிருந்து, உணர்ந்து எழுதியுள்ள திறத்தால் தனிமெருகுடன் கட்டுரைகள் திகழ்கின்றன.

## சிறுகதைப் பட்டறை

19-3-88இல் நிகழ்ந்த சிறுகதைப் பட்டறையின் தொகுப்பு வீ. அரசால் இங்கு தொகுத்துத் தரப்பட்டுள்ளது. சிறுகதைப் பட்டறை நிகழ்வுமுறை, கற்கை நெறியாகப் படைப்பிலக்கியப் பயிற்சி, சிறுகதைப் படைப்பு ஆய்வுரை, படைப்பாளி கண்ணோட்டம், சிறுகதை ஆக்கம் பற்றிய படைப்பிலக்கிய வாதிகளின் கருத்துரைகள், சிறுகதை ஆக்கம், விமரிசகர்க் கண்ணோட்டம், சிறுகதை ஆக்கம் பற்றிய கலந்துரையாடலின் தொகுப்பு என இத்தொகுப்பு அமைகிறது. பயிற்சி மூலம் படைப்பாளி ஆகலாம் என்ற புதிய அணுகுமுறையை இப்பட்டறை கற்றுத் தந்துள்ளது என்பது தொகுப்பாளர் எண்ணம்.

கலைக்களஞ்சியத்தில் தமிழியல் கட்டுரைகள் ஒருவகை தொகை (பகுதி-3), கலைக்கதிரில் தமிழியல் கட்டுரைகள் ஒருவகை தொகை அடைவு இரண்டும் டாக்டர் கு. மோகனராசுவால் உருவாக்கப்பட்ட அடைவுகள். இலக்கியம், இலக்கிய வகை, இலக்கிய வடிவம், இலக்கியமாந்தர், இலக்கியம் நுவல் பொருள், தமிழ் எழுத்துகள், இலக்கணம் மொழியியல் முதலியன முதல் அடைவில் இங்கு இடம் பெற்றுள்ளன.

கலைக்கதிர் பற்றிய சிறந்த அறிமுகம், ஆசிரியர் தூரன், நோக்கம், ஆய்வின் எல்லை, தமிழ் உணர்வு, தமிழியல் கட்டுரைகள், கூடுதலும் குறைவும் போன்ற பல செய்திகளைக் கொண்டு, முன்னுரை ஆய்வுகளுடன் இந்த அடைவினைத் தந்துள்ளமை மிகச்சிறந்த முயற்சி.

சோகம் நிறைந்த, தியாகமும் வீரமும் கலந்த மூன்றாம் உலக நாடுகளின் போராட்டம் உள்ளடங்கிய கவிதைகளும் இலக்கியங்களும் அலசப்படுகின்றன.

## அச்சில் வாரா அருந்தமிழ்

இப் பகுதியில் இரு நூல்கள் அச்சிடப்பட்டுள்ளன. ஆத்தி சூடி-பரிமேலழகர் உரையைப் பதிப்பித்துள்ளார் டாக்டர் ம. இராசேந்திரன். நீதி நூல்கள், நீதி, ஔவையார், ஔவையார்

வரலாறு, ஆத்திசூடி வரலாறு, பரிமேலழகர் வரலாறு, அவரது உரைகள், ஆத்திசூடிக்குப் பரிமேலழகர் உரை என மிகச் சிறந்ததொரு முன்னுரையுடன் இந்நூலைப் பதிப்பித்துள்ளார் இவர்.

இருபுராண விருத்தம் டாக்டர் இ. சுந்தரமூர்த்தியால் பதிப்பிக்கப்பட்டுள்ளது. ஆய்வுரையில் பதிப்பாசிரியர் இந்நூலின் அமைப்பு குறித்தும் பொருள் குறித்தும் அழகுடன் எடுத்தியம்பு கின்றார். திருத்தொண்டர் புராணமும் திருவிளையாடற் புராணமும் இணைந்து அமைந்த நூல் இது.

## புத்தக மதிப்புரை

பாட்டியல் இலக்கண வரலாறு, வாணிதாசன் கவிதைகள் தொகுதி 3 என்ற நூல்கள் மதிப்புரை பகுதியில் மதிப்புரை செய்யப்பட்ட நூல்கள். முதல் நூல் டாக்டர் அரங்க நலங்கிள்ளி அவர்களாலும் இரண்டாம் நூல் டாக்டர் பொற்கோ அவர்களாலும் மதிப்புரை செய்யப்பட்டுள்ளன.

## தமிழ்த்துறைச் செய்திகள்

துறையில் நடந்த தமிழுயர்வு தொடர்பான நிகழ்வுகள், கருத்தரங்குகள், அறக்கட்டளைச் சொற்பொழிவுகள், சிறப்புச் சொற்பொழிவுகள், துறை வெளியீடுகள், முனைவர் பட்ட ஆய்வேடுகள், சிறப்புப் பயிற்சிகள் போன்றவற்றுடன் முதல் இதழில் இடம் பெற்றுள்ள 1946 முதல் 1982 வரை தமிழ்த்துறைத் தலைமை பற்றிய செய்திகளும் பயன்மிக்க செய்திகள்; வரலாற்றுப் பதிவுகள்.

# புலமை

**1975** **பெ. அர்த்தநாரீசுவரன்**

மனிதன் தோன்றியபொழுது இதழியலும் தோன்றிவிட்டது. 'என்ன நடந்தது? எங்கே நடந்தது? எப்பொழுது நடந்தது?' என்பதைத் தெரிந்து கொள்வதில் அன்றும் இன்றும் மனிதனிடம் இற்கையாகவே ஓர் ஆர்வம் இருக்கின்றது. இந்த ஆர்வம்தான் இதழியலின் அடிப்படை. இன்றைய இதழ்களில் பெரும்பான்மையானவை பொழுதுபோக்குச் செய்திகளுக்குச் சிறப்பிடம் அளிக்கின்றன. சில இதழ்கள் உயர்ந்த நோக்கங் களுடன், மொழி, இலக்கிய வளர்ச்சிக்காகவும் அறிவியல் வளர்ச்சிக்காகவும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அந்த வகையில் புலமை சிறந்து விளங்குகின்றது.

## தொடக்கம் – வெளியீடு

பேராசிரியர் பொற்கோ, பொறியாளர் திரு. மெய்யப்பன் ஆகியோரின் கூட்டு முயற்சியில் பல்கலைக் காலாண்டு இதழாகத் தொடங்கப்பெற்றது புலமை. முனைவர் பொற்கோ அவர்களைச் சிறப்பாசிரியராகவும், திரு. மு. கந்தசாமி அவர்களை ஆசிரியராகவும், திருமதி தெய்வானை மெய்யப்பன் அவர்களை வெளியீட்டாள ராகவும் கொண்டு புலமை இதழ் தொடங்கப்பெற்றது. 1975ஆம் ஆண்டு ஜனவரியில் புலமையின் முதல் இதழ் வெளிவந்தது. 1979ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் இதழ் முதல் திருமதி தெய்வானை மெய்யப்பன் அவர்களுடன் திருமதி பூங்கோதை பொற்கோ அவர்களும் புலமை வெளியீட்டாளராக இருந்துவருகின்றார்.

## புரவலர் குழு

முனைவர் கி. அரங்கன் - தஞ்சை, முனைவர் கே.எஸ். கமலேசுவரன் - கோவை, முனைவர் சாமி. அறவாணன் - அரியலூர், திரு. சி. மெய்கண்டான் - திருச்சி, முனைவர் இராம. சுந்தரம் - தஞ்சை, முனைவர் ஆர். பெரியாழ்வார் - உதகை, முனைவர் சு.க. சுப்பிரமணியன் - கோவை, திரு. அ. மெய்யப்பன் - சென்னை, முனைவர் பொற்கோ ஆகியோர் கொண்ட புரவலர் குழு புலமை இதழ் வெளிவரப் பொருளுதவி செய்து வருகின்றது.

## இதழும் அச்சகமும்

புலமை ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர் ஆகிய திங்கள்களில் பல்கலைக் காலாண்டு இதழாக வெளிவந்து கொண்டிருந்தது. நண்பர்கள் அச்சகம் திரு. எம்.எஸ். மணி அவர்கள் நல்ல முறையிலும் குறித்த காலத்திலும் அச்சிட்டுக் கொடுத்து வந்தார். அன்னாரது மறைவுக்குப் பின் டிசம்பர் 1981, தொகுதி 7, பகுதி 2 இதழ் தொடங்கித் தற்பொழுது வரை நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ் திரு நாச்சியப்பன் அவர்கள் அச்சிட்டுக் கொடுத்துவருகின்றார்.

## நூல் அமைப்பும் இதழும்

22 செ.மீ. நீளம், 14 செ.மீ. அகலம் கொண்ட டெமி அளவில் 100 முதல் 150 பக்கங்கள் வரை ஒவ்வொரு இதழும் வெளியிடப்படுகின்றது. நான்கு ஆண்டுகள் காலாண்டு இதழாக வெளிவந்த புலமை 1979 முதல் அரையாண்டு இதழாகப் புலமை வரத்தொடங்கி இருபது ஆண்டுகளாக ஆண்டிற்கு இரண்டு இதழ்களாக வந்து கொண்டிருக்கின்றது.

## மாற்றம் அறிவிப்பு

'ஒரு மாற்றம் - உங்கள் கவனத்துக்கு' என்ற தலைப்பில்

இதுவரை காலாண்டு இதழாக வெளிவந்த புலமை இனி அரையாண்டு இதழாக வெளிவரும். இந்த மாற்றம் தவிர்க்க இயலாததாகிவிட்டது. உங்கள் ஆதரவு பெருகிப் புலமையின் கை வளமாகும்போது மீண்டும் காலாண்டு இதழாக மாறும். புலமையைப் போன்ற காலாண்டு இதழ்கள் இப்போது இந்தக் காலகட்டத்தில் தமிழ்மொழிக்கு மிகவும் தேவையான ஒன்று என்பது நம் எல்லோருக்கும் தெளிவாகத் தெரிந்த செய்தி. புலமையின் பணி தொடர வேண்டும் - உறுதியாகத் தொடரும். விரைவில் காலாண்டு இதழாகவே மீண்டும் மாறவேண்டும் என்பது நம் விருப்பம். தமிழ் வரலாற்றில் இடம் பெறத்தக்க இந்தப் புலமையை வலிவூட்டி வனப்போடும் பொலிவோடும் வளமாக வாழ வைப்பது நமக்கு ஒரு பொறுப்பு. அது தமிழுக்கு நாம் செய்யும் ஒரு சிறப்பு. நமது புலமையை நாம் தன்மானப் புலமையாக வளர்த்து உலக அரங்கில் தலைநிமிர்ந்து நிற்கச் செய்யவேண்டும். வாழ்நாள் உறுப்பினராகச் சேர்ந்தும் ஏனைய உறுப்பினர் தொகையைப்

பெருக்கியும் இன்னும் இயன்ற வகையிலெல்லாம் முயன்று புலமைக்கு ஆக்கம் சேர்க்க நீங்களே முன்வாருங்கள்

என்று வெளிவந்துள்ள அறிவிப்பு புலமையின் நோக்கம், நமது பணி ஆகியவற்றைத் தெளிவாக்குகின்றது.

## நோக்கம்

புலமை இலக்கியம், இலக்கணம், மொழியியல், வரலாறு, தத்துவம், உளவியல் முதலாய கலைத்துறைகளில் தமிழோடும் தமிழகத்தோடும் தொடர்புடைய ஆய்வுக் கட்டுரைகளை வெளியிடும் நோக்கத்தோடு தொடங்கப் பெற்றது. தொடக்கத்தில் புலமை ஒரு மொழி இதழாகத் தமிழ்மொழிக் கட்டுரைகளை மட்டும் கொண்டு வெளிவந்தது. 1977 ஆம் ஆண்டு ஏப்ரல் இதழ் முதல் இரு மொழிகள் கொண்ட இதழாகத் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளிலும் கட்டுரைகள் கொண்டு வெளிவருகின்றது.

## புலமை நடை

புலமைக்குக் கட்டுரை எழுதும் எழுத்தாளர்கள் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் குறித்துப் 'புலமை நடை' என்னும் நூலினை முனைவர் பொற்கோ அவர்களும் பொறியாளர் திரு மெய்யப்பன் அவர்களும் சேர்ந்து வெளியிட்டுள்ளனர்.

## வழிமுறைகளில் குறிப்பிடத்தக்கவை

1. தமிழிலேயே கட்டுரை, குறிப்புரை அமையட்டும். இன்றியமையாத நிலையில் எடுத்தாளுகின்ற மற்ற மொழிச் சொற்களை அந்த மொழியில் அப்படியே எழுதாமல் அவற்றுக்கு நிகரான தமிழ்ச் சொற்களையே பயன்படுத்தவும். முதன்முதலில் எடுத்தாளும்போது மட்டும் மற்ற மொழிச் சொற்களை அவற்றுக்கு நிகராக எடுத்தாளப்பட்ட தமிழ்ச் சொற்களின் பக்கத்தில் அடைப்பிற்குள் எழுதவும்.

2. கட்டுரை, மேடைப் பேச்சுப்போல் இல்லாமலும் வெற்றுச் சொல் அலங்காரங்களுக்கு இடந்தராமலும் குன்றக்கூறல், கூறியது கூறல் ஆகிய குற்றங்களுக்கு இலக்காகாமலும் அமைவதோடு இரு பொருள் பயக்கும் தொடர்கள் இல்லாததாய், தெளிவைத் தருவதாய், திட்ப நுட்பமுடையதாய், எடுத்த கொள்கையை நிலைநாட்டுவதாய் அமைய வேண்டும்.

3. கட்டுரையில் வாழ்க, ஒழிக என்பன போன்ற முழக்கங்களைக் கண்டிப்பாக விலக்க வேண்டும்.

4. கூடிய விரைவில் கட்டுரையில் சொற்றொடர்கள் அமைகின்ற முறை வெறிக்கும் வெறுப்புக்கும் அப்பாற்பட்டதாகவும் ஒரு சார்புத் தன்மையில்லாததாகவும் உணர்ச்சிக்கு முதன்மை தராமல் அறிவுக்கே முதன்மை தருவதாகவும் இருக்கவேண்டும்.

## இதழின் சிறப்பு

ஆராய்ச்சியாளர்களுக்கு ஊக்கமும் நம்பிக்கையும் ஊட்டி, அவர்கள் பாடுபட்டுக் கண்டறிந்த உண்மைகளை அறிஞர் உலகத்துக்கு எட்டத்தக்க வகையில் வெளியிட்டு, வெளியான ஆய்வுக் கட்டுரைகளுக்கு அன்பளிப்புத் தொகை வழங்குவதோடு ஆய்வாளரின் ஆய்வுக் கருத்துகள் உரிய அறிஞர்களுக்குக் கிடைக்க உதவும் வகையில் ஆய்வுக் கட்டுரைகளுக்கு உரிய மிகைப்படிகளையும் ஆசிரியர்களுக்கு வழங்கி, ஆராய்ச்சி உலகுக்கு வலிவும் பொலிவும் ஊட்ட அயராமல் பாடுபட்டு வரும் ஆய்வு இதழ் புலமை ஆகும்.

தமிழ் மொழிக்கும் தமிழருக்கும் தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்க்கும் வகையில் பல கட்டுரைகள் புலமை இதழில் வெளிவந்துள்ளன. தமிழரின் பழம் பண்பாட்டை, சிறப்பியல்புகளை விளக்கும் கட்டுரைகள் பல இவ்விதழில் வெளிவந்துள்ளன. கருத்துரை, நூல்கள் அறிமுகம், செய்திகள் போன்றனவும் புலமை இதழில் வெளியிடப்பெறுகின்றன.

## தமிழ் மொழி, இலக்கணம் பற்றிய ஆய்வுகள்

'மொழி உணர்வு' என்னும் கட்டுரையில் டாக்டர் செ.வை. சண்முகம் தமிழ்மொழியின் தனிச் சிறப்பு, மொழிக்கும் சமூகத்துக்கும் உள்ள உறவு ஆகியவற்றைச் சிறப்பாக ஆய்வு செய்து வெளிப்படுத்தியுள்ளார். மொழி உணர்வு காரணமாக மொழியின் வளர்ச்சியைத் தடுப்பது நம் மொழிக்குத் தீங்கும் விளைவிப்பதாக ஆகிவிடும் என்ற கருத்தை இதில் வலியுறுத்தியுள்ளார் (புலமை, தொகுதி 3, பகுதி 2).

டாக்டர் கோ. சீனுவாசவர்மா எழுதியுள்ள 'தமிழின் கிளை மொழிகள்' (புலமை, தொகுதி 2, பகுதி 4) என்னும் கட்டுரை கிளைமொழிகள் வேறுபடும் முறைகள் குறித்து விரிவாக ஆய்ந்துள்ளது. கிளைமொழி எந்தக் குழுவினரால், எந்த இனத்தைச் சேர்ந்த மக்களால், எந்தச் சமூக நிலையில் உள்ள மக்களால்

பேசப்படுகின்றதோ அதற்கேற்பக் கொங்குநாட்டுத் தமிழ், பாண்டிநாட்டுத் தமிழ், நாஞ்சில் நாட்டுத் தமிழ், தொண்டை மண்டலத் தமிழ் எனப் பெயர் பெறும்.

'பேச்சுத் தமிழ் - இலங்கையிலும் தமிழகத்திலும்' (புலமை, தொகுதி 5, பகுதி 1) என்னும் கட்டுரை இலங்கைக் கிளைமொழிகளில் காணப்படும் பழந்தமிழ் இலக்கணக் கூறுகளையும், அது தமிழகத்தின் தென்கிளை மொழிகளிடத்து, குறிப்பாகக் கன்னியாகுமரிக் கிளைமொழியிடத்தும், விளவங்கோடு கிளைமொழியிடத்தும் கொண்டுள்ள தொடர்புகளையும், அத் தொடர்புகளுக்கான காரணங்களையும் ஆய்ந்து கூறியுள்ளது.

திரு. ந. தெய்வசுந்தரம் 'மொழியும் வளர்ச்சியும்' என்னும் கட்டுரையில் (புலமை, தொகுதி 6, பகுதி 1) மொழியின் பண்பும் பயனும், மொழி அமைப்பு, மொழி வளர்ச்சி ஆகியன குறித்து விரிவாக ஆய்ந்துள்ளார்.

'சிங்கப்பூர்த் தமிழ் - சில கூறுகள்' (புலமை, தொகுதி 16, பகுதி 2) என்னும் கட்டுரையில் டாக்டர் சுப. திண்ணப்பன், சிங்கப்பூர் எழுத்துத் தமிழில் பிறமொழிச் செல்வாக்குக் குறைவு என்றும் ஏராளமான சொல் உருவாக்கங்கள் ஏற்பட்டுள்ளன என்றும் ஆய்ந்து கூறியுள்ளார்.

டாக்டர் பொற்கோ 'மொழி வளர்ச்சியும் இலக்கண உருவாக்கமும்' (புலமை, தொகுதி 17, பகுதி 1) என்னும் கட்டுரையில் இலக்கணம் என்பது யாது? மொழியும் இலக்கணமும், மொழி வளர்ச்சியும் புதிய இலக்கணத்தின் தேவையும், தமிழ் மொழியும் தமிழ் இலக்கணங்களும் - தொல்காப்பியம், நன்னூல், சமுதாயமும் மொழியும், இன்றைய தமிழ், எழுத்து நிலையில் நாம் காணும் மாற்றம், சொல்லமைப்பு நிலையில் மாற்றங்கள், சொல் தொகுதியில் மாற்றம், தொடர் நிலையில் ஏற்படும் மாற்றம், புதிய இலக்கணங்கள் வளர்ந்தால் தான் தவறில்லாமல் எழுத வேண்டும் என்ற விருப்பம் நிறைவேற முடியும் என்பனவற்றை எடுத்துரைத்துள்ளார். "விரிவான இலக்கண நூல்களும் வரவேண்டும்; சுருக்கமான இலக்கண நூல்களும் வரவேண்டும். ஆழமான ஆய்வு நூல்களும் வரவேண்டும். எளிய முறையில் எழுதப்பெற்ற அறிமுக நூல்களும் வரவேண்டும் அப்படிப்பட்ட சூழலில்தான் மொழியாராய்ச்சி மேம்படும்" என்று பேராசிரியர் முனைவர் பொற்கோ கூறியிருப்பது மொழி வளர்ச்சிக்கு இலக்கண நூல்களின் தேவையை நன்கு புலப்படுத்துகின்றது.

மொழி வளர்ச்சியில், மொழியியல் பெரும்பங்கு வகிக்கும் இந்நாளில், மொழியியலறிவும், மாற்றிலக்கண அறிவும் மொழியாசிரியர்களுக்கு இன்றியமையாதவையாக இருக்கின்றன என்று திரு. ந. நடராஜ பிள்ளை 'மாற்றிலக்கணமும் தமிழாசிரியரும்' எனும் கட்டுரையில் (புலமை, தொகுதி 2, பகுதி 1) விளக்குகின்றார்.

'பால் வேற்றுமையில் மொழி மாறுபடும் தன்மை'யை திரு. ஏசுதாசன் (புலமை, தொகுதி 2, பகுதி 3) விளவங்கோடு மீனவர் சமூகக் கிளைமொழி வழக்கிலிருந்து எடுத்துக்காட்டி ஆய்வு செய்துள்ளார்.

பழந்தமிழ் இலக்கியத்தில் தான், தாம் என்னும் பெயர்கள் எவ்வாறெல்லாம் பயின்று வந்துள்ளன என்பதை டாக்டர் தி. நடராசன், 'பழந்தமிழில் மூவிடப் பெயர்கள்' (புலமை, தொகுதி 3, பகுதி 1) என்னும் கட்டுரையில் ஆய்ந்து கூறியுள்ளார்.

'தொல்காப்பியரின் மொழிப்பொருட் சிந்தனைகள்' (புலமை, தொகுதி 4, பகுதி 1) என்னும் கட்டுரையில் திரு. சு. இராமசாமி, ஒலி காரணமான பொருள் மயக்கம் (எ.டு. பால்மணி - பால்காரர் அடிக்கும் மணி; மணி (பையனின் பெயர்) பால்காரர் வந்து விட்டார்), தொடரமைப்புக் காரணமான பொருள் மயக்கம் (எ.டு. புலிகொல் யானை - புலியைக் கொன்ற யானை; புலியால் கொல்லப்பட்ட யானை), சொல் காரணமான பொருள் மயக்கம் (எ.டு. மா - மா பூத்தது; மாவும் புள்ளும் - விலங்கும் பறவையும்; மா வாங்கி வந்தான் - குதிரை வாங்கி வந்தான்) ஆகிய மூவகையான பொருள் மயக்கங்களை ஆய்ந்துள்ளார்.

'கருமொழியும் கருவிமொழியும்' (புலமை, தொகுதி 6, பகுதி 2) என்னும் கட்டுரையில் டாக்டர் மா.சு. திருமலை கருமொழிக்கும் கருவிமொழிக்கும் மேலோட்டமாகத் தெரியும் வேறுபாடுகள் குறித்து ஆய்ந்து அவை மறைந்து போதலை விளக்கியுள்ளார்.

டாக்டர் ச. அகத்தியலிங்கம் எழுதியுள்ள 'தமிழில் புது வினையாக்கம்' (புலமை, தொகுதி 7, பகுதி 2) என்னும் கட்டுரை இக்காலத்தில் தோன்றியுள்ள புதிய வினைகள் பற்றிக் கூறியுள்ளது. டாக்டர் ந. சஞ்சீவி எழுதியுள்ள 'செந்தமிழ் வளர்க்கும் சிந்தனைகள்' (புலமை, தொகுதி 7, பகுதி 2) என்னும் கட்டுரை தமிழ்மொழி வளர்ச்சிக்கு இன்றியமையாத அடிப்படையான கருத்துகளைக் கூறுகின்றது.

'தமிழ் யாப்பில் பிணை' (புலமை, தொகுதி 18, பகுதி 1) என்னும் டாக்டர் பொன். கோதண்டராமன் (பொற்கோ) கட்டுரை,

ஒரு பாடலில் பிணை என்ற ஒரு அலகு உண்டு என்பதை நிறுவி, அந்தப் பாடலின் அடி எவ்வளவு நீளமானதாக இருந்தாலும் ஓசை கெடாமல் அந்தப் பாடலை நம்மால் ஓத முடியும் என்று கூறுகின்றார். தலைமைப் பிணைகள், உட்பிணைகள் பாடல் அடியில் அமைந்திருப்பதை எடுத்துக்காட்டுகளுடன் விளக்கியுள்ளார். இவருடைய 'புதிய நோக்கில் தமிழ் யாப்பு', 'பா அமைப்பு' ஆகிய கட்டுரைகளும் (புலமை, தொகுதி 21, பகுதி 1) புதிய சிந்தனைகளைத் தூண்டுகின்றன. இவருடைய 'வண்ணனை நோக்கில் அமைந்த அகராதியில் இலக்கணச் செய்திகள்' (புலமை, தொகுதி 19, பகுதி 1) கட்டுரை, அகராதிகள் வழங்கவேண்டும் இலக்கணச் செய்திகள் பற்றிக் கூறுகின்றது.

## இலக்கிய ஆய்வுகள்

புலமையில் பல இலக்கிய ஆய்வுக் கட்டுரைகள் வெளி வந்துள்ளன. சங்க இலக்கியங்கள் தொடங்கி, இக்கால இலக்கியங்கள் வரையிலான இலக்கிய ஆய்வுக் கட்டுரைகள் காணப்படுகின்றன.

'சங்க அகப்பாடல்களும் இந்தி நீதிப் பாடல்களும்: சில துறை விளக்க மரபுகள்' (புலமை, தொகுதி 7, பகுதி 1) என்னும் டாக்டர் த.சு. குப்புசாமி கட்டுரை, சங்க அகப்பாடல்களுக்கும் இந்தி நீதிப் பாடல்களுக்கும் இடையே காணப்படும் ஒற்றுமை, வேற்றுமைகளை விரிவாக ஆய்கின்றது. 'குறளறம் (புலமை, தொகுதி 14, பகுதி 1) என்னும் கட்டுரையில் திரு. கு.ச. ஆனந்தன் குறள் காட்டும் அறத்தை ஆய்வு செய்துள்ளார். அறத்திற்குத் தரப்படும் மூவகை இலக்கணங்களான அறத்தின் நேர் இலக்கணம், அறத்தின் எதிர்மறை இலக்கணம், அறத்தின் எடுத்துக்காட்டு இலக்கணம் ஆகியவற்றை விளக்கியுள்ளார். டாக்டர் இரா. தண்டாயுதம், 'திருக்குறளில் இலக்கியப் பண்புகள்' (புலமை, தொகுதி 2, பகுதி 2) குறித்து ஆய்ந்துள்ளார்.

வழக்குரைக்கும் காவியம் (புலமை, தொகுதி 2, பகுதி 1) என்று சிலப்பதிகாரத்தைப் போற்றியுள்ளார் திரு. இராம. சுப்பிரமணியன். 'சிலம்பும் மணிமேகலையும்' (புலமை, தொகுதி 2, பகுதி 2) என்னும் கட்டுரையில் டாக்டர் ஏ.என். பெருமாள் இரண்டு காப்பியங்களின் சிறப்புகளையும் எடுத்துரைக்கின்றார். 'சிலம்பு இயற்கைத் தன்மை உடையது; மணிமேகலை செயற்கைப் புனைவுமிக்கது. உலகியலுக்கு ஒத்து வையத்து வாழ்வாங்கு வாழும் நெறிகூறி வீட்டுக்கு வழிவகுக்கும் இன்ப ஊற்றாய், உணர்ச்சிப் பிழம்பாய், கவிதைக் கனிவாய், இலக்கியப் பேழையாய் உருவாகியது சிலப்பதிகாரம்; வாழ்வைக் கட்டுப்படுத்தித் தவநெறி உரைக்கும் பௌத்த நூலாய் முயன்று

சமைக்கப்பட்டது மணிமேகலை' என்று கட்டுரை ஆசிரியர் தன் கருத்தை நிறுவியுள்ளார். 'சிலம்பில் உருவிலாளன்' (புலமை, தொகுதி 2, பகுதி 3) என்னும் கட்டுரையில் டாக்டர் ச.வே. சுப்பிரமணியன், காமன் பற்றிய செய்திகள் சிலம்பில் பரந்து கிடப்பதை விளக்கியுள்ளார். திரு. அ. பாண்டுரங்கன் 'சிலப்பதிகாரம் - காப்பியக் கட்டமைப்பு' என்னும் கட்டுரையில் (புலமை, தொகுதி 2, பகுதி 4) சிலப்பதிகாரத்தின் கதையமைப்பு, காப்பிய வளர்ச்சி, காட்சியமைப்பு, ஒப்புநிலை வடிவங்கள், உள்ளுறைப் பொருள்கள் ஆகியன குறித்து விளக்கிக்கூறியுள்ளார்.

திரு. சி. மெய்கண்டான் 'இளங்கோவடிகள் இதயம்' என்னும் கட்டுரையில் (புலமை, தொகுதி 4, பகுதி 1), 'இளங்கோவடிகள் தாம் இயற்றிய நூலின் மூலம் உலகத்தார்க்கு அறிவிக்க எண்ணிய தலைமைக் கருத்துகள் பதிகத்தில் ஆசிரியர் குறிக்கும் மூன்றுமே என்பதில் எவ்வித ஐயமும் இல்லை' என நிறுவியுள்ளார். 'காப்பியத்துள் காப்பியம் - குறுங்காப்பியம்' (புலமை, தொகுதி 6, பகுதி 2) என்னும் கட்டுரையில் டாக்டர் முத்துச் சண்முகன், இரா. பிரேமா ஆகியோர் மணிமேகலையில் 'ஆபுத்திரன் கதை'யும், கம்பராமாயணத்தில் 'இரணியன் கதை'யும் காப்பியத்தில் ஒருமை பெற்றுத் திகழும் கதையாகத் திகழ்வதை எடுத்துக்காட்டியுள்ளனர். 'தமிழ்க் காப்பியங்களில் கதைவழிக் கல்வி' (புலமை, தொகுதி 7, பகுதி 2) என்னும் மேற்கூறிய ஆசிரியர்களின் கட்டுரை, சாத்தனாரும் கம்பரும் தம் நூல்களில் பல கதைகளைக் கூறி, அவற்றின் மூலம் உணர்த்தும் செய்திகள் கதைவழிக் கல்வி முறையாகும் என்று கூறுகின்றது. 'சிலப்பதிகாரத்தில் சில கிளைக்கதைகளின் உட்கோள்கள்' (புலமை, தொகுதி 2, பகுதி 1,2) என்னும் திரு. கி. நாகராசன் கட்டுரை, காப்பியத்தின் குறிக்கோளுக்கு, காப்பிய நிகழ்ச்சிக்கு, பாத்திரப் பண்புக்கு எங்ஙனம் உறுதுணையாய் அமைகின்றன என்பதை விளக்குகின்றது.

கண்ணகி மாரியம்மனாக மாற்றம் பெற்று வழிபடுவதைக் 'கண்ணகி வழிபாடும் மாரியம்மன் வழிபாடும்' என்னும் தலைப்பில் டாக்டர் சரளா இராசகோபாலன் எழுதியுள்ள கட்டுரை நிறுவுகின்றது. கண்ணகிக்கு ஆடி மாதத்தில் விழா எடுக்கப்பட்டது போன்றே இன்றும் மாரியம்மன் வழிபாடு ஆடி மாதத்தில் நடைபெறுகின்றது.

'திருவாசகத்தின் பதிகப் பெயர்கள்' (புலமை, தொகுதி 13, பகுதி 1) என்னும் டாக்டர் சிவப்ரியா கட்டுரை, திருவாசகத்தின் பதிகப்

பெயர்கள் தொல்காப்பியம், ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, திருக்குறள் ஆகியவற்றின் பாடல் பெயர்களை ஒத்து அமைந்துள்ளதை விளக்குகின்றது.

'கம்பர் காட்டும் போர் முறை' (புலமை, தொகுதி 4, பகுதி 3,4) என்னும் கட்டுரையில் திருமதி சுசீலா மாரியப்பன் கம்பராமாயணத்தில் கம்பர் கூறியுள்ள போர்களைப் பற்றி விரித்துரைக்கின்றார்.

'இலக்கிய மதிப்பீடு' (புலமை, தொகுதி 2, பகுதி 2) என்னும் கட்டுரையில் புலவர் அ.அ. மணவாளன் மானிடப் பொதுமைக்குரிய இலக்கியங்கள் எக்காலத்தும் வாழும் என்பதை நிறுவுகிறார். திரு நா. வரதராஜுலு நாயுடு தன் 'ஆழ்வார் - பொருள்வாத நோக்கில்' (புலமை, தொகுதி 2, பகுதி 4) என்னும் கட்டுரையில் பன்னிரு ஆழ்வார்களின் பொருள்வாதம் குறித்து விளக்குகின்றார்.

'இந்திய விடுதலை இயக்கத்தில் பாரதிதாசன்' (புலமை, தொகுதி 2, பகுதி 2) என்னும் கட்டுரையில் டாக்டர் இரா. இளவரசு, சுயமரியாதை இயக்கத்தின் தாக்கத்தால் அடிமை நிலையை அகற்றுவதே முதற்பணி என்ற நிலை மாறி மடமையை ஒழித்தலே அடிமை நிலையை அகற்றும் அடிப்படை என்னும் நிலைக்கு மாற்றம் பெற்றார் என்று கூறியுள்ளார். 'வள்ளலாரும் பாவேந்தரும்' (புலமை, தொகுதி 17, பகுதி 2) என்னும் முனைவர் சு. அமிர்தலிங்கம் கட்டுரை வள்ளலாரும் பாவேந்தரும் காலத்தால் வேறுபட்டு இருந்தாலும் கருத்தாலும் நோக்காலும் ஒன்றுபட்டிருந்ததைக் கூறுகின்றது. சாதி சமய பேதங்களற்ற மனித சமுதாயம் அமையவும், பெண் கல்வி வளரவும், மூடநம்பிக்கையற்ற சமுதாயம் தழைக்கவும், சமத்துவ சமுதாயம் மலரவும் தத்தம் காலங்களில் அவர்கள் பெரிதும் முயன்று, தலைசிறந்த சமுதாய விஞ்ஞானி களாகத் திகழ்ந்ததை இக்கட்டுரை தெளிவுபடுத்துகின்றது.

'குயில்பாட்டு - சமுதாய வாழ்வியல் வரலாற்றுப் பார்வை' (புலமை, தொகுதி 23, பகுதி 1) என்னும் டாக்டர் பொற்கோ கட்டுரை பாரதியின் குயில்பாட்டை ஒரு புதிய நோக்குடன் ஆய்கின்றது.

'சுவடி பதிப்பித்தல் - ஓர் ஆய்வு' (புலமை, தொகுதி 7, பகுதி 2) என்னும் கட்டுரையில் புலவர் மு.கோ. ராமன் பொருள் உணர்ந்து நூல்கள் பதிப்பிக்க வேண்டியதை வலியுறுத்தியுள்ளார்.

'நாட்டுப்புறப் பாடல் வகைகள்' (புலமை, தொகுதி 8, பகுதி 1) என்னும் டாக்டர் ஆறு. இராமநாதன் கட்டுரை, சூழலை

அடிப்படையாகக் கொண்டு தமிழக நாட்டுப்புறப் பாடல்களைத் தாலாட்டு, குழந்தை வளர்ச்சி நிலைப் பாடல்கள், விளையாட்டுப் பாடல்கள், தொழிற் பாடல்கள், வழிபாட்டுப் பாடல்கள், கொண்டாட்டப் பாடல்கள், இரத்தல் பாடல்கள், இழப்புப் பாடல்கள் என்று வகைப்படுத்திக் கொள்ளலாம் என்று கூறுகின்றது. 'நாட்டுப்புற இயலில் அறவியல் - குற்றமும் தண்டனையும்' (புலமை, தொகுதி 16, பகுதி 2) என்னும் கட்டுரையில் டாக்டர் ஜே. நிர்மலாபாய் அறச்செயல் வளர்ச்சி முறை, அறவியல் கூறும் தண்டனைக் கொள்கைகள் ஆகியன பற்றி ஆய்ந்துள்ளார்.

## உளவியல் ஆய்வு

'குலசேகர ஆழ்வார் பாடல் - ஓர் உளவியல் விளக்கம்' (புலமை, தொகுதி 16, பகுதி 1) என்னும் கட்டுரையில் டாக்டர் அரங்க. நலங்கிள்ளி, வேங்கடவன்மீது குலசேகர ஆழ்வார் பாடிய பாடல்களில் இருப்பது பக்திச் சுவை அன்று, காமச் சுவைதான் என்று கூறியிருப்பது சிந்திக்கத்தக்கது.

## வரலாற்று ஆய்வுகள்

'வரலாற்று நோக்கில் சங்க இலக்கியம்' (புலமை, தொகுதி 3, பகுதி 2) என்னும் கட்டுரையில் டாக்டர் ர. விஜயலட்சுமி, சங்கப் பாடல்களில் ஆங்காங்கு சிதறிக் காணப்படும் வரலாற்றுக் குறிப்புகளை இணைத்துப் பார்க்கும் முயற்சி போற்றற்குரியது. 'சங்க காலம்' (புலமை, தொகுதி 5, சிறப்பிதழ்) என்னும் டாக்டர் இராம. சுந்தரம் கட்டுரை, சங்க காலத்தின் மேலெல்லை கி.மு. 100 என்று கொள்வதே பொருந்தும் என்பதை நிறுவுகிறது. டாக்டர் வசந்தா அமர்நாத், தலைவியை அடைய முடியாத தலைவன் அவளைப் பெறுவதற்கு ஓர் உபாயமாக - துணையாக மடலேற்றத்தைப் பயன்படுத்தியுள்ளதை, தொல்காப்பியம் தொடங்கி இக்காலம் வரை இம்மரபு ஆழப் பதிந்துவிட்டதை 'மடல் - ஒரு வரலாற்றுப் பார்வை' (புலமை, தொகுதி 15, பகுதி 1) என்னும் கட்டுரையில் விளக்குகின்றார். 'Buddhism in Kalabhra Period' (புலமை, தொகுதி 19, பகுதி1) என்னும் கட்டுரையில் டாக்டர் வி. பாலாம்பாள் களப்பிரர் காலத்தில், தமிழகத்தில் பௌத்த மதம் உயர்நிலையில் இருந்ததை விவரிக்கின்றார். சோழரின்கீழ் சிற்றரசர்களாக இருந்த சம்புவராயர்களும், பின் தனியரசாட்சி செய்த சம்புவராயர்களும் சைவ சமயத்தைச் சார்ந்தவர்களாக இருந்தபோதிலும் சமண சமயத்தை ஆதரித்துப் போற்றினர் என்பதைச் 'சம்புவராயரின் சமணப் பணிகள்' (புலமை, தொகுதி 20, பகுதி 2) என்னும் கட்டுரையில் திரு. ப. வெங்கடேசன் ஆய்ந்துரைக்கின்றார்.

## செப்பேடு, கல்வெட்டு ஆய்வுகள்

பல்லவ அபராசிதபோதவர்மனின், 'வேளஞ்சி செப்பேடுகள் (கி.பி. 879) - ஓர் ஆய்வு' (புலமை, தொகுதி 5, பகுதி 2) என்னும் கட்டுரையில் டாக்டர் அ. சுப்பிரமணியன், ஒரு செப்பேட்டுத் தொகுதியின் கண்டுபிடிப்பால் தமிழக வரலாற்றில் ஒரு சகாப்தமே மாறிவிட்டதை ஆய்ந்துள்ளார். 'செங்கம் நடுகற்களில் வெட்சிப் போர்' (புலமை, தொகுதி 12, பகுதி 2) என்னும் கட்டுரையில் திரு இரா. ப. கருணானந்தம் சங்க காலத் தமிழரின் போர்முறையான வெட்சிப்போர் நடுகற்களில் நிலைநாட்டப்பட்டுள்ளதை விளக்குகின்றார். 'கல்வெட்டில் சமுதாயப் பணி' (புலமை, தொகுதி 16, பகுதி 1) என்னும் வில்லியனூர் திரு. ந. வேங்கடேசன் கட்டுரை, தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் அரசியல், பொருளாதார, சமுதாய வரலாற்றை அறியத் துணை புரிவதையும், சமுதாயப் பணியாற்றுவார் பற்றிக் கூறியுள்ளதையும் ஆய்ந்துரைக்கின்றார்.

## பத்திரிகையியல் ஆய்வுகள்

'தமிழ்ப் பத்திரிகைகளில் தலையங்கம்' (புலமை, தொகுதி 3, பகுதி 4) என்னும் திரு. தங்க மணியன் கட்டுரை தலையங்கத்தில் இருக்கவேண்டிய முக்கிய கூறுகளை ஆய்ந்துள்ளது. தலையங்கப் பண்புகளான சுருங்கச் சொல்லல், தெளிவு, எழுத்து நாகரிகம், மொழிநடை ஆகியன விளக்கப்பட்டுள்ளன. இவருடைய 'எளிமையாக்கமும் தினத்தந்தியும்' (புலமை, தொகுதி 11, பகுதி 2) என்னும் கட்டுரை, தினத்தந்தி ஆசிரியர் ஆதித்தனார் சாதாரண கூலியாள், ரிக்ஷா இழுப்பவன் ஆகியோரும் படிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இதழ் வெளியிட்டதை விளக்குகின்றது.

மொழி வரலாறு, இலக்கணம், இலக்கியம், சுவடியியல், உளவியல், வரலாற்றியல், கல்வெட்டியல், பத்திரிகையியல் போன்ற பல்வேறு தலைப்புகளில் ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டு வரும் புலமை, கருத்துரை, செய்திகள், நூலறிமுகம் ஆகிய பகுதிகளையும் தன்னுள் கொண்டுள்ளது.

## மறுவெளியீடுகள்

கிடைத்தற்கரிய சில நூல்களும் மறுபதிப்பாகப் புலமையில் அவ்வப்பொழுது வெளியிடப்பட்டுள்ளன. 1930இல் வெளிவந்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் 'கதர் இராட்டினப் பாட்டு' 1977இல் (புலமை, தொகுதி 3, பகுதி 3) முனைவர் ந. சஞ்சீவி, திருமதி கிருஷ்ணா சஞ்சீவி ஆகியோரின் ஆய்வுக் குறிப்புகளுடன் மறுபதிப்பாக வெளியிடப்பட்டுள்ளது.

தாய்மொழிக் கல்வியின் சிறப்புப் பற்றி ஸ்ரீமந் நாராயண் அகர்வால் எழுதிய நூல் திரு கா. திரவியம் அவர்களால் 1945இல் 'போதனைக் கருவி மொழி' என்னும் பெயரில் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பெற்றது. அந்நூல் எவ்வித மாற்றமும் செய்யாமல் (புலமை, தொகுதி 8, பகுதி 1) புலமையில் மறுபதிப்பாக வெளியிடப்பெற்றுள்ளது. 'ஆரம்பக் கல்வியிலிருந்து சர்வகலாசாலைப் படிப்பு வரை எல்லாம் தாய்மொழி மூலமே கற்பிக்கப்பெறவேண்டும். அந்நிய மொழி மூலம் கல்வி கற்கவேண்டியிருப்பது இந்திய மாணாக்கருக்கு வேண்டாத ஒரு தொல்லை' போன்ற வரிகள் கருத்தில் கொள்ள வேண்டியவை ஆகும்.

'தமிழ் மொழி வளர்த்தல் அல்லது தமிழ் பாஷையை அபிவிர்த்தி செய்யும் மார்க்கங்கள்' என்னும், ஏறக்குறைய ஒரு நூற்றாண்டுக்கு முன்பு வெளிவந்த இந்தக் கட்டுரையை 1983இல் புலமை (தொகுதி 9, பகுதி 1) மறுபதிப்பாக வெளியிட்டுள்ளது. இன்றைய சூழலிலும் இந்தக் கட்டுரை பயன்படத்தக்கதாக இருப்பதால் புலமை இதனை மறுவெளியீடு செய்தது.

1931இல் கா. நமச்சிவாய முதலியார் எழுதிய ஈரோடு, குடி அரசு பதிப்பகத்தார் வெளியிட்ட, 'அகத்தியர் ஆராய்ச்சி' என்னும் அரிய நூல் புலமையில் 1997இல் (தொகுதி 23, பகுதி 1) மறுவெளியீடாக வெளியிடப்பட்டுள்ளது. மயிலை சீனி. வேங்கடசாமியின் 'சைவ சமய வரலாறு' (புலமை, தொகுதி 13, பகுதி 2), 'இலக்கண தீபம் - தொகுப்பும் ஆய்வும்', டாக்டர் இ. சுந்தரமூர்த்தி (புலமை, தொகுதி 7, பகுதி 2), தவத்திரு தண்டபாணி சுவாமிகள் இயற்றிய 'வண்ணத்தியல்பு' - பதிப்பும் உரையும், டாக்டர் இ. சுந்தரமூர்த்தி (புலமை, தொகுதி 12, பகுதி 2) போன்ற அரிய நூல்கள் புலமையில் மறுவெளியீடுகளாக வந்துள்ளன.

புலமையில் சிறிய கட்டுரைகள் பல கருத்துரைப் பகுதியில் வெளியிடப்பெற்றுள்ளன. நா. காமராசனின் 'கறுப்பு மலர்கள்' திறனாய்வு செய்யப்பட்டுள்ளது. பாரதியும் பாரதி தாசனும் பற்றி ஆராயப்பட்டுள்ளது. திரு. மு. அருணாசலம் எழுதிய 'சங்க இலக்கியத்தில் சாதிகள் குற்றமே', 'இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பல்' ஆகிய கட்டுரைகள், முனைவர் பொற்கோ எழுதிய 'பெரியாரின் மொழிக்கொள்கை', 'தனிநாயக அடிகளாரும் தமிழாய்வும்' ஆகிய கட்டுரைகள் கருத்துரைப் பகுதியில் வெளிவந்துள்ளன. தமிழாக்கம் செய்யப் பெற்ற கட்டுரைகளும் கருத்துரைப் பகுதியில் வெளிவந்துள்ளன.

திரு. அகிலனுக்கு ஞானபீடம் இலக்கிய விருது வழங்கியதைப் புலமை செய்தியாக வெளியிட்டுப் பாராட்டியுள்ளது. மொழி மேம்பாட்டுப் பேரவை நடத்திய தமிழ்வழிக் கல்விக் கருத்தரங்க மாநாடு பற்றிய செய்தி, அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை நடத்திய திருக்குறள் தேசிய நூற்கருத்தரங்கம் பற்றிய செய்தி, தமிழோடு தொடர்புடைய செய்திகள் போன்றன புலமையில் வெளியிடப் பெற்றுள்ளன.

பேராசிரியர் முனைவர் மா. இராசமாணிக்கனார் அவர்களின் மகனார் திரு. மா.ரா. இளங்கோவன் அவர்கள் 23-06-1981 செவ்வாயன்று இரவு இயற்கை எய்திய செய்தியைப் புலமை செய்திப் பகுதியில் வருத்தத்தோடு வெளியிட்டுள்ளது. அவர் விட்டுச்சென்ற நூல்கள் பற்றியும் வெளியிடப்பட்டுள்ளது. தமிழ்ப் பேரவைச் செம்மல் மயிலை சீனி. வேங்கடசாமி 8-5-1980 அன்று இயற்கை எய்திய செய்தியைப் புலமை வெளியிட்டு அன்னாரின் பணியை நினைவு கூர்ந்துள்ளது. போலிஷ் மொழியில் 1977இல் திருக்குறளின் மொழிபெயர்ப்பு வந்துள்ளதைப் புலமை செய்தியாக வெளியிட்டுள்ளது. மதுரைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை நடத்திய ‘ஒருநாள் கருத்தரங்கு’ புலமையில் செய்தியாக வெளிவந்துள்ளது.

பயணவியல் அறிஞர் சோமலெ அவர்களின் பழமொழிகளில் பரிசமும் சீதனமும், தாய்மொழிக் கல்வியின் அவசியம், தஞ்சாவூர்ப் பாணித் தெருக்கூத்து முதலிய கட்டுரைகள், ‘தமிழ் மக்களின் எழுத்தறிவு’ பற்றிய திரு நடன. காசிநாதன் கட்டுரை ஆகியன புலமையில் வெளியிடப்பட்டுள்ளன.

புலமைக்கு வரும் நூல்களை ஆய்வாளர்களைக் கொண்டு நூலறிமுகம் செய்து வெளியிட்டு வருகிறார்கள். எழுத்துச் சீர்திருத்தம், தமிழ் இலக்கியக் கொள்கை, இலக்கியமும் உளப்பகுப்பாய்வும், தனித்தமிழியக்கம், திருக்குறள் ஆய்வு போன்ற பல நூல்கள் புலமையில் அறிமுகம் செய்து வைக்கப் பட்டுள்ளன.

மொத்தத்தில், தமிழ் மொழிக்கும் தமிழ் இனத்திற்கும் தமிழ் நாட்டிற்கும் பெருமை சேர்த்துவரும் இதழாகப் புலமை திகழ்கின்றது என்று கூறினால் அது மிகையாகாது.

# மொழியியல்

**1977** செ. ஜீன் லாறன்ஸ்

ஒரு சமுதாயம் வளர வேண்டுமானால் அவர்களது மொழி வாழ்வாங்கு வாழ வேண்டும்; வளர வேண்டும். மொழிகளுக்கு உயர்வுகாணும் உறைவிடமாகப் பற்பல இயக்கங்கள், அமைப்புகள், அறிவிதழ்கள், ஆய்விதழ்கள் போன்றன காணப்படுகின்றன. பேராசிரியர் ச. அகத்தியலிங்கம் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் உயராய்வு மையத்தின் இயக்குநராக இருந்தபோது தமிழ் மொழி, மொழியியல், இலக்கணம் பற்றிய விழிப்புணர்வு, ஆய்வுப் பரிமாற்றம் போன்றவற்றை ஏற்படுத்த ஓர் அமைப்பு தேவை என்ற எண்ணத்தைத் தம் துறை சார்ந்த பேராசிரியர்களுடன் பகிர்ந்து கொண்டதன் விளைவாக, அத்துறை கல்விசார் அலுவலர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் ஆதரவுடன் 'அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம்' என்ற அமைப்பு 1977ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் இரண்டாம் நாள் அண்ணா மலை நகரில் உருவானது.

## இவ்வமைப்பின் நோக்கங்கள்

1. தமிழ் மொழியைப் பற்றியும் மொழியியலைப் பற்றியும் இலக்கணத்தைப் பற்றியும் தமிழ் மக்களிடையேயும் மாணவர்களிடையேயும் உறுப்பினர்களிடையேயும் விழிப்புணர்வை உருவாக்குதல்.
2. இத்துறையில் வருகின்ற ஆய்வு முடிவுகளை, ஆய்வு பற்றிய செய்திகளைப் பரிமாறுதல்.
3. இவற்றில் எழும் புதிய எண்ணங்களை ஆண்டுக்கொரு முறை கருத்தரங்கு, மாநாட்டின் மூலம் பரிமாறுதல்.
4. தேவையான நல்ல ஆய்வுகளைத் தொடங்குதல்.
5. இத்துறையில் வரும் நல்ல ஆய்வுகளைப் புத்தகமாகக் கொணருதல்.
6. இத்துறையில் எழும் நல்ல ஆய்வுக் கட்டுரைகளைத் தர, 'மொழியியல்' எனும் ஆய்விதழைக் கொணருதல்.

இந்த அமைப்பு நிறுவப்பட்ட ஆண்டிலேயே 'மொழியியல்' என்ற காலாண்டு ஆய்விதழ்,

> தமிழ் இலக்கணம், மொழியியல் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகள் மொழியியலில் வெளியிடு வதற்கு அனுப்ப வேண்டுகிறோம். கட்டுரையாளர் களுக்கு இருபத்தைந்து படிகள் இலவசமாக வழங்கப் பெறும். கட்டுரைகளைத் தெளிவாகத் தட்டச்சு செய்து இரண்டு படிகள் அனுப்புதல் வேண்டும். தங்கள் நண்பர்களையும் மொழியியல் கழக உறுப்பினர்களாக்கி மொழியியல் வளர்ச்சிக்கு உதவ வேண்டுகிறோம்

என்ற குறிப்போடு ஒவ்வொரு இதழும் வெளிவந்துள்ளது.

இவ் இதழின்

| | தனிநபர் | நிறுவனம் |
|---|---|---|
| ஆயுள் கட்டணம் | ரூ. 250 | ரூ. 300 |
| | US. 50 | US. 75 |
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 20 | ரூ. 30 |
| | US. 5 | US. 7.50 |
| ஆண்டுக்கு மாணவர் கட்டணம் | | ரூ. 10 |

இவ்விதழின் வெளியீட்டாளர் மற்றும் ஆசிரியராகப் பேராசிரியர் ச. அகத்தியலிங்கம் அவர்கள் தொகுதி 10 வரை இருந்துள்ளார்கள். அவர் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பணியில் சேர்ந்த பின், தமிழ்ப் பல்கலைக்கழக மொழியியல் துறைத் தலைவர் முனைவர் கி. அரங்கன் அவர்கள் இப்பொறுப்பினை ஏற்றுள்ளார்கள்.

ஒவ்வொரு இதழுக்கும் பதிப்பாசிரியர் குழு உள்ளது. இக்குழுவால் தேர்வு செய்யப்பட்ட கட்டுரைகள் மொழியியல் இதழில் வெளியிடப்பட்டுள்ளன. முனைவர் ச. அகத்தியலிங்கம், முனைவர் செ.வை. சண்முகம், முனைவர் சுப. திண்ணப்பன், முனைவர் ந. குமாரசாமி ராஜா, முனைவர் பொன். கோதண்ட ராமன், முனைவர் கி. அரங்கன், முனைவர் வ. ஞானசுந்தரம், முனைவர் கே. எஸ். கமலேஸ்வரன், முனைவர் ந. நடராச பிள்ளை, முனைவர் மு. சுசீலா, முனைவர் அ. மணிமேகலை, முனைவர் இராம. சுந்தரம், முனைவர் எல். இராமமூர்த்தி, முனைவர் முருகையன், முனைவர் கே. சீனிவாசவர்மா, முனைவர் கா. பால சுப்பிரமணியன் ஆகியோர் பதிப்பாசிரியர்களாக இருந்துள்ளனர்.

1977 முதல் 1991 வரை 14 தொகுதிகள். (56+1 இதழ்கள்) வெளிவந்துள்ளன. அதன் பின்னர் இது வெளிவரவில்லை. இவை பெரும்பாலும் தனி இதழ்களாக வெளியிடப்பட்டுள்ளன. ஒருசில, இரு இதழ்கள், நான்கு இதழ்கள் வரையிலும் இணைந்தும் வெளியாகியுள்ளன. இவற்றில் ஐந்து சிறப்பிதழ்கள் உள்ளன.

1. 1979இல் எழுத்துச் சீர்திருத்த மலர் என்னும் சிறப்பிதழ் தொகுதி 2, இதழ் எண் 3 என, கூடுதல் இதழாக வெளியிடப்பட்டுள்ளது. இதில் 1977இல் அண்ணா மலைப் பல்கலைக்கழக மொழியியல் உயராய்வு மையத்தில் நடைபெற்ற 'எழுத்துச் சீர்திருத்தம்' என்ற கருத்தரங்கில் அறிஞர்கள் வழங்கிய கட்டுரைகளும் தமிழகத்தில் எழுத்துச் சீர்திருத்தத்தில் ஆர்வமுடைய பிற அறிஞர்களின் கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. மொத்தக் கட்டுரைகள் 13.

2. 1979-80இல் தொகுதி-3, இதழ் எண்-243 பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளை அவர்களின் மணிவிழா மலராக வெளிவந்துள்ளது. இதில் அவரது வாழ்க்கைக் குறிப்புடன் 15 கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

3. 1980இல் தொகுதி-4, இதழ் எண்-122 பேராசிரியர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனாரது நினைவு மலராக வெளிவந்துள்ளது. இதில் அன்னாரது வாழ்க்கைக் குறிப்பும் 30 கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

4. 1985 மார்ச்சு திங்கள் 22, 23 ஆகிய நாட்களில் பல்கலைக் கழக மானியக்குழு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் துறை ஆகியவற்றின் சார்பில் அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம் ஒரு மாநாட்டினை நடத்தியது. இம்மாநாட்டுக் கருத்தரங்கில் வழங்கப்பட்ட கட்டுரைகள் 1985இல் தொகுதி-8, இதழ் எண் 324இல் வெளிவந்துள்ளன. இது, அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழக முதல் மாநாட்டுக் கருத்தரங்கு மலர்.

5. 1989-91இல் தொகுதி-13, இதழ் எண்கள் 1-4, தொகுதி-14, இதழ் எண்கள் 1-4, பேராசிரியர் ச. அகத்தியலிங்கம் அவர்களது மணிவிழா மலராக வெளிவந்துள்ளது. இதில் அவரது வாழ்க்கைக் குறிப்பு மற்றும் 24 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

மொழியியல் இதழ்களில்

1. மொழியியல் பேரறிஞர் மாக்ஸ்முல்லர் (1 : 1,2)
2. மொழியியல் எஸ். வி. இராமசுவாமி ஐயர் (1 : 3,4)
3. மொழியியல் சுநீத்குமார் சட்டர்ஜி (2 : 1)
4. மொழியியல் மூதறிஞர் டாக்டர் பி.எஸ். சுப்பிரமணிய சாஸ்திரி (2 : 2)
5. மொழியியல் பேரறிஞர் மு.ப. எமனோ (2 : 4)
6. மொழியியல் தா. பர்ரோ (3 : 1)
7. பேராசிரியர் டாக்டர் மு. சண்முகம் பிள்ளை (3 : 1,2)
8. பேராசிரியர் டாக்டர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் (4 : 1,2)
9. அறிவியல் தமிழின் தந்தை கா. பொ. இரத்தினம் (4 : 1,2)
10. மொழி ஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர் (4 : 1,2)
11. மொழியியல் பேரறிஞர் வி.கோ. சூரிய நாராயண சாஸ்திரியார் (5 : 1)
12. மொழியியல் பேரறிஞர் சுவாமி ஞானப்பிரகாசர் (5 : 2)
13. மொழியியல் பேரறிஞர்-திராவிட மொழியியலின் தந்தை டாக்டர் கால்டுவெல் (5 : 3)
14. தமிழ் அகராதியின் தந்தை - பெஸ்கி எனும் வீரமாமுனிவர் (7 : 3,4)
15. பேராசிரியர் ச. அகத்தியலிங்கம் (13 : 1-4), (14 : 1-4)

ஆகிய அறிஞர் பெருமக்கள் பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. 'உங்களுக்குத் தெரியுமா?' என்ற கேள்வியுடன் தமிழ் மொழி, தமிழும் பிற மொழிகளும், பிற மொழிகள் போன்ற நூற்றுக்கு மேற்பட்ட துணுக்குச் செய்திகளும் உள்ளன.

## பொது மொழியியற் கூறுகள்

வட்டார, சமுதாயக் கிளைமொழிக் கூறுகள்
மொழியியற் கோட்பாடுகள்
எழுத்துச் சீர்திருத்தம்
அகராதி
பழங்குடி மொழிக் கூறுகள்
கலைச் சொற்கள்

போன்றன தொடர்பானவை. ஒவ்வொன்றும் படிப்பவர்க்குப் புதிய செய்திகளைத் தெரிவிப்பதாக உள்ளன. இத்துணுக்குச் செய்திகள் தொகுதி 6 வரை வெளியிடப்பட்டுள்ளன. பின்னர் நிறுத்தப் பட்டுள்ளது. தொடர்ந்து வந்திருக்குமாயின் பயனுடையதாக இருந்திருக்கும்.

1977 முதல் 1991 வரை வெளிவந்துள்ள 14 தொகுதிகளில் இடம்பெற்றுள்ள 57 இதழ்களில் 291 கட்டுரைகள்* வெளி வந்துள்ளன. அனைத்துக் கட்டுரைகளும் தமிழில், தமிழ் மொழியில், மொழியியலில் ஈடுபாடுள்ள அறிஞர்களால் எழுதப் பட்டுள்ளன. இவற்றில் 7 கட்டுரைகள் ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டவை.

இவ் ஆய்வு இதழில் வெளிவந்துள்ள கட்டுரைகளில் 2 கட்டுரைகளைத் தவிர பிற கட்டுரைகள் அனைத்தும் மரபிலக்கணம்/ மொழி/மொழியியலைச் சார்ந்தவைகளே. இரண்டு கட்டுரைகள் இலக்கியம் தொடர்பானவை. இவ்விதழ் கட்டுரைகளைப் பின்வரும் தலைப்புகளில் பாகுபடுத்தலாம்.

1. இலக்கியம்
2. மரபிலக்கணம்
3. மொழி/மொழியியல் (பொது)
4. எழுத்து/ஒலி
5. சொல்லியல்
6. தொடர்பியல்
7. மாற்றிலக்கணம்
8. சொல்லாய்வு
9. பொருளியல்
10. நடையியல்
11. கிளைமொழியியல்
12. மொழிகற்றல்/கற்பித்தல்
13. மொழிபெயர்ப்பு கலைச்சொற்கள்
14. கணினி மொழியியல்
15. அகராதி/நிகண்டு/கலைக்களஞ்சியம்
16. ஊர்ப் பெயராய்வு
17. அறிவியல் தமிழ்

## இலக்கியம்

இலக்கியம் தொடர்பாக மூன்று கட்டுரைகள் வெளி வந்துள்ளன. பழந்தமிழ் நூல்களின் தொகுப்பு வரிசை முறை என்ற கட்டுரையில் பழந்தமிழ் நூல்களில் எந்த நூல் எதற்கு முன் வந்துள்ளது என்பதை ஆசிரியர், காலம் மற்றும் மொழி நிலை அமைப்பின் உதவியுடன் புதுப்பார்வையில் வரிசைப் படுத்தியுள்ளார்.

மொழி அடிப்படையில் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களைக் கண்டுகொள்ளும் ஆய்வு 'எவை பதினென் கீழ்கணக்கு நூல்கள்?' என்ற

கட்டுரையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. திருக்குறளின் மொழி அமைப்பு சங்க இலக்கியங்களோடு ஒத்துக் காணப்படுவதால் குறளைச் சங்க காலத்தைச் சார்ந்ததாகக் கருதலாம் என்றும் இத்தொகுப்பில் இன்னிலையினைச் சேர்த்துக் கொள்ளலாம் என்றும் குறிப்பிட்டுள்ளார் கட்டுரை ஆசிரியர். கம்பராமாயணத்தில் காணப்படும் கலித்துறையினை விளக்குகின்றது பிறிதொரு கட்டுரை.

## மரபிலக்கணம்

தொல்காப்பியச் சூத்திரங்களின் பொருள்கொள்வதில் ஏற்படும் கருத்து வேறுபாடுகள், உரையாசிரியர்கள் தரும் எடுத்துக் காட்டுகளின் பொருத்தமின்மை போன்ற செய்திகளைத் 'தொல்காப்பியம் அல்லது நன்னூல் சூத்திரங்களுக்குப் புது உரை காண்டல்' என்ற கட்டுரை விளக்குகின்றது.

> எவ்வயிற் பெயரும் வெளிப்படத் தோன்றி
> அவ்வியல் நிலையில் செய்வித்து என்ப

எனும் தொல்காப்பிய நூற்பாவிற்குத் 'தொல்காப்பியச் சூத்திரம் ஒன்றுக்குப் புத்துரை' என்ற கட்டுரையில் புது உரை கொடுக்கப் பட்டுள்ளது.

மேலும் தொல்காப்பியம் எழுந்ததன் நோக்கம், தொல்காப்பியரின் இயற்பெயர் கோட்பாடு, சொல்லியல் கோட்பாடு, தொல்காப்பியர் கண்ட மொழியியல் உறழ்வு, அஷ்டாத்தியாயிலும் தொல்காப்பியத்திலுமுள்ள இலக்கணக் கோட்பாடுகள், தொல்காப்பியமும் பாணினீயமும் ஓர் ஒப்பாய்வு, தொல்- இடைச் சொல் விளக்கம், தொல்காப்பியம் நன்னூல் வினைமுற்றுக்கள் ஒப்பாய்வு, இளம்பூரணர் உரை நுணுக்கம் போன்ற பல மரபிலக்கணம் தொடர்பான கட்டுரைகள் உள்ளன.

## மொழி/மொழியியல் (பொது)

உலக அரங்கில் தமிழ் வளர்ச்சி, பிற மொழிகளில் தமிழ் மொழியின் செல்வாக்கு, மொழி வளர்ச்சியும் புதிய சொற்பாகு பாடும் என்பனவற்றை விளக்கும் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. பாரதிதாசனின் வடமொழி பார்வை மொழியியல் கண்ணோட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது.

மொழிச் சங்கங்கள், மொழியியல் கோட்பாடுகள், வணிகத் தொடர்பால் தோன்றும் புது மொழிகள், பிஜின் கிரியோல் மொழி வகைகள், திராவிட மொழிகளின் அமைப்பு ஒற்றுமை, மொழியியலும்

தமிழும் எனப் பொதுக்கூறுகளைக் கொண்ட கட்டுரைகள் பல காணப்படுகின்றன. தமிழ் மற்றும் செனகல் நாட்டில் பேசப்படும் ஒலப் என்ற மொழி இலக்கணக் கூறுகளிடையே உள்ள உறவு பற்றி, 'தமிழ் ஒலப் ஓர் ஒப்பிலக்கணம்' என்ற கட்டுரை விளக்குகின்றது.

## எழுத்து/ஒலி

தமிழ் எழுத்துகள், திராவிட மொழிகளில் சொல் முதல் 'க'-வின் இருவேறு வளர்ச்சி நிலை, தென்திராவிட மொழிகளில் இகர, எகர, உகர, ஒகர மாற்றங்கள், வினாக்களில் ஏற்படும் ஒலியேற்றம், ஒலிக்கும் உணர்வுக்கும் உள்ள தொடர்பு, ஒலியனியல் விதிகள், தமிழ் எழுத்துக்களின் அமைப்புகளும் அவற்றைக் கற்றுக்கொடுக்கும் முறைமைகளும் போன்ற பல நிலைகளில் எழுத்து / ஒலி தொடர்பான செய்திகள் விளக்கப் பட்டுள்ளன. மெய், நிகழ்வு, உயிர் எனப் பாகுபாடு செய்யப்பட்ட தமிழ் ஒலிகளின் சிறப்பியல்புகள் கூறப்பட்டுள்ளன. எழுத்துச் சீர்திருத்தம் தொடர்பாக 13 கட்டுரைகள் வெளிவந்துள்ளன. இவை எழுத்துச் சீர்த்திருத்தம் தொடர்பான சிந்தனைக்குரிய பல அரிய கருத்துகளைக் கூறுகின்றன.

## சொல்லியல்

பெயர், வினை, இடை, உரி தொடர்பான பல கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. நாம், நாங்கள், நீங்கள் என வடிவளவில் பன்மையாக உள்ளவை பொருளளவில் பன்மையாகுமா? என ஆய்கின்றது 'தன்மை முன்னிலை பன்மைகள்' என்ற கட்டுரை. 'சங்கத் தமிழில் நேரப் பெயர்கள்'இல் சங்க இலக்கியங்களில் வரும் நேரப் பெயர்கள் மூலம் நேரப் பாகுபாடுகள் விளக்கப்பட்டுள்ளன.

திராவிட மொழிகளில், பால் அமைப்பின் வரலாறும் வளர்ச்சியும், பெயர்ச் சொற்களின் பாகுபாடு, கூட்டுப் பெயர், வினையடி பெயர், மூவிடப் பெயர்கள், விரவுப் பெயர்கள், பால் உணர்த்தும் முறை, சங்கத் தமிழில் பலர்பால், 'தான்' பதிலிடு பெயர், மாரைக் கிளவி, வேற்றுமை போன்ற பெயரியல் தொடர்பான பல கட்டுரைகள் உள்ளன.

தமிழில், துணைவினைகள் முதல்வினைகளிலிருந்து தருவிக்கப்படுகின்றன என்பதைச் சான்றுகளுடன் விளக்கும் கட்டுரையும், சங்ககாலம், சங்கம் மருவிய காலம் மற்றும் இடைக் கால இலக்கியங்களில் காணப்படும் வினையெச்சங்களை அமைப்பு முறையிலும் வரலாற்று முறையிலும் விளக்கும் கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. வினைச் சொற்கள் சொல்லியல் அல்லது

தொடரியல், அவை காட்டும் பொருள், அவை ஏற்கும் கால இடைநிலைகளின் (குறிப்பாக இறந்த காலம்) அடிப்படையில் பாகுபடுத்தப்படுவது 'தமிழில் வினை வகைப்பாடு' என்ற கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது. மேலும் திணை பால் பாகுபாடு, வினையெச்சம், பெயரெச்சம், செயவென் எச்சம், வியங்கோள் வினை, கால எச்சம், காரண வினை, எதிர்மறை, ஏவல் வினை, வினையாக்க விகுதிகள், கூட்டுவினை, தன்வினை, பிறவினை, துணைவினை என பல்வேறு வினையியல் வகைகளை விளக்கும் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

'உம்' என்ற இடைச்சொல் பயின்றுவரும் இடங்கள், இதற்கும், 'கூட' எனும் இடைச்சொல்லுக்குமிடையே உள்ள வேறுபாடுகள் மற்றும் இது சில வழக்குத் தொடர்களில் பயின்று வரும் முறைகள் பற்றி 'உம்' எனும் இடைச்சொல் என்ற கட்டுரையில் விளக்கப் பட்டுள்ளன.

மரபு இலக்கணம், உரையாசிரியர்கள் கூற்று மற்றும் மொழியியல் கோட்பாடுகள்வழி உரிச்சொல் பற்றி 'உரிச்சொல்' என்ற கட்டுரையில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

## தொடரியல்

சொற்றொடர்த் தொடர்பான பல கட்டுரைகள் உள்ளன. பொதுவாக ஒரு வாக்கியத்தில் முதலில் வரும் பெயர்த்தொடர் அப்படியே இருக்க, அடுத்துவரும் அதே பெயர்த் தொடர்கள் பதிலிடு பெயர்களாக மாறுகின்றன. இப்பொதுவிதிக்கு முரணாகச் சில சொற்றொடர் அமைப்புகள் உள்ளன. இதனைச் 'சொற்றொடர்களில் பதிலிடு பெயராக்கம் செய்வதில் ஏற்படும் தடைவு' என்ற கட்டுரை விளக்கிச் செல்கின்றது.

தமிழ் மொழியில் காணப்படும் தொடரியல் அமைப்பு, தமிழில் வேற்றுமைத் தொடர், தற்சுட்டுப் பதிலிடுபெயர் நீக்கம், வினையெச்சம் கொண்டு செய்யப்படும் கலப்பு வாக்கியங்களில் ஏற்படுகின்ற விலக்கு, இக்காலத் தமிழில் கலப்பு வாக்கியங்கள், கல்வெட்டுத் தமிழில் காணப்படும் தொடரியல் அமைப்பு எனப் பல தொடரியல் தொடர்பான கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

## மாற்றிலக்கணம்

மொழியை மாற்றிலக்கண முறையில் அணுகிய முதல் அறிஞர் சாம்ஸ்கி. அவர் 1957ஆம் ஆண்டு 'தொடரியல் அமைப்புகள்' (Syntactic theories) என்னும் நூலை வெளியிட்டார். அடுத்து அதனைத் திருத்தம் செய்து 'தொடரியல் கொள்கைகளின் கூறுகள்'

(Aspects of the Theory of Syntax) என்னும் நூலை வெளியிட்டார். இவரது கருத்துக்களில் அமைந்துள்ள கோட் பாட்டை, நிலைக்கொள்கை (Syntactic theory) என அழைத்தனர். அவை உருவாக்கப் பொருண்மையியல் (Generative Semantics), எடுத்துரை பொருண்மையியல் (Interpretative Semantics) என இரு பிரிவுகளாகப் பிரிந்தது. இவற்றை விளக்கித் தற்காலம் வரை இவை எவ்வாறு வளர்ச்சி பெற்றுள்ளன என்பதை 'மாற்றிலக்கணப் போராட்டம்' என்ற கட்டுரை விளக்குகிறது.

சொற்றொடர் அமைப்பில் மாற்றிலக்கண விதிகள் முக்கிய பங்கினை வகிக்கின்றன. இவ்விதிகளைப் பயன்படுத்தும் போது சில விதிகளை, முதலில் பயன்படுத்த வேண்டுமா? அல்லது இறுதியில் பயன்படுத்த வேண்டுமா? என்ற ஐயம் ஏற்படும். இதனைத் தீர்க்கிறது 'மாற்றிலக்கண விதிகள் வரன்முறை' என்ற கட்டுரை.

அமைப்பு மொழியியலும் மாற்றிலக்கணமும், மாற்றிலக் கணமும் யாப்பியலும், தானாக்கமும் தற்சுட்டாக்கமும் என மாற்றிலக்கணச் சிந்தனைகளை வெளியிடும் கட்டுரைகளும் காணப்படுகின்றன.

## சொல்லாய்வு

பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரன் எழுதிய 'The Tamil Word' என்ற கட்டுரை தமிழில் 'தமிழ்ச் சொல்' என மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இக்கட்டுரை, தமிழ் மொழியில் காணப்படும் சொற்களின் தன்மை, பயன்பாடு, ஒலிகளின் ஒலிப்பு முறை பற்றிக் கூறுகின்றது. பழந்தமிழில் பயின்றுவரும் அற்று, ஆங்கு எனும் இரண்டு சொற்கள் இலக்கிய எடுத்துக் காட்டுகளின் வழி 'அற்றாங்கு' என்ற கட்டுரையில் விளக்கப்படுகின்றன. சிலப்பதிகாரம் அரங்கேற்றுக் காதையில் வரும் 'தேசிகத்திரு' என்ற சொல்லாட்சி தேசிகத்திரு' என்ற தலைப்பிலமைந்த கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது.

## பொருளியல்

'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்பது தொல்காப்பியர் கூற்று. பொருண்மை என்பது சொல்லினின்று தனியே பிரிக்க முடியாதது. இப்பொருண்மையை அறிய இரு அணுகுமுறைகள் உள்ளன. ஒன்று சொல்லின் பொருண்மை புறவயப் பொருளினின்று அல்லது புறவுலகிலிருந்து தனித்து இருப்பது என்பது; மற்றொன்று நமது தன்னுணர்வில் உண்டாகின்ற புறவயப் பொருள்களின் பிரதிபலிப்பு என்பது. இவ்வாறு சொல்லுக்கும்

பொருளுக்கும் உள்ள தொடர்பினை விளக்குகிறது 'சொல்லும் பொருளும்' எனும் கட்டுரை. சொற்கள் எவ்விதம் பொருளடிப் படையில் அடங்கு சொல்லாகவும், அடக்குச் சொல்லாகவும் நிலைபெறுகின்றன என்பதைப் 'பொருளடக்கத் தொடர்புச் சொற்கள்' என்ற கட்டுரை விளக்குகின்றது. மேலும் பலபொருள் ஒருசொல், சங்கத் தமிழில் உறவுமுறைச் சொற்பொருண்மை, மேடைப் பேச்சில் சொல் விளக்கம், கால அளவையும் பொருண்மையும் போன்ற பொருண்மை தொடர்பான கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

## நடையியல்

மொழியியல் ஒருவரது படைப்பினை நடையியல் பார்வையிலும் ஆய்வுசெய்கின்றது. நடையியல் பாங்கின் மூலம் அதன் ஆசிரியரை இனம் காணமுடியும். நடையியல் தொடர்பாகப் பல கட்டுரைகள் உள்ளன. 'தமிழ் நடையியல்' என்ற கட்டுரையில் தொல்காப்பியச் சிந்தனை வழியாகத் தமிழ் நடையியல் விளக்கப் பட்டுள்ளது. 'கம்பராமாயணத்தில் நடையியலின் சிறப்புத் தன்மை பற்றிய அளவீடு'ம் கொடுக்கப்பட்டுள்ளது. சங்க இலக்கியங்கள், புதுக்கவிதைகள், உரையாடல்கள், புதினங்கள் மற்றும் கவிதைகளில் காணப்படும் நடையியல் பாங்கினைக் 'கருத்தோட்டத்தில் நடையியற் கூறுகளின் பாங்கு' என்ற கட்டுரை விளக்குகின்றது.

## கிளை மொழியியல்

தமிழ் மொழியில் பல்வேறு கிளை மொழிகள் உள்ளன. இவை வட்டாரக் கிளை மொழிகளாகவும் சமுதாயக் கிளை மொழிகளாகவும் பகுக்கப்பட்டு ஆராயப்பட்டுவருகின்றன. 'மலை நாட்டில் மக்கள் தமிழ்', 'பேச்சுத் தமிழ் - இலங்கையிலும் தமிழகத்திலும்', 'பஸ்தா மாவட்டத்துக் கோண்டிக் கிளை மொழிகள்', 'சூரசம்ஹாரம் நாவலில் காணும் இலங்கைத் தமிழ்' போன்ற வட்டாரக் கிளை மொழி ஆய்வுக் கட்டுரைகள் உள்ளன.

சமுதாயத்தின் உயர்வினை வெளிப்படுத்தும் நிலையில் அதன் பிரதிபலிப்பாக உயர்வு ஒருமை முக்கிய இடத்தைப் பெறுகிறது என்று கூறுகிறது 'மொழியில் பிரதிபலிக்கும் சமுதாயக் கூறுகள்' என்ற கட்டுரை. மொழி வேறுபாட்டுக் கோட்பாடுகள், அதற்கான சமூகக் காரணிகள், கல்லாதவர்கள் பேச்சுத் தமிழில் ஆங்கிலச் சொற்களின் நிலை, பெரிய புராணத்தில் விகுதிகள் பயன்பாடும் சமுதாய நிலை புலப்பாடும், மொழியில் பிரதிபலிக்கும் சமுதாயக்கூறுகள், மொழித்தூய்மை, எளிமையாக்கம், நிலைபேறாக்கம் போன்ற சமுதாய மொழியியல் தொடர்பான பல கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

ஒருவரின் இயல்பான பேச்சு வழக்கில் சமுதாய மற்றும் வட்டாரப் பாதிப்புகள் தோன்றும் என்பது கிளை மொழியின் அடிப்படைக் கோட்பாடாகும். இப்பாதிப்புகள் இன்றியும் ஒருவர் பேசலாம். கல்வித் தகுதி, பொருளாதார நிலை, பேசும் சூழல் இவைகளால் ஒருவரது பேச்சு வழக்கு மறைந்து பொது மொழி அமைவதும் உண்டு. இது ஒரு காலத்தில் இயல்பான பேச்சு வழக்காகக் கொள்ளவும் முயலலாம். இவ்வகைப் பேச்சு வழக்கினைப் பொதுப் பேச்சுவழக்கு எனக் குறிப்பிடுவர் என்று 'கிளை மொழியும் பொதுப் பேச்சுத் தமிழும்' என்ற கட்டுரை கூறிச்செல்கின்றது. 'பொதுப் பேச்சுத் தமிழ் அதில் இரு நிலையின் பாங்கு' என்ற கட்டுரையும் பொதுப் பேச்சுத் தமிழ் தொடர்பான செய்தியினைக் கூறுகின்றது.

## மொழிகற்றல்/கற்பித்தல்

பயன்பாட்டு மொழியியலில் மொழிகற்றல்/கற்பித்தல் ஒரு முக்கிய பங்கினைப் பெற்றுள்ளது. மொழி கற்பித்தலில் அதிலும் முக்கியமாக இரண்டாம் மொழி கற்பித்தலில் பல்வேறு கோட்பாடுகளை வகுத்துள்ளது மொழியியல். இக்கோட்பாடுகள் மொழி கற்பித்தலை எளிமையாக்குகின்றன.

தமிழ் கற்பிக்கும்போது, குறிப்பாக இரண்டாம் மொழியாகக் கற்பிக்கும்போது ஏற்படும் இடர்ப்பாடுகள், கற்பவர்கள் ஏற்படுத்திய பிழைகள் ஆய்வு, வழக்கு வேறுபாடுகளும் இரண்டாம் மொழி பயில்தலில் மொழியியலின் பங்கும், மொழித் திறனும் மொழி பயில்தலும், மொழி கற்பித்தலில் மேற்கொள்ளப்பட வேண்டிய தேர்வுக் கட்டுப்பாடுகள், மொழி பயில்தலில் மாற்றிலக்கணத்தின் பங்கு, கணினியின் பயன்பாடு போன்ற செய்திகளைக் கொண்ட கட்டுரைகள் பல இடம் பெற்றுள்ளன.

இலக்கணம் கற்பித்தல் தொடர்பான கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன. உயர்நிலைப் பள்ளி/கல்லூரிகளில் இலக்கணம் கற்பித்தல், கருத்துப் புலப்படுத்தலில் இலக்கண அறிவின் தேவை போன்றன விளக்கப்பட்டுள்ளன. மேலும் பள்ளி மாணவர்கட்குக் கற்றுக் கொடுக்கும் இலக்கணக் கல்வியின் குறைகளை எடுத்துக்கூறி மாணவர்கட்கு எத்தகைய இலக்கணம் கற்றுக்கொடுக்க வேண்டும் என்பதை, 'இன்றைய மாணவர் இலக்கணம் ஏற்பதை வெறுப்பதேன்?' என்ற கட்டுரை விளக்குகின்றது.

## மொழிபெயர்ப்பு/கலைச்சொற்கள்

மொழிபெயர்க்கும்போது ஏற்படும் மொழியியல் பிரச்சினைகள், மரபுத் தொடர்களை மொழிபெயர்க்கும்போது

ஏற்படும் பிரச்சினைகள் போன்ற மொழிபெயர்ப்பு தொடர்பான செய்திகளைத் தெரிவிக்கும் கட்டுரைகளும் கலைச் சொல்லாக்கம் மற்றும் பல்வேறு இனத்தவரிடையே பழக்கத்தில் காணப்படும் கலைச்சொற்களைப் பற்றிய கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

தமிழ் மொழியில் நடைபெறும் சொல்லாக்க முறையினைத் 'தமிழில் சொல்லாக்கம்', 'தமிழில் புதுச் சொல்லாக்கம்' போன்ற கட்டுரைகள் விளக்கிச்செல்கின்றன. சொல்லாக்கம் வரலாற்று அளவீட்டிலும் கொடுக்கப்பட்டுள்ளது. கலைச்சொற்களின் தரப்பாடும் விளக்கப்பட்டுள்ளது.

நெசவுத் தொழில், வேளாண் தொழில், மீனவர் தொழில் போன்ற தொழில் தொடர்பான கலைச்சொற்களை விவரிக்கும் கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

## கணினி மொழியியல்

கணிப்பொறி எவ்வாறு மொழியியல் ஆய்வு, மொழிபெயர்ப்பு, அகராதி தயாரிப்பு, இலக்கிய ஆய்வு, மொழி கற்பித்தல் பணிகளுக்கு உதவுகின்றது என்பதை 'கணினி மொழியியல்' என்ற கட்டுரை விளக்குகின்றது. முறைப்படுத்தப்பட்ட விதிகள் மூலம் இயற்கை மொழியின் அமைப்பைக் கொடுத்து வாக்கியங்களை உருவாக்கும் திறனைக் கணிப்பொறிக்குக் கொடுத்து வாக்கியங்களை உருவாக்கலாம் என்பதனைக் 'கணிப்பொறியின் மொழி உணர்திறன்' குறிப்பிடுகின்றது.

## அகராதி/நிகண்டு/கலைக்களஞ்சியம்

கலைக்களஞ்சியம் உருவாக்கத்திற்குரிய சில அடிப்படைக் குறிப்புகள், வரலாற்றுமுறைத் தமிழ்ப் பேரகராதிக்குப் பின்புலப் பணிகள், மொழிப் புதுமையாக்கத்தில் அகராதியின் பங்கு, திராவிட மொழியில் காணப்படும் நிகண்டுகள் குறித்த கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

தமிழாக்கம் செய்யப்பட்ட, புதிதாக உருவாக்கப்பட்ட சொற்கள் பல தமிழ்ச் சொற்களஞ்சியத்தில் நிலையாக்கம் பெற வில்லை. இதனைத் 'தமிழ்ச் சொற்களஞ்சியத்தில் நிலையாக்கம்' என்ற கட்டுரை புலப்படுத்துகின்றது.

தற்காலத் தரவுகளின் அடிப்படையில் அகராதி தயாரித்தல், பொருளைத் தற்காலப் பயன்பாட்டின் அடிப்படையில் வரையறுத்து மொழிப்புதுமையாக்கம் செய்ய அகராதி உதவும் தன்மையை

'மொழிப் புதுமையாக்கத்தில் அகராதியின் பங்கு' எனும் கட்டுரை விவரிக்கின்றது.

## ஊர்ப்பெயராய்வு

ஊர்ப்பெயராய்வு மொழியியல் மாற்றங்கள், சொல்லமைப்பு, பேச்சுவழக்குக் கூறுகளைக் கண்டறிய உதவும் பாங்கு போன்றனவற்றை 'மொழியியலும் ஊர்ப்பெயராய்வும்' என்ற கட்டுரை விவரிக்கின்றது. கல்வெட்டுகள், கிளை மொழியியற் கூறுகள் வாயிலாகப் புதுவை மாநிலத்தில் உள்ள 'பாகூர்' என்ற ஊர்ப்பெயர் பாகூர்-ஊர்ப்பெயராய்வில் விளக்கப்பட்டுள்ளது.

## அறிவியல் தமிழ்

'அறிவியல் தமிழ்ப் பாடம்' என்ற இப்பிரிவில் ஒரு கட்டுரை உள்ளது. இது அறிவியல் தமிழ்ப்பாடம் தயாரிக்கும்போது பின்பற்ற வேண்டிய மொழி வழிமுறைகளை விளக்குகின்றது. 'அறிவியல் தமிழ்ப்பாடம் முழுமையும் தனித் தமிழாக இருக்க முடியாது; ஏனெனில் குறியீடுகளையும், சமன்பாடுகளையும் அனைத்துலக வழக்காக ஏற்றுக் கொள்ளும்போது ரோம எழுத்துக்களையும் பல குறியீடுகளையும் இது கொண்டிருக்கும் என்கிறார் ஆசிரியர்.

மொழியியல் இதழில் வெளிவந்துள்ள கட்டுரைகள் ஒவ்வொன்றும் சிறப்புமிக்கவை. மொழியியல் மற்றும் மரபிலக்கணம்வழி, தமிழ்மொழி ஆழமாக ஆராயப்பட்டுள்ளது. சங்ககாலம் முதல் தற்காலம் வரை பயன்பாட்டில் உள்ள தமிழ் இலக்கணக் கூறுகள் பல கோணங்களில் ஆராயப்பட்டுள்ளன. தமிழ் மொழியின் சிறப்பும், அது மக்கள் பண்பாட்டோடு ஒன்றாகக் கலந்துள்ள தன்மையும் புலப்படுத்தப்பட்டுள்ளன. தமிழைத் தமிழர்க்கு, பிற மொழியினர்க்குக் கற்றுக்கொடுக்கும்போது ஏற்படும் இடர்ப்பாடுகள் அவற்றைத் தவிர்ப்பதற்கு வழி வகுக்கும் நெறிமுறைகளைக் கூறும் கட்டுரைகள் தமிழ் மொழிக் கற்பித்தலில் ஈடுபட்டிருக்கும் அனைவர்க்கும் உதவுவன. மொழியியல் கோட்பாடுகளின் அடிப்படையில் கூறப்பட்டுள்ள சிந்தனைகள் மொழிக்கற்பித்தலை எளிமையாக்க உதவுகின்றன. பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள மக்கள் பயன்பாட்டில் காணப்படும் கலைச்சொற்களை விளக்கும் கட்டுரைகள், கலைச் சொல்லாக்கம் செய்வோர்க்குத் துணைநிற்கும் அகராதி மற்றும் சொற்களஞ்சியங்களில் காணப்படாத இத்தமிழ்ச் சொற்களின் சிறப்பு மொழி வளர்ச்சியில் ஆர்வமுடையோர்க்கும் உதவுவன.

'மொழியியல்' இதழினை அறிமுகப்படுத்தல் என்ற நிலையில் இக்கட்டுரை அமைந்துள்ளதால் கட்டுரைகள் ஒவ்வொன்றும் கூறும் செய்திகள் தனித்தனியாக இங்கு விளக்கப் படவில்லை; பொதுத் தன்மைகள்தான் கூறப்பட்டுள்ளன. தமிழ் மொழியின் சிறப்பை, இலக்கணக் கூறுகளை, பயன்பாட்டை, செயற்பாடுகளை எளிய தமிழில் கட்டுரைகளாக வெளியிட்டுள்ள 'மொழியியல்' இதழ் மொழியியலாளர்க்கு மட்டுமன்றி, தமிழ் ஆய்வாளர் மற்றும் தமிழ் ஆர்வலர் அனைவர்க்கும் துணையாகி, தமிழ் வளர்ச்சிக்கும் துணைநிற்கும் சிறப்புமிக்க இதழ் என்பதில் ஐயமில்லை.

# இணைப்பு

| வ. எண். | ஆசிரியர் | கட்டுரை | இதழ் எண் | ஆண்டு |
|---|---|---|---|---|
| | | **I இலக்கியம்** | | |
| 1. | ச. அகத்தியலிங்கம் | பழந்தமிழ் நூல்களின் தொகுப்பு வரிசை முறை | 6 : 3 | 1983 |
| 2. | ஏ. ஆதித்தன் | எவை பதினெண்கீழ்க்கணக்கு நூற்கள் | 9 : 1, 2 | 1985 |
| | | **II மரபிலக்கணம்** | | |
| 3. | ச. அகத்தியலிங்கம் | தொல்காப்பியம் அல்லது நன்னூல் சூத்திரங்களுக்குப் புதுஉரை காண்டல் | 8 : 3, 4 | 1985 |
| 4. | இ. அண்ணாமலை | தொல்காப்பியரது மூன்று மொழிக் கருத்துகள் | 11 : 1-4 | 1988 |
| 5. | ஏ. ஆதித்தன் | தொல்காப்பியரின் இயற்பெயர் கோட்பாடு | 8 : 1, 2 | 1984 |
| 6. | " | தொல்காப்பியரின் இயற்பெயர் கோட்பாடு | 9 : 3, 4 | 1986 |
| 7. | மோ. இசரேயல் | தொல்காப்பியம் - இடைச்சொல் விளக்கம் | 8 : 1, 2 | 1984 |
| 8. | கே.எம். இருளப்பன் | தொல்காப்பியர் கண்ட மொழியியல் உறழ்வு | 4 : 1, 2 | 1980 |
| 9. | தா. ஈசுவரப்பிள்ளை | தொல்காப்பியம் காட்டும் அடிமை நிலை | 13 : 1-4, 14 : 1-4 | 1989-91 |
| 10. | தெ.மீ. காமேஸ்வரி | புள்ளியியலும் தொல்காப்பியமும் | 1 : 3, 4 | 1978 |

| | | | | |
|---|---|---|---|---|
| 11. | செ.வை. சண்முகம் | தொல்காப்பியரின் சொல்லியல் கோட்பாடு | 2 : 1 | 1978 |
| 12. | " | வீரசோழியம் : ஒரு மொழியியல் ஆய்வு | 4 : 1, 2 | 1980 |
| 13. | செ. சிவதாணு | வினைமுற்றுக்கள்-ஒப்பாய்வு: தொல்காப்பியமும் நன்னூலும் | 1 : 4, 5 | 1978 |
| 14. | ஆ. சிவலிங்கனார் | தொல்காப்பியச் சூத்திரம் ஒன்றுக்குப் புத்துரை | 8 : 3, 4 | 1985 |
| 15. | கோ.வி. தாட்சாயணி | இளம்பூரணர் உரைநுணுக்கம் | 4 : 1, 2 | 1980 |
| 16. | " | தொல்காப்பியமும் யாப்பும் | 11 : 1-4 | 1988 |
| 17. | க. திலகவதி | தொல்காப்பியத்தில் நேரமும் காலமும் | 2 : 4 | 1979 |
| 18. | ஆ.கோ. நடராஜன் | யாதன் உருபில் கூறிற்று ஆயினும் | 13 : 1-4, 14 : 1-4 | 1989-91 |
| 19. | க. பாலசுப்பிரமணியன் | தொல்காப்பியமும் பாணினீயமும் : ஓர் ஒப்பாய்வு | 10 : 1-4 | 1987 |
| 20. | மரா. பூபதி | கம்பராமாயணக் கட்டளைக் கலித்துறைகள் | 4 : 1, 2 | 1980 |
| 21. | கு. மீனாட்சி | அஷ்டாத்தியாயிலும் தொல்காப்பியத்திலுமுள்ள இலக்கணக் கோட்பாடுகள் | 3 : 4 | 1980 |
| 22. | " | தொல்காப்பியம் எழுந்ததின் நோக்கம் வரலாற்றுப் பின்னணியில் ஓர் ஆய்வு | 4 : 1, 2 | 1980 |

## III மொழி, மொழியியல் (பொது)

| | | | | |
|---|---|---|---|---|
| 23. | ச. அகத்தியலிங்கம் | மொழியியலும் தமிழும் | 1 : 1, 2 | 1977 |
| 24. | " | உலக அரங்கில் தமிழ் வளர்ச்சியும் பயிற்சியும் | 4 : 1, 2 | 1980 |

| | | | | |
|---|---|---|---|---|
| 25. | கி. அரங்கன் | தமிழ் மொழியியலின் ஆய்வுப் போக்கு | 8 : 3, 4 | 1985 |
| 26. | " | மொழியியலும் மொழிப் பொதுமைகளும் | 9 : 3, 4 | 1986 |
| 27. | வே.சா. அருள்ராஜ் | தமிழ் மலையாளக் கேள்வி வாக்கியங்கள் | 11 : 1-4 | 1988 |
| 28. | மு. அனந்த ராசன் | மொழி இணை மாற்றம் | 3 : 2, 3 | 1979-80 |
| 29. | ஆட்டோ ஜெஸ்பர்ஸன் | 1800-க்கு முன்னர் ஐரோப்பியக் கண்டத்தில் மொழி ஆய்வு (Otto Jesperson-இன் Language, the Nature Development and Origin என்ற நூலின் முதல் அத்தியாயத்தில் 1.1, 1.2 ஆகிய பிரிவுகளின் தமிழாக்கம் - எம். சுசிலா) | 5 : 1 | 1981 |
| 30. | எஸ். ஆரோக்கியநாதன் | மொழியியல் பார்வையில் செப்பேடுகள் | 8 : 1, 2 | 1984 |
| 31. | எஸ். கதிர்மொஹிதீன் | தக்கனி உருதில் தமிழின் செல்வாக்கு | 4 : 1, 2 | 1980 |
| 32. | கி. கருணாகரன் | பலமொழிகளிடையே தமிழ்மொழி வளர்ச்சி | 6 : 2 | 1982 |
| 33. | " | மலாய் மொழியில் சில தமிழ்ச் சொற்கள் | 9 : 1, 2 | 1985 |
| 34. | அ. காமாட்சிநாதன் | பாரதிதாசனும் வடமொழியும்- ஒரு மொழியியற் கண்ணோட்டம் | 10 : 1-4 | 1987 |
| 35. | தெமீ. காமேசுவரி | திராவிட மொழிகளின் கால அட்டவணை : ஒரு புள்ளியியல் அகராதி ரீதியான ஆய்வு | 9 : 3, 4 | 1986 |
| 36. | சா. கிருட்டிணமூர்த்தி | மொழி வளர்ச்சியும் சுவடி பதிப்பித்தலும் - இலக்கணச் சூடாமணி | 13 : 1-4, 14 : 1-4 | 1989-91 |

| | | | | |
|---|---|---|---|---|
| 37. | சு. சக்திவேல் | மானிட மொழியியல் | 3 : 2, 3 | 1979-80 |
| 38. | செ. சண்முகன் | சசூரின் மொழியியல் கோட்பாடு | 6 : 1 | 1982 |
| 39. | செ. சண்முகன் | அமெரிக்க அமைப்பு மொழியியல் கொள்கைகள் ப்ளும் ஃபீல்டின் கருத்துக்கள் | 7 : 1, 2 | 1983 |
| 40. | " | லண்டன் மொழியியல் கோட்பாடு | 6 : 3 | 1983 |
| 41. | " | கோபன்ஹேகன் மொழியியல் கோட்பாடு (யெம்ஸ்லெவின் மொழியியல் கொள்கைகள்) | 7 : 3, 4 | 1984 |
| 42. | செ.வை. சண்முகம் | மொழிச் சங்கங்கள் | 13 : 1-4, 14 : 1-4 | 1989-91 |
| 43. | அ. சாந்தா | இதழ் மொழியும் படி தன்மையும் | 12 : 1, 2 | 1988 |
| 44. | கே. சீனிவாசவர்மா | பிஜினி, கிரியோல் மொழி வகைகள் | 13 : 1-4, 14 : 1-4 | 1989-91 |
| 45. | " | வணிகத் தொடர்பால் தோன்றும் புதுமொழிகள் | 5 : 1 | 1981 |
| 46. | பி.எஸ். சுப்பிரமணியம் | திராவிட மொழிகளின் அமைப்பொற்றுமை (தமிழாக்கம் சுப. திண்ணப்பன்) | 1 : 3, 4 | 1978 |
| 47. | பெ. சுயம்பு | செந்தமிழ் இலக்கணம் | 11 : 1-4 | 1988 |
| 48. | வே. தயாளன், வ. ஜெயா | குறள் மொழி | 13 : 1-4, 14 : 1-4 | 1989-91 |
| 49. | மா.சு. திருமலை | தமிழ் ஆய்வேடுகளில் காணும் சில குறைபாடுகள் | 4 : 1, 2 | 1980 |

| | | | | |
|---|---|---|---|---|
| 50. | எஸ். நடராஜன் | மொழி வளர்ச்சியும் புதிய சொற்பாகுபாடும் | 3 : 1 | 1979 |
| 51. | ஜெ. நீதிவாணன் | வாய்மொழியும் வரைமொழியும் | 4 : 1, 2 | 1980 |
| 52. | எம்.ஏ. நுஃமான் | பத்தொன்பதாம் நூற்றாண்டின் நவீன உரைநடை இயக்கமும் ஆறுமுக நாவலரும் | 11 : 1-4 | 1988 |
| 53. | இரா. பாக்கியலட்சுமி | கல்வெட்டுத் தமிழ்-சில கூறுகள் | 6 : 4 | 1983 |
| 54. | இரா. பாலகிருஷ்ணன் | தமிழ் மொழியின் வளர்ச்சிப் பாதை | 6 : 1 | 1982 |
| 55. | அ. பிச்சை | மொழிவழி பொழுது போக்குகள் | 5 : 4 | 1982 |
| 56. | எஸ். பூபதி | மைதிலி-ஒரு மொழியியல் வரலாறு | 7 : 3, 4 | 1984 |
| 57. | பொன். கோதண்டராமன் | வகைப்பாடும் பெயரீடும் | 3 : 3, 2 | 1979-80 |
| 58. | தெ.பொ. மீனாட்சிசுந்தரன் | இந்திய மொழிகளில் திராவிட மொழிகளின் செல்வாக்கு (Papers of Linguistics and Literature by Prof. T.P. Meenakshi Sundaram Jan/ 1965) தமிழாக்கம் : சா. வளவன்) | 3 : 1 | 1979 |
| 59. | முத்துச்சண்முகன் | தாய்மொழி | 1 : 1, 2 | 1977 |
| 60. | கி. லோகனாதமுத்தரையன் | முதற்சங்கத் தமிழ் : நின்மெய் ஸா அர. | 5 : 4 | 1982 |
| 61. | வி.எஸ். விஜயேந்திரபாஸ் | தமிழக மொழிகள் - ஒரு மதிப்பீடு | 5 : 3 | 1981 |
| 62. | ஷேக் திஜான் இஞ்ஜாய் | தமிழ் ஒலப் - ஓர் ஒப்பிலக்கணம் (தமிழாக்கம் சுப. திண்ணப்பன்) | 1 : 1,2 | 1977 |

## IV எழுத்து, ஒலி

| | | | | |
|---|---|---|---|---|
| 63. | ச. அகத்தியலிங்கம் | எழுத்து முறை-வாழ்வும் வரலாறும் | 2 : 3 | 1979 |
| 64. | ஆறு. அழகப்பன் | தமிழ் எழுத்துக்களில் சீர்திருத்தம் | 2 : 3 | 1979 |
| 65. | க. இரவிசங்கர் | தமிழ் வினாக்களின் ஒலியேற்றம் | 4 : 1,2 | 1980 |
| 66. | " | இசையோட்டமும் உணர்ச்சி வெளிப்பாடும் | 12 : 1,2 | 1988 |
| 67. | என். இராமசாமி | தமிழ் ஒலிகளின் சிறப்பியல்புகள் | 4 : 1,2 | 1980 |
| 68. | " | ஒலியனியல் விதிகள் | 5 : 4 | 1982 |
| 69. | " | ஒலியன் நிலையும் ஒலியனியலும் | 6 : 2 | 1982 |
| 70. | இரா. கிருஷ்ணமூர்த்தி | தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் | 2 : 3 | 1979 |
| 71. | வி. கீதா<br>எஸ். கிருட்டிணமூர்த்தி | செய்கைகள், சொற்களை விட உரக்கப் பேச வல்லவை | 10 : 1-4 | 1987 |
| 72. | ந. குமாரசாமி ராஜா | தமிழ் தந்த உயிர் | 1 : 1,2 | 1977 |
| 73. | கொடுமுடி ச. சண்முகன் | பொறித்தமிழ் | 2 : 3 | 1979 |
| 74. | இரா. சண்முகம் | ஒரு புதிய பார்வை : இன்றைய மொழியியற் கொள்கைகளும் தமிழ் இலக்கிய இலக்கணங்களும் | 3 : 2,3 | 1979-80 |
| 75. | செ.வை. சண்முகம் | தமிழ் எழுத்துக்கள் | 1 : 1,2 | 1977 |
| 76. | " | உலக மொழிகளில் எழுத்துச் சீர்திருத்தம் | 2 : 3 | 1979 |
| 77. | " | பேச்சும் எழுத்தும் | 2 : 3 | 1979 |

| | | | | |
|---|---|---|---|---|
| 78. | சிவப்பிரியா | தமிழ் எழுத்துக்களில் ஆய்தம் | 5 : 2 | 1981 |
| 79. | இ. ஜே. சுந்தர் | திருத்துவோம் தமிழ் எழுத்துக்களை | 2 : 3 | 1979 |
| 80. | கே.வி. தாட்சாயணி | ஒலியும் உணர்வும் | 3 : 2,3 | 1979–80 |
| 81. | வே. தில்லைநாயகம் | தமிழ் எழுத்துச் சீர்மை | 2 : 3 | 1979 |
| 82. | ந. தெய்வசுந்தரம் | தமிழில் எழுத்து வழக்கிற்கும் பேச்சு வழக்கிற்கும் இடையே உள்ள உறவு | 2 : 1 | 1978 |
| 83. | கு. நல்லதம்பி | தமிழ் எழுத்துக்களில் சில மாறுதல்கள் | 2 : 3 | 1979 |
| 84. | T. பர்ரோ | வல்லொலி மெல்லொலி மாற்றம்-சில குறிப்புகள் (தமிழாக்கம் : மா. அய்யாசாமி) | 2 : 1 | 1978 |
| 85. | " | தென் திராவிட மொழிகளின் இகர எகர உகர நகர மாற்றங்கள் (தமிழாக்கம் : மா. அய்யாசாமி) | 2 : 2 | 1978 |
| 86. | " | திராவிட மொழிகளில் சொல் முதல் க-வின் இரு வேறு வளர்ச்சிநிலை (தமிழாக்கம் : மா. அய்யாசாமி) | 3 : 1 | 1979 |
| 87. | இரா. பாலகிருஷ்ணன் | தமிழில் நிறுத்தற் குறிகள் | 2 : 3 | 1979 |
| 88. | பொன். கோதண்டராமன் | தமிழில் எழுத்துச் சீர்திருத்தம் | 2 : 3 | 1979 |
| 89. | கொண்டல் சு. மகாதேவன் | மொழியும் விழியும் | 2 : 3 | 1979 |
| 90. | தெ.பொ. மீனாட்சிசுந்தரன் | தமிழ் எழுத்தும் சீர்திருத்தமும் | 2 : 3 | 1979 |
| 91. | க. முருகையன் | மொழியும் ஒலியும் : உயிரொலிகள் | 1 : 3,4 | 1978 |

| | | | | |
|---|---|---|---|---|
| 92. | ” | தமிழ் ஈருயிர்கள் | 2 : 3 | 1979 |
| 93. | ” | மொழியும் ஒலியும் : உயிரல்லா ஒலிகள் | 9 : 3,4 | 1986 |
| 94. | பெ. ராஜேந்திரன் | தமிழ் எழுத்துக்களின் அமைப்பும் அவற்றைக் கற்றுக் கொடுக்கும் முறைமையும் | 12 : 3,4 | 1989 |

## V சொல்லியல்

| | | | | |
|---|---|---|---|---|
| 95. | ச. அகத்தியலிங்கம் | தன்மை, பன்மை | 2 : 2 | 1978 |
| 96. | ” | சங்கத் தமிழில் தன்மை, ஒருமை | 3 : 1 | 1979 |
| 97. | ” | சங்கத் தமிழில் ஏவல் வினை | 3 : 2,3 | 1979-80 |
| 98. | ” | சங்கத் தமிழில் பலர்பால் | 4 : 3 | 1981 |
| 99. | ” | தமிழில் வினை வகைப்பாடு | 4 : 4 | 1981 |
| 100. | ” | காரண வினை | 5 : 1 | 1981 |
| 101. | ” | எதிர்மறை | 5 : 2 | 1981 |
| 102. | ” | முன் பழந்தமிழும் பின் பழந்தமிழும் | 6 : 2 | 1982 |
| 103. | ” | மாரைக் கிளவி | 7 : 3,4 | 1984 |
| 104. | ” | செய்யாய் என்னும் முன்னிலை வினைச்சொல் | 8 : 1,2 | 1984 |
| 105. | ” | பழந்தமிழில் கால எச்சங்கள் | 9 : 1,2 | 1985 |
| 106. | ” | பழந்தமிழில் கால எச்சங்கள் | 9 : 3,4 | 1986 |

| | | | | |
|---|---|---|---|---|
| 107. | வே.சா. அருள்ராஜ் | சங்க இலக்கியத்தில் வேற்றுமை உருபுகள் - ஓர் ஆய்வு | 2 : 3 | 1979 |
| 108. | " | கருவி வேற்றுமை புதை நிலை அமைப்பு - ஓர் ஆய்வு | 13 : 1-4, 14 : 1-4 | 1989-91 |
| 109. | சு. அழகேசன் | தொல்காப்பிய சங்க இலக்கிய விளி ஓர் ஒப்பீடு | 4 : 3 | 1981 |
| 110. | " | குறிப்பு வினையெச்சம் | 6 : 1 | 1982 |
| 111. | ஏ. ஆதித்தன் | தமிழில் வேற்றுமைகள் | 5 : 1 | 1981 |
| 112. | " | பெயரெச்சக் கொள்கை | 12 : 3,4 | 1989 |
| 113. | எஸ். ஆரோக்கியநாதன் | 'உம்' எனும் இடைச்சொல் | 10 : 1-4 | 1987 |
| 114. | மொ. இசரயேல் | தமிழ் இலக்கண மரபில் துணை வினைகள் | 13 : 1-4, 14 : 1-4 | 1989-91 |
| 115. | க. இராமசாமி | தமிழில் தொடர்பு பதிற் பெயர்கள் | 1 : 3,4 | 1978 |
| 116. | கே.எஸ். கமலேஸ்வரன் | எதிர்மறைப் பெயர்கள் (K.S. Kamaleswaran "A Discussion on Nominal Negation" Seminar on Tamil Linguistics, Annamalai University, 1981) - (தமிழாக்கம்: அ. சித்திரபுத்திரன்) | 4 : 4 | 1981 |
| 117. | ஆ. கார்த்திகேயன் | கூட்டுவினைகளும் அவற்றைக் கண்டறியும் விதிகளும் | 5 : 1 | 1981 |
| 118. | " | வினையாக்கிகள் | 5 : 3 | 1981 |
| 119. | ந. குமாரசாமி ராஜா | தன்மை, முன்னிலைப் பன்மைகள் | 2 : 3 | 1979 |
| 120. | " | புணர்ச்சியில் எண்ணுப்பெயர்கள் | 2 : 2,3 | 1979-80 |
| 121. | இரா. கோதண்டராமன் | முதலடி வினைகள் | 2 : 2 | 1978 |

| | | | | |
|---|---|---|---|---|
| 122. | இரா. கோதண்டராமன் | மள்ளர் கையதை கூர்வாள் | 2 : 4 | 1979 |
| 123. | ” | அறிந்த முகங்களில் அறியாத முகங்கள் | 3 : 2,3 | 1979-80 |
| 124. | செ.வை. சண்முகம் | சங்கத் தமிழில் நேரப் பெயர்கள் (பெரும்பொழுது மட்டும்) | 3 : 4 | 1980 |
| 125. | ” | விரவுப் பெயர்கள் பால் உணர்த்தும் முறை | 5 : 3 | 1982 |
| 126. | ” | திணை-பால் பாகுபாடு | 6 : 1 | 1982 |
| 127. | ” | விரவுத் திணை | 6 : 4 | 1983 |
| 128. | ” | விளிமரபில் விரவுத் திணை | 7 : 3,4 | 1984 |
| 129. | ” | உரிச் சொல் | 8 : 3,4 | 1985 |
| 130. | ” | வினைச்சொற்கள் | 12 : 3,4 | 1989 |
| 131. | ச. சந்திரபோஸ் | பழந்தமிழில் எதிர்மறை எச்சங்கள் | 4 : 3 | 1981 |
| 132. | அ. சித்திர புத்திரன் | வினையெச்சங்கள் | 2 : 1 | 1978 |
| 133. | ” | செயபடுபொருள் குன்றிய/குன்றா வினைகளும் காரண வினைகளும் | 5 : 3 | 1981 |
| 134. | வே. சிதம்பரநாதன் | தமிழில் ஏவல் | 3 : 4 | 1980 |
| 135. | ” | கசவ மொழியில் செய்து வாய்பாட்டு வினையெச்சம் | 4 : 3 | 1981 |
| 136. | ச. சிவகுமார் | தமிழில் பெயர் நிரப்புக் கிளவியங்கள் | 2 : 2 | 1978 |
| 137. | எம். சுசீலா | தமிழில் காரணவாக்கம் | 2 : 2 | 1978 |
| 138. | ” | பழந்தமிழில் தான் பதிலிடு பெயர் | 13 : 1-4,. 14 : 1-4 | 1989-91 |

| | | | | |
|---|---|---|---|---|
| 139. | கோ. சுப்பையா | கூட்டு வினைகள் ஓர் ஆய்வு | 6 : 1 | 1982 |
| 140. | " | வினையடிப் பெயர் | 7 : 1,2 | 1983 |
| 141. | " | கூட்டுப் பெயர் | 8 : 1,2 | 1984 |
| 142. | பி.பெ. சுயம்பு | வியங்கோள் வினை | 6 : 2 | 1982 |
| 143. | " | நேமிநாதம்-ஓர் ஒப்பாய்வு (எழுத்து) | 7 : 3,4 | 1984 |
| 144. | சு. திலகவதி | "தமிழ்த் துணை வினைகள், முதல் வினைகளிலிருந்து தருவிக்கப்படுகின்றன" என்னும் கூற்றிற்கு ஒரு சான்று | 4 : 1,2 | 1980 |
| 145. | ஆ.கோ. நடராஜன் | இடம் மாறிய வேற்றுமை இயல் | 8 : 1,2 | 1984 |
| 146. | பொன். கோதண்டராமன் | தன்வினை - பிறவினை | 1 : 1,2 | 1977 |
| 147. | " | அடிநிலைக் கிளவிக் கோட்பாடு | 3 : 1 | 1979 |
| 148. | " | 'இ' என்ற வினையாக்க விகுதி | 4 : 1,2 | 1980 |
| 149. | சு. மகாலட்சுமி | இலக்கண நூற்களில் பெயர்ச்சொற்களின் பாகுபாடு | 11 : 1-4 | 1988 |
| 150. | சி. மகேசுவரன் | தமிழில் 'ஆக' | 3 : 4 | 1980 |
| 151. | " | தற்காலத் தமிழ் மொழியில் உளப்பாட்டு, வேறுபாட்டுத் தன்மை, பன்மை வேறுபாடுகள் விகுதியிலும் காணப்படுகின்றனவா? | 9 : 1,2 | 1985 |
| 152. | பெ. மாதையன் | வினையெச்ச வாய்பாடுகள் | 2 : 2 | 1978 |
| 153. | " | நேரக்கிளவியும், வினையெச்சமும் | 4 : 4 | 1981 |
| 154. | " | தேம்பாவணியில் செயவென் எச்சம் | 6 : 2 | 1982 |

| | | | | |
|---|---|---|---|---|
| 155. | தெ.பொ. மீனாட்சிசுந்தரன் | திராவிட மொழிகளில் 'பால்' அமைப்பின் வரலாறும் வளர்ச்சியும் ('The History and Development of Gender in the Dravidian Languages', Papers on Linguistics and Literature, 1965 தமிழாக்கம் : சா. வளவன்) | 5 : 1 | 1981 |
| 156. | முத்துச்சண்முகன் | இக்காலத் தமிழில் கூட்டுவினைகள் | 9 : 3,4 | 1986 |
| 157. | தி. முருகரத்தனம் | பழந்தமிழில் உந்தீறு | 4 : 1,2 | 1980 |
| 158. | வீ. ரேணுகாதேவி | தமிழில் துணைவினைகள் | 7 : 3,4 | 1984 |
| 159. | " | தமிழில் வினையடைகள் | 10 : 1-4 | 1987 |
| 160. | உ. ஜான்ஸி பியூலா | தமிழில் வினாச்சொற்கள் | 2 : 3 | 1979 |
| 161. | எஸ். ஜீன் லாறன்ஸ் | பணிய மொழியில் வேற்றுமை | 4 : 4 | 1981 |
| 162. | எஸ். ஜெயபால் | பெட்டக்குறும்ப மொழியில் வினைப் பகுப்பும் காலங்காட்டும் இடைநிலைகளும் | 1 : 3,4 | 1978 |
| 163. | " | பெட்டக்குறும்ப மொழியில் வேற்றுமை | 3 : 4 | 1980 |
| 164. | என். ஜோசப் | தமிழ் மொழியில் துணைவினைகளின் பங்கு | 3 : 4 | 1980 |

## VI மாற்றிலக்கணம்

| | | | | |
|---|---|---|---|---|
| 165. | கி. அரங்கன் | அமைப்பு மொழியியலும், மாற்றிலக்கணமும் | 13 : 1-4, 14 : 1-4 | 1989-91 |
| 166. | த. செல்லமுத்து | மாற்றிலக்கணப் போராட்டம் | 10 : 1-4 | 1987 |
| 167. | மு. ஞானம் | மூவிடப் பிரதிப்பெயர்கள் வேறுபாடு | 4 : 3 | 1981 |

| | | | | |
|---|---|---|---|---|
| 168. | ஆ.கோ. நடராசன் | அதனோடியைந்த வேறுவினைக் கிளவி | 12 : 1,2 | 1988 |
| 169. | ப. பத்மநாபப்பிள்ளை | மாற்றிலக்கண விதிகளின் வரன்முறை | 4 : 4 | 1981 |
| 170. | " | தானாக்கமும் தற்சுட்டாக்கமும் | 6 : 2 | 1982 |
| 171. | அ. பிச்சை | மாற்றிலக்கணமும் யாப்பியலும் | 4 : 3 | 1981 |
| 172. | ச. வையாபுரிப் பிள்ளை | முன்னிலைப்பெயர் | 10 : 1-4 | 1987 |

## VII தொடரியல்

| | | | | |
|---|---|---|---|---|
| 173. | தஞ்சை பா. இறையரசன் | வாசிப்பது சரியா? | 6 : 1 | 1982 |
| 174. | இரா. கோதண்டராமன் | செத்துப்போன சொத்து | 1 : 1,2 | 1977 |
| 175. | " | பயனிலை : அகமும் புறமும் | 4 : 1,2 | 1980 |
| 176. | " | தமிழ் தொடரனில் உள் வினைகள் | 9 : 1,2 | 1985 |
| 177. | " | தமிழ் தொடரனில் உள் வினைகள் | 9 : 3,4 | 1986 |
| 178. | செ. சண்முகன் | நடையும் அழுகல் தொடர்களும் | 12 : 3,4 | 1989 |
| 179. | எம். சுசீலா | படர்க்கை இடப்பெயர் தான், அதன் தொடரியல் பண்புகள் | 3 : 2,3 | 1979-80 |
| 180. | " | சுழற்சிமுறையும் 'தான்' பிரதிப்பெயராக்கமும் | 4 : 3 | 1981 |
| 181. | எம். சுசீலா சேகரன் | முன் பழந்தமிழில் பெயரெச்சத் தொடர்கள் | 12 : 1,2 | 1988 |
| 182. | " | முன் பழந்தமிழில் நிரப்பியத் தொடர்கள் | 12 : 3,4 | 1989 |
| 183. | க. சுசீலாபாய் | தமிழில் நேர்க்கூற்றும் அயற்கூற்றும் | 4 : 1-2 | 1980 |
| 184. | சி. சுப்பிரமணியன் | வேற்றுமைத் தொடர் | 1 : 1,2 | 1977 |

| | | | | |
|---|---|---|---|---|
| 185. | சி. சுப்பிரமணியன் | ஆகுபெயரும் சொற்றொடரும் | 4 : 3 | 1981 |
| 186. | ப. பத்மநாபபிள்ளை | தமிழில் பின்னோக்குப் பிரதிப் பெயராக்கம் | 4 : 1,2 | 1980 |
| 187. | " | பதிலிடு பெயராக்கத் தடைவு | 5 : 1 | 1981 |
| 188. | " | தற்சுட்டு பதிலிடு பெயர் நீக்கம் | 5 : 3 | 1982 |
| 189. | இரா. பாக்கியலட்சுமி | கல்வெட்டுத் தமிழில் தொடரியல் அமைப்பு | 11 : 1-4 | 1988 |
| 190. | இரா. பாலகிருஷ்ணன் | தொடர் மொழியியல் பொருள்நிலை | 3 : 2,3 | 1979-80 |
| 191. | முத்துச் சண்முகன், தாமஸ் லேமன் | இக்காலத் தமிழில் கலப்பு வாக்கியங்கள் (Complex sentence) | 7 : 1,2 | 1983 |
| 192. | " | இக்காலத் தமிழில் கலப்பு வாக்கியங்கள் | 7 : 3,4 | 1984 |
| 193. | " | இக்காலத் தமிழில் எடுத்துக்கூறுதல் | 9 : 1,2 | 1985 |
| 194. | அரங்க. வாசு | வினையெச்சம் கொண்டு செய்யப்படும் கலப்பு வாக்கியங்களில் ஒரு விலக்கு | 9 : 1,2 | 1985 |

## VIII சொல்லாய்வு

| | | | | |
|---|---|---|---|---|
| 195. | ஆ. கார்த்திகேயன் | தேசிகத்திரு | 13 : 1-4, 14 : 1-4 | 1989-91 |
| 196. | இரா. கோதண்டராமன் | அற்றாங்கு | 13 : 1-4, 14 : 1-4 | 1989-91 |
| 197. | தெ.பொ. மீனாட்சிசுந்தரன் | தமிழ்ச்சொல் ('The Tamil word', Papers on Linguistics and Literature, Annamalai University, 1965; தமிழாக்கம் : சா. வளவன்) | 5 : 2 | 1981 |

## IX பொருளியல்

| | | | | |
|---|---|---|---|---|
| 198. | மா. கணேசன் | மேடைப்பேச்சில் பொருள் விளக்கம் | 4 : 1,2 | 1980 |
| 199. | கி. கருணாகரன்,<br>செ. சண்முகன் | பொருளடக்கத் தொடர்ச் சொற்கள் | 11 : 1-4 | 1988 |
| 200. | வ. குருநாதன் | பல பொருள் ஒரு சொல் | 13 : 1-4, 14 : 1-4 | 1989-91 |
| 201 | எச். சித்திரபுத்திரன் | சங்கத்தமிழ் உறவுமுறைச் சொற்பொருண்மை | 13 : 1-4, 14 : 1-4 | 1989-91 |
| 202. | தங்கமணியன் | சொல்லும் பொருளும் | 9 : 1, 2 | 1985 |
| 203. | எஸ். பாக்கியலட்சுமி | கால அளவையும் பொருண்மையும் | 6 : 1 | 1982 |

## X கிளைமொழியியல்

| | | | | |
|---|---|---|---|---|
| 204. | இ. அண்ணாமலை | எளிமையாக்கம் : புதுமையாக்கத்தின் ஒரு முறை | 4 : 1, 2 | 1980 |
| 205. | கு. அண்ணாதுரை | நேரப்பாகுபாடு (கல்வராயன் மலைவாழ் மக்கள் பேச்சில்) | 2 : 2 | 1978 |
| 206. | " | தமிழ்நாட்டில் எழுத்தறிவுத் திட்டங்கள் | 13 : 1-4, 14 : 1-4 | 1989-91 |
| 207. | எஸ். ஆரோக்கியநாதன் | வானொலித் தமிழ் : ஓர் அறிமுகம் | 4 : 1, 2 | 1980 |
| 208. | " | பெயரைச் சொல்லலாமா | 6 : 4 | 1983 |
| 209. | " | கிளைமொழியும் பொது பேச்சுத் தமிழும் | 9 : 1, 2 | 1985 |
| 210. | மு. ஆனந்தராசன் | சமூகத் தொடர்பும் மரியாதையும் - நடத்துநர்களின் மொழிப்பயன்பாடு | 4 : 1, 2 | 1980 |
| 211. | ச. இராதாகிருஷ்ணன் | கல்லாதவர்களின் பேச்சுத் தமிழில் ஆங்கிலச் சொற்களின் நிலை | 4 : 1, 2 | 1980 |
| 212. | தா. இராபர்ட் சத்தியசோசப் | உறவுமுறை அமைப்பு மொழிக்குடும்பம் | 13 : 1-4, 14 : 1-4 | 1989-91 |

| | | | | |
|---|---|---|---|---|
| 213. | சி. ஏசுதாசன் | பேச்சுத்தமிழ் - இலங்கையிலும், தமிழகத்திலும் | 2 : 4 | 1979 |
| 214. | " | மொழி வேறுபாட்டின் கோட்பாடுகள் | 3 : 4 | 1980 |
| 215. | " | மொழி வேறுபாட்டுக் கொள்கையின் சமூகக்காரணிகள் | 5 : 1 | 1981 |
| 216. | கி. கருணாகரன் | மொழித்தழுவல் | 2 : 1 | 1978 |
| 217. | " | எளிமையாக்கம் : புதுமையாக்கத்தின் ஒரு முறை | 4 : 1, 2 | 1980 |
| 218. | " | மலைநாட்டில் மக்கள் தமிழ் | 8 : 1, 2 | 1984 |
| 219. | " | கல்வி ஆட்சித் துறைகளில் தமிழ்ப் பயன்பாடு (சமுதாய மொழியியல் நோக்கில்) | 13 : 1-4, 14 : 1-4 | 1989-91 |
| 220. | சி. சக்திவேல் | தமிழ் வழக்குகள் | 5 : 4 | 1982 |
| 221. | மு. சிவக்குமார் | பேச்சுத் தமிழில் ஆங்கிலச் சொற்களின் ஆதிக்கம் | 9 : 3, 4 | 1986 |
| 222. | கோ. சீனிவாசவர்மா | கிளைமொழிகள், வேறுபடும் முறைகள் | 2 : 3 | 1979 |
| 223. | " | கிளைமொழியியல் : கிளைமொழி அகராதி | 4 : 1, 2 | 1980 |
| 224. | வ. ஞானசுந்தரம் | பொதுப் பேச்சுத் தமிழ் : அதில் இருநிலையின் பங்கு | 3 : 2, 3 | 1979-80 |
| 225. | " | மொழியும் நிலைபேறாக்கமும் | 4 : 1, 2 | 1980 |
| 226. | மு. ஞானம் | மொழிநடை - பாகுபாடுகளும் வெளிக்கொணரும் முறைகளும் | 2 : 3 | 1979 |
| 227. | ந. தெய்வசுந்தரம் | தமிழ்ச் சிறுகதைகளில் இரட்டை வழக்கு | 4 : 1, 2 | 1980 |
| 228. | ந. நடராச பிள்ளை, ச. விமலா | வழக்கு வேறுபாடுகள் - வழக்கு இலக்கியங்கள் - வழக்கிலக்கிய எழுத்துக்கூட்டங்கள் | 8 : 1, 2 | 1984 |

| | | | | |
|---|---|---|---|---|
| 229. | ஜீ.வி. நடராசன் | பஸ்தா மாவட்டத்துக் கோண்டிக் கிளைமொழிகள் | 2 : 1 | 1978 |
| 230. | பெ. பெருமாள்சாமி | பெரியபுராணத்தில் விகுதிகள் பயன்பாடும் சமுதாயநிலை புலப்பாடும் | 12 : 1, 2 | 1988 |
| 231. | பொன். கோதண்டராமன் | தெருக்கூத்து மொழிநடை | 7 : 1, 2 | 1983 |
| 232. | க. மகாலிங்கம் | சமுதாய வட்டாரத் தமிழ்க் கிளைமொழிகள் ஆய்வின் அணுகுமுறைகளும் பிரச்சினைகளும் | 7 : 3, 4 | 1984 |
| 233. | ச. மனோகரன் | சாதிக் கிளைமொழியா? சமூகக் கிளைமொழியா? | 4 : 1, 2 | 1980 |
| 234. | தெ.பொ. மீனாட்சிசுந்தரன் | மொழியில் பிரதிபலிக்கும் சமுதாயக் கூறுகள் | 3 : 4 | 1980 |
| 235. | " | பேச்சு மொழியின் இலயமும் பாரதி கூட்டிய பெருமையும் ("The Rhythem of the Common Speech - Its glorification by Bharathri" - Papers on Linguistics and Literature, Annamalai University, 1965) (தமிழாக்கம்: சா. வளவன்) | 4 : 1, 2 | 1980 |
| 236. | பி. முத்துசாமிப் பிள்ளை | குறிமாற்றமும் குறிகாத்தலும் | 3 : 1 | 1979 |
| 237. | கே.வி. ராஜகுமாரி | சென்னை மீனவர் கிளைமொழியில் வேற்றுமை உருபுகள் | 3 : 2, 3 | 1979-80 |
| 238. | சா. வளவன் | 'சூரசம்ஹாரம்' நாவலில் காணும் இலங்கைத் தமிழ் | 5 : 3 | 1981 |

## XI நடையியல்

| | | | | |
|---|---|---|---|---|
| 239. | அ. ஆலிஸ் | கருத்தோட்டத்தில் நடையியற் கூறுகளின் பங்கு | 13 : 1-4, 14 : 1-4 | 1989-91 |

| | | | | |
|---|---|---|---|---|
| 240. | தெ. மீ. காமேசுவரி | கம்பராமாயணத்தில் நடையியலின் சிறப்புத் தன்மை பற்றிய அளவீடு | 11 : 1-4 | 1988 |
| 241. | ஜே. நீதிவாணன் | தமிழ் நடையியற் போக்குகள் - சில சிந்தனைகள் | 8 : 3, 4 | 1985 |

## XII மொழிகற்றல் / கற்பித்தல்

| | | | | |
|---|---|---|---|---|
| 242. | கி. அரங்கன் | இலக்கண அறிவும் கருத்துப் புலப்படுத்தலும் | 12 : 1, 2 | 1988 |
| 243. | மோ. இசரயேல் | உயர்நிலைப் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு இலக்கணம் கற்பித்தல் | 8 : 3, 4 | 1985 |
| 244. | க. இராசாராம் | கல்லூரி நிலையில் மொழி அறிவின் அளவும் பாடத் திட்டமும் | 8 : 1, 2 | 1984 |
| 245. | கோ. சங்கரநாராயணன் | தமிழ் பயிற்றல் | 3 : 2, 3 | 1979-80 |
| 246. | இராம. சுந்தரம் | தமிழ் கற்பித்தல் - சில சிக்கல்கள் | 3 : 1 | 1979 |
| 247. | கோ. சுப்பையா | உயர்நிலைப் பள்ளி, கல்லூரிகளில் இலக்கணம் கற்பித்தல் | 9 : 1, 2 | 1985 |
| 248. | இரா. திருமுருகன் | இன்றைய மாணவர் இலக்கணத்தை வெறுப்பதேன்? (இடைநிலை, உயர்நிலை, மேனிலை வகுப்புகளில்) | 8 : 3, 4 | 1985 |
| 249. | ந. நடராச பிள்ளை | மாற்றிலக்கணமும் மொழி பயில்தலும் | 2 : 1 | 1978 |
| 250. | " | மொழித்திறனும் மொழி பயில்தலும் | 2 : 4 | 1979 |
| 251. | " | உளவியலும் மொழியியல் கோட்பாடும் | 3 : 2, 3 | 1979-80 |
| 252. | " | தேர்வுக் கட்டுப்பாடுகளும் மொழிக் கற்பித்தலும் | 4 : 1, 2 | 1980 |

| | | | | |
|---|---|---|---|---|
| 253. | ந. நடராச பிள்ளை | வழக்கு வேறுபாடுகளும் இரண்டாம் மொழி பயில்தலில் மொழித்திறனின் பாங்கும் | 4 : 4 | 1981 |
| 254. | " | மொழிச் செயலூக்கி : மறைந்து போன தொடர்ச்சங்கிலி | 6 : 4 | 1983 |
| 255. | " | தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பிக்கும்போது எதிர்ப்படும் இடர்ப்பாடுகள் | 8 : 3, 4 | 1985 |
| 256. | " | உரையாடல் கூறுகளும் திறனும் | 13 : 1-4, 14 : 1-4 | 1989-91 |
| 257 | ந. நடராசபிள்ளை, ச. விமலா | தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பவர்களின் பிழைகள் : ஓர் ஆய்வு | 5 : 2 | 1981 |
| 258. | ந. நடராசபிள்ளை, விமலா நடராசன் | இரண்டாம் மொழிப்பயிற்றலில் கவிதை | 6 : 2 | 1982 |
| 259. | எம். ஏ. நுஃமான் | பேச்சுத்தமிழ் பற்றிய மனப்பாங்குகளும் ஆரம்ப வகுப்புகளின் தமிழ்மொழி கற்பித்தலும் - மூன்று அணுகுமுறைகள் | 8 : 1, 2 | 1984 |
| 260. | " | மொழிமாற்றமும் மொழிகற்பித்தலும் | 12 : 1, 2 | 1988 |
| 261. | மு. பாலகுமார் | கணிப்பொறியும் மொழி பயிற்றுதலும் - ஒரு கண்ணோட்டம் | 10 : 1-4 | 1987 |
| 262. | தெ.பொ. மீனாட்சிசுந்தரன் | தமிழ் இலக்கணம் கற்பித்தல் (Prof. T.P. Meenakshi Sundaram Sixty First Birthday Commemoration Volume 'The Teaching of Tamil Grammar'), (தமிழாக்கம்: எம். சுசீலா) | 5 : 4 | 1982 |
| 263. | பா. வீரப்பன் | இருமொழிக் கல்வி | 8 : 1, 2 | 1984 |

## XIII மொழிபெயர்ப்பு, கலைச்சொல்

| | | | | |
|---|---|---|---|---|
| 264. | கே.வி. இராஜகுமாரி | மீனவர் தமிழில் கலைச்சொற்கள்-ஓர் ஒப்பாய்வு | 4 : 1, 2 | 1980 |
| 265. | ஏ. இராசேந்திரன் | தமிழில் சொல்லாக்கம் | 13 : 1-4, 14 : 1-4 | 1989-91 |
| 266. | கி. கருணாகரன் திருமதி. வ. ஜெயா | தமிழில் புதுச்சொல்லாக்கம் | 9 : 3, 4 | 1986 |
| 267. | ஆ. கார்த்திகேயன் | தமிழில் சொல்லாக்கம் | 4 : 4 | 1981 |
| 268. | ஆ. கார்த்திகேயன் | நெசவுத்தொழிற் சொற்கள் மொழியியல் ஆய்வு | 9 : 1, 2 | 1985 |
| 269. | செ.வை. சண்முகம் | கலைச் சொல்லாக்கமும் தரப்பாடும் | 10 : 1-4 | 1987 |
| 270. | | தமிழ்க்கலைச்சொல்லாக்க நெறிமுறைகளின் ஒரு வரலாற்று அளவீடு | 11 : 1-4 | 1988 |
| 271. | கோ. சீனிவாசவர்மா | வட்டார வழக்கில் வேளாண் கலைச்சொற்கள் | 3 : 2, 3 | 1979-80 |
| 272. | இராம. சுந்தரம் | அறிவியல் இலக்கியத் தமிழாக்கம் | 12 : 3, 4 | 1989 |
| 273. | கோ. சுப்பையா | மொழிபெயர்ப்பில் காணும் சில சிக்கல்கள் | 13 : 1-4, 14 : 1-4 | 1989-91 |
| 274. | இரா. பானுமதி | வங்க மொழியிலிருந்து சொல் விளையாட்டுக்களை மொழிபெயர்க்கும்போது ஏற்படும் மொழியியல் பிரச்சினைகள் | 10 : 1-4 | 1987 |
| 275. | | மரபுத் தொடர்களை மொழிபெயர்க்கும்போது ஏற்படும் சில பிரச்சனைகள் | 12 : 3, 4 | 1989 |
| 276. | சி. மகேசுவரன் | கள் இறக்குவோர் பேச்சில் கலைச்சொற்கள் | 5 : 2 | 1981 |

| | | | | |
|---|---|---|---|---|
| 277. | மு. முருகேசன் | விவசாயத் தொழில் கலைச்சொற்கள் - ஓர் ஆய்வு (புதுவை, காரைக்கால் பகுதிகள்) | 9 : 1, 2 | 1985 |
| 278. | " | விவசாயத் தொழில் கலைச்சொற்கள் - ஓர் ஒப்பாய்வு | 9 : 3,4 | 1986 |

## XIV கணினி மொழியியல்

| | | | | |
|---|---|---|---|---|
| 279. | அ. பிச்சை | கணிப்பொறி மொழியியல் | 9 : 1, 2 | 1985 |
| 280. | ஆர். வாசு | கணிப்பொறியின் மொழி உணர்திறன் | 12 : 1-4 | 1988 |

## XV அகராதி/நிகண்டு/கலைக்களஞ்சியம்

| | | | | |
|---|---|---|---|---|
| 281. | இ. அண்ணாமலை | மொழிப் புதுமையாக்கத்தில் அகராதியின் பங்கு | 13 : 1-4, 14 : 1-4 | 1989-91 |
| 282. | தெ.மீ. காமேஸ்வரி | தொல்காப்பியரும் அகராதியும் | 2 : 4 | 1979 |
| 283. | மா. சற்குணம் | திராவிட மொழிகளில் நிகண்டுகள் | 9 : 1, 2 | 1985 |
| 284. | இரா. பாலகிருஷ்ணன் | தமிழ்ச்சொற் களஞ்சியத்தில் நிலையாக்கம் | 2 : 3 | 1979 |
| 285. | க. பாலசுப்பிரமணியன் | வரலாற்றுமுறைத் தமிழ்ப் பேரகராதிக்குப் பின்புலப் பணிகள் | 13 : 1-4, 14 : 1-4 | 1989-91 |
| 286. | பெ. மாதையன் | அகராதிச் சொற்கள் | 11 : 1-4 | 1988 |
| 287. | " | க்ரியா அகராதி - பெயரடை, வினையடைப் பதிவுகள் | 13 : 1-4, 14 : 1-4 | 1989-90 |
| 288. | து. மூர்த்தி | கலைக்களஞ்சிய உருவாக்கம் - சில அடிப்படைக் குறிப்புகள் | 6 : 4 | 1983 |

## XVI ஊர்ப்பெயராய்வு

| | | | | |
|---|---|---|---|---|
| 289. | எஸ். ஆரோக்கியநாதன் | மொழியியலும் இடப்பெயர் ஆய்வும் | 9 : 3, 4 | 1986 |
| 290. | மு. முருகேசன் | பாகூர் - ஊர்ப்பெயராய்வு | 10 : 1-4 | 1987 |

## XVII அறிவியல் தமிழ்

| | | | | |
|---|---|---|---|---|
| 291. | செ.வை. சண்முகம் | அறிவியல் தமிழ்ப்பாடம் | 9 : 3, 4 | 1986 |

# தமிழ்க்கலை

**1983** மோ. தமிழ்மாறன்

தமிழியல் ஆய்வு வரலாற்றில் இன்றைய காலகட்டம் குறிப்பிடத்தக்கது. பண்டைய இலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள், காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள், இக்கால இலக்கியங்கள்/தற்கால இலக்கியங்கள், இலக்கணம் என்பன குறித்தே ஆய்வுகளை மேற்கொண்டிருந்த சூழல் மாறி, சமூகவியல், பண்பாட்டியல், மானிடவியல், கல்வெட்டியல், தொல்லியல், இதழியல் போன்ற பல்துறை கூட்டாய்வுகளை (Inter-Disciplinary) இன்றைய தமிழாய்வு உலகில் பலர் மேற் கொள்ளத் தொடங்கியுள்ளனர். அவற்றுள்ளும் இதழியல் குறித்த ஆய்வுச் சிந்தனைகளும் விழிப்புணர்வும் முன்னெப்போதுமில்லாத அளவிற்கு இப்போது தமிழிலக்கியக் கல்வியாளர்களிடையே பெருகிவருவது வரவேற்கத்தக்க நிகழ்வாகும்.

> சாதி, சமய, சமூக உணர்வில் ஆழ்ந்து கிடந்தவர் களையெல்லாம் 'தமிழ் இதழ் உலகம்' தட்டி யெழுப்பி, அவர்களைக் (அவர்கள்) குறிப்பிட்ட சிறுவட்டத்துக் குள்ளே சுழன்று வருவதைத் தடுத்து நிறுத்தி, உலகளாவிய பெரிய வட்டத்திற்குள் அவர்களை அடியெடுத்து வைக்கும்படி செய்துள்ளது. மேலும், மெத்த படித்தவர்களே எதையும் எழுத முடியும்; எப்படியும் எழுத முடியும் என்ற நிலையை மாற்றி அறிவு வேட்கை கொண்டு ஆர்வமிகுதியினால் உந்தப்பட்டு எழுதத் துடிக்கும் எவரையும் வாய்ப்புக் கொடுத்து, அது எழுத்துத் துறையில் ஈடுபடச் செய்துள்ளது. மற்றும், பல வகுப்பினரின் தனி நடையைக் குறைத்து, பல வட்டாரச் சொற்கள் விரவுவதைத் தடுத்துத் தமிழ் மக்கள் அனைவரும் - தமிழ் தெரிந்த அனைவரும் உணர்ந்து கொள்ளும் பொதுநடை வளர வழி வகுத்துக் கொடுத்துள்ளது' என்று தமிழ் இதழ்களால் கிட்டிய பயனைப் பற்றிக் குறிப்பர்.

## தமிழ் இலக்கியமும் இதழ்களும்

ஏறத்தாழ நூற்று எழுபது ஆண்டை நெருங்கிக் கொண்டிருக்கும் தமிழ் இதழியல் வரலாற்றில், தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் தமிழாய்வுகளின் பரவலுக்கும் தமிழ் இதழ்கள் ஆற்றிய பணிகள் குறிப்பிடத்தக்கனவாகும்.

விடுதலைக்கு முந்தைய காலகட்டத்தில் இருந்தே தமிழிலக்கியத்தின் செழுமைக்கும் தமிழாய்வின் வளர்ச்சிக்கும் பல இதழ்கள் துணைபுரிந்துள்ளன. நவீன தமிழிலக்கியத்தில் குறிப்பிடத்தக்க வடிவங்களாகிய சிறுகதை, புதினம் போன்றவற்றை விவேகசிந்தாமணி, மணிக்கொடி போன்ற இதழ்கள் பெருமளவில் வளர்த்தன. மணிக்கொடி எழுத்தாளர்கள் என்றே சுட்டப்படும் அளவிற்கு மிகச்சிறப்பான படைப்பிலக்கிய வாணர்களை உருவாக்கிய பெருமை மணிக்கொடி இதழுக்கு உண்டு. இதைப் போலவே தமிழாராய்ச்சிக்கு முதன்மை கொடுத்து வெளிவந்த இதழ்களாகச் செந்தமிழ் (1903), செந்தமிழ்ச் செல்வி (1923), தமிழ்ப்பொழில் (1925) ஆகியவற்றைக் குறிப்பிடலாம். செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி, தமிழ்ப்பொழில் போன்றவை இலக்கிய இதழ்கள் என்று அண்மைக்காலத்தில் இதழியல் தொடர்பான நூல்கள் எழுதியோரால் குறிக்கப்பெற்றாலும், அவை ஆராய்ச்சி இதழ்களாக விளங்கின எனலாம். இவ்விதழ்களில் இடம்பெற்ற கட்டுரைகள் ஆராய்ச்சி நெறிமுறைகளுக்கு உட்பட்ட, புறநிலை சார்ந்த (Objective) அறிவியல் அடிப்படையிலான அணுகு முறையில் அமைந்தவை என்று கூறமுடியாவிட்டாலும், தொடக்க நிலை ஆய்வுப்போக்கைக் காட்டுவனவாக இருந்தன என்று குறிப்பிடலாம். இலக்கணம், இலக்கியம், பழந்தமிழ்ப் புலவர்கள் பற்றிய அறிமுகம், இலக்கியம் தோற்றம் பெற்ற காலம் குறித்த ஆராய்ச்சி முதலியனவாக அக்கட்டுரைகள் அமைந்திருந்தன. சுருக்கமாகச் சொன்னால் இலக்கியம் தொடர்பான அறிஞர்தம் கருத்துக்களை வெளியிட உதவும் விவாத மேடைகளாக மேற்சுட்டிய இதழ்கள் விளங்கின எனலாம்.

இத்தகைய இதழ்களின் வளர்ச்சி நிலைகளாக ஆராய்ச்சி இதழ்கள் பல தோற்றம் பெற்றன. அவற்றுள் ஆராய்ச்சி, தமிழியல், மொழியியல், புலமை, நாட்டுப்புறவியல், ஆவணம், வரலாறு, கல்வெட்டு, களஞ்சியம், தமிழ்க்கலை ஆகியன குறிப்பிடத்தக்கன. இக்கட்டுரை, 'தமிழ்க்கலை' எனும் இதழ் பற்றிய ஆய்வை மேற்கொள்கிறது.

தஞ்சையில் அமைந்துள்ள தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் வெளியீடே 'தமிழ்க்கலை' ஆகும். இது பதிவு செய்யப்பெற்ற காலாண்டிதழ் ஆகும். தமிழ்க்கலை இதழின் உள்ளடக்கம் குறித்து,

> தமிழ்க்கலை என்னும் இக்காலாண்டு ஆய்விதழில் தமிழ் பேசும் நல்லுலகில் வாழும் மக்கள் அனைவருடைய பண்பாட்டு இயல்புகள், சிக்கல்கள், சமூகவியல் முதலியவற்றைப் பற்றியும், தமிழ்மொழி, இலக்கியம், வரலாறு, கோயில் கட்டடக்கலை, கல்வெட்டியல், மொழிபெயர்ப்பியல், சிற்பவியல், நடனவியல், நாடகவியல், ஓவியவியல், இசையியல், தொல் அறிவியல், சித்த மருத்துவவியல், மொழியியல் மற்றும் தமிழ் தொடர்பான பிற பண்பாட்டுக் கூறுகள் பற்றிய ஆய்வுக் கட்டுரைகள், குறிப்புகள், மதிப்புரைகள், அறிக்கைகள் ஆகியன இடம்பெறும்[2]

என்று அதன் முதல் இதழ் குறிப்பிடுகிறது.

## இதழின் வரலாறும் அமைப்பும்

தமிழ்க்கலை எனும் தமிழியல் காலாண்டு ஆய்விதழின் முதல் இதழ் மார்ச்சு 1983இல் வெளிவந்தது.

இராயல் கிரௌன் அளவு அதாவது ஏ-4 (A-4) வடிவில் வெளிவந்த இவ்விதழ் 100 பக்கங்களுக்குக் குறையாத பக்க வரையறையைக் கொண்டுள்ளது. ஒவ்வோராண்டும் மார்ச்சு, ஜூன், செப்டம்பர், டிசம்பர் மாதங்களில் வெளிவரும் என்று அறிவிக்கப் பெற்ற இவ்விதழ், முதலாமாண்டு மட்டும் சரியான கால அளவில் 4 இதழ்களாக வெளிவந்தது.

## ஆசிரியர் குழு

இதழ் தொடங்கப்பெற்ற முதலாம் ஆண்டில் பதிப்பாசிரியராக, சு. செல்லப்பன் அவர்களும், ஆசிரியர் குழு உறுப்பினர்களாக, திரு. ஜி.ஆர். தாமோதரன் (கோயம்புத்தூர்), திரு. கா. மீனாட்சிசுந்தரம் (சென்னை), திரு. க. வெள்ளைவாரணன் (தஞ்சாவூர்), திரு. க. ஆறுமுகம் (புதுதில்லி), திரு. என். பாலுசாமி (அண்ணாமலை நகர்), கவிஞர் சுரதா (சென்னை), திரு. கி.வ. ஜகந்நாதன் (சென்னை) ஆகியோரும் பொறுப்பேற்றிருந்தனர்.[3]

இரண்டாமாண்டு (1984) முதல் ஆறாம் ஆண்டு வரை (1988) தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் பதிப்புத்துறை இயக்குநர் அவர்கள்

'செயற்படுத்து ஆசிரியர்' (Editor) என்ற பொறுப்பிலும், து. சீனிச்சாமி, சு. இராசாராம், மு. இராமசாமி ஆகியோர் ஆசிரியர் குழு என்ற பொறுப்பிலும், ஜி.ஆர். தாமோதரன், கா. மீனாட்சிசுந்தரம், க. வெள்ளைவாரணன், க. ஆறுமுகம், என். பாலுசாமி, கவிஞர் சுரதா. கி.வ. ஜகந்நாதன் ஆகியோர் சிறப்பாசிரியர் குழு என்ற பொறுப்பிலும் இருந்து தமிழ்க்கலையை வெளியிட்டுள்ளனர்.[4]

பதினோராம் ஆண்டு வரை வெளிவந்துள்ள இதழ்களுக்குச் சிறப்பாசிரியர் குழு என்ற நிலையில் யாரும் அமர்த்தப் பெறவில்லை. பதிப்புத்துறை இயக்குநரைப் பதிப்பாசிரியராகவும், சோ.ந. கந்தசாமி, து. சீனிச்சாமி, த.கோ. பரமசிவம், த. பத்மநாபன் ஆகியோரை ஆசிரியர்குழு உறுப்பினர்களாகவும் கொண்டு இவ்விதழ் வெளிவந்துள்ளது.[5]

சிறப்பாசிரியர் குழு உறுப்பினர்களோ செயற்படுத்தும் ஆசிரியர் எனப்படும் பதிப்பாசிரியரோ இவ்விதழில் வெளியிடப் பெற்ற கட்டுரைகள் தொடர்பான பணிகளை மேற்கொள்ள வில்லை. ஆசிரியர் குழு உறுப்பினர்களே தமிழ்க்கலையில் வெளியிடுவதற்குரிய கட்டுரைகளைத் தேர்வு செய்தனர். ஒவ்வோர் இதழின் அச்சுப்பணியும் தொடங்குவதற்கு முன்னதாக, ஆசிரியர் குழுக் கூட்டத்தைக் கூட்டி, கட்டுரைகளைப் பற்றி விவாதித்து முடிவு செய்வதற்காக, ஆசிரியர் குழுவில் உள்ள ஒருவர் கூட்டத்தைக் கூட்டும் பொறுப்பாளராக அதாவது அமைப்பாளராகப் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தர் வ.ஐ. சுப்பிரமணியம் அவர்களால் நியமிக்கப் பெற்றுள்ளார்.[6] அப்பொறுப்பாளரைக் 'கூட்டுநர்' என்று தமிழ்க்கலை குறிப்பிடுகிறது.[7]

### வெளிவந்துள்ள இதழ்கள்

*1983ஆம் ஆண்டில் 4 இதழ்கள், 1984ஆம் ஆண்டில் 3 இதழ்கள், 1985இல் 2 இதழ்கள், 1986இல் 2 இதழ்கள், 1987இல் 2 இதழ்கள், 1988இல் 2 இதழ்கள், 1989இல் 2 இதழ்கள், 1990இல் 1 இதழ், 1991இல் 1 இதழ், 1992இல் 1 இதழ், 1993இல் 1 இதழ் என 21 இதழ்கள் இதுவரை வெளிவந்துள்ளன. 1993ஆம் ஆண்டிற்குப்* பின்னர் தமிழ்க்கலை வெளிவரவில்லையெனினும் முற்றிலும் இதழ் நின்றுவிட்டது என்று கூற இயலவில்லை. மீண்டும் அது வெளிவரக்கூடிய சூழல் இருப்பதாகத் தெரிகிறது.[8]

**உள்ளடக்கம்**

தமிழ்க்கலையில்,

1. கட்டுரைகள்
2. கருத்துக்கோவைகள்
3. கலந்துரையாடல்
4. நூல் மதிப்புரைகள்

என்ற நான்கு பகுதிகள் அமைந்துள்ளன. இவற்றுள் முதலாவதாகிய கட்டுரைகள் எல்லா இதழ்களிலும் கட்டாயம் இடம்பெற்றுள்ளது. கருத்துக்கோவைகள், நூல் மதிப்புரைகள் எல்லா இதழ்களிலும் இடம்பெறவில்லை. இவை இடம் பெறாமலும் சில இதழ்கள் உள்ளன.

**கட்டுரைகளின் எண்ணிக்கை**

வெளிவந்துள்ள 21 இதழ்களில் 276 கட்டுரைகளும், 10 கருத்துக்கோவைகளும், 3 கலந்துரையாடல்களும் இடம் பெற்றுள்ளன.

**பாடுபொருள்**

தமிழ்க்கலையில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள் பல்துறைகளைச் சார்ந்தன. தொழில்நுட்பம், மருத்துவம், அறிவியல் தமிழ், கலைச் சொல்லாக்கம், தாவரவியல், கல்வெட்டியல், நிருவாகவியல், கட்டுமானப் பொறியியல், இலக்கியம், ஒப்பியல் இலக்கியம், நாட்டுப்புறவியல், மொழியியல், இலக்கியத் திறனாய்வியல், ஆடல், இசை, ஓவியம் முதலிய தமிழ்க்கலைகள், தமிழாய்வியல், அகராதியியல், சமூகவியல் முதலிய துறைகளைச் சார்ந்தனவாக இவ்விதழ்களில் வெளிவந்துள்ள கட்டுரைகள் அமைந்துள்ளன.

**இலக்கியம்**

இலக்கியம் குறித்து, தமிழ்க்கலையில் காணலாகும் கட்டுரைகள் சங்க இலக்கியம், இக்கால இலக்கியம் முதலிய எல்லா இலக்கிய வகைகளையும் குறித்ததாக அமைந்துள்ளன.

சங்க இலக்கியங்களை நடப்பியல் நோக்கில் ஆராயும் கட்டுரையொன்று,

> சங்கப் பாடல்களைத் தன்னுணர்ச்சிப் பாடல்கள் (Lyrics) எனக் கூறுவது வழக்கம். அவற்றின் நாடகத் தன்மையை ஒட்டி அவற்றைத் தனிநாடகப் பாடல்கள் (Dramatic Monologues) எனவும் கூறுவர். இவற்றின் அழகியலை ஆழ்ந்து நோக்குங்கால், இவை ஜப்பானிய ஹைக்கூ (Haiku) பாடல்களோடும், ஆங்கிலப் படிமம் (imagist) பாடல்களோடும் ஒப்பிடும் நிலையில் உள்ளன. சங்க அகப்பாடல்கள் உணர்வுகளை ஓவியங்களாக்கிக் காட்டுகின்றன. உணர்வுகளை நிகழ்ச்சிகளாகக் காட்டாமல் அவற்றைக் காலத்தினின்றும் விடுபட்ட காட்சி களாகக் காட்டுவதிலும், வாழ்வின் முழுமையையும் சில சின்னஞ்சிறு சிதறல்கள், கீற்றுகள் மூலம் காட்டுவதிலும் அக நிகழ்ச்சிகளைப் புற ஓவியங்கள் மூலம் காட்டுவதிலும் சங்கப் பாடல்களுக்கும் ஹைக்கூ பாடல்களுக்கும் இடையேயுள்ள ஒற்றுமை ஆழ்ந்து நோக்குதற்குரியது.

என்று குறிப்பிடுகிறது. ஒப்பிலக்கிய ஆய்வாளர்களில் குறிப்பிடத்தக்க ஒருவரான கா. செல்லப்பனின் கட்டுரை அடிகளே மேலே வருவன. இக்கட்டுரையைத் தமிழ்க்கலையின் முதல் இதழில் வெளியிட்டிருப்பதின்வழி சங்க இலக்கியம் உள்ளிட்ட நமது இலக்கியங்களை உலக இலக்கியங்களோடு ஒப்பிட்டு ஆராயவேண்டியதின் தேவையைத் தமிழ்க்கலை வலியுறுத்துகிறது எனலாம். மேலும் சங்க இலக்கியம் போன்ற பழந்தமிழ் இலக்கியங்களில் ஆய்வை மேற்கொள்வதற்குரிய பரந்துபட்ட ஆய்வுக்களங்கள் இருப்பதையும் இளம் ஆய்வாளர்களுக்கு எடுத்துக்காட்டுவதற்கும் இத்தகைய ஆய்வுக் கட்டுரைகள் பயன்படும்.

ஆங்கிலப் பேராசிரியர் ஒருவரின் 'தொல்காப்பியமும் மேலைநாட்டுக் கவிதையியலும்' என்னும் ஒப்பிலக்கிய கட்டுரை தொல்காப்பியச் செய்யுளை மிகநுட்பமாக ஆராய்ந்து,

> பல்வேறுபட்ட கவிதைக் கோட்பாடுகளுள் சிறந்தவை யென்று காலத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டவையும் பெருமையுடையவையென்று இருபதாம் நூற்றாண்டு மேலைநாட்டுத் திறனாய்வாளர்களால் போற்றப் படுபவையும் தொல்காப்பியர் கூறும் கவிதை நெறிகளோடு பெரும்பாலும் ஒத்திருக்கின்றன என்று

> சொல்வதில் உயர்வுநவிற்சியேதும் இருப்பதாகத் தெரியவில்லை. இந்நெறிகளில் பலவற்றைப் பின்பற்றி எழுதப்பட்ட சங்கச் சான்றோர்களின் கவிதைகள் இன்றும் உயிரோட்டமுடையனவாய் அழியாத் தன்மையும் புதுமையும் பெற்று இலங்குவது அழியாப் பெருஞ்சான்றுகளாகும்[10]

என்று முடிவு கூறுகிறது. தொல்காப்பியத்தையும் சங்க இலக்கியத்தையும் பற்றி ஆராய விரும்புவோர்களைப் பழமை வாதிகள் அல்லது ஆய்வுலகில் நுழைவதற்குத் தகுதியற்றவர்கள் என்பது போல வாதிடும் தமிழிலக்கியக் கல்வியாளர்களின் கண்களில் தென்படும் வண்ணம் இக்கட்டுரை படியெடுத்துப் பரப்பப்படுதல் வேண்டும்.

சங்க இலக்கியம் பற்றிய ஆய்வுக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளதைப் போலவே திருக்குறள், சிலப்பதிகாரம், தேவாரம், சிற்றிலக்கியங்கள் ஆகியன தொடர்பான கட்டுரை களையும் தமிழ்க்கலையில் காணமுடிகிறது.

பண்டைய இலக்கியம் தொடர்பான ஆய்வுக் கட்டுரை களை மட்டுமே வெளியிடுவதோடு நின்றுவிடாமல், இக்கால இலக்கியம்/தற்கால இலக்கியம் குறித்த ஆய்வுக் கட்டுரை களையும் இவ்விதழ் வெளியிட்டுள்ளது.

> பழந்தமிழ் இலக்கியத்திற்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவத்தைக் காட்டிலும் சற்று கூடுதலான கவனத்தைத் தற்கால இலக்கியத்திற்குச் செலுத்த வேண்டும் என்று கருதுகிறேன். புதிய படைப்புக்கள் தகுதி வாய்ந்ததாக வந்து கொண்டிருந்தால்தான் தமிழ்மொழியை வாழும்மொழி, வளரும்மொழி என்று வெளிவுலகம் ஏற்றுக்கொள்ளும்.[11]

என்ற அகிலனின் வேண்டுகோளைத் தமிழ்க்கலை ஏற்றுக் கொண்டுள்ளதை, அதில் வெளியிடப்பெற்றுள்ள கட்டுரைகளின் வழி அறிய முடிகிறது.

இராஜராஜன் படைப்பிலக்கிய விருது பெற்றவர்களாகிய சுத்தானந்த பாரதியார், ஜெயகாந்தன் ஆகிய இருவரின் படைப்புகளை ஆய்வு செய்த கட்டுரைகளை மட்டுமே தாங்கி, நான்காம் தொகுதியின் இரண்டு இதழ்கள் (தமிழ்: 4, கலை: 3,4) வெளிவந்துள்ளன.

இருபதாம் நூற்றாண்டுப் புனைகதை இலக்கிய வரலாற்றில் தம் படைப்பிலக்கிய முயற்சியால் நிலையான இடத்தைப் பெற்ற ஜெயகாந்தன் படைப்புப் பற்றித் தமிழ்க்கலையில் வெளிவந்துள்ள கட்டுரைகள் பல்வேறு கோணங்களில் ஜெயகாந்தனின் நாவல்கள், சிறுகதைகள் ஆகியவற்றை ஆராய்ந்துள்ளன.

மனித வாழ்க்கையைத் தம் படைப்புகளில் திறனாய்வு செய்வது படைப்பாளர்க்குரிய உரிமை. ஜெயகாந்தன் வாழ்க்கையைத் திறனாய்வு செய்யும் முறையைக் குறித்து,

> ஜெயகாந்தன் வலிந்து, வலிந்து விமர்சனம் செய்யும் முறை, 'இதை இப்படிப் புரிந்து கொள்ளுங்கள்' என்ற வற்புறுத்தலாக முடிகிறது. முக்கியமான நாவல் களிலும், குறுநாவல்களிலும் வாழ்க்கையை ஓடுகிற ஓட்டத்தில் நிறுத்தி அங்கங்கே குறுக்கு விசாரணை செய்வதும், கையில் தராசுடன் எங்கும் காட்சியளிப்பதும் ஜெயகாந்தனுடைய நடைமுறை யாகத் தெரிகின்றன.[12]

என்று பி.மு. அபிபுல்லா கருத்துரைக்கிறார். ஜெயகாந்தனிடம் செறிந்துள்ள மனிதநேயப் பார்வைக்கு அவர் உள்வாங்கிக் கொண்ட மெய்யியல் மரபுகளே காரணம் என்று குறிப்பிடும் கி. பழனிச்சாமி, போகப்போக முரண்பாடுகளின் வடிவமாக ஜெயகாந்தனின் மெய்யியல் மாறிப்போவதை,

> கருத்து மோதலில் தீவிரமான எதிர்நிலையில் நிற்க நேர்ந்ததின் விளைவாக, ஜெயகாந்தன் பல இடங்களில் சறுக்க நேர்ந்தது. காந்தியார் கண்ட வருணாசிரமக் கோட்பாட்டில் தவறு இல்லை; சாதியத்தால் தீங்கு இல்லை என்பன போன்ற கருத்துக்களை ஜெயகாந்தன் ஆதரித்துப் பேசிக் கொண்டிருந்தார். கடவுள் பற்றிய கருத்திலும் அவருக்குத் தெளிவு ஏற்படவில்லை

என்று எடுத்துக்காட்டுகிறார்.

தற்கால இலக்கிய வடிவங்களுள் நாவல், கவிதை ஆகியன குறித்த கட்டுரைகளே மிகுதியான அளவில் இடம்பெற்றுள்ளன. பதினொரு ஆண்டுகள் வெளிவந்த (1983-1993) 21 இதழ்களில் இலக்கியம் குறித்த ஆய்வுக் கட்டுரைகள் 92 இடம்பெற்றுள்ளன. அந்தக் கட்டுரைகள்,

| | |
|---|---|
| சங்க இலக்கியம் | 9 |
| பதினெண்கீழ்க்கணக்கு | 1 |
| காப்பியம் | 3 |
| சிற்றிலக்கியம் | 3 |
| பக்தி இலக்கியம் | 14 |
| நாவல் | 11 |
| சிறுகதை | 1 |
| சுத்தானந்த பாரதியாரின் கவிதை பற்றியவை | 10 |
| பாவேந்தர் பாரதிதாசன் படைப்புகள் | 19 |
| பாரதியார் படைப்புகள் | 11 |
| உரைநடை இலக்கியம் | 1 |
| தனிநபர்களின் இலக்கியப்பணி பற்றியவை (உ.வே.சா., வெள்ளைவாரணனார்) | 2 |

என்ற வகையில் - எண்ணிக்கையில் அமைந்துள்ளன.

### அகராதியியல்

ஒரு மொழியின் வளத்திற்கும் வாழ்விற்கும் அடிப்படையாகத் திகழ்வன அம்மொழியில் வெளிவந்திருக்கும் அகராதிகளாகும். எனவேதான் அகராதியியலோடு தொடர்புடைய, பெருஞ்சொல்லகராதித் துறை, தொகுப்பியல் துறை என்ற இரு துறைகள் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் இயங்கிவருகின்றன. தமிழ்ப் பல்கலைக்கழகத்திலிருந்து வெளிவந்த தமிழ்க்கலையும் அகராதியியலுக்கு, முன்னுரிமை தந்து, அவ்வியல் குறித்த 30 ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளது. அக்கட்டுரைகளில் தமிழ் அகராதிகளின் வளர்ச்சி நிலைகள், அகராதியின் அமைப்பு முறைகள், அகராதிச் சொற்கள், அகராதித் தொகுப்பின்போது எழும் சிக்கல்கள், அகராதித் தொகுப்பில் மொழிபெயர்ப்பின் பயன்பாடு, அகராதித் தொகுப்பில் கணிப்பொறியின் பயன்பாடு ஆகியன குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பெற்றுள்ளன. அகராதிகளின் சிறப்பைக் குறித்து,

> மொழியியல் கோட்பாடு மாறும்போது இலக்கணம் ஓரளவு சிறப்பு இழந்து போகக்கூடும். ஆனால் அகராதியோ அப்படியில்லாமல் பலகாலம் நீடித்து நிற்கவல்லது. இதனாலும் சொற்களைப் பற்றிப் பல வகையான (வேர்ச்சொல், இலக்கியப் பயிற்சி, சரியான பொருள்) செய்திகள் சேகரித்துக் கொடுத்தல், பலருக்கும்

> பார்வை நூலாகப் பயன்படுதல் ஆகிய வற்றால் அகராதி இயலாளர்களுக்குச் சமூகத்தில் மொழியியலாளரை விட மதிப்பு இருக்கிறது (அண்ணாமலை, 1985). இந்தியாவில் எந்த மொழியியலாளருக்கும் கிடைக்காத பத்மஸ்ரீ என்ற கவுரவப் பட்டம் மலையாளம் அகராதி தயாரிப்புக்கு அடிப்படைப் பணிகளைச் செய்து முதல் இரண்டு தொகுதிகளைப் பதிப்பித்த சூரனாடு குஞ்ஞன் பிள்ளைக்குக் கிடைத்தது இங்கு நினைவுப்படுத்தத் தகுந்தது.[14]

என எடுத்துக்கூறும் செ.வை. சண்முகம், தமிழ் அகராதிகளின் வரலாற்றினை விரிவாகச் சுட்டி, வரலாற்று அகராதி, தற்காலத் தமிழ் அகராதி, இருமொழி அகராதி ஆகிய அகராதிகள் தமிழில் மிகுதியாக உருவாக்கப்படவேண்டியதன் தேவைகளைத் தம் கட்டுரையில்[15] வலியுறுத்துகிறார்.

> அகராதிக் கலைஞர் சொற்பொருள் வரையறையில் மிகத் தெளிவுடனும் இலக்கணஞ் சுட்டுதலில் விழிப்புடனும் மொழி மரபையும் சொற் பயன் பாட்டையும் தெள்ளிதின் உணர்ந்து தலைச் சொல்லைத் தெரிந்து பதிவமைக்குந் தன்மையுடனும் அகராதித் தொகுப்பிற்கான மூலங்களைச் செம்மை யாய்ப் பயன்படுத்துவதில் விழிப்புணர்வுடனும் இருந்து செயலாற்றல் வேண்டும்[16]

என்று அகராதிப் பணியில் ஈடுபடுவோரின் தகுதிகளைச் சுட்டும் பெ. மாதையன், அகராதியில் பதிவு செய்வதற்குரிய சொற்களைத் தெரிவு செய்யும்பொழுது கடைப்பிடிக்கவேண்டிய விதிகளைத் தம் அகராதிச் சொற்கள்[17] எனும் கட்டுரையில் தெளிவுபடுத்து கிறார். கூட்டுவினைகளும் பொருண்மையும் (ஆ. கர்த்திகேயன்),[18] பாவாணர் நோக்கில் சொற்பிறப்பியல் அகரமுதலி (இரா. மதிவாணன்),[19] அகராதிப் பணியில் சில மொழிபெயர்ப்புச் சிக்கல்கள் (அ.அ. மணவாளன்),[20] அகராதி ஆக்கப்பணியில் கணிப்பொறி (கா.செ. செல்லமுத்து)[21] முதலியன அகராதியியல் குறித்த கட்டுரைகளுள் குறிப்பிடத்தக்கன.

**இலக்கணம், வரலாறு, அயல்நாடுகளில் தமிழ்**

அகராதியியலுக்கு அடுத்த நிலையில், இலக்கணம், வரலாறு, அயல்நாடுகளில் தமிழும் தமிழரும் முதலிய ஒவ்வொரு துறைகள் குறித்தும் முறையே 16 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

### அயல்நாடுகளில் தமிழர்

இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், பர்மா, ஆப்பிரிக்கா, தென்னாப்பிரிக்கா, பிரிட்டன், மொரிசியசு தீவு, இந்தோனேசியா, கயானா, பிஜித்தீவு ஆகிய இடங்களில் பரவியிருக்கும் தமிழர்கள் பற்றியும், அவர்களுக்கு அளிக்கப்படும் தமிழ்க்கல்வி குறித்தும் தமிழ்க்கலையின் ஐந்தாம் தொகுதியின் இரு இதழ்களில் வெளிவந்த கட்டுரைகள் விரிவாக எடுத்துரைக்கின்றன.

> அயலகத் தமிழர்கள் தாயகத் தமிழர்களிடம் பொன்னையும் பொருளையும் எதிர்ப்பார்க்கவில்லை. ஆனால், அவற்றினும் மேலான பண்பாட்டுத் தொடர்பையும் மொழித் தொடர்பையும் நல்லுறவையும் அவர்கள் ஆவலோடு எதிர்பார்க்கிறார்கள். அவர்களுடைய உரிமை கலந்த முறையான எதிர்பார்ப்பு களை நிறைவேற்றிவைப்பது இன்றைய சூழலில் நம் எல்லோருக்கும் கடமையும் பொறுப்பும் ஆகும்.[22]

> மொரீசியசு தமிழர்கள் தமிழ்மொழி வளர்ச்சியில் இன்று ஆர்வம் காட்டுகின்றனர். அரசியல் மற்றும் சமூக ரீதியில் தன்னைத் தமிழன் என்று மொழிவழி இனங்கண்டு கொள்ள வேண்டிய கட்டாயம் இன்று இவர்களுக்கு உருவாகியுள்ளது. தமிழ் வளர்ந்தால் மட்டுமே தமிழன் வளரமுடியும் என்ற நிலை மொரீசியசில் இன்று உருவாகியுள்ளது. தமிழ் மொழியையும் பண்பாட்டையும் இழந்து மற்றொரு பண்பாட்டில் தம்மை ஐக்கியப்படுத்திக் கொள்ள மொரிசியசுவாழ் தமிழர்கள் இன்னும் தயங்குகின்றனர். இந்நிலையில் தமிழும் தமிழரும் வாழ நம்மால் இயன்ற பணியை நாம் செய்ய வேண்டும்.[23]

> அடையாள உணர்வும் ஆளுமையும் பேணப்பட அடிப்படைத் தேவைகளை மொழி, கலை, பண்பாடு, சமயம், சமூகநலம், கல்வி என்பனவற்றில் தமிழ் நாட்டரசும் அரசு சார்பற்ற அமைப்புகளும் சீசெல்சுத் தமிழுருக்கு உதவவேண்டும்.[24]

> தமிழக அரசு, அமெரிக்காவில் உள்ள நியூயார்க் அல்லது மியாமி நகரத்தில் உள்ள பல்கலைக் கழகங்களில் ஏதாகிலும் ஒன்றில் தமிழ்த்துறையை நிறுவினால் கயானாவில் உள்ள தமிழர்களும்,

> அமெரிக்கா, மேற்கு இந்தியத் தீவுகளில் உள்ள தமிழர்களும் அங்குச் சென்று தமிழையும், தமிழ் நாட்டுக் கலைகளையும் படிக்க வசதியாக இருக்கும். அதேபோல் சிங்கப்பூரிலும், ஆஸ்திரேலியாவிலும் தமிழ்த் துறையினை நிறுவுவது அவசியமாகும். ஆஸ்திரேலியாவில் சிட்னி, பெர்த் போன்ற இடங்களில் உள்ள பல்கலைக்கழகங்களில் தமிழ்த் துறையை நிறுவினால் நல்லது. ஏனெனில் இந்த இரு நகரங்களிலும் கணிசமான அளவு தமிழர்கள் குடியேறி உள்ளனர்.[25]

மேலே சுட்டியன தமிழ்க்கலையில் இடம்பெற்றுள்ள அயல்நாடுகளில் தமிழர் தொடர்பான கட்டுரைகளில் வருவன வாகும். இப்பகுதிகள், அயல்நாடுகளில் வாழும் தமிழர்களுக்கு அளிக்க வேண்டிய தமிழ்க்கல்வி குறித்துத் தமிழ் நாட்டரசும் தமிழறிஞர்களும் சிந்திக்க வேண்டியதின் இன்றியமையாமை குறித்து வலியுறுத்துவனவாகும்.

**நாட்டுப்புறவியல்**

தமிழ் இலக்கியக் கல்வியாளர் பலர், நாட்டுப்புறவியல் துறையின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியுள்ளனர். தமிழாய்வுப் பரப்பை நாட்டுப்புறவியல் குறித்த பல ஆய்வுகள் விரிவுபடுத்தியுள்ளன என்பது வெளிப்படை. தமிழ்க்கலையில் நாட்டுப்புறவியல் தொடர்பான 13 கட்டுரைகள் வெளிவந்துள்ளன.

நாட்டுப்புறவியல் ஆய்வுகளின் விளைவுகள் குறித்து, ஆறு. இராமநாதன்,

> இலக்கியத்தின் காலம் கணித்தல், மன்னர்களின் வரலாறு, மக்கள் இடம்பெயர்ந்து குடியமர்ந்த வரலாறு, இலக்கிய-இலக்கண வரலாறு, நாகரிகம் மற்றும் பண்பாடு, நாடகத் தமிழ் உள்ளிட்ட நிகழ்த்துக்கலைகள், சமயம் முதலான பல்வேறு ஆய்வுகளில் மறுசிந்தனையை ஏற்படுத்தியமை தமிழியல் ஆய்வுக்கு நாட்டுப்புறவியலின் பங்களிப்பு எனலாம். சுருங்கக் கூறினால், நாட்டுப்புற வழக்காறுகளைப் புறக்கணித்துச் செய்யப்படும் தமிழியல் ஆய்வு முழுமை பெறாது என்பது நாட்டுப் புறவியல் துறையினரால் உணர்த்தப்பட்டுள்ளது[26]

என்கிறார்.

கொங்கு நாட்டில் உடலில் வரைதல் கலை குறிப்பாகப் பச்சை குத்தல் (கா. மீனாட்சி சுந்தரம்),[27] வரலாறும் நாட்டுப்புற வழக்காறுகளும்,[28] தமிழியல் ஆய்வுக்கு நாட்டுப்புறவியலின் பங்களிப்பு,[29] தேசிங்குராசன் கதைப்பாடல்கள் காட்டும் இந்து, முசுலீம் உறவுநிலை[30] (ஆறு. இராமநாதன்), நாட்டுப்புறக் கதை மூலவடிவம் காணல்[31] (ஜெயராஜ் தானியேல்) முதலிய கட்டுரைகளைத் தமிழ்க்கலையில் வெளியிடப்பெற்ற நாட்டுப் புறவியல் குறித்த கட்டுரைகளுள் குறிப்பிடத்தக்கவையாகச் சுட்டலாம்.

**மருத்துவம்**

மருத்துவம் தொடர்பான 11 கட்டுரைகள் தமிழ்க்கலையில் வெளிவந்துள்ளன. அவை சித்த மருத்துவம் பற்றியனவாகவும் ஆங்கில மருத்துவம் பற்றியனவாகவும் பொது நிலையினவாகவும் உடல் நலம் பேணும் தன்மை குறித்தனவாகவும் அமைந்துள்ளன. அவற்றுள் பெருங்குடல் திறவு[32] (சு. நரேந்திரன்), நீரிழிவும் மருத்துவமும்[33] (ஐ. சாதிக்), குரல்வளைப் புற்றுநோய்[34] (எஸ். இராசேந்திரன்), இதய நோய்க்கு மரபியல் காரணிகள்[35] (நே. ஜோசப்) போன்ற கட்டுரைகள் எளிய நடையில் மருத்துவக் குறிப்புகளை எடுத்துரைக்கின்றன.

**சமூகவியல்**

சமூகவியல் குறித்த 10 ஆய்வுக் கட்டுரைகள் தமிழ்க்கலையில் இடம்பெற்றுள்ளன.

> தமிழர்களின் செந்நெறிக் கலைகளை அவற்றின் மரபு நெறிப்படப் போற்றும் அதேவேளையில், அவற்றிற்குப் புதிய ஒரு சமூகப் பயன்பாட்டை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளவர்கள், இன்றைய நிலையில், தமிழ்க்கலை வளர்ச்சியில் காணப்படும் சமனற்ற நிலைகளை ஆராய்ந்து, சனநாயக மரபினை உட்கிடக்கையாகக் கொண்ட ஒரு கலைவடிவத்தை உருவாக்க வேண்டும்.[36]

என்று, தமிழ்க்கலையின் தொடக்க இதழில் வெளியிடப்பெற்ற **கூத்தும் நடனமும்** என்ற தம் கட்டுரையில் கா. சிவத்தம்பி வலியுறுத்தியுள்ளார். எனினும், அதன்பின்னர் வெளிவந்த தமிழ்க்கலையில் இடம்பெற்றுள்ள கலைகள் தொடர்பான கட்டுரைகள் சிவத்தம்பி சுட்டிக்காட்டிய பணியை மேற்கொண்டதாக அமையவில்லை.

### பிற துறைகள்

கடலாய்வியல், சுவடியியல், நிருவாகவியல், பொருளியில், பொறியியல், தாவரவியல், உயிரியல், புவியியல், சுற்றுச்சூழலியல், மானிடவியல், கணக்கியல், கணிப்பொறியியல், மக்கள்தொகைக் கல்வியியல் முதலிய துறைகள் குறித்த பல ஆய்வுக்கட்டுரைகள் தமிழ்க்கலையில் வெளிவந்துள்ளன. இத்துறைகளில் ஈடுபட்டு உழைத்துவரும் துறைபோகிய வித்தகர்களால் எழுதப்பெற்ற நுண்மாண் நுழைபுலம்மிக்க கட்டுரைகளோடு அவை அமைந்துள்ளன என்பது இங்கு குறிக்கத்தக்கது.

### தமிழ் ஆய்வேடுகளின் தரம்

முனைவர் பட்டத்திற்காகப் பல்கலைக்கழகங்களுக்கு அளிக்கப்படும் ஆய்வேடுகளின் தரத்தைப் பற்றிய 'தமிழ் ஆய்வேடு களின் தரம்' எனும் கட்டுரை இங்கு கருதத்தக்கது. பல ஆய்வேடுகளை மதிப்பீடு செய்த தம் பட்டறிவின் விளைவாகவே இக்கட்டுரையை எழுதியதாகக் குறிப்பிடும் கட்டுரையாசிரியர்,

> பிஎச்.டி. முதலான ஆய்வேடுகளில் காணும் பொருட் பிழையும், எழுத்து, சொல், சொற்றொடர் முதலான மொழிப் பிழையும், ஆய்வுநெறிப் பிழையும் பிற பிழைகளும் அளவில.
>
> "எல்லாப் பிழையும் இதன்பாலுள இதன்பால்
> இல்லாத எப்பிழையும் இல்லையால்"
>
> எனப் பிஎச்.டி. வழுமணிமாலை பாட வேண்டிய நிலையில் இன்று ஆய்வேடுகளின் தரம் உள்ளது....... நூற்றுக்கு ஐந்து அல்லது பத்து ஆய்வேடுகளே வழுக் குறைந்தனவாய், ஓரளவு தரம் உள்ளனவாய் விளங்கு கின்றன. தொண்ணூறு அல்லது தொண்ணூற்றைந்து விழுக்காடு வழுக்களஞ்சியமாய்த் தரம் மிகமிகக் குறைந்தனவாய் உள்ளன. தரம் குறைந்தவற்றிற்கும் பிஎச்டி பட்டம் வழங்குதல் அறிஞர் தமிழ்மொழிக்குச் செய்யும் கொடுமையாகும். அங்ஙனம் செய்வதால் தமிழ் அறிவை வளர்ப்பவராகோம்; தமிழ்த் துறையின் அறியாமை தரணியெலாம் பரவும் வகை செய்பவராவோம்.[37]

என்று குறிப்பிடுகிறார். தமிழாய்வுகளின் தரம் உயர்வதற்குத் தகுதியான மாணவர்களை மட்டுமே ஆய்வுப் பட்டத்தை மேற்கொள்ள அனுமதிக்க வேண்டும் என்னும் நோக்கில்,

> எம்.ஏ., முதலான தேர்வில் முதல் வகுப்புப் பெற்றுத் தேர்ந்தவர்கட்கு மொழி, இலக்கியம், அவர் ஆய்வு புரிய விரும்பும் சிறப்புத்துறை மூன்றிலும் தரம் குறைந்தாரைக் கழிக்கும் தேர்வும், வாய்மொழித் தேர்வும் வைத்து அவற்றில் உயர்ந்த மதிப்பெண் பெறும் மிகச் சிலரை மட்டுமே பிஎச்.டி. ஆய்வுக்குத் தேர்ந்தெடுக்க வேண்டும்.[38]

என்று கருத்துரைக்கிறார். இது சனநாயகப்பூர்வமான கருத்து இல்லை. எனினும், தமிழாய்வின் போக்கு மேம்பாடு அடைவதற் குரிய வழிவகைகளில் ஆய்வாளர்கள் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்ற ஆதங்கமே கட்டுரையாளரை இவ்வாறு கருத்துரைக்கச் செய்துள்ளது. ஆய்வாளர்கள் விரும்பும் பொருளில் ஆய்வை மேற்கொள்ள அனுமதி அளிப்பதைக் காட்டிலும், தாம் விரும்பும் ஆய்வுப் பொருளைத் தம் நெறிகாட்டலின்கீழ் ஆய்வு மேற்கொள்ள விரும்புவோர்மீது வலிந்து திணிக்கும் ஆய்வு நெறி யாளர்களின் மனப்பாங்கும் தமிழாய்வுகளின் தரவீழ்ச்சிக்குரிய காரணங்களுள் குறிப்பிடத்தக்கது என்பதையும் இவண் எண்ணிப்பார்த்தல் தகும்.

## நூல் மதிப்புரை

இதுவரை வெளிவந்துள்ள தமிழ்க்கலை இதழில் 16 நூல் மதிப்புரைகள் வெளியிடப்பெற்றுள்ளன. கட்டுரைகளைப் போலவே நூல் மதிப்புரைகளும் நுண்ணிய ஆய்வுப்போக்குடை யனவாக விளங்குகின்றன.

'சைவ சமய விளக்கு' என்னும் நூலுக்கு எழுதப்பட்டுள்ள மதிப்புரை,

> பல நூல்கள் தமது ஆராய்ச்சிக்குப் பயன்பட்டதாக ஆசிரியர் காட்டியிருப்பினும் சி. அருணைவடிவேல் முதலியார் எழுதிய இரண்டு நூல்களை, 'ஆராய்ச்சிக்கு உதவியாகக் கொண்டார்' என்னும் அளவில் சொல் வதற்கில்லை. அவைகளில் குறிப்பாகச் 'சித்தாந்த வினா-விடை' நூலில் உள்ளவைகளை அதில் உள்ள வரிசை முறையிலேயே அங்ஙனமே பெரும்பாலான இடங்களில் படியெடுத்தது போல எடுத்தெழுதி யிருத்தல் குறிப்பிடத்தக்கது.
>
> இந்நிலையில் இவர் இந்நூலிற்குள்ளே ஓரிடத்தி லாயினும் 'இன்ன நூலில் இவ்வாறு உள்ளது' என்றோ,

> 'இன்ன ஆசிரியர் இவ்வாறு எழுதியுள்ளார்' என்றோ குறித்துக்காட்டவில்லை[39]

என்று அமைகிறது. படியெடுக்கப்பட்டதாகக் குறிப்பிடப் பெறும் நூலின் ஆசிரியரிடமே மதிப்புரைக்காகச் சைவசமய விளக்கு வந்ததின் விளைவாகவே, அவ்விளக்கின் ஒளி எத் தன்மையது? எனப் புலப்படுத்தப்பெற்றது. இளம் ஆய்வாளர்கள் எவற்றைச் செய்யக்கூடாது என அறிவுறுத்தப்பெறுகிறார்களோ, அவ்ற்றைப் பெரியோர்களும் தவிர்த்தல் வேண்டும் என்பதை இந்த மதிப்புரையின்வழி அறிய முடிகின்றது. நூலாசிரியர்கள் தம் ஆய்வின் பயனாகக் கிட்டிய புதிய கருத்துக்களை - சொந்தக் கருத்துக்களைத் தமது நூற்களில் எடுத்துரைத்தால் அஃது ஆய்வுலகிற்கும் தமிழ் வளர்ச்சிக்கும் உரிய பங்களிப்பாக அமையும். அப்படியின்றி. மேற்கோள்களின் தொகுப்பாக வெளிவரும் நூலால் பயன் ஏதுமில்லை. இக்கருத்தை,

> கிரேக்க இலக்கியப் படைப்புக்களை நேரடியாகவோ, மொழிபெயர்ப்புகளின் வாயிலாகவோ படித்தறிய முற்படாது ஆங்கிலத் திறனாய்வாளர் கூறியுள்ள கிரேக்க இலக்கிய வகைமைகள் பற்றிய கருத்துக்ளின் தொகுப்பாக அமைந்திருக்கும் இந்நூல் எவ்வகையில் ஆய்வு நூலாகும்?[40]

என்று, 'இலக்கிய வகைமை ஒப்பாய்வு' என்ற நூலுக்கு எழுதப்பட்டுள்ள மதிப்புரை கூறுவதின்வழி அறியலாம்.

சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம், தொகுதி - 1, என்னும் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் வெளியீடாக வந்த நூலுக்கு முனைவர் ம.ரா.போ. குருசாமி எழுதியுள்ள மதிப்புரையும்,[41] அதற்குப் பதிலுரையாக, சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம் தொகுதி - 1இன் பதிப்பாசிரியர் எழுதியுள்ள, 'சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம் தொகுதி-1 மதிப்பீடு பற்றிய கருத்துரை' என்னும் கட்டுரையும்[42] ஒரே இதழில் வெளியிடப்பெற்றுள்ளன. பதிலுரையில் பதிப்புரையாளர் நூல் குறித்து எழுப்பியுள்ள வினாக்களுக்கும் ஐயங்களுக்கும் விடைகள் தரப்பெற்றுள்ளன. ஒரே இதழில் அடுத்தடுத்து மதிப்புரையும் பதிலுரையும் இடம் பெற்றுள்ளன. இம்முறை நூல் பற்றிய செய்திகளை அறிந்து கொள்ள பெருந்துணை புரிகின்றது என்பது குறிப்பாகச் சுட்டத்தக்கதாகும்.

கருத்துக்கோவை

கருத்துக்கோவை என்னும் பகுதியில் 9 கட்டுரைகள் தமிழ்க்கலையில் வெளியிடப்பெற்றுள்ளன. அவற்றுள் கலைச் சொல்லாக்க முயற்சி - இதுவரை (இராதா செல்லப்பன்)[43], தமிழ்நாட்டுப் பொம்மலாட்டம் - கள ஆய்வுக் குறிப்புகள் (சி.மா. இரவிச்சந்திரன்)[44], பண்டை இந்தியாவில் கால அளவுகளும் பண்டைக்கால இயலும் (ஆ. சுப்பிரமணியன்)[45], யாழ்ப்பாணக் கரையோரப் பரதவர் தொழிற்கலைச் சொற்கள் - ஓர் அறிமுகம் (சண்முக. முருகானந்தம்)[46], மக்கள் சீனம் பற்றி (வாங் பௌ சி)[47] முதலியன தரமிக்க ஆய்வுக்கட்டுரைகளாக அமைகின்றன. இவற்றைக் கட்டுரைகள் பகுதியில் வெளியிடாமல், கருத்துக் கோவைப் பகுதியில் வெளியிட்டமைக்குரிய காரணங்கள் பதிப்பாசிரியர்களால் கூறப்பெறவில்லை.

கலைக்களஞ்சிய மைய நிறுவனம் ஒன்று தொடங்கு வதற்கான திட்டக் குறிப்பு (இராம. சுந்தரம்),[48] போசராசன் என்ற மன்னனால் வடமொழியில் எழுதப்பெற்றுள்ள யுக்தி கல்பதரு என்னும் நூலின் தமிழ்மொழிபெயர்ப்பு[49] ஆகியன கருத்துக் கோவைகளுள் இடம்பெற்றுள்ளவற்றுள் குறிக்கத் தக்கன.

இப்பகுதியில் வெளிவந்துள்ள சப்பான் நாட்டில் திராவிட மொழி ஆராய்ச்சியை விரிவுபடுத்துவதற்காக நடந்த சொல்லாடற் குறிப்புகள்[50] எனும் கட்டுரை இங்கு சிறப்பாகச் சுட்டத்தக்க தாகும். இது, 'கலந்துரையாடல்' பகுதியில் இடம்பெறாமல், கருத்துக் கோவையில் இடம்பெற்றமைக்கு உரிய காரணம் கொடுக்கப் பெறவில்லை. மேற்சுட்டிய கலந்துரையாடல் 18-8-1981இல் சப்பான் நாட்டிலுள்ள கெய் உ.சோனோமி குன்றுப் பகுதியில் நடைபெற்றதாகும். இதில் டாக்டர் நோபோரு கராசிமா, டாக்டர் தொகு நாகா, டாக்டர் சின்சி கிகமாட்சு முதலிய சப்பானிய பேராசிரியர்களும் டாக்டர் வ.அய். சுப்பிரமணியமும் பங்கேற்றனர். இச்சொல்லாடலுக்கு டாக்டர் வ.அய். சுப்பிரமணியமே ஏற்பாடு செய்துள்ளார். இச்சொல்லாடல் வழி, சப்பானில் திராவிட மொழிகள் குறித்த ஆய்வை விரிவு படுத்த வேண்டும் என்ற டாக்டர் வ.அய். சுப்பிரமணியத்தின் முனைப்பையும், திராவிட மொழிகள் பற்றிய ஆய்வை மேற்கொள்ள சப்பானியர் காட்டும் ஆர்வத்தையும் அறிந்து கொள்ள முடிகிறது. இச்சொல்லாடலின்போது,

> திராவிட மொழி ஆராய்ச்சியாளர்களுக்கு வேலை வாய்ப்புகள் இருந்தால்தான், அவர்கள் திராவிட

> மொழி ஆராய்ச்சியில் தங்களை ஈடுபடுத்துவார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்புகள் இல்லையென்றால் திராவிட மொழி ஆராய்ச்சியின் கருத்துக்கள் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்திருந்தாலும் அவற்றில் அவர்களின் நாட்டம் செல்லாததோடு, திராவிட மொழி ஆராய்ச்சியும் வளராது[51]

என்று முன்வைக்கப்பெற்ற கருத்து, தாய்மொழி வழிக்கல்வி என்னும் கருத்துரு வலுப்பெறும் இன்றைய சூழலுடன் இணைத்துப் பார்க்கத்தக்கது.

**கலந்துரையாடல்களும் அறிக்கைகளும்**

தமிழ்க்கலையில் 3 கலந்துரையாடல்களும், 7 அறிக்கைகளும் வெளிவந்துள்ளன. தமிழ்க்கலையில் இடம்பெற்றுள்ள மூன்று கலந்துரையாடல்களும் நாடகத்துறையோடு தொடர்புடையனவாக விளங்குகின்றன. அவை, தமிழ்நாடகம் வளரவில்லை (5-4-1984)[52] சிறுத்தொண்ட நாயனார் இசைக் கூத்து (28-12-1984)[53], கட்டபொம்முக் கூத்து: பொம்மலாட்டம் (23-11-1984)[54] என்பனவாகும். இக்கலந்துரையாடல்களில் துணைவேந்தர், தமிழ்ப்பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், நாடககூத்து கலைஞர்கள் பங்கேற்றுள்ளனர். இக்கலந்துரையாடல்களின்வழி குறிப்பிடத்தக்க விளைவுகளும் நிகழ்ந்துள்ளன. இதற்குச் சான்றாக, முதல் கலந்துரையாடலின் இறுதியில்,

> நான் இரண்டு விஷயங்களை உடனே செய்ய வேண்டுமென விரும்புகிறேன். ஒன்று இங்குள்ள பள்ளி, கல்லூரி மாணவர்களிடையே நாடகவிழா நடத்தி, அதில் நாடகங்களைத் தேர்ந்தெடுத்துப் பரிசு வழங்கல்; இன்னொன்று புதிய வளாகப் பகுதியில் ஒரு நாடக அரங்கம் கட்டுதல்[55]

என்று கருத்துரைத்த அன்றைய துணைவேந்தர் தாம் கூறியவாறே, தமிழ்ப் பல்கலைக்கழகப் புதிய வளாகத்தில் ஆடல்வல்லான் திறந்தவெளிக் கலையரங்கத்தைக்கட்டி, அதில் நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகளையும் பல்கலைக்கழகச் செலவில் நடத்தி, அவ்வரங்கம் அமைந்திருப்பதனை வெளியுலகிற்கு அடையாளம் காட்டிய நிகழ்ச்சியைச் சுட்டலாம்.

முடிவாக, தமிழில் அனைத்துத்துறை தொடர்பான ஆய்வுக் கட்டுரைகளையும் தாய்மொழி வாயிலாகத் தமிழர்களுக்கு

வழங்கிவந்த சிறந்த காலாண்டு ஆய்விதழான தமிழ்க்கலை அறிஞர் பலரின் பார்வைக்குச் சென்று சேரவில்லை என்பதை ஈண்டு சுட்டுதல் தகும். அண்மையில், பத்திரிகையியல் என்னும் பெயரில், 641 பக்கங்கள் கொண்ட இதழியல் நூலொன்று வெளிவந்துள்ளது. இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம் அளித்துள்ள நிதியுதவியோடு வெளிவந்திருக்கும் இந்நூல், தமிழ் ஆய்வு இதழ்களைப் பற்றித்

> தமிழகத்தில் ஆய்வுப் பத்திரிகைகளாக ஒரு சிலவே வெளிவந்தன; வெளிவருகின்றன. அவைகளில் மிகவும் குறிப்பிடத்தக்கவை ஆராய்ச்சி, புலமை, மொழியியல், தமிழியல் முதலான பத்திரிகைகளாகும்[56]

என்று குறிப்பிடுகிறது. இந்நூலில் தமிழ்க்கலை பற்றிய குறிப்பு எங்கும் காணப்பெறவில்லை. இந்நூலாசிரியர் ஏற்கெனவே பத்திரிகைத் தமிழ், பத்திரிகை மொழிநடை என்ற இரு நூல்களைப் படைத்தளித்தவர். பரந்துபட்ட நூலறிவும் விடாமுயற்சியுடன் தகவல்களைத் திரட்டும் இயல்புமுடைய இந்நூலாசிரியரின் பார்வைக்குக் கூட தமிழ்க்கலை கிடைக்கவில்லை என்றே தோன்றுகிறது. தற்போது, தற்காலிகமாக வெளிவராமல் இருக்கும் தமிழ்க்கலையின் தேக்கநிலைக்கு இத்தகைய பரவலான அறிமுகம் இன்மையையும் ஒரு காரணமாகக் கூறலாம். தமிழ்க்கலை என்ற காலாண்டு ஆய்விதழ் வெளிவராமல் நின்றிருப்பதோடு, 4 பக்கங்கள் மட்டுமே கொண்ட செய்தி மலர் (News Bulletin) என்ற இதழும் அங்கிருந்து வெளிவரவில்லை என்பதும் இங்கு கருதத்தக்கது.

தமிழாராய்ச்சி இதழ்களில் குறிப்பிடத்தக்க இதழாக விளங்கிய தமிழ்க்கலை, தமிழாய்வுக்கு ஆற்றிய பங்களிப்பை இதுகாறும் கூறிய செய்திகள் ஓரளவு உணர்த்தவல்லன. உயர்ந்த நோக்கங்களுக்காகத் தொடங்கப்பெற்ற பல்கலைக்கழகத்திலிருந்து வெளிவந்த ஓர் உன்னதமான தமிழாராய்ச்சிக் காலாண்டிதழ் மீண்டும் வெளிவருதல் வேண்டும்.

### குறிப்புகள்

1. மா.சு. சம்பந்தன், தமிழ் இதழியில் வரலாறு, ப. 21
2. தமிழ்க்கலை, தமிழ் 1, கலை 1, முன் அட்டையின் பின்பக்கம்
3. மேலது
4. தமிழ்க்கலை, தமிழ் 2, கலை 1, முன் அட்டையின் பின்பக்கம்.
5. தமிழ்க்கலை, தமிழ் 7, கலை 1, 2 முன் அட்டையின் பின்பக்கம்
6. அமைப்பாளராகப் பொறுப்பு வகித்த முனைவர்

துு. சீனிச்சாமியிடம் கட்டுரையாளர் நேரில் பெற்ற தகவல்

7. தமிழ்க்கலை, தமிழ் 2, கலை 1, முன் அட்டையின் பின்பக்கம்
8. தமிழ்ப் பல்கலைக்கழக மேலாளரிடம் கட்டுரையாளர் நேரில் பெற்ற தகவல்
9. தமிழ்க்கலை, தமிழ் 1, கலை 1, பக். 20-21
10. தமிழ்க்கலை, தமிழ் 1, கலை 4, ப. 13
11. தமிழ்க்கலை, தமிழ் 4, கலை 3, 4, ப. 103
12. மேலது, ப. 109
13. மேலது, ப. 154
14. தமிழ்க்கலை, தமிழ் 5, கலை 1, 2, ப. 161
15. மேலது, பக். 172-173
16. தமிழ்க்கலை, தமிழ் 7, கலை 3, 4, ப. 78
17. தமிழ்க்கலை, தமிழ் 7, கலை 1, 2, பக். 74-87
18. மேலது, பக். 127-131
19. மேலது, பக். 21-29
20. மேலது, பக். 122-129
21. மேலது, பக். 146-155
22. தமிழ்க்கலை, தமிழ் 5, கலை 3, 4, ப. 82
23. மேலது, ப. 113
24. மேலது, ப. 149
25. மேலது, ப. 183
26. தமிழ்க்கலை, தமிழ் 8, கலை 1, 4, ப. 13
27. தமிழ்க்கலை, தமிழ் 2, கலை 2,3, பக். 100-145
28. தமிழ்க்கலை, தமிழ் 11, கலை 1,4, பக். 205-212
29. தமிழ்க்கலை, தமிழ் 8, கலை 1,4, பக். 1-18
30. தமிழ்க்கலை, தமிழ் 3, கலை 3, 4, பக். 86-93
31. தமிழ்க்கலை, தமிழ் 3, கலை 3, 4, பக். 1-9
32. தமிழ்க்கலை, தமிழ் 2, கலை 1, பக். 17-37
33. தமிழ்க்கலை, தமிழ் 3, கலை 2, 3, 4, பக். 1-19
34. தமிழ்க்கலை, தமிழ் 9, கலை 1,4, பக். 26-29
35. மேலது, பக். 100-104
36. தமிழ்க்கலை, தமிழ் 1, கலை 1, ப. 43

37. தமிழ்க்கலை, தமிழ் 1, கலை 2, ப. 64
38. மேலது, ப. 65
39. தமிழ்க்கலை, தமிழ் 2, கலை 4, ப. 78
40. தமிழ்க்கலை, தமிழ் 3, கலை 3, 4, பக். 197-198
41. தமிழ்க்கலை, தமிழ் 4, கலை 1,2, பக். 192-199
42. மேலது, பக். 192-200
43. தமிழ்க்கலை, தமிழ் 1,. கலை 3, பக். 59-70
44. மேலது, பக். 71-78
45. தமிழ்க்கலை, தமிழ் 1, கலை 4, பக். 59-62
46. மேலது, பக். 87-104
47. தமிழ்க்கலை, தமிழ் 2, கலை 1, பக். 83-92
48. தமிழ்க்கலை, தமிழ் 1, கலை 4, பக். 105-107
49. மேலது, பக். 63-74
50. தமிழ்க்கலை, தமிழ் 1, கலை 3, பக். 41-50
51. மேலது, ப. 43
52. தமிழ்க்கலை, தமிழ் 2, கலை 2,3, பக். 157-168
53. தமிழ்க்கலை, தமிழ் 3, கலை 3,4, பக். 155-196
54. தமிழ்க்கலை, தமிழ் 3, கலை 1,2, பக். 139-172
55. தமிழ்க்கலை, தமிழ் 2, கலை 2,3, ப. 168
56. தங்க. மணியன், பத்திரிகையியல், ப. 324

**பயன்படுத்திய நூல்கள்**

**முதன்மை நூல்**

தமிழ்க்கலை இதழ்கள் முழுவதும்

**துணை நூல்கள்**

1. சம்பந்தன், மா.சு., தமிழ் இதழியல் வரலாறு, தமிழர் பதிப்பகம், சென்னை, 1987
2. மணியன், பத்திரிகையியல், மாணிக்கம் பதிப்பகம், மைசூர், 1998

# நாட்டுப்புறவியல் / நாட்டார் வழக்காற்றியல்

**1983** ஆறு. இராமநாதன்

நாட்டுப் பண்பாட்டியல், நாட்டார் வழக்கியல், மக்கள் வழக்காற்றியல், நாட்டார் வழக்காற்றியல், நாட்டுப்புறவியல் என்ற சொற்கள் Folklore என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு இணையாகத் தமிழில் வழங்கப்பட்டு வரும் சொற்களாகும். இவற்றுள் பாளையங்கோட்டை தூயசவேரியார் கல்லூரியில் பேராசிரியர் தே. லூர்து முதலியோரால் 'நாட்டார் வழக்காற்றியல்' என்னும் சொல் பயன்படுத்தப்பட்டு வருகிறது. நாட்டுப்புறவியல் என்ற சொல் தமிழகத்தின் பிற கல்வி நிறுவனங்களின் ஆய்வாளர்களால் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இத்துறை சார்ந்த ஆய்வு வளர்ச்சியோடு இத்துறை ஆய்விதழ்கள் நெருங்கிய தொடர்புடையன. எனவே, இத்துறையின் வளர்ச்சிப் போக்கோடு இத்துறை ஆய்விதழ்கள் குறித்துக் காணலாம்.

நாட்டுப்புறவியல் இன்று தனித்ததொரு கல்வித் துறையாகத் தமிழகத்தில் வளர்ச்சி பெற்றுள்ளது. நாட்டுப்புற வழக்காறுகளைச் சேகரித்து ஆய்வு செய்வதன் நோக்கம் காலத்துக்குக் காலம் மாறுபட்டு வந்துள்ளது. அயல்நாட்டுப் பாதிரியார்கள் மதத்தை வளர்ப்பதற்காகவும் ஆங்கிலேய ஆட்சியாளர்கள் தங்கள் ஆட்சியை நிலைப்படுத்திக் கொள்வதற்காகவும் மக்களைக் குறித்துப் படிக்க வேண்டி இருந்தது. இதற்காக அவர்கள் நாட்டுப்புறத் தெய்வங்களைப் பற்றியும் நாட்டுப்புற இலக்கியங்களைப் பற்றியும் செய்திகளைச் சேகரித்து ஆய்வுக்குட்படுத்தினர். அவற்றை நூல்களாகவும் அப்போது வெளிவந்து கொண்டிருந்த ஆங்கில இதழ்களில் கட்டுரைகளாகவும் வெளியிட்டு வந்தனர். இரண்டாம் உலகப் போரின்போது இந்திய வீரர்களைப் பிரிட்டிஷ் படையில் சேர்ப்பதற்கு நாட்டுப்புற இலக்கிய வடிவம் வெற்றிகரமாகப் பயன்படுத்தப் பட்டதாக அறிகிறோம். தேசிய இயக்கம் வளர்ச்சி பெற்றதை அடுத்து இந்திய அறிஞர்கள் நாட்டுப்புற வழக்காறுகளின் முக்கியத்துவத்தை உணரத் தொடங்கினர். நாட்டுப்புற வழக்காறுகளின்வழி மக்களுக்குத் தேசிய

உணர்வை ஏற்படுத்த இயலும் என்று அறிந்து அவ்வாறே செயல்பட்டனர். இவர்கள் நாட்டுப்புற வழக்காறுகளைச் சேகரித்து ஆய்வு செய்து வெளியிடும் பணிகளையும் மேற்கொண்டனர். இத்தகைய போக்கு தமிழ்நாட்டு அறிஞர்களையும் அப்பணியில் ஈடுபடுத்தியது. மு. அருணாசலம், பெ. தூரன், கி.வ. ஜகந்நாதன் முதலாய தமிழ் அறிஞர்கள் நாட்டுப்புற இலக்கியங்கள் குறித்து இதழ்களில் எழுதத்தொடங்கினர். ஆனந்தபோதினி, ஆனந்தவிகடன், கலைமகள், காதல், குமரிமலர், சுதேசமித்திரன், தாமரை, தென்றல், நல்வழி, தினமணிக்கதிர், தினமணிச்சுடர், பஞ்சாமிர்தம், மஞ்சரி, மன்றம், விவேகசிந்தாமணி, செந்தமிழ்ச் செல்வி, தமிழ்ப்பொழில், தமிழரசு, கல்கி, தீபம், கலைக்கதிர், செந்தமிழ், கண்ணதாசன், கொங்கு, தமிழ்நாடு, தினகரன், மாதர் மனோரஞ்சனி, கலாசிந்தாமணி, ராணி, முல்லைச்சரம் முதலான இதழ்கள் கி.பி. 1900 முதல் நாட்டுப்புற வழக்காறுகளையும் அவற்றைப் பற்றிய விளக்கங்களையும் வெளியிட்டன மற்றும் வெளியிட்டு வருகின்றன என்பதை சு. சண்முகசுந்தரம் தன்னுடைய 'நாட்டுப்புற இலக்கிய வரலாறு' (1988) என்னும் நூலில் விரிவாகப் பதிவு செய்துள்ளார். பொதுவுடைமைக் கட்சியினர் மக்களைப் புரிந்து கொள்ளவும் அவர்களைப் போராட்டங்களுக்குத் தயார்படுத்தவும் நாட்டுப்புற வழக்காறுகளில் ஆர்வம் காட்டினர். பேராசிரியர் நா. வானமாமலை உள்ளிட்ட அறிஞர்கள் தாமரை, செம்மலர் முதலான இலக்கிய இதழ்களில் நாட்டுப்புற வழக்காறுகளையும் அவை குறித்த தரமான ஆய்வுகளையும் வெளியிட்டு வந்தனர்.

வெகுஜன மற்றும் இலக்கிய இதழ்களில் நாட்டுப்புறவியல் குறித்த கட்டுரைகள் வெளிவந்து கொண்டிருந்த போக்குகளோடு தமிழில் வெளிவரத் தொடங்கிய பல்வேறு ஆய்விதழ்களும் நாட்டுப்புறவியல் சார்ந்த ஆய்வுக் கட்டுரைகளை வெளியிடத் தொடங்கின. பேராசியர் நா. வானமாமலையின் 'ஆராய்ச்சி' இதழ் பல்வேறு துறைகளைச் சார்ந்த கட்டுரைகளை வெளியிட்டபோது நாட்டுப்புறவியல் துறை கட்டுரைகளுக்கும் உரிய இடத்தை நல்கியது. பேராசிரியர் பொற்கோவின் முயற்சியால் வெளிவந்து கொண்டிருக்கும் 'புலமை' இதழிலும் கல்வி நிறுவன இதழ்களான Annals of Oriental Research, தமிழியல், தமிழ்க்கலை போன்ற இதழ்களிலும் நாட்டுப்புறவியல் சார்ந்த கட்டுரைகள் தொடர்ந்து வெளியிடப்படுகின்றன. இவையேயன்றி, ஸ்ரீலங்கா இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம் வெளியிடும் 'பண்பாடு' என்னும் பருவ இதழிலும் நாட்டுப்புறவியல் குறித்த தரமான கட்டுரைகள் வெளிவருகின்றன.

தமிழக நாட்டுப்புற வழக்காறுகளை ஆராய்ந்து ஆங்கிலத்தில் எழுதப்படும் கட்டுரைகளைத் தேசிய மற்றும் சர்வதேச அளவில் நாட்டுப்புறவியலுக்கென்றே வெளிவந்த மற்றும் வெளிவரும் ஆங்கில இதழ்களும், பொதுவான ஆங்கில இதழ்களும் வெளியிடுகின்றன. சங்கர் சென் குப்தா அவர்களின் முயற்சியால் 1960 முதல் கல்கத்தாவிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த 'Folklore' என்னும் இதழும், இந்திய நாட்டுப்புறவியல் கழகம் (Indian Folklore Congress) வெளியிட்ட 'Folk India' (1987) என்னும் இதழும், ஜவஹர்லால் ஹண்டுவின் முயற்சியால் வெளிவந்த 'Journal of Indian Folkloristics' (1978-1980) என்னும் இதழும் டாக்டர் ஜெயபதி மற்றும் டாக்டர் லூர்து ஆகியோரின் முயற்சியால் ஜூலை 1997 முதல் வெளிவரும் 'South Indian Folkloristics' என்னும் இதழும், ஜப்பானிலிருந்து வெளிவந்து கொண்டிருக்கும் 'Asian Folklore Studies' என்னும் இதழும், திருவனந்தபுரம் திராவிட மொழியியல் கழகத்தின் IJDL இதழும், புதுவை மொழியியல் பண்பாட்டு நிறுவனத்தின் Journal of Dravidic Studies என்னும் இதழும், சென்னை ஆசியவியல் நிறுவனம் வெளியிடும் Journal of Asian Studies என்னும் இதழும் தமிழ் நாட்டுப்புறவியல் சார்ந்த ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டு வருகின்றன. இவையேயன்றி ஆங்கிலத்தில் மைசூரிலிருந்து வெளிவந்த Folkore Fellows of India, இப்போது பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரியிலிருந்து வெளி வந்து கொண்டிருக்கும் FRRC News திருவனந்தபுரம் தென்னிந்திய மொழிகளின் நாட்டுப்புறவியல் கழகத்திலிருந்து வெளிவந்து கொண்டிருக்கும் FOSSILS News முதலான நாட்டுப்புறவியல் ஆங்கிலச் செய்தி இதழ்கள் தமிழகத்தில் நடைபெற்று வரும் ஆய்வுகள் குறித்த செய்திகளையும் தமிழ்த் தரவுகளையும் வெளியிட்டு வருகின்றன.

தமிழகத்தில் கடந்த அரை நூற்றாண்டு காலமாகப் பல்வேறு புதிய கல்வித்துறைகள் அறிமுகமாகி வளர்ச்சிபெற்று வருகின்றன. அத்துறைகள் பற்றிய சிந்தனைகளை வெளியிடுவதற்கான வெளியீட்டுக் களங்களாகப் பல்வேறு ஆய்விதழ்களும் வெளிவரத் தொடங்கியுள்ளன. இந்த இதழ்கள் அமைப்புகளைச் சார்ந்தும் தனிமனித முயற்சிகளாலும் வெளிவருகின்றன.

1960களில் பேராசிரியர் நா. வானமாமலை அவர்களின் முயற்சியால் நாட்டுப்புறப் பாடல் தொகுப்புகளும் பல்வேறு கட்டுரைகளும் வெளிவந்தன. இவை பலதுறைக் கலப்பாய்வு (Inter Decipilinary Research) அடிப்படையில் அமைந்திருந்தன. கேரளப்

பல்கலைக்கழகத்திலிருந்து எம்.லிட். பட்டத்திற்காகவும் பிஎச்.டி. பட்டத்திற்காகவும் முறையே கே.பி.எஸ். ஹமீது, பா.ரா. சுப்ரமணியம் ஆகியோர் தமிழ் நாட்டுப்புற வழக்காறுகளை ஆராய்ந்தனர். சியாமளா பாலகிருஷ்ணன் நாட்டுப்புற இசையையும், ஆறு. அழகப்பன் நாட்டுப்புறப் பாடல்களையும் எம்.லிட். பட்டத்திற்காக ஆராய்ந்தனர். பச்சையப்பன் கல்லூரியில் பேராசிரியர் அ.மு.ப. அவர்களால் எம்.ஏ., மாணவர்களுக்கு நாட்டுப்புறவியல் ஒரு பாடமாக அறிமுகப்படுத்தப்பட்டது. தொடர்ந்து 70களில் சென்னைப் பல்கலைக்கழகம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், மதுரைப் பல்கலைக்கழகம், கேரளப் பல்கலைக்கழகம் முதலானவற்றில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் நாட்டுப்புறவியல் குறித்த ஆய்வுகளைத் தங்கள் எம்.ஃபில், பிஎச்.டி. பட்டத்திற்காக மேற்கொண்டனர். இவர்களை ஒருங்கிணைக்கவும் இவர்களின் ஆய்வுகளை வெளியிடவும் முறையான நாட்டுப்புறவியல் அமைப்புக்கள் இல்லாமல் இருந்தன. 1976 வாக்கில் சு. சண்முக சுந்தரம், ஆறு. இராமநாதன் ஆகியோர் நாட்டுப்புறவியல் ஆய்வாளர்களை ஒருங்கிணைப்பதற்காகச் சென்னையில் நாட்டுப்புறவியல் ஆய்வாளர் மன்றம் உருவாக்கினர். ஆயினும் இம்முயற்சி ஒன்றிரண்டு கூட்டங்களோடு நின்றுவிட்டது. அதன் பிறகு பேராசிரியர் ச. அகத்தியலிங்கம் அவர்களின் முயற்சியால் 'இந்தியத் தமிழ் நாட்டுப்புறவியல் கழகம்' அண்ணாமலை நகரில். 1982இல் பதிவு செய்யப்பட்டது. இதுவே தமிழகத்தில் நாட்டுப்புறவியல் வளர்ச்சிக்காக முறையாக உருவாக்கப்பட்ட முதல் அமைப்பு என்று கூறலாம். இந்த அமைப்பின் சார்பாக 'நாட்டுப்புறவியல்' என்னும் காலாண்டு இதழ் 1983இல் வெளியிடப் பட்டது. இந்த இதழே தமிழில் நாட்டுப்புறவியலுக்கென வெளியிடப்பட்ட முதல் இதழாகும். 1989 வரை இவ்விதழின் ஐந்து தொகுதிகள் வெளிவந்தன. இந்த இதழ்களில் நாட்டுப்புறவியல் ஆய்வுக்கட்டுரைகளோடு, நாட்டுப்புற வழக்காறுகளின் தொகுப்புக்களும் கருத்துரைகளும் வெளியிடப் பட்டன. தமிழகத்தின் மூத்த நாட்டுப்புறவியல் ஆய்வாளர்களோடு இத்துறையில் புதிதாக ஈடுபடும் ஆய்வாளர்களும் கட்டுரை எழுத இவ்விதழில் வாய்ப்புகள் நல்கப்பட்டன. எனவே இவ்விதழ்களில் வெளிவந்த ஐம்பத்தேழு கட்டுரைகளும் பலதரப்பட்டனவாகக் காணப்படு கின்றன. மூன்று கட்டுரைகள் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளன. இவ்விதழ்களில் நாட்டுப்புற இலக்கியம் சார்ந்த கட்டுரைகளே மிக அதிகமாகக் காணப்படு கின்றன. அவற்றுள்ளும் நாட்டுப்புறப் பாடல்கள் பற்றிய கட்டுரைகள் மிகுதி.

1986இல் பாளையங்கோட்டை தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரியில் நாட்டார் வழக்காற்றியல் துறை உருவாக்கப்பட்டதோடு அத்துறையில் முதுகலைப்பட்டப் படிப்பும் தொடங்கப்பட்டது. இதே ஆண்டில் (ஜனவரி 86) மதுரையில் தமிழக நாட்டுப்புறவியல் ஆய்வுக் கழகம் என்.எம். செல்வம், துளசி. இராமசாமி, சரஸ்வதி வேணுகோபால் ஆகியோரது முயற்சியால் உருவாக்கப்பட்டு 'நாட்டுப்புறவியல் செய்திமடல்' வெளியிடப் பட்டது. ஏப்ரல் 86இல் சென்னையில் தமிழக நாட்டுப்புறவியல் பேரவை சி. சத்தியசீலன் என்பவரின் முயற்சியால் தொடங்கப்பட்டு 'நாட்டுப்புறவியல் செய்தி மலர்' வெளியிடப்பட்டது. இந்தச் செய்தி இதழ்கள் குறைந்த எண்ணிக்கையில் மட்டுமே வெளிவந்தன. ஆயினும் அப்போதைய நாட்டுப்புறவியல் ஆய்வுப் போக்கினைப் புரிந்துகொள்ள அவை உதவின. 1987இல் பல்கலைக்கழக அளவில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் முதன்முறையாக நாட்டுப்புறவியலுக் கெனத் தனித் துறை உருவாக்கப்பட்டது. மதுரை காமராசர் பல்கலைக் கழகத்திலும் நாட்டுப்புறவியல் தனித் துறையாக உருவாக்கப் பட்டது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நாட்டுப்புறவியல் செயலரங்குகளும் தென்னிந்திய மற்றும் வட்டார அளவிலான செயலரங்குகளும் கருத்தரங்குகளும் நடைபெற்றன. இவற்றின் விளைவாக இத்துறை ஆய்வுகள் மேலும் கூர்மைப்படுத்தப் பட்டன.

மேலைநாட்டுக் கோட்பாடுகள் தமிழில் அறிமுகப் படுத்தப்பட்டன. அவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டன. சி. சுந்தரேசன், ந. முத்தையா, இளம்பரிதி முதலான ஆய்வாளர்களின் முயற்சியால் 'களம்' என்னும் நாட்டுப்புறவியல் ஆய்வாளர் மன்றம் உருவாக்கப் பட்டது. இம் மன்றத்தின் ஆண்டுக் கருத்தரங்குகள் நூல்களாக வெளியிடப் பட்டு வருகின்றன. இதன் சார்பாகச் செய்தி இதழ் ஒன்றும் வெளிவந்தது. பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரியில் முதுகலை நாட்டார் வழக்காற்றியல் துறை மாணவர்கள் 'நாட்டார் வழக்காற்றியல் வட்டம்' தொடங்கிக் கருத்தரங்குகள் நடத்துகின்றனர். இத்தகைய முயற்சிகளால் நாட்டுப்புறவியல் ஆய்வு வட்டம் விரிவாகி வருகிறது.

இந்த அமைப்புகள் உருவாகும் முன்னரே நாட்டுப்புறவியல் ஆய்வுகளையெல்லாம் வெளியிடுவதற்கு இத்துறை சார்ந்த ஆய்விதழ் போதுமானதாக இல்லை என்ற குறை உணரப்பட்டது. 1987இல் பாளையங்கோட்டையில் டாக்டர் தே. லூர்துவின் முயற்சியால்

நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுக் கழகம் 'நாட்டார் வழக்காற்றியல்' என்ற தலைப்பில் ஒரு ஆய்விதழை ஆண்டிற்கு இரு முறை வெளியிட முடிவு செய்தது. இதன் முதல் இதழ் 1987இல் வெளிவந்தது. இவ்விதழில் ஆறு கட்டுரைகள் இடம்பெற்றிருந்தன. கோட்பாட்டு அடிப்படையிலான தரமான கட்டுரைகளாக அவை அமைந்திருந்தன. 'குறிப்பும் நோக்கமும்' என்ற தலைப்பில் பீட்டர் ஜெ. கிளாஸ் அணுகுமுறை வறுமை குறித்து பேட்டி அளித்திருந்தார். க்ளாட் லெவிஸ்டராஸ் குறித்து எம்.டி. முத்துக்குமாரசாமி அறிமுகப்படுத்தியிருந்தார். இவையேயன்றி நூல் மதிப்பீடுகளும் இவ்விதழில் இடம் பெற்றிருந்தன. இவ்விதழ் தொடங்கப்பட்ட நோக்கம் குறித்து நிர்வாக ஆசிரியர் பின்வருமாறு கூறுகிறார்:

> கடந்த பல ஆண்டுகளாக விருப்பப்பாடமாகவும் சிதறலான ஆய்வுப் பொருளாகவும் நாட்டார் வழக்காறுகள் தமிழ்த்துறையினருக்கு அமைந்துள்ளன. வரலாறு, உளவியல், சமூகவியல், மானிடவியல், ஆங்கிலத் துறையினருக்கு இவை பற்றிய அக்கறை யில்லை. உளவியல், மானிடவியல், சமூகவியல் துறைகளும் தமிழ்மொழியில் வீறுடன் வளரவில்லை; வளர்க்கப்படவுமில்லை. ஆதலின் நம் அணுகுமுறையில் வறுமை காணப்படுகின்றது என்பது உண்மையே— 1987 நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகள் எல்லாம் பல்துறை இணைவு ஆய்வுகளாக அமைகின்றன. தமிழிலும் அத்தகைய வளமாக ஆய்வுகளை வளர்க்கும் நோக்கில் இவ்விதழ் பல்வேறு கோட்பாட்டு அடிப்படையிலான கட்டுரைகளை வெளியிடும்.

நாட்டார் வழக்காற்றியலின் இரண்டாவது இதழ் (1988) லெவிஸ்ட்ராஸ் சிறப்பிதழாக வெளிவந்தது. இதன் சிறப்பாசிரியராக எம்.டி. முத்துக்குமாரசாமி பணியாற்றினார். தமிழகத்தில் நாட்டுப்புறவியலின் நிலைகுறித்து நிர்வாக ஆசிரியர் விரிவாகத் தன் கருத்துக்களை முன்னுரையில் வெளியிட்டுள்ளார். இவ்விதழில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள் மொழிபெயர்ப்புக்களாக லெவிஸ்ட்ராஸின் கருத்துக்களை வெளியிடுவனவாக அமைந்துள்ளன. இவ்விதழில் சிறப்பாசிரியர் தன்னுடைய கருத்துக்களைப் பின்னுரையில் வெளிப்படுத்து கிறார். இதழ் இறுதியில் தமிழகத்தில் நாட்டுப்புறவியல் குறித்த நிகழ்வுகள் செய்திகளாக வெளியிடப்பட்டுள்ளன.

நாட்டார் வழக்காற்றியலின் மூன்றாவது தொகுதி (1989-91) மானிடவியல் சிறப்பிதழாக வெளிவந்துள்ளது. இதன் சிறப்பாசிரியர் ஆ. செல்லப்பெருமாள். நிர்வாக ஆசிரியர் மற்றும் சிறப்பாசிரியர் முன்னுரைகளுடன் ஐந்து கட்டுரைகள் இதழில் இடம் பெற்றுள்ளன. இந்த மூன்று இதழ்களுக்குப் பிறகு இவ்விதழ் வெளிவரவில்லை. 'நாட்டார் வழக்காற்றியல்' இதழ்களில் வெளிவந்த கட்டுரைகள் பெரும்பாலும் மேலை நாட்டாரின் கோட்பாடுகளை அறிமுகப்படுத்துவதற்கு முக்கியத்துவம் அளித்துள்ளன.

நாட்டுப்புறவியலுக்கெனத் தமிழில் வெளியிடப்பட்ட இரண்டு இதழ்களும் தொடர்ந்து வெளிவர இயலாத நிலையில் டாக்டர் சு. சண்முகசுந்தரத்தின் முயற்சியால் 1995இல் 'தன்னனானே' என்னும் காலாண்டிதழ் பெங்களூரிலிருந்து வெளிவரத் தொடங்கி யுள்ளது. இதுவரை ஒன்பது இதழ்கள் ஐந்து தொகுதிகளாக வெளிவந்துள்ளன. அனைத்து இதழ்களிலும் 'திண்ணை' என்ற தலைப்பில் இதழாசிரியரின் கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன. முதல் இதழில் 'தன்னனானே' வெளியிட வேண்டியதன் அவசியம் குறித்துப் பின்வருமாறு கூறுகிறார் ஆசிரியர்.

> அவ்வப்போது குறிப்பிடத்தக்க அளவில் நூல் வெளியீடுகள் வந்தாலும்கூட ஓர் ஒழுங்கான இதழ் இல்லாதது பெரிய குறையாகும். நமது எண்ணங்களை, எழுத்துக்களைப் பகிர்ந்துகொள்ள ஒரு மேடை இல்லாத தவிப்பைத் 'தன்னனானே' தவிர்க்கும் என உறுதி கூறுகிறேன். தமிழ்ப் பண்புத் தளங்களுடன் நாட்டுப்புறவியலை அணுகுவது எத்துணை தவறோ அத்துணை தவறு பிறநாட்டுக்காரர்களின் வாலைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருப்பதும்கூட. வெளி நாட்டுக்காரர்களின் பணத்தைப் பயன்படுத்துவதைக் கூட ஒருவகையில் ஒத்துக் கொள்ளலாம். ஆனால் அவர்கள் தள்ளுகிற அனைத்தையும் 'ஆஹா ஓஹோ' என்று அள்ளி விழுங்குவதும் விழுங்கியதை விவஸ்தை யில்லாமல் வாந்தி எடுப்பதும் கண்டிக்கத்தக்கது. நம் மண்ணின் வாசனையை நாமே அளக்க முயல்வோம். நமக்கான அளவுகோல்களை நாமே தயாரிப்போம். நமக்குள் ஊடுருவிக்கிடக்கும் 'தமிழ்க் குணம்' அல்லாத ஆய்வுப் போக்குகளையும் இனம் காண்போம். 'புறச்சக்திகளை' அடையாளம் கண்டு அவற்றை வைக்க

வேண்டிய இடத்தில் வைத்தால் ஆய்வுகள் ஆய்வுகளுக்காகவே என்ற நிலையை மாற்றி ஆய்வுகள் நம் தமிழ்ச் சமுதாயத்தின் மேன்மைக்கான ஒரு அசைவாக இருக்கும்படி பார்த்துக் கொள்ளலாம். அதற்குத் 'தன்னனானே' தளம் அமைத்துள்ளது. உங்கள் சோதனைகளுக்கான களமிது என்று ஏற்றுக் கொள்க.

முதல் இதழில் ஏழு ஆய்வுக்கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. இவற்றுள் ஏ.கே. இராமானுஜம் எழுதிய முன்னுரை ஒன்றின் தமிழாக்கமும் க.ப. அறவாணனின் மானிடவியல் குறித்த கட்டுரையும் அடங்கும். மேலும் அச்சேறாத ஆய்வேடுகள், அறிமுகங்கள், அறிக்கைகள், நூல் விமர்சனங்கள் முதலியவும் இடம்பெற்றிருந்தன. நாட்டுப்புறவியலுக்கென வெளியிடப்பட்ட ஆய்வு இதழ்களுள் இத்தகைய விவரங்கள் தன்னனானேயில் மட்டுமே அதிக அளவில் இடம்பெற்றுள்ளன என்பது குறிப்பிடத் தக்கது.

இரண்டாவது, மூன்றாவது இதழ்கள் ஒரே தொகுப்பாக ஜனவரி 96இல் பொங்கல் மலராக வெளிவந்துள்ளது. இதில் ஒன்பது கட்டுரைகளோடு அறிக்கைகள், நேர்முகம், மதிப்புரைகள், ஆய்வேடுகள் முதலான பல்வேறு தலைப்புக்களில் செய்திகள் இடம்பெற்றுள்ளன. தன்னனானேவின் நான்கு-ஐந்து இதழ்கள் ஆகஸ்ட் 96இல் நாட்டுப்புற விளையாட்டுக்களின் சிறப்பிதழாக வெளிவந்துள்ளது. தமிழ்ப் பல்கலைக்கழக நாட்டுப்புறவியல் துறை நடத்திய நாட்டுப்புற விளையாட்டுக் கருத்தரங்கில் படிக்கப் பட்ட கட்டுரைகளின் தொகுப்பாக இவ்விதழ் அமைந்துள்ளது. டாக்டர் சு. சக்திவேல் இவ்விதழின் சிறப்பாசிரியர். இக்கட்டுரைகளோடு சு. சண்முகசுந்தரம், கி. ராஜநாராயணன் ஆகியோரின் கட்டுரைகளும் இவ்விதழில் இடம்பெற்றுள்ளன. வழக்கம்போல் மதிப்புரைகள், அறிக்கைகள் முதலியன இடம்பெற்றுள்ளன. ஆறு-ஏழு இதழ்கள் ஒரே தொகுப்பாகக் கதைப்பாடல் சிறப்பிதழாக வெளிவந்துள்ளது. இவ்விதழின் சிறப்பாசிரியராக டாக்டர் சிவ. விவேகானந்தன் செயல்பட்டுள்ளார். இவர் 'குருக்கேத்திரன் கதைப்பாடல்' என்னும் கதைப்பாடலை விரிவான ஆய்வுரையுடன் இவ்விதழில் பதிப்பித்துள்ளார். இந்த இதழின் பெரும்பகுதியை (133 பக்கங்கள்) இந்தக் கதைப்பாடலே பிடித்துக் கொண்டுள்ளது. இதைத் தவிர இரண்டு கட்டுரைகளும் நூல் விமர்சனங்களும் அறிக்கைகளும் இடம்பெற்றுள்ளன. தென் தமிழ்நாட்டில் வில்லிசைக் கலையில் இன்றைய நிலையில் பாடப்படும் கதைப்பாடல்களின் பெயர்ப்

பட்டியல் ஒன்றும் டாக்டர் அ.க. பெருமாளால் தயாரிக்கப்பட்டு இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது.

தன்னனானேவின் எட்டு-ஒன்பது இதழ்கள் நாட்டுப்புற மருத்துவச் சிறப்பிதழாக 1997இல் வெளிவந்துள்ளது. டாக்டர் தே. ஞானசேகரன் இவ்விதழின் சிறப்பாசிரியர். நாட்டுப்புற மருத்துவம் குறித்துப் பதினைந்து கட்டுரைகள் இவ்விதழில் இடம்பெற்றுள்ளன. வட்டாரம் சார்ந்த, இனக்குழு சார்ந்த கட்டுரைகளும் மூலிகை மருத்துவம், நம்பிக்கை மருத்துவம் குறித்த கட்டுரைகளும், நாட்டு வைத்தியம் குறித்த கட்டுரைகளும் இதில் அடங்கும். இறுதியில் நூல் மதிப்புரைகளும் அறிக்கைகளும் இடம்பெற்றுள்ளன.

நாட்டுப்புறவியல் துறை வளர்ச்சியோடு அத்துறை இதழ்கள் நெருங்கிய தொடர்புடையன. பல்வேறு ஆய்விதழ்கள் நாட்டுப்புறவியல் சார்ந்த ஆய்வுக் கட்டுரைகளையும் வழக்காறு களையும் வெளியிட்டு வருகின்றன. ஆயினும் தமிழகத்திலிருந்து தமிழில் இதுவரை இத்துறைக்கென மூன்று ஆய்விதழ்களே வெளிவந்துள்ளன. நாட்டார் வழக்காற்றியல் இதழ் மீண்டும் வரக்கூடுமாயினும் தற்போது தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கும் ஆய்விதழ் தன்னனானே மட்டுமே. நிதி நெருக்கடி களுக்கிடையே இதனை வெளியிட்டு வரும் சு. சண்முகசுந்தரம் பாராட்டுக்குரியவர். இந்த இதழ்கள் தமிழகத்தில் நாட்டுப்புற வியலின் ஆய்வுப்போக்கினை அறிந்து கொள்ளப் பெரிதும் உதவுகின்றன.

# திராவிடவியல் ஆய்விதழ்
## (PILC JOURNAL OF DRAVIDIC STUDIES)

**1991** எல். இராமமூர்த்தி

புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தின் வெளியீடாக வந்துகொண்டிருக்கும் திராவிடவியல் ஆய்விதழ், உலகின் பல பகுதிகளில் இருந்து வெளிவரும் ஆய்விதழ்களின் வரிசையில் தரப்படுத்தத்தக்க ஒரு பன்னாட்டு ஆய்விதழாக உள்ளது. ஒரு ஆய்விதழ் என்பது தற்போது நடைபெறும் ஆய்வுக் களங்களையும் அக்களங்களில் தோன்றும் ஆய்வுச் சிக்கல்கள், புதிய கண்டுபிடிப்புகள் போன்றவற்றையும் பிரதிபலித்து அமைய வேண்டும். இத்தகைய ஆய்வுக் களங்கள் ஒரு குறிப்பிட்ட அறிவுப் பரப்பில் அமையும்பொழுது அவை நுண்ணாய்வுகளுக்கு இடம் தரும் களங்களாக அமையும். அந்த வகையில், பொதுவாக மொழியியல், பண்பாட்டியல் என்ற ஆய்விதழாக இல்லாமல், திராவிடப் பரப்பை மையப்படுத்தி இவ்வாய்விதழ் அமைகிறது. இந்தியப் பல்கலைக்கழகங்கள் உலகின் பல்வேறு பல்கலைக்கழகங்கள் அவை வெளியிடும் ஆய்விதழ்கள் சிலவற்றிக்கு இந்த திராவிடவியல் ஆய்விதழைப் பரிவர்த்தனை (exchange) முறையில் பெறுகின்றன என்ற செய்தி இவ்விதழின் பன்னாட்டுத் தரத்தைக் காட்டும். ஆண்டுக்கு இரு முறையாக ஆங்கிலத்தில் வெளிவந்து கொண்டிருக்கும் இவ்விதழ் ISSN 0971-0957 என்ற குறியீட்டு எண்ணுடன் வருவது குறிப்பிடத்தக்கது.

### ஆய்விதழின் நோக்கம்

ஒரு சிறந்த ஆராய்ச்சி நிறுவனத்தின் தலையாய தேவை உயர் ஆராய்ச்சி இதழ் ஒன்றை நடத்துவதாகும். ஒரு ஆராய்ச்சி நிறுவனம், உலகில் நடைபெறுகின்ற ஆய்வுப் பணிகள் பற்றிய விவரங்களையும் அந்நிறுவனத்தில் நடைபெறுகின்ற ஆராய்ச்சி களையும் பிறரின் கவனத்திற்குக் கொண்டு செல்லவும் ஆய்விதழ்கள் உதவுகின்றன. அந்த வகையில் புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆய்வுப் பணிகள் சிறப்பாக அமைய வேண்டும் என்ற நோக்கத்திற்காகப்

பல்வேறு பல்கலைக்கழகங்கள் வெளியிடுகின்ற பன்னாட்டு ஆய்விதழ்களை நூலகத்திற்கு நிறுவனம் வாங்கியது. இந்த நிறுவனத்தின் ஆய்வுகள் வெளிவரவும் திராவிடவியல் ஆய்வுகளில் ஈடுபட்டுள்ளோர் தங்களின் அறிவைப் பகிர்ந்துகொள்ளவும் வாய்ப்பாக, திராவிடவியல் என்ற ஆய்விதழைத் தொடங்கியது.

திராவிடவியல் ஆய்வுப் பரப்பில் ஆய்விதழ் தொடங்கு வதற்கு முக்கிய காரணம், இந்நிறுவனத்தின் பணிகள் எல்லாம் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி ஒன்றியப் பகுதியில் பேசப்படு கின்ற மொழிகள்; அம்மொழிகளைப் பேசும் மக்களின் பண்பாடு போன்றவைகள்தான் எனலாம். புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் புதுச்சேரி அரசின் நிதியுதவி யுடன் இயங்கி வருகிறது. இந்நிறுவனத்தின் முக்கியபணி புதுச்சேரி ஒன்றியப் பகுதிகளில் பேசப்படும் மொழிகள், மக்களின் பண்பாடுகள் இவற்றை ஆராய்தல், அதற்கென இங்கு மொழியியல், இலக்கியவியல், பண்பாட்டுவியல் என்ற மூன்று புலங்கள் உள்ளன. புதுச்சேரி அரசு 1986ஆம் ஆண்டு இந்நிறுவனத்தை அரசுடைமையாக்குவதற்கு முன், இந்நிறுவனம் திருவனந்தபுரத்தில் உள்ள பன்னாட்டு திராவிடவியல் பள்ளியின் புதுச்சேரி மையமாகச் செயல்பட்டு வந்தது. திருவனந்த புரத்தில் உள்ள பன்னாட்டு திராவிட மொழிகள் பள்ளி (International school of Dravidian Language), 'பன்னாட்டு திராவிட மொழியியல்' (International Journal of Dravidian Linguistics) என்ற ஆய்விதழைப் பல ஆண்டுகளாக நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

புதுச்சேரி ஒன்றியத்தின் ஆட்சிப்பரப்பு ஆந்திரம் மற்றும் கேரளப் பகுதிகளில் இருப்பதாலும், அரவிந்தர் ஆசிரமம், ஆரோவில் போன்ற அமைப்புகளால் பல்வேறு மொழிகள் பேசும் மக்கள் புதுவையில் வசிப்பதாலும் மொழியியல், பண்பாட்டியல் ஆய்வு களுக்கு ஒரு சிறந்த களமாகப் புதுவை விளங்குகிறது. எனவே மொழியியலையும் பண்பாட்டியலையும் இணைத்து ஆய்வுக் கட்டுரைகள் வெளியிடுவதற்கு வசதியாகத் திராவிடவியல் ஆய்விதழ் தொடங்கப்பட்டது. இவ்விதழ் கட்டுரைகள் கோட்பாட்டாய்வு களாகவோ, தரவுகளின் அடிப்படையில் புதிய சிந்தனைகளை வெளியிடும் வகையிலோ அமைய வேண்டும். மொழியியல், பண்பாட்டியல் மற்றும் பல்வேறு வல்லுநர்களின் கவனத்தை ஈர்க்கும் ஆய்வுப்பொருளைக் கொண்டு, அத்துறை வல்லுநரால் எழுதப்படும் கட்டுரைகளே இவ்விதழில் இடம்பெறும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது.

## ஆய்விதழின் அமைப்பும் வெளியிடும் முறையும்

திராவிடவியல் ஆய்விதழ் மூன்று பெரும் பிரிவுகளில் கட்டுரைகளை வெளியிடுகிறது. அவை 1) முழு ஆராய்ச்சிக் கட்டுரைகள், 2) ஆய்வுக் குறிப்புகள், 3) நூல் மதிப்பீடு. முழு ஆராய்ச்சிக் கட்டுரைகள் 2000 முதல் 5000 வரைச் சொற்களைக் கொண்டிருக்க வேண்டும். சிறு ஆய்வுக் குறிப்புக்கள் 1000 சொற்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும். ஆனால் மிகச்சிறந்த கோட்பாட்டு நிலையில் உள்ள கட்டுரைகளுக்குச் சொற்கள் வரம்பு இல்லை.

## ஆய்வு நடை ஏடு (Style Sheet)

இவ்வாய்விதழின் கட்டுரைகளின் தரம் ஒன்றுபோல அமைய, இதில் வெளியிடப்படும் கட்டுரைகளின் அமைப்பும் ஒன்றாக அமைய வேண்டும். எனவே கட்டுரையாளர்கள் தங்கள் கட்டுரைகளை எவ்வாறு வடிவமைக்க வேண்டும் என்பதற்கு 'ஆய்வு நடை ஏடு' என்பது திராவிடவியல் ஆய்விதழ்க்கெனத் தரப்படுத்தப் பட்டது. அது அமெரிக்கப் பல்கலைக்கழகத்தில் இருந்து வெளி வருகின்ற மொழி (Language) என்ற ஆய்விதழின் நடை மாதிரியைப் பின்பற்றிக் கட்டுரை எழுத வேண்டும் என வற்புறுத்துகிறது. மேற்கோள்கள், அடிக்குறிப்புகள், துணை நூல்கள் போன்றவை கட்டுரைப் பகுதியில் எவ்வாறு வர வேண்டும்; கட்டுரைக்கு வெளியே எவ்வாறு குறிக்கப்பட வேண்டும் என்பதும், ஒலி எழுத்துக்கள் (Phonetic symbols) குறியீடுகள் போன்றவை அமைக்கும் முறையும் மொழி ஆய்விதழின் மாதிரியைக் கொண்டிருக்க வேண்டும்.

கட்டுரைகளுக்குத் தேவையான வரைபடம், நிழற்படம், அட்டவணை போன்றவை கட்டுரைக்கு நடுவில் வரக்கூடாது. அவை தனியாகக் கட்டுரையின் பின்பகுதியில் இணைக்கப்பட வேண்டும். கட்டுரையாளர்கள், கட்டுரைக்குப் பயன்படுத்திய, கட்டுரையில் குறிப்பிட்டுள்ள நூல்களே துணைநூல் பகுதியில் சேர்க்க வேண்டும். கட்டுரையில் குறிப்பிடாத நூல்களைச் சேர்க்கக் கூடாது. அதே போல துணை நூல்கள், நூல்களில் இருந்து எடுத்த கட்டுரைகள் ஆகியவற்றை எவ்வாறு குறிப்பிட வேண்டும் என்ற மாதிரியும் ஆய்விதழின் அட்டையில் கொடுக்கப்பட்டுள்ளது.

## கட்டுரைகள் வெளியிடும் முறை

இதழின் கட்டுரைகள் ஆய்வு அமைப்பில் எழுதப்பட்டு, A4 அளவில் தட்டச்சு செய்யப்பட்டு அதன் மூன்று படிகளை

நிறுவனத்திற்கு அனுப்ப வேண்டும். அக்கட்டுரைகள் அத்துறை வல்லுநர்கள் இருவருக்குப் பெயர் நீக்கப்பட்டு மதிப்பீட்டிற்கு அனுப்பப்படும். வல்லுநர்கள் கட்டுரையின் தரத்தையும், குறைபாடுகளையும் சுட்டிக்காட்டி மதிப்புரை வழங்குவார்கள். இம்மதிப்புரைகள் மறுபடியும் கட்டுரையாளருக்கு அனுப்பப்பட்டு, கட்டுரை செம்மை செய்யப்படும். இவ்விதழில் வெளியாகும் கட்டுரைகள் அனைத்தும் இரண்டு வல்லுநர்களின் மதிப்பீட்டைப் பெற்றுச் சீரமைக்கப்பட்ட பின்னரே வெளியிடப்படும். மதிப்பீட்டாளரின் பெயரும், கட்டுரையாளரின் பெயரும் மந்தணமாகவே வைக்கப்பட்டிருக்கும். கட்டுரை வெளியீட்டுக்கு ஏற்றுக்கொண்டபிறகு, அது கட்டுரையாளருக்குத் தெரிவிக்கப்படும்.

நூல் மதிப்பீட்டிற்கு நூலாசிரியரோ, வெளியீட்டாளரோ நூலின் இரண்டு படிகளை அனுப்ப வேண்டும். துறை வல்லுநர் களால் நூல்கள் மதிப்பீடு செய்யப்பட்டு வெளியிடப்படும்.

இவ்வாய்விதழில் வெளியாகும் கட்டுரைகளை மதிப்பீடு செய்வதற்குத் தலைசிறந்த வல்லுநர்களைக் கொண்ட பதிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இப்பதிப்புக் குழுவில் அமெரிக்கா, ஜப்பான், இங்கிலாந்து, ஜெர்மனி, செக்கோஸ்லேவோகியா போன்ற நாட்டு வல்லுநர்களும், இந்தியாவின் தலைசிறந்த பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் இடம்பெற்றுள்ளனர். இப் பதிப்புக் குழுவில் உள்ளவர்களைத் தவிர கட்டுரைத் தலைப்பிற் கேற்ப, அத்துறை வல்லுநர்களிடமும் கட்டுரைகள் மதிப்பீட்டிற்கு அனுப்பப்படும்.

### ஆய்விதழின் அமைப்பு

ஆய்விதழ் முன் அட்டையில் இருந்து பின் அட்டை வரைச் செய்திகளைக் கொண்டதாக உள்ளது. முன் அட்டையின் முன்பகுதியில் இதழின் பெயரும், எண், வருடம் ஆகியனவும், நிறுவனப் பெயரும் இருக்கும். முன் அட்டையின் நடுப்பகுதியில் அவ்விதழில் வெளியிடப்பட்டிருக்கும் ஒரு கட்டுரையின் மிக முக்கியப் பகுதியும், கோட்பாட்டளவில் உள்ள படங்களும் ஒன்றன்மேல் ஒன்று அச்சிடப்பட்டிருக்கும். இதுதான் இந்த ஆய்விதழின் சிறப்புக்கூறு.

முன்அட்டையின் பின்பகுதியில் பதிப்பாசிரியர், பதிப்புக் குழு, சந்தா விபரம் போன்றவை அச்சிடப்பட்டுள்ளன. இவ்வாய்விதழ் வெளிவருவதற்குப் புதுவை அரசு நிதியும் இந்திய அரசின் வரலாற்றுக் குழுவின் நிதியுதவியும் கிடைப்பதால், அவை அங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

பின் அட்டையின் பின் பகுதியில் இதழில் வெளியான கட்டுரைகள், ஆய்வுக்குறிப்புகள், நூல் மதிப்புரை ஆகியன பக்கங்களோடு வெளியிடப்படும். பின் அட்டையின் முன் பகுதியில் கட்டுரையாளருக்குத் தேவையான குறிப்புகள், கட்டுரைகள் அனுப்ப வேண்டிய முகவரி ஆகியன உள்ளன.

இவ்விதழில் கட்டுரைகள், மொழியியல், பண்பாட்டியல், ஆய்வுக்குறிப்புகள், நூல்மதிப்புரை என்ற வரிசையில் வெளியிடப்படும். கட்டுரையாளருக்கு 25 படிகள் வழங்குவதற்கு ஏற்பக் கட்டுரைகள் தனித்தனியாக அச்சிடப்படும். அவை அச்சிடப்படும் முறைக்குத் தனியான தரப்படுத்தப்பட்ட அச்சீட்டு முறை பின்பற்றப்படுகிறது. இதழின் பக்க எண்கள், ஒவ்வொரு இதழுக்குமாக இல்லாமல், ஒரு தொகுதிக்கு எனத் தொடர்ச்சியாக அமையும்.

## ஆய்விதழின் உள்ளடக்கம்

இந்தக் கட்டுரைக்கு 1998ஆம் ஆண்டு வரையிலான ஆய்வு வெளியீடுகள் என வரையறுத்துக் கொண்டு, இதன் உள்ளடக்கம் விளக்கப்படுகிறது. இவ்வாய்விதழ் 1991ஆம் ஆண்டு தொடங்கி, ஆண்டிற்கு இரண்டாக 1998ஆம் ஆண்டு முடிய 16 இதழ்களின் உள்ளடக்கங்கள் ஆராயப்படுகின்றன. முன்னர் குறிப்பிட்டது போல திராவிட மொழிகள், பண்பாடு இவற்றிக்குச் சிறப்புரிமை வழங்கப்பட்டு கட்டுரைகள் வெளியிடப்பட்டுள்ளன. அக் கட்டுரைகளில் பெரும்பகுதி கட்டுரைகள் மொழியியல் சார்ந்து அமைந்துள்ளன. பண்பாட்டியல் கட்டுரைகள் மானிடவியல் சார்ந்தும், நாட்டுப்புறவியல் சார்ந்தும் அமைந்துள்ளன. அதேபோல இலக்கியவியல் கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. இக் கட்டுரைகள் அனைத்தும் சீர்தூக்கி வெளியிடப்பட்டவை ஆகையால் கட்டுரைகள் அனைத்தும் தனித்தன்மை வாய்ந்தவை களாகி அமைகின்றன. ஆகவே இவ்விதழில் வெளியான கட்டுரைகளின் தனி மதிப்பீடு என்பது அனைத்துக் கட்டுரை களையும் விவரிக்கும்படி அமையும் என்பதால், ஆய்வுப்பரப்பு சார்ந்த கருத்துக்களே இக்கட்டுரையில் இடம் பெறும். 1998ஆம் ஆண்டு வரையில் 84 மொழியியல் சார்ந்த கட்டுரைகளும், 45 பண்பாட்டியல் சார்ந்த கட்டுரைகளும், 9 இலக்கியவியல் கட்டுரைகளும் வெளிவந்தன. அத்துடன், 26 ஆய்வுக்குறிப்பு களும், 10 நூல்கள் பற்றிய மதிப்பீடுகளும், உள்ளடக்கங்களாக உள்ளன. இவ்விதழில் வெளியான கட்டுரைகளின் பட்டியல் ஆண்டு, தொகுதியின் அடிப்படையில் பின்வருமாறு பிரிக்கப்பட்டுள்ளன.

அட்டவணை

| ஆண்டு | தொகுதி | மொழியியல் | பண்பாட்டு இயல் | இலக்கியவியல் | ஆய்வுக் குறிப்பு | நூல் மதிப்புரை |
|---|---|---|---|---|---|---|
| 1991 | 1:1 | 5 | 3 | 1 | 3 | 1 |
| | 1:2 | 4 | 3 | 1 | 2 | 1 |
| 1992 | 2:1 | 5 | 4 | – | 2 | – |
| | 2:2 | 6 | 2 | 1 | 1 | – |
| 1993 | 3:1 | 4 | 4 | – | 2 | 1 |
| | 3:2 | 5 | 3 | 1 | 2 | 2 |
| 1994 | 4:1 | 4 | 3 | – | 3 | 1 |
| | 4:2 | 6 | 1 | 1 | 1 | – |
| 1995 | 5:1 | 7 | 2 | – | 2 | – |
| | 5:2 | 7 | 3 | – | – | 1 |
| 1996 | 6:1 | 5 | 2 | – | 2 | – |
| | 6:2 | 6 | 2 | 1 | 2 | – |
| 1997 | 7:1 | 7 | 5 | – | 1 | 1 |
| | 7:2 | 5 | 4 | – | 1 | 1 |
| 1998 | 8:1 | 5 | 1 | 2 | 1 | – |
| | 8:2 | 3 | 3 | 1 | 1 | 1 |
| | | 84 | 45 | 9 | 26 | 10 |

## மொழியியல் கட்டுரைகள்

மொழியியல் கட்டுரைகளைப் பொதுவாக மொழிகளைப் பற்றிய கட்டுரைகள், ஒப்பீட்டு நிலையில் அமையும் கட்டுரைகள் என இருவகையாகப் பிரிக்கலாம். பொதுவாக இக்கட்டுரைகள் திராவிட மொழிகளைப் பற்றிய ஆய்விதழ்க் கட்டுரைகள் என்றாலும், மொழியியல் கோட்பாடுகளை விளக்குவதற்கும், மறு ஆய்விற்கும் வேறுமொழித் தரவுகளும் தேவையாகிறது என்பதால் பிறமொழிக் குடும்பங்களைச் சேர்ந்த கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. பொதுவான நிலையில், இவ்விதழில் ஆராயப்பட்ட மொழிகள் பின்வருவன:

தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், தோடா, குவி போன்ற திராவிட மொழிகள் மற்றும் திராவிடம் என்ற நிலையில் அமையும் பல்வேறு திராவிட மொழிக் கட்டுரைகள் ஒரு நிலையில் உள்ளன. இவற்றைத் தவிர குஜராத்தி, மைதிலி, ஒரியா, வங்க மொழி, காஸ்மீரி, இந்தி, உருது போன்ற வட இந்திய மொழிகளை மொழியியல் கோட்பாட்டு அடிப்படையில் விளக்கும் கட்டுரைகளும் உள்ளன.

மத்திய பழங்குடியினர் பேசும் மொழிகள், பிரெஞ்சு, சமஸ்கிருதம் போன்ற மொழிகள் மீதான கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன.

## ஒப்பீட்டு நிலை

தனி மொழிகளின் மொழியியல் தொடர்பான ஆய்வோடு, இரண்டு மூன்று மொழிகளை ஒப்பீடு செய்யும் ஆய்வுக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்கனவாகத் 'திராவிடம்-போர்ச்சுக்கீசிய மொழி' என்ற கட்டுரையையும் 'தோசேரியன் என்ற மொழி திராவிடத்தின் வணிக மொழியா?' என்ற கட்டுரையையும் குறிப்பிடலாம். இத்தகைய ஒப்பீட்டாய்வில் ஹிந்தி-உருது, தமிழ்-பிரெஞ்சு, தமிழ்-தெலுங்கு, ஹிந்தி-குஜராத்தி போன்ற இந்திய மொழிகளுக்குள் மொழியியல் ஒப்பீடுகள் சில முக்கியமானவையாகும்.

திராவிடம்-பிராகிருதம், திராவிடம்-மங்கோலியன் மொழி, தமிழ்-பிரெஞ்சு போன்ற மொழித் தரவுகள் ஆராயப் பட்ட விதம் பல புதிய உண்மைகளைப் புலப்படுத்தியுள்ளன. மொழியியல் அடிப்படையில் ஆராயும் சமஸ்கிருதம்-பிராகிருதம் தமிழ்க் கட்டுரையும் குறிப்பிடத்தக்கது.

மொழிகள் பற்றிய கட்டுரைகள் மொழியியல் அடிப் படையில் பரந்த நிலையில் அமைகின்றன. மொழியின் ஒலியியல், ஒலியனியல், சொல்லியல், தொடரியல் என்ற மொழி அமைப்பு நிலையில் கட்டுரைகள் உள்ளன. மொழியியல் சார்ந்த கட்டுரைகளில் அதிக விழுக்காட்டுக் கட்டுரைகள் தொடரியல் என்னும் வாக்கியம் தொடர்பான ஆய்வுகளாக உள்ளன. தொடரியலில் பெரும் புரட்சி செய்த சாம்ஸ்கி அவர்களின் கோட்பாட்டை ஒட்டிய கட்டுரைகள் இடம்பெற்றிருப்பது, உலக நிலையில் சாம்ஸ்கியின் தொடரியல் ஏற்படுத்தியிருக்கும் தாக்கத்தின் வெளிப்பாடு எனலாம். இலக்கண நிலையில் சமஸ்கிருத அஸ்டாத்தியாயியைப் பற்றிய கட்டுரை ஒன்றும் இடம்பெற்றுள்ளது.

பயன்பாட்டு மொழியியல் அடிப்படையில் மொழி பெயர்ப்பியல், கணினி மொழியியல், பேச்சுக் குறைபாடு மொழி கற்பித்தல், மொழித் திட்டமிடுதல், நடையியல் போன்ற துறைகளில் கட்டுரைகள் உள்ளன.

இவற்றைத் தவிர பொருண்மையியல், இருமொழியம், சமுதாய மொழியியல் தொடர்பான கட்டுரைகளும் உள்ளன.

**பண்பாட்டியல் கட்டுரைகள்**

மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தில் பண் பாட்டியல் என்பது தனிப்புலமாக உள்ள நிலையில், இந்நிறுவன ஆராய்ச்சி இதழிலும் பண்பாட்டியல் தொடர்பான கட்டுரை களுக்குத் தனி இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. பண்பாட்டியல் என்பது மானிடவியல், நாட்டுப்புறவியல் தொடர்பான ஆய்வுகளைக் கொண்டிருக்கும். இவ்வாய்விதழில் ஒரு இதழுக்கு 2 முதல் 4 வரை பண்பாட்டியல் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. பண்பாட்டியல் கட்டுரைகள் அனைத்தும் தென்னிந்தியப் பண்பாட்டியலை மையப் படுத்தியே உள்ளன.

இவ்விதழில் வெளியான கட்டுரைகளில் மானிடவியல் துறை சார்ந்து, முஸ்லீம் பெண்கள் அவர்களது திருமண முறை, உறவுமுறைப் பெயர்கள், இடப்பெயர் ஆய்வுகள், அந்தமான் பண்பாடு, தென்னிந்திய திருமண முறைகள், குடும்ப உறவுகள், கல்வராயன் மலையாளிகள், தோடர்கள் பண்பாடு போன்ற தலைப்புகளில் கட்டுரைகள் அமைந்துள்ளன.

நாட்டுப்புறவியல் சார்ந்து, நாட்டுப்புறக் கதைகள் குல தெய்வ வழிபாடு, சிபி கதை வேறுபாடுகள், மயில்ராவணன் கதை,

மழைப்பாட்டு, தெருக்கூத்து இசை, இருளர் பாடல்கள், மாரியம்மன்-அம்பாள் மாற்றங்கள், மதுரைவீரன் கதைப்பாடல் போன்ற தலைப்புகளில் கட்டுரைகள் அமைந்துள்ளன. தமிழ் - பிரெஞ்சு நாட்டுப்புறக் கதைகள், கன்னட மழைப்பாட்டு, இருளர்களின் நிகழ்த்துக் கலைகள், முல்லுக்குரும்பர் பண்பாடு போன்ற கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

## இலக்கியக் கட்டுரைகள்

இலக்கியக் கட்டுரைகள், இலக்கியத் தரவுகளை ஆதாரமாகக் கொண்டு புதிய விளக்கங்களைத் தருவதாக அமைந்துள்ளன. இலக்கியவியல் சார்ந்த கட்டுரைகளில், திருப்பாவை, பிரெஞ்சு இலக்கியம், சங்க இலக்கியம், புதுக்கவிதை, அரவிந்தர், சாதவாகன அரசர்கள், அடியார்க்கு நல்லார் உரை, கோட்டைமேடு அகழ்வாய்வு, கல்வெட்டுக்கள் போன்ற தலைப்புகளில் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

## அயல் நாட்டவர் கட்டுரைகள்

திராவிடவியல் ஆய்விதழில் இந்தியாவின் பல்வேறு மாநிலப் பேராசிரியர்களோடு, அயல் நாட்டினர் பலர் தங்கள் கட்டுரைகளை வெளியிட்டுள்ளனர். அவர்கள் பெரும்பாலும் தமிழ் மொழி, இலக்கியம், மலைவாழ் மக்களின் மொழி அவர்களது பழக்க வழக்கங்களை மையப்படுத்தியே கட்டுரைகளை எழுதியுள்ளனர். அவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் ஆன்டர்னோ, கமில் சுவலபில், டெய்டர் காப், வாசக், ஸான்மார் குரு, ஹைடல் லிங்க், மைகேல் சாலேஸ், ஆர்ன் மார்டினெட், இமாம் சல்மான், யோசினோ ஓனிசி போன்றவர்கள். இவர்கள் ருஷ்யா, அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு, செக்கோஸ்லோவேக்கியா, ஜெர்மனி, பாகிஸ்தான், ஜப்பான் ஆகிய நாடுகளைச் சார்ந்த அறிஞர்கள்.

அயல்நாட்டினரது கட்டுரைகளின் கருத்துக்கள் பல துறைகள் சார்ந்தனவாக உள்ளன. அவற்றில் தமிழ் மொழி, திராவிட மொழிகளின் ஒப்பீடு, திராவிட மொழிகளும் மங்கோலிய மொழி, போர்ச்சுக்கல் மொழி, இந்தோ ஆரியம்- திராவிடம் போன்றன மொழியியல் சார்ந்து அமைகின்றன. இவர்கள் தமிழில் இறந்தகால வினை உருபுகள், தமிழில் இரட்டைக்கிளவி, தமிழ் வேர்ச்சொல் ஆய்வுகள், தோடர் மொழி ஒலிப்புமுறை போன்ற கட்டுரைகளையும் எழுதி யுள்ளனர்.

பண்பாட்டியல் துறை சார்ந்து அமைந்த அயல்நாட்டவரது கட்டுரைகளில் தென்னிந்தியத் திருமண முறைகள், சிபி தொன்மக்

கதை வேறுபாடுகள், இருளர்களது பழக்கவழக்கங்கள், தெருக்கூத்து இசை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இக்கட்டுரைகளைத் தவிர தமிழில் உள்ள ஆயுத எழுத்து பற்றிய கிருஷ்ணமூர்த்தி அவர்களின் கட்டுரையும், திராவிட வேர்ச்சொல் அகராதியில் உள்ள தரவுகளை வைத்துத் தொல்திராவிட ஒலிப்பு பற்றிய கட்டுரையும் குறிப்பிடத்தக்கன. பல வெளிநாட்டினரது ஆய்வுக் கட்டுரைகளில், இவ்வாய்விதழ் மேற்கோள் காட்டப்படுவது இதன் தரத்தை எடுத்துக்காட்டும்.

## முடிவுரை

ஒரு உயர்நிலை ஆய்விதழ் எவ்வாறு அமைக்கப்பட வேண்டும், கட்டுரைகள் வெளியிட வேண்டும் என்பதற்கு இந்திய அளவில் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கியது புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தின் திராவிடவியல் ஆய்விதழ். இதனால் மொழியியல், பண்பாட்டியல் சார்ந்த தரமான ஆங்கிலக் கட்டுரைகளைப் படிப்பதற்கும் வெளியிடுவதற்கும் ஏற்ற சூழல் உருவாகியது.

# வரலாறு

**1993** கோ. வேணிதேவி

### நோக்கம்

தமிழ்நாட்டு வரலாற்றுக்கு அடிப்படைச் சான்றுகளைத் தரும் பல்துறை சார்ந்த கண்டுபிடிப்புகளைப் பதிவுசெய்யவும் ஆர்வமுடையவர்களுடன் அவற்றைப் பகிர்ந்துகொள்ளவும் ஆகஸ்டு 1993இல் அரையாண்டு ஆய்விதழாக 'வரலாறு' தொடங்கப் பெற்றது. திருச்சிராப்பள்ளியில் இயங்கிவரும் டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையத்தின் வெளியீடாக அமைந்த இவ்விதழிற்கு மையத்தின் இயக்குநரும் கண் மருத்துவருமான இரா. கலைக்கோவன் பொறுப்பாசிரியர். மையத்தின் கல்வெட்டாய்வாளர்களான மு. நளினியும் அர. அகிலாவும் உதவி ஆசிரியர்கள். இதழின் நோக்கம், எதிர்காலத் திட்டங்கள் குறித்து முதல் இதழில், 'எண்ணங்களும் எதிர்பார்ப்புகளும்', என்ற தலைப்பில் இரா. கலைக்கோவன் எழுதியுள்ள ஆசிரிய உரை, 'வரலாறு' இதழின் நோக்கத்தை வெளிப் படுத்துவதுடன், உண்மையான வரலாற்றை உருவாக்குவதில் அதற்குள்ள உறுதிப் பாட்டையும் தெளிவாகப் படம்பிடித்துள்ளது. அக்கட்டுரையின் ஒருபகுதி கீழே தரப்படுகிறது.

> வரலாறு தனித்தீவல்ல. அது பல துறைகளின் சங்கமம். பல்துறை அறிவு இருந்தால்தான் முழுமையான, நேர்மையான வரலாற்றை உருவாக்க முடியும். அந்த வகையில் வரலாற்றில் ஆர்வமுடைய அனைவரும் பயனடையும் வண்ணம் பல்துறைச் செய்திகளை இவ்விதழ் வெளியிட்டு மகிழும். ஆழமான ஆய்வுகளும் புதிய கண்டுபிடிப்புகளும் முதலிடம் பெறும். வறட்சியாக எழுதுவதுதான் வரலாறு என்ற நிலையை மாற்றி, எந்தச் செய்தியையும் அதன் உண்மைத் தன்மை குன்றாமல் சுவைபடச் சொல்வதில் வரலாறு நம்பிக்கை கொண்டுள்ளது.
>
> 'நிலத்தினும் பெரிதே, வானினும் உயர்ந்தன்று, நீரினும் ஆரளவின்றே' என்று தன் தலைவியின் காதலுக்கு அளவு கூறினாளே குறுந்தொகையின் குறிஞ்சித் தோழி,

அது போலத்தான் எங்கள் எண்ணங்களும் எதிர்பார்ப்பு களும். இமயமாய் எண்ணுகிறோம்; இயன்றதைச் சாதிப்போம். முடியாதவற்றைத் தொடர்ந்து முனைப்பான முயற்சி மேற்கொண்டு முடிக்கப் பார்ப்போம். முன் வைத்த காலை, அது சரியான அடியாக இருக்கும்போது ஒரு நாளும் பின் வைப்பதில்லை. காலம் வழிகாட்டும் என்ற அநுபவ நம்பிக்கை, நெருக்கடிகளிலும் நெருங்கி நிற்கும் கனிந்த நெஞ்சங்களின் கையிணைப்பு, உண்மையான உழைப்புக்கு உலகம் தரும் மரியாதை, வரலாற்றிற்கு இவற்றினும் வேண்டுவது வேறென்ன உண்டு?

போடப்பட்ட பாதைகளில் நடப்பது ஒருவகை. புதிய பாதைகளை வகுப்பது வளர்ச்சிக்கு வழி. இது இப்படித்தான் இருக்கவேண்டும் என்ற கட்டாயங்கள் நமக்கில்லை. எதுவும் ஆர்வமுள்ள மக்களுக்குப் புரிய வேண்டும்; பயன்பட வேண்டும். நம்மைப் பற்றியும் நாட்டைப் பற்றியும் அறிந்து கொள்ளும் பயணத்தில், 'வரலாறு' வழிகாட்டியாய் உதவிடும். இது உங்கள் இதழ். பயன்படுத்திக் கொள்ளுங்கள்; உங்கள் அன்பில்தான் வரலாற்றின் வாழ்க்கை.

### அமைப்பு

வரலாறு முதல் இதழ் 148 பக்கங்களில் அதன் அட்டையின் தலைப்பில் கல்வெட்டெழுத்துக்களின் பின்னணியில், வரலாறு என்ற இதழின் பெயர் அமைய, கீழே சிவபெருமானின் ஆடல்தோற்ற மொன்று, 'மழபாடி ஆடலர்' என்ற குறிப்புடன் இடம் பெற்றுள்ளது. முதல் பக்கத்தில் இதழின் பெயர், வெளியாகும் மாதம், ஆண்டு, வெளியிடுவோர் பெயர் அமைய, இரண்டாம் பக்கம், இதழை உருவாக்கியவர்களின் பெயர்களைக் கொண்டுள்ளது. இப்பக்கத்தின் வலது ஓரத்தில் மேலே, 'எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார் திண்ணியர் ஆகப் பெறின்' எனும் திருக்குறளும் கீழே பாரதியின் ஆத்திசூடியிலிருந்து, 'சரித்திரத் தேர்ச்சி கொள்' எனும் பாடலும் தரப்பட்டுள்ளன. தேர்ந்தெடுக்கப்பட்டு அச்சிடப்பெற்றுள்ள இவையும் இதழின் நோக்கத்தைப் பறை சாற்றுவனவாக அமைந்துள்ளன. இவ்வமைப்பு இதழ் தோறும் தொடர்ந்துள்ளமையும் ஒவ்வோர் இதழிலும் பொருத்தமாக அமைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

வரலாறு ஆறாம் இதழிலிருந்து அட்டையின் அமைப்பில் மாற்றம் காணப்படுகிறது. கோயிலொன்றின் தாங்குதளப் பிரதிவரியும் தேவகோட்டமும் கூரையுறுப்புகளும் அட்டையின் பின்புலமாக நிற்க, நடுவில் சிற்பம், கோயில் எனப் படமும் மேலே இதழ்ப் பெயரும்

இடம்பெற்றுள்ளன. முதல் நான்கு இதழ்களில் இரண்டாம் பக்கத்தில் காணப்பட்ட ஆசிரியர் குழுவின் பெயர்கள் ஐந்தாம் இதழிலிருந்து முதற் பக்கத்திற்கு மாறுகின்றன. இரண்டாம் பக்கத்தின் வலது ஓரத்தில் அச்சிடப் பெற்ற குறளும் புதிய ஆத்திசூடியும் ஐந்தாம் இதழில் இடம் பெயர்ந்துள்ளன. முதல் பக்கத்தின் வலது மேல் ஓரத்தில் புதிய ஆத்திசூடி அமைய, ஆசிரிய உரையின்கீழ்க் குறள் இடம் பெற்றுள்ளது.

பக்கங்களின் எண்ணிக்கை இதழிற்கு இதழ் கூடி வந்தாலும் ஐந்தாம் இதழ் சற்றுச் சிறுத்து 118 பக்கங்களுடன் நிற்க, ஆறாம் இதழ் 204 பக்கங்களுடன் கனமான இதழாக உருவெடுத்துள்ளது. ஆசிரிய உரை இதழிற்கு இதழ் குறிப்பிடத்தக்க சுட்டல்களுடன் புதிய பரிமாணங்களைத் தொட்டுள்ளது. இரண்டாம் இதழில்,

> தமிழகமெங்குமுள்ள வரலாறு, கோயிற்கலைகள், இலக்கியம், கல்வெட்டுத் துறைகளில் ஈடுபாடுள்ள ஆர்வலர்கள் ஒன்றுபடுவது இன்றைக்கு மிகத் தேவையான நிலையாகும். கூடிப்பேசிக் கலைவதை விட, தொலைவில் நின்றாலும் கருத்தால் ஒருமித்து ஓர் இயக்கமாக உருவானால் இத்துறைகளின் வளர்ச்சியில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்த முடியும். இதனால், தரம்குறைந்த ஆய்வுகளும் போலிச் செய்திகளும் பயனற்ற கருத்தரங்குகளும் பிழை மலிந்த கட்டுரைகளும் நூல்களும் தாமாகவே குறைந்தகலும். வரலாறு இதற்கான பணியில் முதலடி எடுத்து வைத்துள்ளது. இந்நோக்குடன் வருவோர் அனைவர்க்கும் வரவேற்பும் ஒத்துழைப்பும் தர வரலாறு காத்திருக்கிறது

எனப் பொறுப்பாசிரியர் விடுத்திருக்கும் அழைப்பு வரலாற்றின் குறிக்கோளுக்கு வரிவடிவமாய் அமைந்துள்ளது.

வரலாறு எட்டாம் இதழில் ஆசிரியர் விடுத்திருக்கும் அறைகூவலும் குறிப்பிடத்தக்கது.

> குடமுழுக்கு, திருப்பணி என்ற சொற்களைக் கேட்டாலே அஞ்சுமளவிற்குத் திருக்கோயில்கள் இவற்றால் சீரழிக்கப்படுவது கண்கூடு. எவ்வளவோ எடுத்துரைத்தும் பொறுப்பில் உள்ளவர்கள் கருத்தில் கொள்ளாமலிருப்பது ஏனென்று தெரியவில்லை. இந்தக் கொடுமைகளை எப்படித் தடுப்பதென்றும் விளங்கவில்லை.
>
> தமிழ்நாடு முழுவதும் பரவியுள்ள ஆய்வாளர்கள்தான் இதற்கொரு முடிவுகட்டவேண்டும். மக்களுக்குக்

கல்வெட்டுகள், சிற்பங்கள் ஆகியவற்றின் முக்கியத் துவத்தை விளங்க உரைப்பதுடன், எக்காரணம் கொண்டும் அவை குடமுழுக்குக் கோலாகலங்களின் பூச்சுகளுக்கும், சிதைவுகளுக்கும் ஆளாகாது காப்பாற்றிடல் வேண்டும். ஆங்காங்கே உள்ள ஆய்வமைப்புகளும் இப்பணியில் முழுமூச்சாய் ஈடுபடுவது அவசியமாகும். இன்றொரு விதி செய்யத் தவறினோமாயின், இனி எந்நாளும் கல்வெட்டுகளைக் கோயில்களில் காண்பது குதிரைக்கொம்பு தான். வாருங்கள் தோழர்களே, கையிணைப்போம். இந்த நாட்டின் வரலாற்றை அழிவினின்று காப்போம்.

**உள்ளீடு**

***1. புதிய கல்வெட்டுகள்***

புதிய கல்வெட்டுகள், விட்டுப்போன தொடர்ச்சிகள், செப்பேடுகள், ஆய்வுக்கட்டுரைகள், பொதுப்பகுதி என முதல் இதழின் உள்ளீடு ஐம்பெரும் பிரிவுகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. புதிய கல்வெட்டுகள் பகுதியில் பதினாறு ஊர்களிலிருந்து புதிதாகக் கண்டறியப்பட்ட கல்வெட்டுகளின் பாடங்கள், கண்டுபிடித்தவர்களின் பெயர்களுடன் அச்சிடப்பட்டுள்ளன. ஒவ்வொரு கல்வெட்டிற்கும் அக்கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்ட இடம், அது தரும் செய்தி, அக்கல்வெட்டின் காலம் ஆகியன தெளிவாகத் தரப்பட்டிருப் பதுடன், தொடர்ந்து அக்கல்வெட்டின் பாடமும் கண்டுபிடிக்கப் பட்ட இடத்தில் அமைந்திருக்குமாறு போலவே வெளியிடப் பட்டுள்ளது. கிரந்த எழுத்துக்களுக்கு மாற்றாக அவற்றிற்கு இணையான ஒலிப்புடைய தமிழ் எழுத்துக்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன. வர்க்க எழுத்துக்களை அந்தந்த கிரந்த எழுத்துக்குரிய தமிழ் ஒலிப்பு எழுத்துக்களுடன் எண் சேர்த்து எழுதியுள்ளனர். இதைப் பற்றிய விரிவான வழிகாட்டல், 'வரலாறு இதழில் எழுத விழைவோர்க்கு' என்ற தலைப்புடன் இதழின் ஐந்தாம் பக்கத்தில் வெளியாகியுள்ளது. கிரந்த எழுத்துக்களின் விளக்கப்படமும் தரப்பட்டுள்ளது.

இப்புதிய கல்வெட்டுகள் பகுதி வரலாறு இதழின் எட்டுத் தொகுதிகளிலும் இடம்பெற்றுள்ளது. இரண்டாம், மூன்றாம் இதழ்களில் பதினேழு ஊர்களில் கிடைத்த கல்வெட்டுகளும் நான்காம் இதழில் நான்கு ஊர்களில் கிடைத்த கல்வெட்டுகளும் ஐந்தாம் இதழில் ஐந்து ஊர்களில் கிடைத்த கல்வெட்டுகளும் ஆறாம் இதழில் எட்டு இடங்களில் கிடைத்த கல்வெட்டுகளும் ஏழாம் இதழில் பதினொரு இடங்களில் கிடைத்த கல்வெட்டுகளும் எட்டாம் இதழில்

ஏழு இடங்களில் கிடைத்த கல்வெட்டுகளும் பதிவாகியுள்ளன. இவ்வெட்டு இதழ்களிலுமாய் ஏறத்தாழ முந்நூறுக்கும் மேற்பட்ட புதிய கல்வெட்டுகள் கண்டறியப்பட்டுப் பதிப்பிக்கப்பெற்றுள்ளமை வரலாற்றுலகிற்குக் கிடைத்த பெருவரவென்றே கூறவேண்டும். இவற்றுள் சில கல்வெட்டுகள், இதுநாள் வரையிலும் கிடைத்திராத அரிய தரவுகளின் நிலைக் களன்களாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. திருக்கோளக் குடியில் கண்டறியப்பட்டுப் பதிவாகியிருக்கும், 'மூவேந்தன் எனும் பசாசின் பேர்' கல்வெட்டும் மலையடிப்பட்டிக்குடை வரையுள்ள குன்றின் மேற்பகுதியில் கிடைத்துள்ள, அமணிக் கல்வெட்டும் இடைமலைப்பட்டிப்புதூரில் இருந்து படியெடுக்கப்பட்ட காவுக் கல்வெட்டும் தமிழ்நாட்டு வரலாற்றிற்குப் புதிய பக்கங்களைத் தந்துள்ளனவெனக் கூறலாம்.

## 2. விட்டுப்போன தொடர்ச்சிகள்

முதல் இதழின் இரண்டாம் பிரிவாக அமைந்துள்ள 'விட்டுப்போன தொடர்ச்சிகள்' வேறெந்த வரலாறு சார்ந்த ஆய்விதழ்களிலும் காணவியலாத பயனுள்ள, தேவையான, தனித் தன்மை வாய்ந்த பிரிவாகும். இப்பிரிவை அறிமுகப்படுத்துமாறு போல,

> கோயில்களில் ஆவணங்களை வெட்டியவர்கள் பெரும் பாலும் அவற்றின் அளவுக்கேற்ப இடம்தேர்ந்தும், ஒரு சில சமயங்களில் இருக்கும் இடத்திற்கேற்ப ஆவணத்தைப் பல பகுதிகளாகப் பிரித்து, கட்டடத்தின் ஒரு பகுதியைச் சேர்ந்த பல இடங்களில் செதுக்கியும் கல்வெட்டாக்கியுள்ளனர். இந்தக் கல்வெட்டுகள் பெரும்பாலும் முழுமையடைந்திருக்கும். சில கல்வெட்டுகள் முற்றுப்பெறாமலும் இருப்பதுண்டு. பெரும்பாலான நேரங்களில் திருப்பணி செய்தவர்கள் அவற்றின் அருமை அறியாமல் கற்களை மாற்றி வைத்துக் கட்டடத் திருப்பணி செய்துவிடுவதாலும் கல்வெட்டுகள் தொடர்ச்சியிழந்து தத்தளிப்பதுண்டு.
>
> அதனால் கோயிலில் ஒரு கல்வெட்டைப் படிக்கும் போதும் படியெடுக்கும்போதும் நிறைந்த கவனம் வேண்டும். கல்வெட்டுத் தரும் செய்தி முழுமை யடையாமல் இருக்குமானால் அதன் தொடர்ச்சியைப் பக்கத்தில் இருக்கும் கட்டடப் பகுதிகளில் தேட வேண்டும். சில சமயங்களில் சுவரில் தொடங்கும் கல்வெட்டு ஜகதியில் முடியலாம்; மேற்குச் சுவரில்

தொடங்கித் தெற்குச் சுவரில் முடியலாம். ஒரு கல்வெட்டு எங்கு தொடங்கி எங்கு முடிகிறது என்பதை முதலில் கண்டறிந்து, அக்கல்வெட்டு முழுவதையும் படித்து, செய்தி முழுமையாகியுள்ளதா என்பதை அறிந்த பிறகு படியெடுப்பதே தவறுகளைத் தவிர்க்கும் எளிய வழிகளாகும்.

கல்வெட்டுகளைப் படியெடுப்பவர்கள் சில நேரங் களில் தொடர்ச்சிகள் பக்கப் பகுதிகளில் இருப்பதை அறியாமல் கிடைத்ததை மட்டும் படியெடுத்துவந்து பதிப்பித்து விடுவதுண்டு. சில நேரங்களில் முதல்முறை படியெடுக்கும் போது கல்வெட்டின் சில பகுதிகள் கட்டுமானத்திற்குள் இருந்திருக்கும்; பிற்காலத் திருப் பணிகளில் கட்டடப் பகுதிகள் அகற்றப்பட்டு, விட்டுப் போன தொடர்ச்சிகள் வெளிவரும். இப்படிப் பல்வேறு காரணங்களால் விட்டுப்போன தொடர்ச்சிகளைக் களஆய்வுகளில் கண்டுபிடிப்பவர்கள் இப்பகுதியில் அவற்றை வெளியிடத் தந்துதவலாம்

என்று எழுதியுள்ள ஆசிரியர் குழுவினர், கருந்திட்டைக்குடி வசிஷ்டேசுவரர் கோயிலில் கண்டறியப்பட்ட விட்டுப்போன தொடர்ச்சிகளை முதல் இதழில் பதிப்பித்துள்ளனர்.

தென்னிந்தியக் கல்வெட்டுகள் தொகுதி ஐந்தில் 1405, 1408, 1412 எண்களின்கீழ் வெளியாகியுள்ள இக்கோயிலின் மூன்று கல்வெட்டுப் பாடங்கள் முழுமையற்றுள்ளன. 1405ஆம் எண்ணின் கீழ் இரண்டு வரிகளுடன் வெளியாகியிருக்கும் கல்வெட்டு, முற்றுப் பெறவில்லை என அடிக்குறிப்புப் பெற்றுள்ளது. ஆனால், கோயிலில் கல்வெட்டு ஏழு வரிகளுடன் இருப்பதாகக் கூறும் ஆசிரியர் குழுவினர் விட்டுப்போன ஐந்து வரிகளையும் படி யெடுத்து வரலாறு முதல் இதழில் பதிப்பித்துள்ளனர்.

இதுபோலவே 1412ஆம் எண்ணின்கீழ்த் தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதியில் பதிப்பிக்கப்பட்டிருக்கும் கல்வெட்டும் 22 வரிகளுடன் நிற்கிறது. கோயிலில் மேலும் ஆறு வரிகள் இருப்பதை ஆசிரியர் குழுவினர் கள ஆய்வில் கண்டறிந்து, 'புதிதாகக் கிடைத்திருக்கும் பின்பகுதி' என்ற தலைப்பின்கீழ், வரலாறு இதழில் பதிப்பித்துள்ளனர். 1408ஆம் எண்ணின்கீழ்ப் பதிப்பிக்கப்பட் டிருக்கும் கல்வெட்டுப் பாடத்தைப் பற்றிய விளக்கம் குறிப்பிடத் தக்கது. இக்கல்வெட்டைப் படியெடுத்துப் பதிப்பித்தவர்கள் தொடக்கத்தையும் முடிவையும் மட்டுமே தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதிகளில் தந்துள்ளனர்.

இடைப்பட்ட பகுதியான 14 வரிகள் ஆசிரியர் குழுவின் கள ஆய்வின்போது கண்டறியப் பட்டுள்ளன. தொடக்கமும் முடிவும் தொடர்பின்றி இருந்தும் இடைப்பட்ட தொடர்ச்சியைத் தேடாமல், பார்த்ததைப் பதிப்பித் திருக்கும் நிலை தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதிகளின் உண்மைத் தன்மையை ஐயத்திற் கிடமாக்குவது உண்மை.

'விட்டுப்போன தொடர்ச்சிகள்' பகுதியைத் தொடர்ந்து வந்த இதழ்களிலும் காணமுடிகிறது. வரலாறு இரண்டாம் இதழில் திருச்செந்துறை சந்திரசேகரர் கோயிலில் இருந்து படியெடுத்துப் பதிப்பிக்கப் பெற்ற இரண்டு கல்வெட்டுகளில் (SII 8: 606, 630) விட்டுப்போன இடை, இறுதிப் பகுதிகள் வெளியிடப்பட்டுள்ளன. மூன்றாம் இதழில் நரசமங்கலம் கல்வெட்டுகள் இரண்டும் நான்காம் இதழில் திருத்தவத்துறைக் கல்வெட்டொன்றும் இடம்பிடித்துள்ளன.

இவற்றுள் நரசமங்கலம் கல்வெட்டுகளைப் பற்றிப் பேசுமிடத்து, "திருவண்ணாமலை சம்புவரையர் மாவட்டத்துச் செய்யாறு வட்டத்திலுள்ள நரசமங்கலத்து மலைமேல் சிவன் கோயிலொன்று உள்ளது. இக்கோயிலின் தாங்குதளத்தில் மூன்று கல்வெட்டுகள் காணப்படுகின்றன. 1906இல் ஒரு முறையும், 1940இல் ஒரு முறையுமாய் இங்கிருந்து இரண்டு கல்வெட்டுகள் மைய அரசின் கல்வெட்டுத் துறையினரால் படியெடுக்கப்பட்டுள்ளன. இவ்விரண்டு கல்வெட்டுகளுள், 1906இல் படியெடுக்கப்பட்ட கல்வெட்டின் பாடம் தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி எண் இருபத்திரண்டின் முதற் பகுதியில் 260ஆம் எண்ணிட்டுப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இதில் கல்வெட்டின் முதல் எட்டு வரிகளை மட்டும் தந்து, அடிக்குறிப்பில், கல்வெட்டு முழுமையடையவில்லை" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். கள ஆய்வின்போது மைய ஆய்வாளர்கள் இக்கல்வெட்டு இருபத்தொரு வரிகள் கொண்ட முழுமையான கல்வெட்டு என்பதைக் கண்டறிந்தார்கள்.

1940இல் படியெடுக்கப்பட்ட மற்றொரு கல்வெட்டின் சுருக்கம் 1940ஆம் ஆண்டு கல்வெட்டறிக்கையில், கல்வெட்டு முழுமையடையவில்லை என்ற குறிப்போடு வெளியிடப் பட்டுள்ளது. "திருவத்தியூர் அருளாளப் பெருமாள் கோயில் பட்டர்களாகப் பணியாற்றும் நான்கு நம்பிமார்களை இக்கல்வெட்டுக் குறிப்பிடுகிறது என்ற செய்தி மட்டுமே கல்வெட்டுச் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது. ஆனால் கள ஆய்வில் இக்கல்வெட்டு முழுமையான நிலையில் பதினான்கு வரிகள் கொண்டு அமைந் திருப்பதையும் பயனுள்ள பல தகவல்களைத் தருவதையும் மைய ஆய்வாளர்கள் கண்டறிந்தனர்" என்ற குறிப்புத் தரப்பட்டுள்ளது. வரலாறு ஐந்தாம் இதழில், 'விட்டுப்போன தொடர்ச்சிகள்' தலைப்பின்கீழ்க் கீழப்பழுவூர்க் கல்வெட்டொன்றும் ஆறாம் இதழில், திருச்சென்னம்பூண்டிக்

கல்வெட்டொன்றும் வெளியாகியுள்ளன. ஏழு, எட்டாம் இதழ்களில் இப்பிரிவு இடம் பெறவில்லை.

ஆவணங்களின் படியெடுப்பு எத்தனை கவனத்துடன் மேற்கொள்ளப்படவேண்டும் என்பதற்கு வரலாறு இதழின் 'விட்டுப்போன தொடர்ச்சிகள்' பிரிவு சிறந்த சான்றாக மிளிர்கிறது. இரண்டாம் நிலைச் சான்றுகளாய் விளங்கும் பதிப்புகளை நம்பி இடறுவதினும் முதனிலைச் சான்றுகளான கல்வெட்டுகளைத் தேடி யறிந்து படித்து ஆய்வு மேற்கொள்வதே உண்மைகளைப் பெறவும் நேரான முடிவு காணவும் ஒரே வழி என்பதை விட்டுப்போன தொடர்ச்சிகளைப் பதிப்பித்திருப்பதன் மூலம் ஆசிரியர் குழுவினர் ஆய்வுலகத்திற்குத் தெள்ளத்தெளியத் தெரிவித்துள்ளனர்.

### 3. செப்பேடுகள்

முதலிதழின் மூன்றாம் பிரிவாகச் செப்பேடுகள் இடம் பெற்றுள்ளன. ஆய்வாளர்களுக்கு அதிகம் அறிமுகமாகாத உத்தமசோழரின் சென்னை அருங்காட்சியகச் செப்பேடு மீளப் படிக்கப்பெற்று விரிவாக ஆராயப்பட்டுள்ளது. துறையூர் செப்பேடு, ஆதனூர் சாத்தனூர்ப் பட்டயம், கூத்தூர்ச் செப்பேடு எனும் சில புதிய செப்பேடுகளும் தொடர்ந்து வந்த இதழ்களில் இடம் பெற்றுள்ளன. சில இதழ்கள் செப்பேடுகள் என்ற பிரிவின்றியும் வெளியாகியுள்ளன. புதிய செப்பேடுகள் கிடைக்காமையே இவ்விடுபடலுக்குக் காரணமாகலாம்.

### 4. ஆய்வுக் கட்டுரைகள்

'ஆய்வுக் கட்டுரைகள்' வரலாறு இதழின் மகுடம் போலமைந்துள்ள பிரிவாகும். சில இதழ்களில் நான்காம் பிரிவாகவும், சில இதழ்களில் மூன்றாம் பிரிவாகவும் அமைந்துள்ள ஆய்வுக் கட்டுரைகள் பிரிவில் முதலிதழில் மூன்றே கட்டுரைகள்தான் இடம்பெற்றுள்ளன. எனினும் அம்மூன்றுமே புதிய தரவுகளின் நிலைக்களன்களாக விளங்குவது கண்கூடு. இரா. கலைக்கோவனின், 'முதல் திருமுறையில் ஆடல் குறிப்புகள்' என்ற கட்டுரை, தரமான தரவுகளின் தொகுப்பாக அமைந்துள்ளது. இக்கட்டுரையின் உள்தலைப்புகளாக இறையாடல், அரங்கு, ஆடும் காலம், ஆடல் நாயகரின் தோற்றமும் ஒப்பனையும், கருவிகளும் உடன் கூட்டத்தாரும், நோக்கி மகிழ்வாரும் உடன் ஆடியவர்கள், இசைக்கருவிகள், பாடல், பாடுநர், இறைவனின் ஆடல் அமைப்பு என்பன அமைந்து கி.பி. ஆறாம் நூற்றாண்டின் ஆடற்கலை வரலாற்றை அருமையாகப் படம்பிடித்துள்ளன. புயங்கராக மாநடனத்தைப் பரதரின் புஜங்க வகைக் கரணங்களுடன் ஒப்பீடு செய்துள்ளமையும் அரங்கம் பற்றிய சிந்தனைகளும் குறிப்பிடத் தக்கவை.

இதே இதழில் வெளியாகியுள்ள அர. அகிலாவின், 'வல்லம் குடைவரைகளும் புதிய கல்வெட்டுகளும்' என்ற ஆய்வுக் கட்டுரையும் சிறப்பானது. கூ.ரா. சீனிவாசன், மைக்கேல் லாக்வுட் உட்பட எத்தனையோ அறிஞர்களின் ஆய்வுக்குள்ளான இக்குடைவரைகளில் இருந்து, இரண்டு பல்லவர் காலக் கல்வெட்டுகளைப் புதிதாகக் கண்டறிந்து பதிப்பித்திருக்கும் இக் கட்டுரையாசிரியரின் உழைப்பும் கட்டடக்கலையில் அவருக்குள்ள தெளிவான சிந்தனைகளும் கட்டுரையின் ஒவ்வொரு பத்தியிலும் பளிச்சிடுகின்றன.

வரலாறு இரண்டாம் இதழ் நான்கு ஆய்வுக் கட்டுரைகளைப் பெற்றுள்ளது. அவற்றுள் இரா. கலைக்கோவனின், 'அப்பரும் அவிநயமும்' ஆழ்ந்த சிந்தனைப் பின்புலத்துடன் பதிகத் தரவுகளை நேர்த்தியாகத் தொகுத்து எழுதப்பட்டுள்ள திருப்பு முனைக் கட்டுரையாக அமைந்துள்ளது. தமிழ் மண்ணில் அவிநயம் எனும் ஆடல் சார்ந்த அமைப்புத் தோன்றி வளர்ந்த நிலைகளை இலக்கியச் சான்றுகளுடன் சுட்டி, பரதரின் கண்ணோட்டத்தில் அதன் உட்பிரிவுகளை விளக்கி, அப்பர் பெருந்தகை எத்தனை நளினமாக அவற்றைக் கையாண்டு இறையாடலைப் படம்பிடித்திருக்கிறார் என்பதை அவரது பதிக அடிகளாலேயே மெய்ப்பித்துக் காட்டியிருக்கும் பாங்கு பாராட்டற்குரியதாகும்.

"அப்பரும் அவிநயமும்" என்ற ஆய்வுக் கட்டுரையைப் படித்தேன். திருமுறையில் ஆடல் குறிப்புகளை இவ்வளவு நுணுக்கமாக யாரும் ஆய்வு செய்திருக்க மாட்டார்கள் என்று துணியலாம்", "அப்பரும் அவிநயமும் படிக்கப் படிக்க இனித்தது; முகவுரை சிறப்புடையது. சுந்திருவம் - அப்பர் கால இசை நூல் என்பது சிறப்பு; கடைப் பத்தி நன்குள்ளது. சுருக்கத்தில் பெருக்கம்", "வரலாறு இரண்டாம் இதழில் வெளியாகியுள்ள அப்பரும் அவிநயமும் அருமையான கட்டுரை" எனும் இக்கட்டுரை பற்றிய அ. சம்பத்குமார், இசைத்தமிழ் அறிஞர் வீ.ப.கா.சுந்தரம், தவத்திரு. குன்றக்குடி அடிகளார் கருத்துரைகள் இங்கு நினைக்கத்தக்கவை.

'குன்றக்குடிக் குடைவரைகளும் கல்வெட்டுகளும்' மு. நளினி, அர. அகிலாவின் உழைப்பில் விளைந்த உயரிய கட்டுரையாகும். குடைவரை வளாகத்துள்ள புதிய கல்வெட்டுகளும் ஏற்கனவே பதிவான கல்வெட்டுகளின் விட்டுப்போன தொடர்ச்சிகளும் கண்டறியப்பட்டுக் கட்டுரையில் தக்கவாறு இணைக்கப் பட்டுள்ளன.

வரலாறு மூன்றாம் இதழ், மூன்று கட்டுரைகளைப் பெற்றுள்ளது. அவற்றுள் 'மாமண்டூர் நரசமங்கலம் குடைவரைகள்' கட்டுரை நாற்பது பக்கங்களில் அமைந்துள்ளது. செங்கற்பட்டு

மாவட்டம் தூசி மாமண்டூரிலும் அதை அடுத்துள்ள நரசமங்கலத்திலும் உள்ள நான்கு பல்லவர் குடைவரைகளை விரிவாக ஆராயும் இக்கட்டுரை கூரா. சீனிவாசன் உள்ளிட்ட முந்து கட்டுரை யாளர்களின் கூற்றுகளைப் புதிதாகப் பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் மிக மென்மையாக மறுப்பதுடன், பல புதிய முடிவுகளை ஆய்வாளர்களின் பார்வைக்கு வைத்துள்ளது.

ஏழு ஆய்வுக் கட்டுரைகளைப் பெற்றுள்ள வரலாறு நான்காம் இதழின் நான்காம் கட்டுரை புதிய பரிமாணத்தில் அமைந்துள்ளது. மலையடிப்பட்டிக் குன்றில் ஆசிரியர் குழுவினரால் கண்டறியப்பட்ட அமணிக் கல்வெட்டுக் குறித்துத் தமிழ்நாட்டின் மூத்த கல்வெட்டாய்வாளர்கள் சிலரின் கருத்துகள் பெறப்பட்டுக் கட்டுரை வடிவில் தரப்பட்டுள்ளன. உண்மை காணும் நோக்கில் அமைந்துள்ள இப்புதிய அணுகுமுறை உவந்து பாராட்டத்தக்க தாகும். தாம் கண்டதே முடிவென்றிராமல், உரிய அறிஞர்களிடம் கருத்துகளைக் கேட்டு அக்கலந்துரைகளை ஆய்வாளர்களுக்கு, 'உள்ளது உள்ளபடி' தந்திருக்கும் நேரிய பாங்கு, வரலாறு இதழின் நோக்கத்தை உறுதி செய்வதுடன், இதழாசிரியர்களின் பண்பு நலத்தையும் வெளிப்படுத்துகிறது.

இவ்விதழின் கட்டுரைகளுள், 'மலையடிப்பட்டிக் குடைவரைகளும் கல்வெட்டுகளும்' எனும் தலைப்பிலமைந்த கட்டுரை ஐம்பது பக்கங்களில் அமைந்து பல புதிய உண்மைகளை வெளிக்கொணர்ந்துள்ளது. இங்கு கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் சோழர் கல்வெட்டுகள் குடைவரை முன்மண்டபத்தின் காலத்தை அடையாளப்படுத்துவதுடன், அதன் பெயரையும் தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வரலாறு ஐந்தாம் இதழில் வெளிவந்துள்ள நான்கு கட்டுரைகளில் குறிப்பிடத்தக்கது, 'தளிச்சேரிக் கல்வெட்டு'. தஞ்சாவூர் இராஜராஜீசுவரம் கோயிலின் வடக்கு வெளிச்சுற்றில் பொறிக்கப்பட்டுள்ள முதலாம் இராஜராஜரின் ஐம்பத்தைந்து மீட்டர் நீளமுள்ள தமிழ்க் கல்வெட்டுத் தளிச்சேரிகளைப் பற்றியும் அங்கு வந்து வாழ்ந்த தளிச்சேரிப் பெண்டுகளைப் பற்றியும் பேசுவதால், கட்டுரையாளர்களால் தளிச்சேரிக் கல்வெட்டு எனத் தலைப்பிடப் பெற்று ஆராயப்பட்டுள்ளது. எச். ஹூல்ஷ், இரா. நாகசாமி ஆகியோரால் படிக்கப்பெற்றுப் பதிப்பிக்கப்பட்டுள்ள இக்கல்வெட்டை மறுவாசிப்புச் செய்து 27 பாடவேறுபாடுகளைக் கண்டறிந்து பதிப்பித்துள்ள இக்கட்டுரையாசிரியர்கள், இராஜராஜீசு வரத்துத் தளிச்சேரிகளை மிக விரிவாக ஆராய்ந்து பல நுட்பமான தரவுகளை

வெளியிட்டுள்ளனர். முதன்முறையாகத் தளிச்சேரிப் பெண்டுகளின் பெயர்கள் முழுமையான ஆய்வுக்கு உட்படுத்தப் பட்டிருப்பதுடன், கோயிற் பணியாளர்கள், பணிச்சூழல் பற்றிய செய்திகளும் தெளிவாகத் தரப்பட்டுள்ளமை இக்கட்டுரையின் தனிச்சிறப்பாகும். "ஒரு பகுப்பாய்வுக் கட்டுரை எப்படி அமைய வேண்டுமென்பதற்கு இக்கட்டுரை சிறந்த சான்று" என்று இதைப் பாராட்டியுள்ளார் பேராசிரியர் அ.மா. பரிமணம்.

வரலாறு ஆறாம் இதழில் பத்துக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் நான்கு கட்டுரைகள் கோயில்கள் பற்றியன. இரண்டு கட்டுரைகள் விவாத மேடைகளாய் உருவெடுத்துள்ளன. ஐராவதம் மகாதேவனின், 'சங்க காலத் தமிழகத்தில் முதல் அறிவொளி இயக்கம்' என்ற கட்டுரை தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில் அமைந்த அருமையான கட்டுரை. தென்னிந்திய அளவில் தமிழ்நாட்டில் மட்டுமே பாமரர்களும் எழுத்தறிவு பெற்றிருந்தனர் என்பதும் மற்ற தென்மாநில மொழிகளோடு ஒப்பிடும்போது ஏறத்தாழ ஓராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்மொழி வளர்நிலை பெற்றுவிட்டது என்பதும் இக்கட்டுரை பகிர்ந்து கொள்ளும் அரிய ஆய்வு முடிவுகளாகும்.

இவ்விதழில் வெளியாகியுள்ள 'கொற்றவைத் தளி' பற்றிய கட்டுரை, மாமல்லபுரத்திலுள்ள ஒரு கல் தளியை (திரௌபதி ரதம்) முழுமையான அளவில் ஆய்வுக்கு உட்படுத்தியிருப்பதுடன், காற்றவையின் காவற்பெண்டுகளை முதன் முறையாக விரிவான அளவில் ஒப்பீட்டாய்வு செய்து பல புதிய தரவுகளைத் தந்துள்ளது. 'திருக்கோளக்குடிக் குடைவரைகளும் கற்றளிகளும்', 'குன்னத்தூர்க் குடைவரைகள்' எனும் இரு கட்டுரைகளும் கள ஆய்வில் முழுமையான பயன்களை உள்ளடக்கியுள்ளன. எண்ணற்ற புதிய தரவுகளையும் பல புதிய கல்வெட்டுகளையும் வரலாற்றுலகிற்கு வழங்கிய இவ்விரு கட்டுரைகளின் ஆசிரியர்களும் உளமாரப் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

வரலாறு ஏழாம் இதழில் பன்னிரண்டு கட்டுரைகளும் எட்டாம் இதழில் பத்துக் கட்டுரைகளும் வெளியிடப்பட்டுள்ளன. ஏழாம் இதழ்க் கட்டுரைகளுள் பெரும்பான்மையானவை கோயிலாய்வுக் கட்டுரைகளே. அவற்றுள், 'மலையடிக்குறிச்சிக் குடைவரையும் கல்வெட்டுகளும்', 'திருமலைப்புரம் குடைவரை' எனும் இரு கட்டுரைகளும் சிறப்பாக உள்ளன. எட்டாம் இதழில் வெளியாகியுள்ள 'திருப்பராய்த்துறைத் தாருகாவனேசுவரர் கோயில்' எனும் கட்டுரை ஆழ்ந்த உழைப்பில் விளைந்துள்ள தகுதியான கட்டுரையாகும். மண்டகப்பட்டுக் குடைவரை பற்றிய கட்டுரையும் குறிப்பிடத்தக்கதே.

இவ்வெட்டு இதழ்களிலும் வெளியாகியுள்ள கட்டுரைகளுள் சில, கருத்துச் செறிவின்றி இருப்பதைக் குறிப்பிட்டாக வேண்டும். ஆய்வு அணுகுமுறை, சான்றுகளின் தகுதிப்பாடு ஆகியவற்றில் அறிவியல் பார்வை இல்லை. வரலாறு ஏழாம் இதழில் வெளியாகியுள்ள, 'படைவீட்டில் இரண்டு ஆடற்சிலைகள்' எனும் கட்டுரையும் காசுகள் குறித்த கட்டுரைகளும் அறிக்கைகளாக மட்டுமே அமைந்துள்ளன.

5. பொதுப்பகுதி

**i) பெருமைச் சுவடுகள்**

வரலாறு முதல் இதழின் ஐந்தாம் பிரிவு பொதுப் பகுதியாக உருவெடுத்துள்ளது. இதன்கீழ் பெருமைச் சுவடுகள், நூல் மதிப்புரை, யாவரும் கேளிர், கட்டுரையாளர்கள் எனும் நான்கு தலைப்புகள் உள்ளன. வரலாற்றுக்கு அருந்தொண்டாற்றிய அறிஞர்களின் வாழ்க்கைப் பயணத்தைப் பெருமைச் சுவடுகள் படம்பிடிக்கிறது. மா. இராசமாணிக்கனார், பம்மல் விசயரங்கனார், கூ. ரா. சீனிவாசன், கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி, கோ. கனகசபைப் பிள்ளை, தே.வே. மகாலிங்கம், எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார் ஆகியோரின் சமுதாய நலம் கருதிய உழைப்பும் அவ்வுழைப்பின் பலனாய் விளைந்த அரிய நூல்களும் புதிய ஆய்வு முடிவுகளும் இக்கட்டுரைகளில் உரியவாறு உரைக்கப் பட்டுள்ளன. இளைய தலைமுறையினருக்கு வழிகாட்டிகளாக விளங்கக்கூடிய இக் கட்டுரைகள் தொகுக்கப் பெற்று நூல்வடிவம் பெறின் அரியதொரு செல்வமாக அமையும்.

**ii) மதிப்புரை**

நூல் மதிப்புரை பெரும்பாலான இதழ்களில் இடம் பெற்றுள்ளது. இதைப் பற்றிக் குறிப்பிடும்போது, "மதிப்புரைகள் முதுகைத்தட்டும் பொய்யுரைகளாக இருக்கக் கூடாது; உண்மையான திறனாய்வுரைகளாக அவை அமைந்தால்தான் எழுதியோர் வளர வாய்ப்புண்டு என்ற கருத்திலேயே வரலாறு, தனக்கு வரும் நூல்களுக்கு மதிப்புரை வழங்குகிறது. 'மருந்து கசக்குமெ'ன்றாலும் உடல்நலத்திற்குத் தேவைதானே. நூலனுப்புவோர் இதைக் கருத்தில் கொண்டால் வருந்த வாய்ப்பில்லை" என்கிறார் பொறுப்பாசிரியர். ஒவ்வொரு மதிப்புரையும் நூலின் தகுதிக்கேற்ற மதிப்பீடுகளாகவே அமைந்திருப்பது பாராட்டத்தக்கது. நேர்மையான முறையில் தவறுகளையும் குறைகளையும் சுட்டிக் காட்டி, நிறை கண்டவிடத்தில் பாராட்டி எழுதப்பட்டிருக்கும் இம்மதிப்புரைகள் நூலாசிரியர் களுக்குச் சிறந்த வழிகாட்டல்களாகவே அமைந்துள்ளன. இம் மதிப்புரைகள் குறித்த நூலாசிரியர் கருத்துகளும் பதிப்பிக்கப்

பட்டுள்ளன. முனைவர் நா. மார்க்சிய காந்தியின், 'திருவதிகை வீரட்டானம்' எனும் நூலுக்கு வரலாறு ஐந்தாம் இதழில் மதிப்புரை தரப்பட்டுள்ளது. இம்மதிப்புரை குறித்து நூலாசிரியர் தெரிவித்துள்ள கருத்துகளும் அது குறித்த மதிப்புரையாளரின் எண்ணங்களும் வரலாறு ஆறாம் இதழில் இடம்பெற்றுள்ளன.

### iii) யாவரும் கேளிர்

'யாவரும் கேளிர்' பிற இதழ்களில் காணமுடியாத புதிய பகுதி. முன்னாளைய பேனா நண்பர்கள் போல, வரலாறு இதழின் உறுப்பினர்களை ஒருவருக்கொருவர் முழுமையான அளவில் அறிமுகம் செய்துவைக்கும் பகுதி இது. முதல் நான்கு இதழ்களிலும் ஆறாம், ஏழாம் இதழ்களிலும் இடம்பெற்றுள்ள இப்பகுதி ஐந்தாம், எட்டாம் இதழ்களில் விடுபட்டுள்ளது. ஐந்தாம் இதழின் ஆசிரிய உரையில் கட்டுரைகளின் பக்க அளவு எதிர்பார்த்ததைவிட மிகுதியானமையே இதற்கான காரணமெனப் பொறுப்பாசிரியர் எழுதியிருப்பதை ஏற்கமுடியவில்லை. நேயமான இப்புதிய பகுதி வரலாறு இதழில் தொடர்வது ஆர்வலர்களும் ஆய்வாளர்களும் ஒருவரையொருவர் அறிந்துகொள்ளவும் தொடர்புகொள்ளவும் துணையாகப் பெருமளவிற்கு உதவும்.

### iv) கட்டுரையாளர்கள்

கட்டுரையாளர்கள் எனுந் தலைப்பின்கீழ் அந்தந்த இதழில் வெளியாகியுள்ள படைப்புகளின் ஆசிரியர்தம் பெயர்களும் அவர்தம் முகவரிகளும் தரப்பட்டுள்ளன. இந்த எட்டு இதழ்களிலும் மிகுதியான படைப்புகளை வழங்கியவர்களாக இரா. கலைக் கோவன், மு. நளினி, அர. அகிலா, கோ. வேணிதேவி, ஐராவதம் மகாதேவன் ஆகியோரைக் குறிப்பிடலாம். காசுகள் பற்றிய கட்டுரைகள் அளக்குடி ஆறுமுக சீதாராமனால் எழுதப்பட்டுள்ளன.

### v) அன்புள்ள உங்களுக்கு

இரண்டாம் இதழிலிருந்து இப்பொதுப் பிரிவில், 'அன்புள்ள உங்களுக்கு' எனும் புதிய பகுதி இணைகிறது. வரலாறு இதழ்களைப் படித்த ஆர்வலர்களும் ஆய்வாளர்களும் அவர்தம் கருத்துகளை இப்பிரிவின்கீழ் பகிர்ந்துகொண்டுள்ளனர். அவர்தம் கருத்துகளுள் சில, 'வரலாறு-7 கிடைக்கப்பெற்று மகிழ்ந்தேன். ஒரே மூச்சில் படித்துக்கொண்டுள்ளேன். வரலாறு படைத்துள்ளீர்கள். மனமார்ந்த பாராட்டுக்கள்' எனச் சுருக்கமாகவும் பாராட்டுரையாகவும் அமைந்திருந்தாலும், ஐராவதம் மகாதேவன், அ.மா. பரிமணம், பி. தமிழகன், அ. சம்பத்குமார், வே. இராமன் முதலியோர் தெரிவித்திருக்கும் கருத்துக்கள் ஆழ்ந்த புலமைத் திறத்துடனும், தெளிந்த ஆய்வுக்

கண்ணோட்டத்துடனும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மாமல்லபுரம் சிற்ப, கட்டடக் கல்லூரி மாணவர் இரா. முத்து ராஜசேகரனின் கடிதம், "வரலாறு பிப்ருவரி 95 இதழ் படித்தேன். செவல்பட்டிக் குடைவரை, மலையடிப்பட்டிக் குடைவரைகளும் கல்வெட்டுகளும் மற்றும் தமிழகக் கோயிற் கட்டடக்கலை வரலாறு போன்ற ஆய்வுத் தொகுதிகள் எம் போன்ற மாணவர்களுக்கும் ஆய்வு மாணவர்களுக்கும் பெரிதும் பயன்படத்தக்கதாகும்" என்று குறிப்பிடுவது இதழின் நோக்கம் நிறைவேறியிருப்பதை உணர்த்துகிறது.

"வரலாற்றின் அனைத்து இதழ்களும் வரப்பெற்றேன். படித்துவிட்டுப் பெருமகிழ்ச்சி அடைந்தேன். தமிழில் இத்தகைய தரமான ஆய்வுகள் அடங்கிய தொகுதிகள் வரவேண்டும் என்று நான் கண்ட கனவு நனவாகியுள்ளது. கட்டுரைகள் கனமானவை; ஆழமாகவும் அழுத்தமாகவும் உள்ளன; பிழையின்றி அச்சாகி யுள்ளன; கிரந்த எழுத்துக்களைத் தமிழில் எழுதும் முறை எளிமையாகவும் சீராகவும் உள்ளது. 'மலையடிக்குறிச்சிக் குடைவரையும் கல்வெட்டுகளும்' கட்டுரை படித்தேன். கட்டுரையாசிரியர்களுக்கு என் பாராட்டுக்கள். நல்லமுறையில் எழுதப்பட்டிருக்கும் இவ்வாய்வுக் கட்டுரையில் குறிக்கப்படும் சேந்தனின் கல்வெட்டு, பாண்டிய நாட்டில் கிடைக்கும் காலத்தாற் முற்பட்ட தமிழ் எழுத்துக்களிலமைந்த கல்வெட்டாகும். இக்கட்டுரையின் குறிப்புகளாக உள்ள தரவுகளும் சிறப்பானவை. தரமான ஆய்விதழாக வரலாறு வளம்பெறுவதில் மகிழ்ச்சியடைகிறேன்" அ எனும் ஐராவதம் மகாதேவனின் கடிதங்கள் வரலாறு இதழின் தரத்திற்கும் செழுமையான வளர்ச்சிக்கும் சான்றுகளாக மிளிர்கின்றன. ஓர் இதழை நாடிப்பிடித்துப் பார்ப்பன அவ்விதழ் குறித்த திறனாய்வுக் கடிதங்களே. அவ்வகையில் வரலாறு இதழ் பெற்றிருக்கும் அனைத்துக் கடிதங்களும் அதன் வளர்ச்சிக்கும் வரலாற்றாய்வில் அது பதித்திருக்கும் அழுத்தமான சுவடுகளுக்கும் நிறைவான சான்றுகளாக ஒளிர்கின்றன.

### புதிய பகுதிகள்

#### 1. ஆய்வுத் தொடர்

வரலாறு இதழின் இப்பொதுக் கட்டமைப்புத் தவிர அவ்வப்போது புதிய பிரிவுகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதழ் மூன்றில் ஆய்வுத்தொடர் ஒன்று அறிமுகமாகியுள்ளது. தமிழகக் கோயிற் கட்டடக் கலை வரலாறு பற்றிய அரிய தரவுகளை உள்ளடக்கியிருக்கும் இத்தொடர், வரலாறு 3,4,6ஆம் இதழ்களில் மட்டுமே இடம்பெற்றுள்ளது. 5,7,8ஆம் இதழ்களில் இத்தொடர் வெளியாகவில்லை. தொடரின் முதல் இயல் சிந்துவெளிக் காலம், தொல்காப்பியக் காலம், சங்க காலம் தொடர்பான தமிழ்நாட்டுக்

கட்டடக் கலைத் தரவுகளைப் பகிர்ந்து கொள்கிறது. சங்க காலம் எனும் பகுதியில் பத்துப்பாட்டுத் தரவுகள் மட்டுமே இடம் பெற்றுள்ளன. இரண்டாம் இயல், முத்தொகைத் தரவுகளாய் அகநானூறு, ஐங்குறுநூறு, நற்றிணை எனும் மூன்று இலக்கியங்களில் அகழ்ந்தெடுக்கப் பட்ட கட்டடக் கலைத் தரவுகளைப் பதிவு செய்துள்ளது. இவற்றுள் பல, வரலாற்றுப் பார்வைக்கு இதுகாறும் வாராதிருந்த அரிய தரவுகளாம்.

வரலாறு ஆறாம் இதழில் இடம்பெற்றுள்ள மூன்றாம் இயல் குறுந்தொகையிலும் கலித்தொகையிலும் காணப்படும் கட்டடக் கலைச் செய்திகளைத் தொகுத்துத் தந்துள்ளது. தமிழ்நாட்டுக் கலை வரலாற்றில் முதன்முறையாக மேற்கொள்ளப் பட்டிருக்கும் இக்கால நிரலான கட்டடக் கலைத் தரவுத் தொகுப்பு, தொடராமல் நின்றமைக்குக் காரணம் ஏதும் கூறப்படவில்லை. அருமையான, அழுத்தமான இம்முயற்சி, வரலாறு இதழின் எதிர்காலத் தொகுதிகளிலாவது தொடரவேண்டுமென்பதே எதிர் நோக்கியிருக்கும் ஒவ்வொருவரின் எதிர்பார்ப்பாக அமையமுடியும். ஆசிரியர் குழு இதற்கான முயற்சிகளில் முனைந்து ஈடுபட்டு, ஒவ்வோர் இதழும் இத்தொடரைப் பெறுமாறு செய்திடல் தலையாய பணியாகும்.

### 2. அங்கும் இங்கும்

வரலாறு நான்காம் இதழின் பொதுப்பகுதி, 'அங்கும் இங்கும்', எனும் புதிய பிரிவைப் பெற்றுள்ளது. தொடர்ந்து வந்த இதழ்களில் தொடரும் இப்பிரிவு தமிழ்நாடெங்கும் நடைபெற்ற பெரும்பாலான வரலாறு தொடர்பான நிகழ்ச்சிகளைப் பதிவு செய்துள்ளது. இதனை வெளியிடும் டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மைய ஆய்வாளர்களின் பங்களிப்புகள் இப்பகுதியில் முழுமையான வீச்சில் இடம்பெற்றுள்ளன.

### 3. பதிப்பிக்கப்படாத பாடங்கள்

வரலாறு ஐந்தாம் இதழ் முற்றிலும் புதிய ஒரு பகுதியைப் 'பதிப்பிக்கப்படாத பாடங்கள்' என்ற தலைப்பின்கீழ் அறிமுகப் படுத்தியுள்ளது. இதற்கான முன்னுரையாக,

> தமிழகத்துத் திருக்கோயில்களிலும் மலைப்பகுதி களிலும் ஊர் சார்ந்த இடங்களிலும் நம் வரலாற்றைச் சுமந்து நிற்கும் கல்வெட்டுகள் எண்ணற்ற அளவில் காணப்படுகின்றன. அவற்றுள் பெரும்பகுதியை இந்தியத் தொல்லியல் அளவீட்டுத் துறையின் கல்வெட்டுப் பிரிவு தன்னுடைய நூறாண்டுக் கால கடும் உழைப்பால் படியெடுத்துள்ளது. 1897இல் வெளியிடப் பட்ட முதல் கல்வெட்டறிக்கையைத் தொடர்ந்து

ஆண்டுதோறும் ஓர் அறிக்கையென 1984ஆம் ஆண்டு வரை கல்வெட்டு ஆண்டறிக்கைகளை இந்நிறுவனம் வெளியிட்டுள்ளது. இவ்வறிக்கைகள் படியெடுக்கப் பட்ட கல்வெட்டுகளின் சுருக்கங்களை மட்டுமே தருகின்றன. இச்சுருக்கங்கள் கவனத்துடன் கையாள்பவர் களுக்கு வழிகாட்ட உதவுமென்றாலும் முழுமையான ஆய்வுகளுக்குப் போதுமானவையாக இல்லையென்பது குறிப்பிடத்தக்கது.

படியெடுக்கப்பட்ட இக்கல்வெட்டுகளுள் ஒரு பகுதியைக் கல்வெட்டுப் பிரிவு முழுமையான பாடங்களுடன் தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி களாகப் பதிப்பித்துள்ளது. 1909ஆம் ஆண்டுவரை படியெடுக்கப்பட்ட இக்கல்வெட்டுகளின் பாடங்களே இத்தொகுதிகளில் அடைக்கல மாகியுள்ளன. 1909ஆம் ஆண்டிற்குப் பிறகு படியெடுக்கப்பட்ட கல்வெட்டுகள் இனி எப்போது பாடங்களுடன் பார்வைக்குக் கிடைக்கும் என்பது இன்றைக்கிருக்கும் சூழலில் விடை சொல்லமுடியாத கேள்வியாகும்.

பெருகிவரும் குடமுழுக்குகளாலும் மக்களின் ஆர்வ மின்மையாலும் திருப்பணியாளர்கள் மற்றும் கோயில் பணியாளர்களின் வரலாற்று நோக்கற்ற போக்கு களாலும் இன்றைக்குத் தமிழ்நாட்டில் பரவலாகக் கல்வெட்டுகளை இழந்து வருகிறோம். இந்நிலையில் படியெடுக்கப்பட்ட கல்வெட்டுகளின் பாடங்களும் கிடைக்காமல், படிக்கப் போகலாமென்றால் கோயில் களிலும் அவை இல்லாமல் ஆய்வாளர்கள் படும் துன்பம் அளப்பரியதாகும். இத்துன்பம் தீர்க்கும் முகத்தான் வரலாறு இதழின் ஆசிரியர் குழு, இதுவரை தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதிகளில் பதிப்பிக்கப் பெறாத கல்வெட்டுகளின் பாடங்களைக் கோயில் வாரியாகத் தொகுத்து இயன்ற மட்டும் பதிப்பிக்கக் கருதியுள்ளது.

இதுவரை படியெடுக்கப்படாத புதிய கல்வெட்டுகளைத் தொகுக்கவும் வெளியிடவும் இன்று தமிழ்நாட்டில் பலர் முனைந்துள்ள நிலையில், வரலாறு தன் கவனத்தைப் பதிப்பிக்கப்படாத பாடங்களில் திருப்பி யுள்ளதை ஆய்வறிஞர்கள் வரவேற்பார்கள் என்று நம்புகிறோம். இப்பகுதியின் முதல் தொகுப்பாய்ப் பெருமுடியீசுவரர்

> கோயில் கல்வெட்டுகள் இவ் விதழில் இடம்பெறு கின்றன. இத்திருக்கோயில் இன்று, 'பெருங்குடி' என்றழைக்கப்படும் ஊரின் ஒதுக்கத்தில் அமைந்துள்ளது

என்று ஆசிரியர் குழு எழுதியுள்ள விளக்கம் விதந்து போற்றற் குரியதாகும்.

இந்திய அளவில் தமிழ்நாட்டில்தான் மிகுதியான கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. முப்பதாயிரத்திற்கும் மேற்பட்ட கோயில்கள் விளங்கும் தமிழ்நாட்டில், கல்வெட்டுப் பாடங்கள் வெளியிடப்பட்டிருக்கும் கோயில்களின் எண்ணிக்கை யாகச் சில ஆயிரங்களையே சுட்ட முடியும். ஏறத்தாழ நூறாண்டு அளவில் படியெடுக்கப்பட்ட கல்வெட்டுப் பாடங்கள் இதுகாறும் வெளியிடப்பெறாத துயரச் சூழலில், அவை வெளியிடப்பெறுமா என்ற அய்யம் நாளும் வலுப்பெறும் நிலையில், பொருட்செலவு கருதாது பெருமுயற்சி செய்து கல்வெட்டுகளைப் படித்துப் படியெடுத்து அவற்றின் பாடங்களைத் தொடர்ந்துவந்த அனைத்து வரலாறு இதழ்களிலும் தந்துள்ள டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மைய ஆய்வர்களை எத்தனை போற்றினாலும் தகும். தமிழ்நாடே இவர்களுக்கு நன்றிக்கடன்பட்டிருக்கிறது என்று சொன்னாலும் அது மிகையாகாது. இப்பகுதியின்கீழ், பெருமுடியீசுவரர் கோயில் கல்வெட்டுகளின் பாடங்கள் பத்தும், திருக்கோளக்குடிக் கல்வெட்டுகளின் பாடங்கள் நாற்பத்தொன்றும் வெளியாகியுள்ளன.

### 4. உண்டாலம்ம இவ்வுலகம்

வரலாறு ஆறாம் இதழின் பொதுப்பிரிவில், 'உண்டாலம்ம இவ்வுலகம்' எனும் புதிய பகுதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மனிதநேய மாணிக்கங்களின் அறிமுகப் பகுதியாக விளங்கும் இதில் இந்தியன் எக்ஸ்பிரஸின் திருச்சிராப்பள்ளி நிருபர் ஆ. கோபாலன், அமரர் தவத்திரு. குன்றக்குடி அடிகளார், தமிழ்நாடு அரசின் உயர்கல்வி மன்றச்செயலர் ச. முத்துக்குமரன் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். இம்மனித நேயர்களின் பண்புநலம், பழகும் பாங்கியல், மொழிக்கும் வரலாற்றுக்கும் சமுதாயத்திற்கும் இவர்தம் பங்களிப்புகள் எனப் பன்னோக்குப் படப்பிடிப்புகளாய் உண்டாலம்ம இவ்வுலகக் கட்டுரைகள் அமைந்துள்ளன.

### பெட்டிச் செய்திகள்

வரலாற்றின் முதல் இதழிலிருந்தே பெட்டிச் செய்திகள் இடம்பெற்றுள்ளன. சங்க இலக்கியங்களையும் பக்தி இலக்கியங் களையும் மிக நுட்பமுடன் ஆராய்ந்து, ஈர்க்கும் தலைப்புகளின்கீழ்

அரிய வரலாற்றுத் தரவுகளைப் பெட்டிச் செய்திகளாக்கித் தந்துள்ள ஆசிரியர் குழுவினர் பாராட்டுக்குரியவர்கள்.

கிலுகிலிமந்தி, வெள்ளோட்டமும் விடையோட்டமும், வரவேற்பாளர்கள், பற்கள் பதித்த கதவுகள், கோழைக் காதலன், பொய்ப்புலி, பூப்பெண்கள், மடிவிளியும் நெடுவிளியும், மருந்தாய்வு, வம்பும் வீச்சும், துன்பம் நேர்கையில், வாசனைப் படகுகள், ஒரு காக்கையின் கனவு, கழைக்கூத்து, குழந்தைப் பலி, கடல் மரம், கொற்றச் சோழரும் கொங்கர்ப் பணிவும், ஞாயிறும் நெருஞ்சியும், உலமந்து வருகம் வா தோழி, சங்க கால முடிதிருத்தம், பேய் வரும் நேரம், கடமை உணர்ந்த காதல் புறா, மடைநூலும் மனிதநேயமும், கொடுவெறியின்பம், தாமரை நயந்த வேழத்திரு, நீர்த்தெளியக்காழ், கற்பிற்கு இயைவதோ தோழி, நல்ல தமிழர்களய்யா நாம், கலி மறவர், தேரே தெய்வம், பரண் விளக்கு, மடையும் மண்சோறும், பள்ளியும் யாழும், வில்லரின் விரல் பழக்கம், வருமா அந்தநாள், பறசைக் காவலர், குருவி வாழ்க்கை, வல்லாரை வழிபட்டு, உறையூர்க் குதிரைகள், இராவணர் பாடு, குழல் வழி நின்றது யாழே, ஊர்ப் புலத்தி, காதல் வரலாற்றில் காணும் வரலாறு, பக்கம் வரும் பெருமீன், ஞாயிறு பாலைக்குத் தெய்வமா, காதல் ஏமாற்றும் கள்ளூர்த் தண்டனையும் எனும் தலைப்புகளில், சங்க இலக்கியங்களிலிருந்து தேடித் தரப்பட்டுள்ள பண்பாட்டுத் தரவுகள் அதிகம் அறியப்படாதவை. இத்தரவுகளின் நுண்மையும் ஆழமும் சங்ககாலப் பண்பாட்டு வரலாற்றைத் திருத்தி எழுத வேண்டியிருக்குமோ என்னும் அழுத்தமான எண்ணத்தூண்டலுக்கு வித்திடுகின்றன. பதிக அடிகளில் நிகழ்ந்துள்ள பண்பாட்டுத் தேடல்களுக்கு விளக்கமாய் இறையியல் பொழிவுகள் இனிய சொற்கவிகள், தேவமொழி, தேனஞ்சு, ஈசன் எழுதும் கீழ்க்கணக்கு ஆகியவற்றைச் சுட்டலாம்.

மனித வாழ்க்கையை மிக நுட்பமாகப் பதிவு செய்துள்ள தமிழிலக்கியங்கள் தேடுவார்த் தேடலுக்கேற்பத் தரவுப் புதையல் களாய் விளங்குவதை இப்பெட்டிச் செய்திகள் மூலம் வரலாறு இதழ் மிகத் தெளிவாக உணர்த்தியுள்ளது. 'வரலாற்றுச் சான்றுகளாக இலக்கியங்களைக் கருதமுடியாது. அவை புலவர்களின் கற்பனைக் கூற்றுகள்' என்று இலக்கியங்களை முதனிலைச் சான்றுகளாய் ஏற்க மறுக்கும் வரலாற்று ஆய்வாளர்களுக்கு இப்பெட்டிச் செய்திகள் கண்திறப்பாய் உதவும். இவை குறித்து வரலாறு இதழில் வெளி வந்துள்ள கலைஞர்களின் கடிதங்களே இப்பெட்டிச் செய்திகள் எந்த அளவிற்குப் படிப்பாரைக் கவர்ந்து அவர்தம் உள்ளத்தில் நிறைந்துள்ளன என்பதற்கு இனிய சான்றுகளாய் அமைகின்றன.

## முடிவுரை

"வரலாறு தனித்தீவல்ல. அது பல துறைகளின் சங்கமம். பல்துறை அறிவு இருந்தால்தான் முழுமையான, நேர்மையான வரலாற்றை உருவாக்கமுடியும்" என்று வரலாறு முதல் இதழில் அதன் பொறுப்பாசிரியர் இரா. கலைக்கோவன் எழுதியிருப்பதை மீண்டும் இங்கே நினைவுகூர வேண்டியுள்ளது. கட்டடக் கலை, சிற்பக் கலை, கல்வெட்டியல், காசியல், இலக்கியம், சுவடியியல், தொல்லியல் என வரலாற்றின் அனைத்துப் பரிமாணங்களையும் இதுகாறும் வெளியிடப்பட்ட வரலாறு இதழ்கள் எட்டும் அரவணைத்துள்ளன. கோயில், சமுதாய மையமாக அமைந்து கலைகளை வளர்த்து மக்களை நெறிப்படுத்தியதையும் அது வெறும் வழிபாட்டுத் தலமாக மட்டும் அமைந்துவிடாமல் வரலாற்றுக் களமாகவும் திகழ்ந்து மக்களை ஒருங்கிணைத்ததையும் வரலாறு இதழ்களின் கட்டுரைகள் தெளிவாக உணர்த்துகின்றன. இலக்கியங்கள் காலப் பதிவுகளாக விளங்கிச் சமுதாயத்தின் பண்பாட்டுச் சுவடுகளைச் சுமப்பதையும் முதனிலைச் சான்றுகளுள் முதன்மை நிலை பெறத்தக்க அனைத்துத் தகுதிகளையும் அவை பெற்றிருப் பதையும் வரலாறு இதழ்கள் அழுந்தப் பதிவு செய்துள்ளன.

"வறட்சியாக எழுதுவதுதான் வரலாறு என்ற நிலையை மாற்றி, எந்தச் செய்தியையும் அதன் உண்மைத் தன்மை குன்றாமல் சுவைபடச் சொல்வதில் வரலாறு நம்பிக்கை கொண்டுள்ளது" என்ற கூற்றும் வெற்றி கண்டுள்ளதாகவே கூறவேண்டும். தளிச்சேரிக் கல்வெட்டு, பராய்த்துறைத் தாருகாவனேசுவரர் கோயில், மாமண்டூர் நரசமங்கலம் குடைவரைகள் முதலிய கட்டுரைகள் ஆய்வு நுட்பம் குன்றாத விதத்தில் மிகுந்த சுவையுடன் பொருள் நலம் பேணி எடுத்துச் சொல்லப்பட்டிருக்கும் பாங்கு வரலாற்றைச் செழுமையாகவும் கூறமுடியும் என்பதை மெய்ப்பித்துள்ளது.

"போடப்பட்ட பாதைகளில் நடப்பது ஒருவகை. புதிய பாதைகளை வகுப்பது வளர்ச்சிக்கு வழி. இது இப்படித்தான் இருக்கவேண்டும் என்ற கட்டாயங்கள் நமக்கில்லை. எதுவும் ஆர்வமுள்ள மக்களுக்குப் புரியவேண்டும்; பயன்படவேண்டும்." உண்மைதான். விட்டுப்போன தொடர்ச்சிகள், பதிப்பிக்கப்படாத பாடங்கள், பெருமைச்சுவடுகள், உண்டாலம்ம இவ்வுலகம் எனும் புதிய பாதைகள் வரலாற்றின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்து வதுடன், அதைக் கையாளுவோர் கொள்ளவேண்டிய கவனத்தையும் பார்வை நுட்பத்தையும் தெளிவாகவே உணர்த்திவிடுகின்றன.

"இமயமாய் எண்ணுகிறோம்; இயன்றதைச் சாதிப்போம், முடியாதவற்றைத் தொடர்ந்து முனைப்பான முயற்சி மேற்கொண்டு முடிக்கப் பார்ப்போம்'' என்கிறார் பொறுப்பாசிரியர். பல அறிவிப்புகள் வரலாறு இதழில் அறிவிப்புடன் நின்றுள்ளன. சில தொடர்கள் தொடராத நிலையையும் சுட்டிக்காட்ட வேண்டும். அறிவிப்புகள் சுட்டும் தலைப்புகளைப் பார்க்கும் போதும், வந்து நின்ற தொடரின் தரவுத் தொகுப்புகளைப் படிக்கும்போதும் இவை வரவேண்டும், தொடரவேண்டும் என்றே நினைக்க வேண்டியுள்ளது. அவர்கள் வெளியிட்டிருக்கும் குறளையே அவர்களுக்குச் சுட்டிக் காட்டலாம். 'அருவினை என்ப உளவோ கருவியான் காலம் அறிந்து செயின்'.

வரலாறு ஆய்விதழ் அறிஞர் அ.மா. பரிமணம் சொல்லி யிருப்பது போல், தமிழகக் கல்வெட்டுகள், புதைபொருட்கள், கோயிற்கட்டடக் கலை, சிற்பக்கலை போன்றவற்றின் மாட்சி தெரிவிக்கும் தனி இதழ் இல்லாத குறையினை நிறைவு செய்யும் வகையில் அமைந்துள்ளது. "பல ஆண்டுகளுக்கு முன் வெளி வந்த Tamilian Antiquary, கிறித்துவக் கல்லூரி இதழ் போன்று இந்த இதழ், தொடரும் எதிர்காலத்தில் வரலாற்றுச் சான்றேடாகத் திகழ வேண்டுமென்பது என் விருப்பம். திகழும் என்பது என் நம்பிக்கை." அறிஞர் அ.மா. பரிமணத்தின் விருப்பத்தையும் நம்பிக்கையையும் வரலாறு இதழ் காப்பாற்றியுள்ளது; தொடர்ந்து காப்பாற்றும் என்று உறுதியாகக் கூறலாம்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

பச்சையப்பன் கல்லூரி

டாக்டர் மா. இராசமாணிக்கனார்

இதழியல் ஆய்வு மையம்

இணைந்து நடத்தும்

# தமிழ் ஆய்வு இதழ்கள் கருத்தரங்கம்

## *அழைப்பிதழ்*

(இதழியல் கருத்தரங்கம் 7)

அன்புடையீர்,

வணக்கம்.

**தமிழ் ஆய்வு இதழ்கள்** என்னும் பொருள் பற்றிய கருத்தரங்கு, பச்சையப்பன் கல்லூரியில் 12-12-1998, 13-12-1998 ஆகிய நாள்களில் நடைபெற உள்ளது.

அனைவரும் வருகைதந்து சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

**முதல்வர்**
பச்சையப்பன் கல்லூரி
சென்னை

**இயக்குநர்**
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை

**இயக்குநர்**
டாக்டர் மா. இராசமாணிக்கனார் இதழியல் ஆய்வு மையம்
சென்னை

பேராசிரியர் முனைவர் **ஆர்.எஸ். இராகவன்** அவர்கள்
எம்.எஸ்ஸி., பிஎச்.டி. (USA)
(முதல்வர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை)
தலைமையில்
12-12-1998 அன்று முற்பகல் 10.00 மணி அளவில்

திருமிகு **ஏ.ஜே. முருகானந்தம்,** B.Sc., M.A., B.L., அவர்கள்
(மாவட்ட நீதிபதி, தமிழ்நாடு அரசு பேராட்சியர் மற்றும்
அரசு சொத்துப் பொறுப்பாட்சியர்
தலைவர், பச்சையப்பன் அறக்கட்டளை, சென்னை)
கருத்தரங்கைத் தொடங்கிவைத்து

**இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள்**
(தொகுதி - 4)
என்னும் நூலினை வெளியிடுவார்கள்

பேராசிரியர் முனைவர் **இரா. இளவரசு** அவர்கள்
(தமிழ்ப் பேராசிரியர் (ஓய்வு), மாநிலக்கல்லூரி, சென்னை)
சிறப்புரை நிகழ்த்துவார்கள்

பேராசிரியர் முனைவர் **தெ. ஞானசுந்தரம்** அவர்கள்
(தமிழ்த்துறைத் தலைவர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை)
தலைமையில்
13-12-1998 அன்று மாலை 5.00 மணி அளவில்

பேராசிரியர் முனைவர் **பொற்கோ** அவர்கள்
(தலைவர், தமிழ் இலக்கியத்துறை, சென்னைப் பல்கலைக்கழகம்)
கருத்தரங்க நிறைவுரை நிகழ்த்துவார்கள்

## முதல் அமர்வு

12-12-1998 முற்பகல் 11.00 - 1.00

தலைமை : முனைவர் அ.அ. மணவாளன்

| கட்டுரையாளர் | தலைப்பு |
|---|---|
| திரு பெ.சு. மணி | சித்தாந்த தீபிகை |
| முனைவர் ம.செ. இரபிசிங் | TAMIL CULTURE |
| முனைவர் செ.ஜீன் லாறன்ஸ் | மொழியியல் |

## இரண்டாம் அமர்வு

12-12-1998 பிற்பகல் 2.00 - 5.00

தலைமை : முனைவர் வெ. கிருஷ்ணமூர்த்தி

| கட்டுரையாளர் | தலைப்பு |
|---|---|
| முனைவர் கு. பகவதி | தமிழாய்வு, உயராய்வு |
| முனைவர் ஆறு. இராமநாதன் | நாட்டுப்புறவியல், நாட்டார் வழக்காற்றியல் |
| திரு இரா. பாவேந்தன் | கலைக்கதிர் |
| செல்வி மு. சுப்புலட்சுமி | தமிழியல் |
| முனைவர் வி. முருகன் | JOURNAL OF ASIAN STUDIES |

## மூன்றாம் அமர்வு

13-12-1998 முற்பகல் 11.00 - 1.00

தலைமை : முனைவர் இ. சுந்தரமூர்த்தி

| கட்டுரையாளர் | தலைப்பு |
|---|---|
| முனைவர் மே.து. இராசுகுமார் | ஆராய்ச்சி |
| முனைவர் பெ. அர்த்தநாரீசுவரன் | புலமை |
| திரு மா.ரா. அரசு | TAMILIAN ANTIQUARY |
| முனைவர் மோ. தமிழ்மாறன் | தமிழ்க்கலை |

## நான்காம் அமர்வு

13-12-1998 பிற்பகல் 2.00 - 5.00

தலைமை : முனைவர் கி.ர. அனுமந்தன்

| கட்டுரையாளர் | தலைப்பு |
|---|---|
| முனைவர் எல். இராமமூர்த்தி | PJDS |
| பேராசிரியர் கோ. வேணிதேவி | வரலாறு |
| திரு ப. இராமலிங்கம் | களஞ்சியம் |
| திருமதி வசந்த கல்யாணி | கல்வெட்டு |

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 600 113
## அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| ஏ.என். சிவராமனின் பத்திரிகை உலகம் | 30.00 |
| தமிழிலக்கிய வகைமையியல் - 3 தொகுதிகள் | 395.00 |
| தமிழரின் மரபுச் செல்வங்கள் - அறிவியல், தொழில்நுட்பம் - 2 தொகுதிகள் | 190.00 |
| மௌனத்தின் அதிர்வுகளும் மொழியும் - பெண் | 40.00 |
| உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி.1851-2000 | 180.00 |
| தமிழர் கண்ட தாவரவியல் | 40.00 |
| இதழாளர் பெரியார் | 160.00 |
| திராவிட இயக்க இதழ்கள் தொகுதி 1 | 60.00 |
| சைவசித்தாந்தத்தில் ஆன்மக் கொள்கை | 65.00 |
| பெரியபுராணம் - திருமுறைகளின் கவசம் | 55.00 |
| காஞ்சிபுரம் கி.பி. 6-ஆம் நூற்றாண்டுக்கு முன் | 65.00 |
| திருவாவடுதுறைப் புராணம் | 250.00 |
| மகாவித்துவான் ரா. ராகவையங்கார் | 30.00 |
| சித்தாந்தச் செல்வர் க. வெள்ளைவாரணனார் | 25.00 |
| தமிழ் உரைநடையும் கிறித்தவர் பங்களிப்பும் | 20.00 |
| திருக்குறளில் பொதுநிலை உத்திகள் | 30.00 |
| தமிழிலக்கியத்தில் மனிதநேயம் | 115.00 |
| தமிழ்க்கடல் இராய. சொக்கலிங்கம் | 30.00 |
| தமிழில் பிறதுறைக் கோட்பாட்டாய்வுகள் வரலாறும் மதிப்பீடும் | 25.00 |
| வ.உ.சி. பன்முகப் பார்வை | 25.00 |
| இஸ்லாமியத் தமிழ்ப் புதினங்கள் சித்தரிக்கும் அறியப்படாத வாழ்வும் பண்பாடும் | 40.00 |
| பாரதியின் சமுதாயச் சிந்தனைகள் | 25.00 |
| சமூகத்திலும் இலக்கியத்திலும் ஊனமுற்றோர் | 80.00 |
| தெ.பொ. மீனாட்சி சுந்தரனாரின் தமிழ்த்தொண்டும் மொழியியல் பங்களிப்பும் | 25.00 |
| சங்கத் தமிழரின் மனிதநேய மணிநெறிகள் | 45.00 |
| மக்கள் நேயச் சுயமரியாதை | 30.00 |
| வேதாத்திரியத்தில் சமூகவியல் இறையியல் சிந்தனைகள் | 130.00 |
| பெண்ணிய உளப்பகுப்பாய்வும் பெண் எழுத்தும் | 40.00 |
| பண்டிதமணி மு. கதிரேஞ் செட்டியார் | 40.00 |

**555** தமிழ் ஆய்வு இதழ்கள் **50.00**